www.facebook.com/ebooksintamil

ஸ்ரீ

# சித்தவேதம்

சித்த சமாஜ நிறுவகர்

சுவாமி சிவானந்த பரமஹம்சரால்

உபதேசிக்கப்பட்ட

# மோட்ச சூத்திரம்

ஜீவசரித்திரம்

ஒரு சித்தசமாஜ வெளியீடு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# ஒன்று

சிஷ்யன் : சத்குருவே! மாயா சமுத்திரத்தில்பட்டு அலைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற எனக்கு அதிலிருந்து கரையேறுவதற்குள்ள நல்லமார்க்கத்தைக் காண்பித்துத் தரவேண்டி பக்தி விசுவாசத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

குரு : அன்புள்ள சிஷ்யா! மாயா சமுத்திரத்தில் இருந்து எங்கே கரையேறுவதற்குள்ள மார்க்கத்தைக் காண்பித்துத் தரவேண்டும்?

சி : எல்லாம் வல்ல ஈஸ்வரனிடம் சேருவதற்கு.

கு : ஈஸ்வரன் என்று சொல்லப்பட்டது இன்னதென்று உனக்குத் தெரியுமா?

சி : ஈஸ்வரன் என்பது உலகத்தினுடைய படைப்பு, காப்பு, அழிப்பு (படைத்தல், காத்தல், அழித்தல்) முதலியவற்றின் கர்த்தாக்களாகிய பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் என்கிற இவர்களென்று சொல்லுகிறார்கள். அவர்களைப் பலவிதத்திலும், பல கோயில்களிலும் பிரதிஷ்டைமுதலியன செய்து, பலரும் சேவித்து (கும்பிட்டு, பூஜை, நைவேத்தியம் செய்து) வருகிறார்கள். ஆகையால் இவ்வண்ணமே இருக்குமென்று யானும் கருதியிருக்கிறேன்.

கு : இவ்வண்ணமே நீர் கருதிவந்தபோதிலும், ஈஸ்வரனுக்கு சர்வவியாபகத்துவம் (எங்கும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


நிறைந்திருக்கும் தன்மை) உண்டென்றோ, இல்லையென்றோ உமது நம்பிக்கை?

சி : ஈஸ்வரன் சர்வவியாபி அதாவது எங்கும் நிறைந்தவன் என்றேதான் எனது பூரண நம்பிக்கை.

கு : அப்படியாயின் சர்வவியாபியான ஈஸ்வரனுக்கு நாமமோ, ரூபமோ உண்டாவதற்கிடமுண்டோ?

சி : ஈஸ்வரனுக்கு நாமரூபங்கள் உண்டாகிறபோது சர்வவியாபகத்துவம் உண்டாக இடமில்லை.

கு : ஈஸ்வரன் நாமரூபாதிகளில்லாமல் சர்வவியாபி என்றே நீர் சொல்லுகிறீர். அப்பொழுது ஈஸ்வரன் நம் உள்ளிலும் இருக்கின்றானோ, இல்லையோ?

சி : ஈஸ்வரனுக்கு சர்வவியாபகத்துவம் இருப்பதால் நம் உள்ளிலும் இருக்கிறான்.

கு : நம் உள்ளில் ஈஸ்வரன் இருக்கையில், நாம் ஈஸ்வரன் அல்லவென்றும், ஈஸ்வரன் பிரம்மாவாகும், விஷ்ணுவாகும், மஹேஸ்வரனாகும், அல்லது கோவில்களில் பிரதிஷ்டை செய்துள்ள பிம்பங்களில் இருக்கிறதாகும் என்றும் மற்றுமாக சங்கற்பித்து நம்பும்போது, நாம் யார்? ஈஸ்வரமதஸ்தரோ அல்லது நிரீஸ்வர மதஸ்தரோ?

சி : சர்வவியாபியான ஈஸ்வரனை எவ்விதம் சங்கற்பித்தாலும் அஃது ஈஸ்வர மதம் அல்லவென்று சொல்லுவதற் கிடமுண்டோ?

கு : ஈஸ்வரன் நம்முள்ளில் இல்லையெனில் நமக்கு ஏதாவது கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ, பேசுவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அதற்கோர் உதாரணம் சொல்லுகிறோம். அதாவது ஒருவன் செத்தால் பிணமாகிறான். அதற்கு ஏதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ, பேசுவதற்கோ, அசைவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அதற்குக் காரணம் யாது?

சி : அதில் ஈஸ்வர சைதன்யம் இல்லாததுவே.

கு : அதனால் ஈஸ்வரசைதன்யம் இல்லையெனில் நமக்கு யாதொரு உணர்வுமில்லை. இதோ காண்கின்ற உலகம் முதலிய யாதொரு நிலைமையுமில்லை. ஆகையினால் ஈஸ்வர சைதன்யத்தினாலேதான் நமக்கு இவை எல்லாவற்றையும் கேட்கவும் காணவும் அறியவும் இடமுண்டாயிற்று. அச்சந்தர்ப்பத்தில் ஈஸ்வரனே இவை எல்லாவற்றையும் அறிகிறானென்றே நம்பவேண்டியது. அவ்விதம் ஈஸ்வரனாயிருக்கின்ற **"தான்"**, தானல்ல ஈஸ்வரன் என்றும், ஈஸ்வரன் பிரம்மாவாகும், விஷ்ணுவாகும், மஹேஸ்வரனாகும், கோவில்களிலுள்ள பிம்பங்களிலாகும் என்றும் மற்றுமாக சங்கற்பிக்கும்போது நம்மை ஈஸ்வரமதஸ்தர் என்று சொல்லக்கூடுமோ?

சி : அவ்விதம் ஆலோசித்துப் பார்க்கும்போது நாம் நிரீஸ்வர மதஸ்தர்கள் ஆகின்றோம்.

கு : **அப்படியாயின், தன்னிலுள்ள ஈஸ்வர சக்தியை வெளியில் விடாமல், எவனொருவன் தன்னிலேயே நிலைநிறுத்துகிறானோ, அவனே ஈஸ்வரமதஸ்தன்.**

சி : குருவே! என்னிலுள்ள ஈஸ்வரசக்தியை வெளியில் விடாமல், என்னிலேயே எவ்விதம் நிறுத்துவது? அந்த மார்க்கத்தை எனக்குக் காண்பித்துக் கொடுக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அந்த மார்க்கத்தைக் காண்பித்துத் தருபவர் யார்?

சி : அவரே குரு.

கு : குரு என்பவர் யார்?

சி : குரு ஈஸ்வரன் எனவென்றே எனது நம்பிக்கை.

கு : ஈஸ்வரன் எக்காலமும் குருவாய் வருவதற்கிடமில்லை. ஏனென்றால் ஈஸ்வரன் நாமரூபாதிகளில்லாமல் எங்கும் நிறைந்திருக்கின்ற பொருளென்று நீரே சொல்லுகின்றீர். அப்படியுள்ள பொருள் நம்மிலிருந்து அபின்னமாய் அதாவது வேறுபடாமல் இருக்கின்றதா? அதல்லாமல் பின்னமாய் அதாவது வேறுபட்டு இருக்கின்றதா?

சி : அது அபின்னமாய் அதாவது வேறுபடாமல் இருக்கின்றது.

கு : அப்படியிருக்கின்ற பொருள் நமது குருவாக வருவதற்கிடமில்லை. காரணம் : குருவென்று வருகையில் நம்மிலிருந்து வேறுபடுத்தி சங்கற்பிக்கின்றோம். அப்போது குரு வேறுபடுகின்றது. அப்படி வேறுபடும்போது ஈஸ்வரன் குருவாய் வருவதற்கிடமுண்டா? தவிர, ஈஸ்வர சைதன்யம் நம்மில் இல்லையெனில் பிணமாகின்றோம். அவ்விதமான சைதன்யப் பொருளை நம்மிலிருந்து குருவாய் வேறுபடுத்தும் போதும்நாம் பிணமாகின்றோம் அல்லவா? அவ்விதம் பார்க்கும்போதும் ஈஸ்வரன் குருவாய் வருவதற்கிடமுண்டா?

சி : அவ்விதம் ஆலோசித்துப் பார்க்கும் பொழுது, ஈஸ்வரன் குரவாக வருவதற்கிடமில்லை.

கு : அதுவுமன்றி, ஈஸ்வரன் குரு அல்ல என்பதற்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உதாரணம் என்னவென்றால், ஈஸ்வரன் உண்டென்றோ, இல்லையென்றோ உமது நம்பிக்கை?

சி : ஈஸ்வரன் உண்டென்றேதான்.

கு : எனில் அந்த ஈஸ்வரன் ஒரு சமயத்தில் மட்டும் உள்ளவனோ அல்லது எப்பொழுதும் உள்ளவனோ?

சி : அவன் எல்லா சமயத்திலுமுள்ளவன்.

கு : அப்படியாயின், நீர் தூங்கும் சமயத்தில் ஈஸ்வரன் உண்டோ, இல்லையோ?

சி : உண்டு.

கு : அந்த சமயத்தில் குரு உமதருகில் வந்திருந்தால் நீர் அறிவதுண்டோ?

சி : அறிவதில்லை.

கு : என்ன காரணம்? நீர் தூங்கும் சமயத்தில் ஈஸ்வரன் உண்டல்லவா? அந்தச் சமயத்தில் நீர் அறியாமலிருப்பதற்குக் காரணமென்ன? அதைச் சொல்ல முடியுமா?

சி : அது எனக்குச் சொல்ல முடியாது.

கு : எனில் அதன் காரணம்: ஈஸ்வரனுக்கு இரண்டு நிலைமைகள் இருக்கின்றன. அவை என்னவென்றால் : சகளத்துவம் அதாவது களங்கமுடையதும், நிஷ்களத்துவம் அதாவது களங்கமில்லாததும் எனப்படும். எப்பொழுது ஈஸ்வரனுக்கு சகளத்துவம் சம்பவிக்கின்றதோ, அப்பொழுது ஈஸ்வரன் சகுணனாகி அதாவது குணமுடையவனாகி, அப்போது விகாராதிகளுண்டாகி, படைப்பு, காப்பு, அழிப்பு முதலியவை உண்டாகி, ராகத்துவேஷியாகி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதாவது விருப்பு வெறுப்பு உடையவனாகி அமைகிறான். எப்பொழுது ஈஸ்வரனுக்கு நிஷ்களத்துவம் அதாவது களங்கமில்லாமல் ஆகின்றதோ, அப்பொழுது ஈஸ்வரன் நிர்குணனாய் அதாவது குணம் இல்லாதவனாய், நிர்விகாரியாய் அதாவது விகாரம் இல்லாதவனாய், படைப்பு, காப்பு, அழிப்பு முதலியவை இல்லாமல் விருப்பு வெறுப்பற்றவனாகி விளங்குகின்றான். ஆனால் இவை யனைத்தும் உண்டாகின்றது எங்கிருந்தென்றால் தன்னிலிருந்தேயாகும். அதென்னவென்றால், ஒரு பிணத்திற்கு இவை ஒன்றுமேயில்லை. அது ஏனென்றால், பிணத்தில் ஈஸ்வர சைதன்யம் இல்லாததாலாகும். ஈஸ்வரசைதன்யம் தன்னிலிருக்கும்பொழுது மட்டுமே இந்த நிலைமைகள் உண்டாகின்றன. அதெப்படியென்றால், தன்னிலுள்ள ஈஸ்வர சக்தி, தன்னிலேயே லயித்து வெளியில் வியாபிக்காமல் இருக்கும்பொழுது நிஷ்களனாகிறது. அது நம்முடைய தூக்கத்திலுள்ள நிலைமை. அப்போதும் நமக்கு ஜீவன் உண்டு. ஜீவனுக்கு யாதொரு களங்கமுமில்லை. அது களங்கமின்றி, நிர்மலமாய் அதாவது பரிசுத்தமாய் ஆத்மாவாய் இருக்கின்ற நிலைமையாகும்.

அதற்கு உதாரணம் : மிகக் கொடிய சித்தம் உடையோனாய், கொடுஞ்செயல் செய்வோனாய், கொலைபாதகனாய் இருக்கின்ற ஒருவன் தூங்குகிற சமயத்தில் அவனுக்கு ஜீவனுண்டு. அப்பொழுது அந்த ஜீவனுக்கு யாதொரு களங்கமுமில்லை. அச்சமயம் ஜீவன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நிஷ்களனாயிருக்கிறது. அந்த ஜீவனே சிவன். அப்பொழுதாகும் "ஜீவசிவோஹம்" என்கிற நிலைமை. அந்த நிலைமைமாறி வெளியில் வியாபித்து, மற்றொன்றாய்ப் பிரதிபிம்பிக்கும்போது அதாவது பிரதிபலிக்கும்போது அது ஜீவனும், அந்தப் பிரதிபிம்பித்தல்விட்டு வெளியே வியாபிக்காமல் தன்னில் தானே லயிக்கும்போது அது சிவனுமாகிறது. "ஜீவ: சிவோஹம்" என்று சொல்ல இதுவே காரணம். சிவனே ஈஸ்வரன். அந்த ஈஸ்வரனுக்குத்தான் மேற் சொல்லிய விதத்தில் நிஷ்களத்துவம் உண்டாயிற்று. அப்பொழுது ஈஸ்வரன் நிர்குணனாகின்றான். நிர்குணன் என்றால் குணமில்லாதவன். குணங்கள் சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்பவையாகும்.

இம்மூன்று குணங்களுமில்லாமல் ஆகின்ற நிலைமையில் நிர்குணன். அப்பொழுது நிர்விகாரியாய், நிர்மோஹியாய், விருப்பு வெறுப்பு முதலியவை இல்லாதவனாய் அமைகின்றான். அதுதான் நாம் தூங்கும் சமயத்திலுள்ள நிலைமை. அப்பொழுது தன்னிலேயே இருக்கின்ற ஈஸ்வர சைதன்யம் தன்னிலடங்கி நிர்குணன், நிஷ்களன், நிர்விகாரி என்றிவ்விதமாய் அமைகிறது. எப்பொழுது தூக்கம் விழித்து, தனது சக்தி வெளியில் வியாபிக்கின்றதோ, அப் பொழுது சகளனாகிறது. சகளன் என்றால் களங்கத்தோடு கூடியவன் என்றாகும். அப்பொழுது விகாரி யும் சகுணனுமாகிறான். சகுணன் என்பது மூன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



விவரித்த மூன்று குணங்களோடு கூடியவன். அந்த மூன்று குணங்களும் உண்டாகும் பொழுது படைப்பு, காப்பு, அழிப்பு உண்டாகின்றன. இவை எல்லாம் தன்னிடத்திலிருந்து உண்டானவை ஆகும். தான் இல்லையெனில் இவ்விதமான யாதொரு நிலைமையுமில்லை. அப்பொழுது, தான்தானே சகளனாவதும் நிஷ்களனாவதும் சகுணனாவதும் நிர்குணனாவதும் விகாரியாவதும் நிர்விகாரியாவதும். ஆகையினால், தான் தானேயாகும் ஈஸ்வரன். தானாயிருக்கின்ற ஈஸ்வர சைதன்யம் தன்னிலே அடங்கித் தூங்கும் பொழுது ஈஸ்வரசைதன்யம் ஒன்று மட்டுமே உள்ளதாகவும், மற்றெல்லாம் இல்லாததாகவும் ஆயிற்று. அதனாலேதான் அத்தூக்க நேரத்தில் குரு வந்து அருகிலிருந்தபொழுது தெரியாமலிருக்கக் காரணம். நிற்க. குரு வந்திருக்கிறார் என்றுள்ள சங்கற்பம் உமக்கு எப்பொழுது உண்டாகிறது?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : தூக்கம் விழித்தபொழுது சங்கற்பம் எங்கிருந்து உண்டாகிறது?

சி : என்னிலிருந்தே உண்டாகிறது.

கு : என்னில் என்றால் எங்கிருந்து? தூங்கும்பொழுது நீர் இல்லையா? அப்பொழுது சங்கற்பம் உண்டாயிருந்ததா? தூக்கம் விழித்தபொழுது அது எவ்விதம் உண்டாகிறது?

சி : தூக்கம் விழித்தபொழுது எனக்கு விகாராதிகளுண்டாகி, அவ்விகாராதிகளில் இருந்துதான் சங்கற்பம் உண்டாகிறது.

கு : விகாராதிகள் எங்கிருந்து உண்டாகின்றன?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : ஜீவனிலிருந்து உண்டாகின்றன.

கு : ஜீவனிலிருந்து எப்படி உண்டாகின்றன? தூங்கும் சமயத்தில் உங்களுக்கு ஜீவன் இல்லையா? அப்பொழுது விகாராதிகள் உண்டாயிருந்தனவா? தூக்கம் விழித்தபொழுது உமக்கு என்ன உண்டாயிற்று?

சி : மனம் உண்டாயிற்று.

கு : அப்பொழுது சங்கற்பம் எங்கிருந்து உண்டாகிறது?

சி : மனத்திலிருந்து உண்டாகிறது.

கு : மனம் இல்லாவிட்டால் யாதேனும் இருக்கின்றதோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது குரு என்கிற சங்கற்பம் எங்கிருந்து உண்டாயிற்று?

சி : மனத்திலிருந்து உண்டாயிற்று.

கு : அப்பொழுது குரு யார்?

சி : மனம்.

கு : சங்கற்பம் செய்வதற்குள்ள சக்தி யாருக்கு இருக்கின்றதோ அவரே புரோகிதர்; அவரே குரு. இதற்கு உதாரணம்: ஒரு கோவில் உண்டாக்கி அதில் ஒருவர் ஒரு சங்கற்பம் (பிரதிஷ்டை) செய்கிறார். யார் அங்கே சங்கற்பம் செய்கின்றவரோ, அவரே அவ்விடத்தில் புரோகிதர். சங்கற்பசக்தியாருக்கிருக்கின்றதோ அவராகும் சங்கற்பிக்கின்றவர். அப்படியுள்ளவரைத்தான் அவ்விடத்தில் தந்திரி என்றும், புரோகிதர் என்றும் சொல்லுகின்றோம். இவ்விதமாக நமக்கு உலகென்ற சங்கற்பம் எங்கிருந்து உண்டாகின்றது?

சி : மனத்திலிருந்து.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது சங்கற்பசக்தி யாருக்கிருக்கிறது?

சி : மனத்திற்கு.

கு : அப்பொழுது புரோகிதர் யார்?

சி : மனமாகும்.

கு : அப்படியானல், நமக்கு எத்தனை குரு உண்டு?

சி : ஒரே குரு.

கு : அது எப்பொழுதும் வராது. அவனவனுக்கு **அவனவனுடைய மனமே குருவாகும். வேறு குரு இல்லை. அதனால் குரு சிஷ்யன் என்கிற நிலைமை இல்லாததாகும்.** அது எப்படி யென்றால், மனம் இல்லையெனில் யாதொன்றும் இல்லை. எல்லாம் மனத்திலிருந்தேதான் உண்டாகின்றன. ஆகவே மனமேயாகும் குரு. தவிர, ஒன்றிலிருந்து இரண்டு உண்டானதோ அல்லது இரண்டிலிருந்து ஒன்று உண்டானதோ? எப்படி உம்முடைய நம்பிக்கை?

சி : ஒன்றிலிருந்தே இரண்டுண்டானது என்றுதான் சொல்லி வருகிறார்கள். அதுபோலவேதான் நானும் கருதியிருக்கிறேன்.

கு : எனில், அப்படிக் கருதுவது தவறு. ஒன்றிலிருந்து இரண்டுண்டாவதில்லை. இரண்டிலிருந்தே யாகும் ஒன்றுண்டாவது. அதன் காரணம் "**ஒன்று**" எனச் சொல்ல வேண்டுமேயானால் அதனுடைய ஆதியும் அந்தமும் அதாவது அடியும் முடியும் காணவேண்டும். ஆதியந்தம் உண்டாகும்பொழுது மட்டுமே ஒரு பொருளை நிச்சயிக்க முடியும். ஆதியும் அந்தமும் இல்லையானால் ஒருபொருளை நிச்சயிக்கமுடியாது. ஒரு பொருளென நிச்சயிக்கும்பொழுது அதற்கு ஓர்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆதியுண்டு. ஆதியுண்டாகும்பொழுது அது நிற்பதற்கு ஓர் அடிஸ்தானம் (அடிப்படை) வேண்டும். அடிப்படை இல்லையெனில் அது நிற்க முடியாது. அந்தம் (முடிவு) வேண்டுமென்றால் அதற்கு மேலே ஒரு வெளி வேண்டும். வெளியாயிருக்கின்ற ஆகாசம் மேலே இல்லையெனில் முடிவும் உண்டாகிறதில்லை. அப்படியிருக்க ஆதி உடைய பொருள் நிற்பதற்காக அடிப்படையாகிய ஆதாரம் ஒன்று கீழும், முடிவு காண்பதற்கு வெளியான ஆகாசமாயிருக்கின்ற ஒன்று மேலேயும் உண்டாகின்றன. அவ்விதம் உண்டாகும்போது இரண்டாகின்றன. அந்த இரண்டிலாகும் ஒன்று நிற்பது. தவிர பூமி என்றும் ஆகாசம் என்றும் இரண்டு நிலைமைகள் இல்லையெனில் எந்தப் பொருளாவது உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : ஆகையால் எல்லாப் பொருள்களும் இரண்டிலிருந்தேதான் உண்டாகின்றன. அதற்கு உதாரணம்: ஏதாவது ஒரு விதையை எடுப்போம். அதன் உள்ளில் உள்ள அவ்வித்தின் பருப்பு காண்பதில்லை. ஏனெனில் அந்த வித்தின் உள்ளில் அதுஅடங்கி, நிறைந்து அடிமுடியில்லாமல் இருப்பதாலாகும். எனில், அதிலிருந்து ஒரு முளை கிளம்ப வேண்டுமென்றால் அவ்வித்து எவ்விதமாக வேண்டும்?

சி : அவ்வித்தினுடைய முகம் இரண்டாகப் பிளவுபடவேண்டும்.

கு : அப்பொழுது எதிலிருந்து அந்த ஒன்று அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முளை உற்பத்தியாகின்றது?

சி : இரண்டிலிருந்தே.

கு : அதேபோன்று நம் உற்பவமும் இரண்டிலிருந்தேயாகும். ஏனெனில் ஸ்திரீ மட்டுமிருந்தால் அவளிடமிருந்தோ, புருஷன் மட்டுமிருந்தால் அவனிடமிருந்தோ சந்தானமுண்டாகிறதில்லை. ஸ்திரீயும் புருஷனும் சேர்ந்தால் மட்டுமே சந்தானம் உண்டாகும். அப்போது நாமும் இரண்டிலிருந்தேதான் உண்டானோம். இது மூலமும் ஒன்று எதிலிருந்து உண்டாகின்றது என்று வெளிப்படுகிறது?

சி : இரண்டிலிருந்தே உண்டாகின்றது?

கு : இரண்டில்லையெனில் என்னவாகும்?

சி : ஒன்றுமில்லாததாகும்.

கு : ஒன்றும் இல்லாததற்குத்தான் "அத்துவைதம்" என்று சொல்லுவது. அத்துவைதமென்றால் "துவைதரஹிதம்" அதாவது இரண்டில்லாதது. இரண்டென்றுள்ள நிலைமை எங்கிருந்து உண்டாயிற்று என்றால், அது தன்னிலிருந்தேயாகும். தன்னுடைய சக்திக்குச் சலனம் உண்டானபோது இரண்டென்கிற நிலைமை உண்டாயிற்று. "தான்" என்றால் "அக்ஷரம்". அக்ஷரம் என்றால் "க்ஷரரஹிதம்" அதாவது நாசம் (அழிவு) இல்லாதது. ஏனென்றால் நாம் கேட்பதும், காண்பதும்; அறிவதும் மட்டுமன்றி எந்தப் பொருளுக்கு ஆதியந்தம் உள்ளதோ, அந்தப் பொருள் அழிந்துபோகின்றதும், எந்தப் பொருளுக்கு ஆதியந்தம் இல்லாமலிருக்கின்றதோ, அந்தப் பொருள் அழியாததுமாகும். அந்தப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பொருளாகும் ''ஈஸ்வரன்". அப்போது ஈஸ்வரனாய், தானாய், ஆதியந்தமில்லாததாகி, அக்ஷரமாயிருக்கின்றதிலிருந்து வெளி என்னும் ஆகாசமுண்டாயிற்று. அந்த ஆகாசத்தில் ''தான்தானே" சக்தியாய் சலிக்கவும் அப்பொழுது அதிலிருந்து எல்லா நிலைமைகளும் உண்டாகவும் செய்தன. எப்பொழுது ''தான்" வெளியாயிருக்கின்ற ஆகாயமாகி, சக்தியாய் சலிக்கத் தொடங்கிற்றோ, அப்பொழுது அது இரண்டாயிற்று. அதற்கே பிரம்மம் என்றும் மாயை என்றும் சொல்லுவது.

சி : ஓ குருவே! அழிவற்ற பொருளிலிருந்தே பிரம்மமென்றும், மாயையென்றும் இரண்டு நிலைமைகள் உண்டாயின என அருளிச் செய்தீர்களல்லவா? அதை மிகத் தெளிவாக அருள் செய்து கேட்க விரும்புகின்றேன்.

கு : ஆதியந்தம் (அடிமுடி) இன்றி, அழிவற்றதாய் இருக்கின்ற பொருள் எப்பொழுது ஆகாசமாய் விளங்குகின்றதோ, அப்பொழுது மேல் என்றும், கீழ் என்றும் இரண்டு நிலைமைகளுண்டாகின்றன. அவற்றில் மேலாயிருக்கின்ற பொருள் பிரம்மமும் கீழாயிருக்கின்ற பொருள் மாயையும் ஆகும். மாயையில் இருந்தே எல்லாம் உண்டாயிற்று. நாம் எவையெல்லாம் கேட்கின்றோமோ, காண்கின்றோமோ, அறிகின்றோமோ அவையெல்லாம் அம்மாயையிலேயே இருக்கின்றன. மாயை இல்லையெனில்யாதொரு பொருளுமில்லை. மாயை இல்லையானால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரம்மம் என்கிற ஒரு நிலைமையுமில்லை. அதென்னவென்றால், பிம்பமாய்தானாயிருக்கின்ற பொருளிற்கே சலனமுண்டாயிற்று. அந்தச் சலனத்திற்கே மாயை என்றுசொல்லுவது. மாயையாயிருக்கின்ற தனது சக்தி, எப்பொழுது தன்னில் லயிக்கின்றதோ, அப்பொழுது யாதொன்றுமில்லை. பிரம்மம் என்கிற ஒரு நிலைமையுமில்லை. தனக்குச் சலனமுண்டாகும் பொழுதே பிரம்மம் என்கிற ஒரு நிலைமை உண்டானது. அது பிரமையாலாகும். எப்பொழுது பிரமையாயிருக்கின்ற சலனம் தன்னில் அடங்குகின்றதோ அப்பொழுது அடிமுடியில்லாமல், ஓசையற்றதாய், காணமுடியாததாய், சூன்ய பதவியாகிய ஆனந்தம் உண்டாகிறது. அத்தருணத்தில் பிரம்மம் என்கிற நிலைமையில்லை. ஓசை முதலானவையாகிய எல்லா நிலைமைகளும் உண்டாகின்றது மாயையில் இருந்தேயாகும். மாயை என்றால் யாதொன்று இல்லாததோ அதுவேயாகிறது; இக்காணுகின்ற சராசரங்கள் அல்ல. ஆனால் உலகத்தில் மாயை என்று சொல்லி வருகிறது இக்காணுகின்ற சராசரங்களுக்கேயாகும். அது சரியல்ல. மாயையிலேயேதான் எல்லாம் நிலைகொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படை மாயை. மாயை இல்லையெனில் யாதொன்றுமில்லை. அதெப்படியென்றால், இதோ பாருங்கள்! ஒரு குத்துவிளக்கு. இந்த விளக்கை உண்டாக்கவும், இங்கே கொண்டு வந்து வைக்கவும், எடுத்துக் கொண்டு போகவும், இதைக் கழற்றவும், துடைக்கவும் மற்றும் நாம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செய்கின்றோம். இவ்வாறு செய்வதற்கு அடிப்படை யாயிருக்கின்ற பொருள் பூமி. பூமி இல்லையெனில் இதை உண்டாக்குவதற்கோ, கொண்டுவந்து வைப்ப தற்கோ, கழற்றுவதற்கோ, அடைப்பதற்கோ, யாதொன்றும் செய்ய முடியாது. இருப்பினும், இந்த விளக்கிற்கு பூமி என்று சொல்லுவதற்கிடமில்லை. பூமிக்கு பூமி என்றும் விளக்கிற்கு விளக்கு என்றும்தான் பெயர். எனினும் மேற்சொன்னபடி செய்வதற்கு பூமியே அடிப்படையாக இருக்கின்றது. அதுபோல வேதான், ஏதாவதொன்று உண்டாவதற்கோ, உண்டாக்குவதற்கோ, நசிப்பதற்கோ, நசிப்பிப்பதற்கோ, கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ, எல்லாவற்றிற்கும் அடிப்படை யாயுள்ளது மாயை. மாயை இல்லையெனில் மேற்சொன்ன யாதொரு நிலைமையும் உண்டாக இடமில்லை. ஆகையால் இக்காணப்படுகின்ற சராசரங்கள் யாவும் மாயையிலேயே இருக்கின்றன. இதனுடைய அடிப்படை மாயை, பார்க்கின்ற இவையாவும் மாயையல்ல. மாயை என்பது யாதொன்று இல்லாததாகின்றதோ அதுவேயாகும். அதாவது யாதொன்று என்பது நித்தியமாயிருக்கின்றது. அந்த நித்தியமான பொருள் அறிவு. அறிவு என்பது ஞானம். அதுவே போதம். அந்த போதம்தான் வித்தை. அந்த வித்தையே அக்ஷரம். அந்த அக்ஷரம் ஆகும் ''தான்''. அப்பொழுது தானாயும் அக்ஷரமாயும் வித்தையாயும் போதமாயும் ஞானமாயும் அறிவாயும் நித்தியமாயும் உள்ளது இல்லாமல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



போகின்றதற்கே "மாயை" என்றுபெயர். மாயை என்பது அநித்தியமாகி, அறிவில்லாததாகி, அஞ்ஞானமாகி, போதமில்லாததாகி, வித்தையில்லாததாகி, அக்ஷரமில்லாததாகி, தானில்லாததாகித் தீருகின்ற நிலைமையாகும். அதெவ்வாறெனில் இப்பொழுது நமக்கு அறிவுண்டோ, இல்லையோ?

சி : அறிவு உண்டு.

கு : அந்த அறிவு என்று சொல்லுவது எதுவென்று உம்மால் சொல்லுவதற்கு முடியுமோ?

சி : சொல்லுவதற்கு முடியாது.

கு : அறிவு என்பது நாம் கேட்கின்றதோ, காண்கின்றதோ, அறிகின்றதோ அல்ல. எனில் இவ்விதம் கேட்கின்றதும், காண்கின்றதும் அறிகின்றதுமாகிய இவையாவும் தானாய், அறிவாய் இருக்கின்ற பொருள் தன்னிலிருந் வெளியே வந்து வியாபிக்கும்போது, அதில் பிரதிபிம்பமாகவும் பிரதிதொனியாகவும் (எதிரொலியாகவும்) கேட்கவும் காணவும் அறியவும் செய்கின்றதாகும். அப்படியாயின் அறிவு என்கிற பொருள் நம்மில் இல்லையென்றால் நமக்கு யாதொன்றும் கேட்கவோ, காணவோ, அறியவோ முடியாது. அதெப்படியெனில் ஒருவன் செத்துப்போகிறான். செத்துப் போனால் பிணமாகிறான். அந்தப் பிணத்திற்கு ஏதாவது கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அது ஏன்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : செத்துப்போனதால்.

கு : செத்தபோது அதற்கு என்ன இல்லை?

சி : அறிவு இல்லை.

கு : அறிவு இல்லாமலிருப்பதற்குக் காரணமென்ன?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : ஜீவன் இல்லை என்று எவ்விதம் தீருமானித்தீர்?

சி : யாதொரு அசைவும் சேட்டையுமில்லாததால்.

கு : ஒரு மனிதன் தூங்கும்பொழுது அசைவோ, சேட்டையோ யாதேனுமுண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது அவன் செத்துவிட்டானென்று சொல்லுவதுண்டோ?

சி : இல்லை.

கு : ஏன்?

சி : அவனுக்கு ஜீவனிருப்பதால்.

கு : அவனுக்கு அப்பொழுது ஜீவன் உண்டென்று எதைக்கொண்டு தீருமானித்தீர்?

சி : அவன் சுவாசிக்கின்றதால்.

கு : செத்துவிட்டானென்று என்ன காரணத்தால் தீருமானிக்கப்பட்டது.

சி : சுவாசசக்தி (மூச்சு) இல்லாமற் போனதால்.

கு : அப்பொழுது ஜீவனுடைய சக்தியாகிய "வாயு" நம்மில் இருக்கின்றபோது மட்டுமே நமக்கு அறிவு இருக்கின்றது. நம்மிலிருக்கின்ற ஜீவசக்தியாகிய வாயு முழுவதும் இல்லாமற் போனால் நமக்கு யாதொரு அறிவுமில்லை. அது எப்படியென்றால், ஒருவன் செத்துப்போகிற சமயத்தில், மேல்மூச்சுவாங்கி புருவமத்தியத்திற்குக் கீழே கொஞ்சம் ஜீவன்மட்டும் இருக்கின்றபோது,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கண்களினாலும் முகத்தினாலும் கோஷ்டிகளைக் காண்பிக்கின்றான். மற்ற யாதொரு அவயவங்களையும் அசைக்க முடியாது. அந்த ஜீவசக்தியாகிய வாயுவெளியே போய்விட்டால் அந்தப் பிணம் யாதொரு சேட்டையோ, அசைவோ இல்லாமல், ஒரு மரத்துண்டிற்கு ஒப்பாய், அங்குமிங்கும் உருட்டினால் உருளவும், தீயில் வைத்தால் எரிந்துபோகவும் செய்கிறது. அப்பொழுது அதற்கு யாதொரு அறிவுமில்லை. அதன் காரணம் என்ன?

சி : அதில் ஜீவசக்தியாகிய வாயு இல்லாததுவே.

கு : தவிர, ஒருவன் படுத்துத் தூங்கும்பொழுது அவனுள்ளில் வாயு நடமாடுகிறதுண்டோ?

சி : உண்டு.

கு : அவனைத் தட்டிக் கூப்பிட்டாலோ?

சி : அறிகிறான்.

கு : அதற்குக் காரணமென்ன?

சி : அவனுள்ளில் வாயு நடனம் செய்வதால் அதாவது நடமாடுவதால்.

கு : ஒரு பிணத்திற்குள் வாயு நடமாடுகிறதுண்டோ?

சி : இல்லை.

கு : அந்தப் பிணத்தை உருட்டி அழைத்தாலோ, நெருப்பில் எரித்தாலோ அறிவதுண்டோ?

சி : அறிவதில்லை.

கு : அது என்ன காரணம்?

சி : அதனுள் வாயு நடமாட்டம் இல்லாததால்.

**கு : அப்பொழுது அறிவாயிருக்கின்ற பொருள் எது?**

**சி : ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.**

கு : தவிர, நீர் ஐந்தாறு தினங்களுக்குமுன் ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசித்து வைத்திருந்தீர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்தக்காரியம் உம்முடைய ஞாபகம் விட்டுப் போயிருக்கிறது. அதைப்பற்றி பிற்பாடும் ஞாபகம் வருவதற்கு நீர் என்ன செய்ய வேண்டும்?

சி : அதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

கு : அப்படி ஆலோசிக்கின்ற சமயத்தில், உம்முடைய சுவாசக்தியானது உமதுள்ளில் அடங்குகின்றதோ அல்லது வெளியில் போகின்றதோ?

சி : அது வெளியில் போகாமல் எனதுள்ளிலேயே தான் அடங்குகின்றது.

கு : அவ்விதம் ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் உமது முன்னிலையில் ஒருவன் போவானேயானால் அவனை நீர் காணவோ, அறியவோ முடியுமா?

சி : முடியாது.

கு : அது ஏன்?

சி : அந்தச்சமயத்தில் என் ஆலோசனை மற்றொன்றிலும் செல்லாமல் என் உள்ளேயே அடங்கியிருந்ததாலே ஆகும்.

கு : அப்படியுள்ள நீர் மற்றொருவனோடு ஏதாவது பேசிக்கொண்டிருக்கும்பொழுது, உமது முன்னிலையில் ஒருவர் போனால், அவரைக் காணவோ, அறியவோ உம்மால் முடியுமா?

சி : முடியும்.

கு : அதன் காரணம் என்ன? உமது அலோசனை அச்சமயம் அந்தப் பேச்சில் இல்லாதிருந்ததோ?

சி : அதிலேதான் இருந்தது. ஆனால் என்னுடைய மனம் அப்போது வெளியில் வியாபித்திருந்தது. முற்கூறிய ஆலோசனை சமயம் எனது மனத்தை என் உள்ளேயே நிறுத்தி ஆலோசித்தவனாயிருந்தேன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அதனால்தான் எதிரில் போனவரைக் காணுவதற்கோ, அறிவதற்கோ முடியவில்லை.

கு : அந்த மனம் வெளியில் வியாபிக்காமல் அச்சமயத்தில் உம்முள் அடங்கியிருந்ததன் காரணம் என்ன?

சி : என்னுடைய மனம் ஒன்றிலேயே ஆழ்ந்து ஆலோசித்ததால் அடங்கியதாகும்.

கு : அது எப்படி உம்முள் அடங்கிற்று? அப்படி அடங்கக் காரணம் என்ன? சொல்லமுடியுமா?

சி : முன்சொன்னபடி அல்லாமல் மற்றெவ்வித மென்பது எனக்குத் தெரியவில்லை.

கு : அப்படியென்றால் உமது ஆலோசனை சமயத்தில் ''எனது கதி அதாவது மூச்சு என் உள்ளேயே அடங்குகிறது, வெளியில் போகிறதில்லை" என்று நீர் சொன்னீரல்லவா? அந்த மூச்சு என்று சொல்லுவது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அந்த ஜீவசக்தி வெளியில் வருவதற்கு ''வாயு" என்று பெயர். வாயுவென்றால் சலிக்கின்றது என்றாகும். அந்தச் சலனத்திலிருந்தாகும் விசாரம் உண்டாகிறது. அந்த விசாரத்திற்குக் கர்த்தா மனம். அவ்வாறு சலனமுள்ள பொருள் உம்முள் அடங்கியது. அப்பொழுது உம்முடைய மனமும் உம் உள்ளேயே அடங்கிற்று. ஆகையினால்தான் உமக்கு மற்றொன்றைக் காண்பதற்கும் அறிவதற்கும் முடியாமலிருந்தது. அப்பொழுது தன்னிலிருந்து வெளியே சலித்து அதாவது பரவிக்கொண்டிருக்கின்ற சக்திக்குதான் வாயு என்று சொல்லுகின்றது. அது தன்னிலிருந்து வெளியே போகாமல் தன் உள் வழியாய்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மேல்கீழாய் கதாகதம் செய்து அதாவது நடமாடி பிரம்மரந்திரத்தோடு தாக்கிக் கொண்டிருக்கின்ற நிலைமைக்கு ''சமீரணன்" என்று பெயர். சமீரணன் என்றால் பிரம்மரந்திரத்தோடு ஈரணம் செய்தல் அதாவது தாக்கிக்கொண்டிருத்தல். பிரம்மம் என்றால் நித்தியமாயிருக்கின்ற பொருள். அந்தப் பொருளுடன் தொட்டு வேறுபடாமல் முட்டிக் கொண்டிருக்கின்ற கதியே அதாவது நடப்பே ஈரணம். அவ்விதமாயுள்ள கதியானது, நன் உள் வழியாய், மேல் கீழ் நடந்து, வெளியே விட்டுப்போகாமல் பிரம்மரந்திரத்தோடு தாக்கிக்கொண்டிருப்பதற்கு சமீரணன் என்றும், அப்படியல்லாமல் வெளியே சலித்துக் கொண்டிருக்கின்ற கதிக்கு வாயு என்றும் பெயர். அதனால் தன்னுடைய சக்தி எப்பொழுது தன்னில் லயிக்கின்றதோ, அச்சமயத்தில் மற்றொன்றையும் அறிகிறதில்லை என்று நமக்குக் கண்கூடாக அனுபவப்படவும், தன்னுடைய சலனத்திலிருந்தே யாகும் தனக்கு எல்லா நிலைமைகளும் உண்டாகிறதென்று வெளிப்படவும் செய்கின்றன. தவிர, தன்னுடைய சலனம் தன்னிலடங்கி ஆலோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் நமக்கு உணர்வு உண்டாகின்றது. அதாவது ஆலோசித்துக் கொண்டிருக்கின்ற காரியம் ஞாபகத்துக்கு வருகிறது. அப்பொழுது உணர்வாகின்ற ஞாபகம் எங்கிருந்து உண்டாகிறதென்றால் பிரகாசத்தி லிருந்தேதான். பிரகாசம் அக்கினியிலிருந்துண்டா கிறது. அக்கினி உண்டாகிறது வாயுவிலிருந்து. அப்பொழுது **வாயுவாகி, அக்கினியாகி,**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரகாசமாகி, அறிவாயிருக்கின்ற ஜீவசக்தி தன்னிலேயே அடங்கும்பொழுதுதான் நமக்கு உணர்வு உண்டாகிறது. அப்பொழுது அறிவாயிருக்கும் பொருள் எது?

சி : ஜீவசக்தியே.

கு : அறிவாகி, ஜீவசக்தியாயிருக்கின்ற பொருள் சலித்து, வாயுவாகி, நம்முள்ளிலிருந்துவெளியே போய்க்கொண்டிருப்பதற்கே ''மாயை"என்று சொல்லுகிறது. இதற்காகவே ''யாதொன்று இல்லாததாகின்றதோ அது மாயை" என்று சொல்லுவதன் காரணமாகும். ''யாதொன்று" என்பது அறிவு. அந்த அறிவு வாயுரூபமாய் வெளியில்போய் நசித்துக்கொண்டிருப்பதற்கே மாயை என்று பெயர். இதற்காகவே தன்னுடைய மாயை என்றும், தன்னிலிருந்து உற்பவித்தது அதாவது உண்டானது என்றும் சொல்லக் காரணம். ''தான்" என்றால் யாரென்பதாய் நீர் கருதுகின்றீர்?

சி : தான் என்றால் அவனவனே.

கு : அப்பொழுது மாயையினுடைய உற்பவம் அதாவது உற்பத்தி எங்கிருந்து?

சி : அவனவனிலிருந்தே.

கு : ஆகையினால் மாயை என்பது மேலே சொல்லியபடி உண்டானதாகும். அதற்குப் பிறகேயாகும் மனத்தினுடைய உற்பத்தி. அந்த மனமாகும் குரு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# இரண்டு

சீடன் : குருவே! உலகம் முழுவதும் அவனவனது மனம் ஆகுமென்றும், அந்த மனமே குரு என்றும் கூறினீர்களன்றோ? அப்படியானால் உலகமே குரு ஆகின்றதல்லவா?

குரு : ஆம்! ஆனால் அது நீர் புரிந்துகொண்டபடியல்ல. அப்படியென்றால்; முன் அத்தியாயத்தில் விவரித்த மாயையிலிருந்து இரண்டு நிலைமைகள் உண்டாகின்றன. அவை முதலாவது காரணமும் இரண்டாவது காரியமுமாகும். இவ்விதம் இரண்டு நிலைமைகள் சேரும்போது மட்டுமே உலகம் உண்டாகின்றது. அதில் காரியம் என்பது என்னவென்றும் காரணம் என்பது என்னவென்றும் நாம் அறிய வேண்டும். காரியம் என்பது ஏதாவது அனுபவத்திலோ, பலனிலோ வருவதும் ஏதாவது கிடைக்கின்றதுமாகும். அது எவ்விதமாய் வருகின்றதோ, எப்படிக் கிடைக்கின்றதோ, அதற்குள்ள முயற்சி எதுவோ, அது காரணமும் ஆகிறது.

சீடன் : ஸ்வாமி! உலகம் இல்லை என்றால் இந்த இரண்டு நிலைமைகளும் உண்டாகுமா?

குரு : உலகம் என்பது எந்த விதமாக இருக்கின்றதென்று உமக்குத் தெரியுமா?

சீடன் : தெரியாது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : எனில் உலகம் என்பது மூன்று நிலைமைகளாகும். அதாவது கேட்கின்றது, காண்கின்றது, அறிகின்றது. இவையல்லாமல் வேறு யாதொன்றும் இல்லை. எப்படியென்றால் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் அப்பால் உலகம் என்கிற நிலைமை உண்டோ?

சி : இல்லை.

கு : ஆகையினால் இந்த மூன்று நிலைமைகளே உலகம். இந்த மூன்று நிலைமைகளும் நமக்கு என்னவாகின்றன? காரியமாகின்றனவோ, காரணமாகின்றனவோ?

சி : காரியமாகின்றன.

கு : அப்பொழுது உலகம் நமக்கு என்னவாகின்றது?

சி : காரியமாகின்றது.

கு : அதனால் உலகத்தைக் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ நமக்கு என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி : மனம் உண்டாயிருக்க வேண்டும்.

கு : மனம் இல்லையானால் யாதேனும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : ஆனதனால் இவையெல்லாம் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் காரணமென்ன?

சி : மனம்

கு : அப்பொழுது மனம் காரணமும் மற்றெல்லாம் காரியமும் ஆகின்றன. அது எப்படியென்றால்; உமக்கு இப்பொழுது அவசரமாய்ப் பத்து ரூபாய் தேவையாய் இருக்கிறது. தற்சமயம் உமது கையில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இல்லை. உமது சிநேகிதர் ஒருவரிடம் பணம் இருப்பதாக அறியவும் செய்தீர். அவரிடமிருந்து உமக்குத் தேவையான பணம் கிடைக்க வேண்டுமானால் நீர் என்ன செய்ய வேண்டும்?

சி : அவரிடம் கேட்க வேண்டும்.

கு : கேட்டபோது கிடைத்தது. அவரிடமிருந்து கிடைகின்றபொழுது அது காரியமோ, காரணமோ?

சி : காரியமாயிற்று.

கு : அதற்குக் காரணமென்ன?

சி : அது கிடைப்பதற்குள்ள கேள்வி.

கு : அப்பொழுது எது ஒன்று நமக்குக் கிடைக்கின்றதோ. அது காரியமும், அது கிடைப்பதற்கு வேண்டியுள்ள முயற்சி எதுவோ அது காரணமும் ஆயிற்று என்று வருகிறது. அப்பொழுது அந்த முயற்சி என்னவாயிருந்தது?

சி : கேள்வியாக இருந்தது?

கு : அந்தக் கேள்வி எங்கிருந்து உண்டாயிற்று?

சி : மனத்திலிருந்து.

கு : அப்பொழுது காரணம் எது?

சி : மனம்.

கு : ஆகையினால் காரணம் என்பது அவனவனுடைய மனமும், காரியம் என்பது உலகமும் ஆகிறது. உலகம் என்பது சர்வசராசரங்களும் அடங்கியது. அதாவது பிரம்மா முதல் எறும்பு வரையிலுமாகும். அவ்விதமிருக்க பிரம்மா என்ற ஒருவர் இருக்கின்றதாக நீர் கருதியிருக்கின்றீரல்லவா? அந்த பிரம்மா வந்து உமக்கு ஓர் உபதேசம் கொடுக்கின்றார். அதை நீர் செய்வதில்லை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



யானால் பலன் கிடைக்குமா?

சி : கிடைக்காது.

கு : எறும்பு ஓர் உபதேசம் கொடுக்கின்றது. அதையும் நீர் செய்வதில்லையானால் பலன் கிடைக்குமா?

சி : கிடைக்காது.

கு : பிரம்மா கொடுத்த உபதேசத்தை நீர் சரிவரச் செய்தாலோ?

சி : அதன் பலன் கிடைக்கும்.

கு : எறும்பு கொடுத்த உபதேசத்தையும் சரிவரச் செய்தாலோ?

சி : அதன் பலனும் கிடைக்கும்.

கு : அப்பொழுது பிரம்மாவையும் எறும்பையும் வித்தியாசமாகக் கருதுவதற்கிடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : அது எவ்விதமென்றால், பிரம்மா கொடுத்த உபதேசமாகும் என்றும், பெரியவராகும் என்றும், சிருஷ்டிகர்த்தாவென்றும் கருதி, அதன்படி செய்யாமல் இருந்தால் அதன் பலன் கிடைப்பதில்லை. எறும்பு கொடுத்த உபதேச மாகுமென்றும், அது சிறிய ஜீவியாகுமென்றும், அற்ப ஜீவன் என்றும் கருதி, அதைச் சரிவரச் செய்தாலோ, பலன் கிடைக்காமல் இருக்கிறதும் இல்லை. அதனாலாகும் பிரம்மாவும் எறும்பும் வித்தியாசமில்லை என்று சொல்லக்காரணம். எனில் நமக்குப் பலன் கிடைக்கின்றது எங்கிருந்து?

சி : நம்முடைய தொழிலிலிருந்து.

கு : அத்தொழில் எங்கிருந்துண்டாகின்றது?

சி : மனத்திலிருந்து.

கு : அவ்விதமாயுள்ள மனம் இல்லையானால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தொழிலோ, பிரம்மாவோ, எறும்போ, உலகமோ யாதேனும் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அதனால்தான் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமே காரணம் என்றும், குரு சிஷ்யன் என்கிற நிலைமை இல்லை என்றும் சொல்லக் காரணம். அவனவனுக்கு அவனவன் மனமே குருவாகும். அம்மனமாகின்ற குருவின் இருப்பிடம் எங்கே, சொல்லுங்கள்?

சி : அது என்னுடைய இருதயத்திலாகும்.

கு : ''இருதயம்" என்று சொல்லுகிற இடத்தைத் தொட்டுக்காண்பியும்!

சி : இதோ! எனது நெஞ்சிலுள்ள இரண்டு முலைகளுக்கு நடுவில் சிறிது குழியாய்க் காணுகின்ற இந்த இடம் அதாவது நெஞ்சுக்குழி.

கு : அது ஒருக்காலும் இருதயமல்ல. இருதயம் என்று சொல்லுவது மனத்தினுடைய இருப்பிடமல்லவா?

சி : ஆம்.

கு : மனமில்லையென்றால் ஏதேனும் ஒரு சிருஷ்டி உண்டாகுமா?

சி : உண்டாவதில்லை.

கு : அப்படியானால், இன்று பிரசவித்து விழுந்த ஒரு குழந்தைக்கு மனம் இருக்கின்றதா, இல்லையா?

சி : இருக்கின்றது.

கு : அது அழுவதும் பால் குடிப்பதும் உண்டல்லவா?

சி : ஆம், உண்டு.

கு : அப்படியென்றால், அந்தக் குழந்தை தூங்கும்போது அழுவதோ, பால் குடிப்பதோ உண்டா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : இல்லை.

கு : என்னகாரணம்?

சி : அப்பொழுது அதற்கு யாதொரு ஸ்மரணை அதாவது நினைவுமில்லை.

கு : அது என்ன காரணம்? அப்பொழுது அதில் என்ன இல்லை?

சி : அப்பொழுது அதில் ஒன்றும் இல்லை.

கு : அது எப்படி? அதில் ஒன்றுமில்லை என்று சொல்லமுடியுமா? ஒன்றுமில்லை என்றால் அது பிணமல்லவா? அதனால் அதில் என்ன இருக்கிறது?

சி : ஜீவன் இருக்கிறது.

கு : எனில் ஜீவன் மட்டும் இருக்கும்போது இப்படி யாதேனும் கேட்பதற்கோ, காணுவதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : ஜீவனுக்கு யாதேனும் கேட்பதற்கோ, காணுவதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி : மனம் உண்டாயிருக்க வேண்டும்.

கு : மனம் இல்லையெனில் யாதேனும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அப்படியானால் தூங்கும்போது மனம் உண்டாயிருந்ததா?

சி : உண்டாயிருந்தது. ஆனால் தூங்கும்போது மனம் அடங்கிப்போயிற்று.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : எங்கே அடங்கிப் போயிற்று?

சி : அதனுடைய உள்ளில் அடங்கிப்போயிற்று.

கு : அதனுடைய உள்ளிலடங்க என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி : ஜீவன் உண்டாயிருக்க வேண்டும்.

கு : ஜீவன் இல்லாவிட்டால் மனம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது மனம் எங்கிருந்து உண்டானது?

சி : ஜீவனிலிருந்து.

கு : எனவே தூங்கும்போது மனமானது ஜீவனில் கரைந்து அதாவது லயித்து மற்றொன்றும் இல்லாமலாய்ப் போயிற்று. அது எவ்வாறென்றால்: ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் இங்கு கொண்டுவந்து வைத்து அதில் கொஞ்சம் உப்பைப் போட்டால் அது என்னவாகிறது?

சி : அந்த உப்பு தண்ணீரில் கரைந்து அதில் லயித்துப் போகிறது.

கு : அப்படியே நாம் தூங்கும்போது மனமானது ஜீவனில் லயித்து ஜீவரூபம் மட்டுமாகி, வேறொன்றும் இல்லாமலாகி விடுகிறது. எனில், மனமானது ஜீவனில் லயிக்கக் காரணம் என்னவென்றால் உப்பு தண்ணீரில் லயிக்கக் காரணம் என்னவென்றறிய வேண்டும். ஆனால் அந்த உப்பு எங்கிருந்து உண்டாயிற்று என்று அறிந்தால்தான் உப்பு தண்ணீரில் லயிக்கும் காரணத்தை அறிய முடியும். எனவே உப்பு எங்கிருந்து உண்டாயிற்று?

சி : உப்பு தண்ணீரிலிருந்து உண்டாயிற்று.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது உப்பினுடைய சுயரூபம் என்ன?

சி : தண்ணீராகும்.

கு : எனவே தண்ணீரிலிருந்தே உப்புண்டானது. அதனால் உப்பினுடைய சுயரூபம் தண்ணீராகும். அந்தத் தண்ணீரிலுண்டான உப்பு தானுண்டாயிருந்த பொருளில் சேரும்போது, அதே உருவமாகி, வேறு உருவமில்லாமல் ஆயிற்று. இப்படியேதான் ஜீவனிலிருந்து மனம் உண்டானது. அந்த மனம் தானுண்டான ஜீவனில் சேர்ந்தபோது, ஜீவனில் லயித்து, வேறொன்றும் இல்லாமலாய், ஜீவரூபம் மட்டுமாய்த் தீருகிறது. அதனால்தான் தூங்கும்போது யாதொன்றும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியாமலாயிற்று. ஆனால் அந்தக்குழந்தை தூக்கம் விழித்தபொழுது அழுவதும் பால் குடிப்பதும் செய்கிறதல்லவா?

சி : செய்கிறதுண்டு.

கு : அப்பொழுது மனம் இல்லையெனில் அழுவதற்கோ, பால் குடிப்பதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அது அழவும் பால் குடிக்கவும் செய்கிறது. ஆனால் பால் எப்படி உண்டாவதென்றும், அது எங்கிருந்து கிடைப்பதென்றும் அக்குழந்தைக்குச் சிந்திக்க முடியுமா?

சி : முடியாது.

கு : அதன் காரணம் என்ன?

சி : அதற்கு சக்தி இல்லாததால்.

கு : அதற்கு சக்தி இல்லையென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் சக்தி இல்லையெனில் அதற்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அழுவதற்கோ, பால் குடிப்பதற்கோ முடியாது. ஆனால் சிந்தனை எங்கிருந்து உண்டாகின்றது?

சி : மனத்திலிருந்து.

கு : சிந்திப்பதற்கு என்ன வேண்டும்?

சி : மனம் உண்டாயிருக்க வேண்டும்.

கு : மனம் உண்டாயிருந்தாலும் சிந்திப்பதற்கு முடிவதில்லை. ஏனென்றால், அக்குழந்தை அழுகிறபொழுதும் பால் குடிக்கிறபொழுதும் அதற்கு மனம் இல்லையா? அப்பொழுது அதற்குச் சிந்திக்க முடியுமா?

சி : முடியாது.

கு : அதற்குக் காரணம் என்ன? குழந்தைகளுக்குச் சாதாரணமாக என்ன இல்லை என்று சொல்வது?

சி : புத்தியில்லையென்று சொல்லுகிறார்கள்.

கு : புத்தியில்லாவிடில் சிந்திக்க முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது சிந்திப்பதற்கு என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி : புத்தி உண்டாயிருக்க வேண்டும்.

கு : அப்பொழுது சிந்திக்கின்றது புத்தியாகின்றது. அந்தப் புத்தி பல காரியங்களைக் குறித்தும் சிந்திக்கின்றதாகும். அவ்விதம் சிந்திப்பதற்குள்ள காரியங்களை எங்கே வைத்துக்கொண்டிருக்கின்றது?

சி : மனத்தில்.

கு : அப்பொழுது பல காரியங்களைக் குறித்தும் சிந்திப்பதற்காகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்ற இடமாகும் மனம். அந்த மனமாயிருக்கின்ற இடத்தில் புத்திபோய்ச் சிந்திக்கின்றது. அப்படி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



யென்றால் அந்த மனத்தின் இடம் எதுவெனில், நீர் ஒரு காரியத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது உம்முடைய சிந்தனையும் அச்சமயத்தில் உமது கண்விழிகளும் எந்தப் பக்கமாகப் போகின்றன?

சி : மேல்பக்கமாகப் போகின்றன.

கு : அப்பொழுது சிந்திப்பது எங்கே?

சி : மனத்தில்.

கு : மனத்தினுடைய இடம் கீழே நெஞ்சுக்கு மத்தியில் இருக்குமென்றால். சிந்தனைக்கு மேல்பக்கம் போகக் காரணம் என்ன? கீழ்ப்பக்கத்திலுள்ள நெஞ்சுக்குழியில் அல்லவா பார்க்க வேண்டியது?

சி : ஆம்! கீழே நெஞ்சுக்குழியில்தான் பார்க்க வேண்டியது.

கு : சிந்திக்கும் சமயம் அவ்விதம் பார்ப்பதுண்டா?

சி : அவ்விதம் பார்ப்பதில்லை.

கு : எனில், இதோ! இந்த வீட்டின் வடபக்கத்து அறையினுள் ஒரு சாமானை நீர் வைத்துவிட்டு, தேவையானபோது அதை அந்த வீட்டின் தென் புறமிருக்கும் அறைக்குள் போய்ப் பார்த்தால் கிடைக்குமோ?

சி : கிடைக்காது.

கு : ஏன்?

சி : வைத்த இடத்தில் பார்க்காததால்.

கு : வைத்த இடத்தை விட்டு மற்றொரு இடத்தில் பார்த்தால் கிடைக்குமோ?

சி : கிடைக்காது.

கு : இப்படியே நமக்கு ஏதாவது காரியத்தைப் பற்றி சிந்திப்பதற்குப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றது எங்கே?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : மனத்தில்.

கு : ஆகையினால் சிந்திப்பதற்குள்ள காரியங்களைப் பத்திரப்படுத்தி வைப்பது மனத்தில்தான். **அதனால் தான் மனத்தினுடைய இடம் புருவமத்தியம்** என்று சொல்லக் காரணம். "**புரு**" என்று சொல்லுவது இரண்டு கண்களினுடைய புருவங்கள். அதனுடைய மத்தியத்திற்கே "புருவ மத்தியம்" என்று சொல்லுவது. **அதுவேயாகும் மனத்தினுடைய இடம்.** அந்த இடத்திற்கே "**இருதயம்**" என்று பெயர். அந்த இருதயம் நீர் தொட்டுக்காண்பித்த நெஞ்சுக்குழியில் இருக்கிறது என்றால் அங்கு மூடுவதற்கோ, திறப்பதற்கோ ஏதாவது உண்டோ?

சி : இல்லை.

கு : இருதயம் இல்லையென்றால் நமக்கு யாதொரு பிரகாசமோ, யாதொன்றும் காண்பதற்குள்ள சாத்தியமோ உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது பிரகாசிப்பது எங்கிருந்து?

சி : இருதயத்திலிருந்து.

கு : நீர் குருடனைப் பார்த்திருக்கின்றீரா?

சி : ஓ! பார்த்திருக்கின்றேன்.

கு : அவனுக்கு ஏதாவது பிரகாசம் இருக்கிறதா அல்லது யாதேனும் காண்பதற்கு முடியுமா?

சி : அவனுக்கு யாதொரு பிரகாசமும் இல்லை; யாதொன்றும் பார்ப்பதற்கும் முடியாது.

கு : என்ன காரணம்? அவனுக்குக் கண்களோ, இருதயமோ குருடு?

சி : கண்கள்தாம் குருடு?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : இருதயம் நீர் சொல்லிய இடமாயிருந்தால் அவ்விடத்திலிருந்து ஒளியோ, மற்று ஏதாவது காட்சியோ உண்டா?

சி : இல்லை.

கு : ஏன்?

சி : கண்கள் குருடானதால்.

கு : உமக்கு இப்பொழுது கண்கள் குருடா?

சி : இல்லை.

கு : உமக்கு இப்பொழுது பிரகாசம் இல்லையா? இவையெல்லாம் காண்பதில்லையா?

சி : பிரகாசமும் உண்டு. காண்பதும் உண்டு.

கு : எனில் உங்கள் கண்களை மூடினால் உமக்குப் பிரகாசிப்பதோ அல்லது யாதேனும் காண் பதோ உண்டா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்?

சி : கண்களை மூடியதால்.

கு : கண்களை மூடினால் என்னவாகின்றது?

சி : இருட்டாகின்றது.

கு : ஏன்? நீர் உமது கண்களை மூடினீரா? இருதயத்தை மூடினீரா?

சி : கண்களையேதாம் மூடினேன்.

கு : நீர் சொல்லியபடி இருதயம் நெஞ்சுக் குழியில் இருந்திருந்தால், ஏன் அங்கிருந்து பிரகாசிப்ப தற்கோ, காண்பதற்கோ முடியவில்லை?

சி : கண்களை மூடியதால்.

கு : கண்கள் திறந்திருந்தாலோ?

சி : பிரகாசம் உண்டாகிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அந்தப் பிரகாசம் நமக்கு எங்கிருந்து உண்டாகிறது?

சி : மேல்பக்கத்திலிருந்து.

கு : அப்பொழுது எப்படிப் பார்த்தாலும் மேலே இருந்தல்லாமல் கீழேயிருந்து பிரகாசம் உண்டாவதில்லை. தவிர, இராத்திரியானால் நமக்கு என்னவாகின்றது?

சி : இருட்டாகின்றது.

கு : பகல் ஆனாலோ?

சி : வெளிச்சமாகின்றது.

கு : அந்த வெளிச்சம் எங்கிருந்து உண்டாகிறது?

சி : ஆகாசத்திலிருந்து.

கு : அந்த ஆகாசம் மேலேயா, கீழேயா?

சி : மேலேதான்.

கு : அப்பொழுது, எவ்விதத்தில் பார்த்தாலும் மேலேயிருந்துதான் பிரகாசம் உண்டாகின்றது. கீழேயிருந்தல்ல. அதல்லாமல், நாம் ஏதாவதுஒரு விளக்கைப் பொருத்தி வைத்தால் அந்தவிளக்கின் எந்தப் பக்கத்திலிருந்து வெளிச்சம் உண்டாகின்றது.

சி : மேல்பக்கத்திலிருந்து.

கு : அதில் வெளிச்சம் உண்டாவதற்கு என்ன வேண்டும்?

சி : அக்கினி (நெருப்பு) வேண்டும்.

கு : அக்கினி இல்லையெனில் வெளிச்சம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது வெளிச்சம் எதிலிருந்து உண்டாகிறது?

சி : அக்கினியிலிருந்து.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : வெளிச்சம் இல்லையெனில் அக்கினி இல்லையென்று சொல்லலாமா?

சி : சொல்லக்கூடாது.

கு : அப்பொழுது வெளிச்சம் இல்லையானாலும் அக்கினி இருக்கிறது. அக்கினி இல்லாவிட்டால் வெளிச்சம் இல்லை. ஆகையினால் அக்கினியில் இருந்தாகும் வெளிச்சம் உண்டாகிறது. அந்த அக்கினி நம்மில் இருக்கின்றதா? இல்லையா?

சி : நம்மில் இருக்கின்றது.

கு : அந்த அக்கினி நம்மில் எங்கே இருக்கின்றது?

சி : நம்முடைய வயிற்றில் இருக்கின்றது.

கு : வயிற்றில் உள்ள அக்கினியால் ஏற்படும் குணம் என்ன?

சி : நாம் உண்டவற்றையெல்லாம் தகிப்பிப்பது, அதாவது எரியச்செய்வது அதன் குணம்.

கு : அப்படியெனில் இதுவரையிலும் இவ்வுலகத்திலுள்ள யாருக்காவது சாப்பிட்ட உணவுகள் எரிந்ததுண்டா?

சி : எரிந்திருக்கிறது.

கு : ஒருக்காலும் இல்லை. ஏனென்றால் நாம் உண்ணுகின்ற எல்லாப் பொருள்களும் எப்படியாகித் தீருவதென்றால்: எவ்விதம் மசாலைகள் அதாவது மிளகு, மல்லி முதலிய சாமான்களை அம்மியில்வைத்து அரைத்து உருண்டையாக்கி எடுக்கின்றோமோ, அதேவிதத்தில் நாம் உண்ணும் உணவுகளை வாயில்போட்டு பற்களால் மெல்லுகின்றதே அரைப்பதாகும். அப்படி அரைத்தரைத்து உள்ளில் விழுங்குகிறோம். அப்படி விழுங்கிய உணவு உருண்டை உருண்டையாய்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மலமாக வெளியில் வருகின்றது. அவை எரிந்ததாகக் காணப்படுவதில்லை. அதல்லாமல், நாம் உண்ணுகின்ற உணவுகளில் ஏதாவது காய்களுடைய துண்டுகள் மெல்லாமல் விழுங்கிப்போனால் அவை எந்த விதத்தில் வெளியில் வருகின்றன?

சி : அதே விதத்திலேயே வெளியில் வருகின்றன.

கு : அது என்ன காரணம்? வயிற்றில் அக்கினி இல்லையா? அந்த அக்கினியில் போட்ட பொருள்கள் எரிந்துபோக வேண்டியதல்லவா? அதல்லாமல், அக்கினியில் ஏதாவது ஒரு பொருள் போட்டால் அந்தப் பொருள் நெருப்பின் சூடுகொண்டு வாடிக் கரிகிப்போக வேண்டியதல்லவா? அது அந்த விதமல்லாமல் எவ்விதம் விழுங்கப்பட்டதோ, அவ்விதம் வெளியில் வந்ததைக் காண்கின்றோமல்லவா?

சி : ஆம். அது யாதொரு வித்தியாசமுமில்லாமல் அப்படியே வெளியில் வருவதைக் காண்கின்றோம்.

கு : அது என்ன காரணம்? தவிர, நாம் இங்கே ஓர் அக்கினிகுண்டம் உண்டாக்கி, அதில் பல பொருள்களையும் போட்டு எரித்தால் அவையெல்லாம் என்னவாகின்றன?

சி : அவை எரிந்துபோகின்றன.

கு : எரிந்தால் என்னவாகின்றது?

சி : சாம்பலாகின்றது.

கு : அப்பொழுது அக்கினியில் எந்தப்பொருளைப் போட்டாலும் அது எரிந்து சாம்பலாகின்றது. அப்படியிருக்க, நம்முடைய வயிற்றில் அக்கினி இருக்கின்றதென்றல்லவா தாங்கள் சொன்னீர்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அப்படியென்றால் நாம் நாளதுவரை உண்டதெல்லாம் அந்த அக்கினியில் அல்லவா சென்றுவிழுந்தது? அப்பொழுது அவை யாவும் எரிந்து சாம்பலாயிருக்க வேண்டுமல்லவா? எனில் இந்த உலகத்தில் யாராவது நாளதுவரை கொஞ்சம் சாம்பலை மலங்கழித்தது (பேண்டது) உண்டோ?

சி : இல்லை.

கு : அதுவுமன்றி, நமக்கு இங்கே உட்காருவதற்கு முடியாமல், என்னவோ ஒரு பொருள் கெட்டு நாறி சகிக்க முடியாமல் நாமெல்லாம் மூக்கைப் பிடித்துக்கொண்டிருக்கும்போது, ஒருவர் வந்து ஒரு குழிதோண்டி, அதில் அக்கினியை வளர்த்து, அந்தப் பொருளைப்போட்டு எரித்தால் என்னவாகிறது?

சி : சாம்பலாகிறது.

கு : அந்தச்சாம்பலுக்கு நாற்றமுண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது எந்தவிதமான அசுத்தப் பொருள்களையும் அக்கினியில் போட்டால் அவற்றினுடைய அசுத்தத்தைத் தீர்த்து சுத்தமாக்குகிறது இதுதான் அக்கினியின் குணம். அப்படியிருக்க நாம் மிகவும் பரிமளமுள்ளதான ஒரு பொருளை உண்டு நம்முடைய வயிற்றிலிருக்கிற அக்கினியில் சென்று வீழ்ந்து, அது வெளியே வரும்போது எவ்விதமிருக்கும்?

சி : அது மிகவும் கெட்ட நாற்றமுள்ளதாய் நாம் மூக்கைப் பிடிக்க வேண்டி வருகிறது.

கு : ஏன்? இதுவா அக்கினியின் குணம்? மிகவும் தீய நாற்றமுள்ளதாயும் அசுத்தமாயும் இருக்கின்ற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பொருளை அக்கினியில் போட்டால், அதனுடைய தீய நாற்றத்தைத் தீர்த்து, அது யாதொரு விதமான நாற்றமுமில்லாமல் சுத்தமாகக் காணப் படுகிறது. நாம் மிகவும் மணமும் தூய்மையும் உள்ள பொருளை நம் வயிற்றிலிருக்கின்ற அக்கினியில் போட்டால், அது வெளியில் வரும்போது மிகவும் தீய நாற்றமுள்ளதாயும் அசுத்தமாயும் காணப்படுகிறது. ஆதலால் நம் வயிற்றில் அக்கினி இல்லவேயில்லை. தவிர, நாம் மலம் கழிக்கும் போது அந்த மலத்தில் நம் வயிற்றிலிருந்து கிருமி, நாகப்பூச்சி முதலிய ஜீவிகள் வெளியில் வருவதைக் காண்கிறோமல்லவா?

சி : ஆம், அவ்வாறே காண்கின்றோம்.

கு : அப்படியென்றால், வயிற்றில் நெருப்பிருந்தால் அவ்விதம் கிருமி முதலான ஜீவிகளுண்டாவதற்கு இடமுண்டா? அக்கினியிலிருந்து ஏதாவது ஜீவிகளுண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : இது தவிர, உலகத்தில் இருக்கின்ற சர்வ சராசரங்களும் ஆகாரமில்லாமல் வாழ்ந்திருக்க முடியாது. அதாவது சஸ்யாதிகள் அதாவது தாவர இனங்களில் நாம் உண்டாக்கிவருகிற மரம், செடி, கொடி முதலிய தாவர இனங்களுக்கு நாம் எரு சேகரிக்கிறோம் அல்லவா? அது எப்படியென்றால்: நாம் ஒரு குழிதோண்டி, அதில் பற்பல பொருள்களையும் சேகரித்துக் கொண்டுவந்து போடுகிறோம். அவை குழியில்போட்டபடியே இருக்குமேயானால் அவை எரு ஆகுமா?

சி : எரு ஆகாது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : எனவே அவை எரு ஆவது எப்படியெனில்: மேற்சொன்ன எருக்குழியை மூடிவைத்து சில நாட்கள் செல்லும்போது அதில் போட்ட பொருள்கள் குமுறி, அழுகி, சீரணித்து, கெட்டு எருவாகிறது. அந்த எருவை எடுத்துத் தாவரங்களுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறோம். அப்படியே நமக்கும் வாழ்ந்துவருவதற்கு எருவாகிற ஆகாரம் வேண்டும். அந்த எரு சேகரிக்கிறது எப்படியென்றால்: மேல்சொன்ன தாவரங்களுக்கு வேண்டி எந்த விதத்தில் எரு உண்டாக்குகிறதோ, அந்த விதத்தில் எரு உண்டாக்குகிறதற்குள்ள ஓர் எருக்குழியாகும் இக்காணுகின்ற நம் வயிறு. எருக்குழியான இந்த வயிற்றில் பலவித பொருள்களும் போட்டு வைக்கிறோம். அவையெல்லாம் குமுறி, அழுகி, சீரணித்துக் கெடுகின்றன. அப்படி சீரணிக்காவிட்டால் அதற்கே அசீரணம் என்று சொல்வது. அசீரணம் என்றால் சீரணமில்லாமை. சீரணமென்றால் அழுகிக் கெடுகிறதேயாகும். அப்படி அழுகிக்கெடாவிட்டால் பல நோய்களும் உண்டாகின்றன. ஆகையினால் மேல்சொன்னபடி நம் வயிறு ஓர் எருக்குழியாகும். தவிர, நாம் தாவரங்களுக்கு வேண்டி சேகரித்து உண்டாக்கிய எருவை எடுக்கும்போது அதில் பற்பல பூச்சி, புழுக்களைக் காண்கிறோம். அவை எவ்விதம் உண்டாயின? நாம் அதில் யாதேனும் ஜீவிகளைப் போட்டதுண்டா?

சி : போட்டதில்லை.

கு : எனின் அந்த எருக்குழியில் போட்டுள்ள

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சாமான்கள் மிகவும் நிறைந்து நெருக்கமானபோது குமுறி அதாவது புழுங்கி, அக்குமுறுதலினின்றும் சூடண்டாகி, அச்சூட்டிலிருந்து ஆவிஉண்டாகிறது. அந்த ஆவிக்கே **சுவேதம்** என்று சொல்லுவது. சுவேதம் என்றால் வியர்வையாகும். அவ்வியர்வையே **சுக்கிலம்**. அச்சுக்கிலம் அக்கினியிலிருந்துண்டானது. அதாவது எருக்குழியில் போடப்பட்ட சாமான்கள் நிறைந்து, நெருங்கி, குமுறியபோது உண்டாகிய சூடு அக்கினியினாலாகும். அந்த அக்கினியிலிருந்துதான் வியர்வையான **சுக்கிலம்** உண்டாயிற்று. இதற்கே **அக்கினி சொரூபமான சுக்கிலம்** என்று சொல்லக் காரணம். அந்த **சுக்கிலமே பிரம்மம்**. அந்த பிரம்மத்தைக் கொண்டுதான் சிருஷ்டி. அந்த பிரம்மமில்லாவிட்டால் யாதொரு சிருஷ்டியுமில்லை. அதனால்தான் "**பிரம்மாண்ட கடாகம் சுவேதஜோத்பவம்**" என்று சொல்லக் காரணம். அதாவது இக்காணப்படுகிற உலகம் முழுவதும் வியர்வையிலிருந்து உண்டானது. அது எப்படியெனில், எருக்குழியில் போட்டுள்ள சாமான்களிலிருந்து மேற்சொன்னபடி உண்டான சுவேதமான வியர்வையோடு மேற்சொன்ன சாமான்களிலிருந்து உண்டான கறையும் சேருகிறது. அந்தக் கறையைத்தான் **இரத்தம்** என்று சொல்லுவது. அந்த இரத்தத்திற்கே **சுரோணிதம்** என்று சொல்லுவது. அவ்விதமுள்ள **இரத்தமான சுரோணிதமும்** வியர்வையான **சுக்கிலமும் ஒன்றாய்ச் சேர்ந்தபோது அதற்குள்ளே வாயு**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சேர்ந்து ஜீவியாகின்றது. இப்படியேதான் கிருமி கீடாதிகளுடைய உற்பத்தி. அவ்விதமே நம்முடைய வயிறுஎன்று சொல்லுகிற எருக்குழியில் நாம் போட்ட சாமான்கள் நிறைந்து நெருக்கமான போது மேற்சொன்னபடியே சுவேதமாய் ஆவி ரூபமாய் இருக்கின்ற சுக்கிலம் உண்டாகவும் அதோடு மேற்சொன்ன சாமான் களுடைய கறையான இரத்தமாயிருக்கின்ற சுரோணிதமும் சேர்ந்தபோது வாயு அதற்குள்ளே சேர்ந்தது. அப்போது அது ஜீவிகள் ஆகின்றது. இவ்விதமே நம் வயிறாகிய எருக்குழியிலிருந்து உண்டாகின்ற கிருமிகீடாதிகளுடைய உற்பத்தி. ஆகையினால் மேற்சொன்ன விதத்தில் ஆலோசிக்கும்போதும் வயிற்றில் அக்கினியில்லை என்பது தெளிவாகிறது. தவிர, உலகத்தில் உள்ள தாவரங்கள் காய்ந்து அதாவது உலர்ந்து போவதில்லையா?

சி : காய்ந்துபோவதுண்டு.

கு : அதன் காரணமென்ன?

சி : அதன் காரணம் வெயிலே.

கு : அவ்வெயில் எங்கிருந்துண்டாகின்றது?

சி : சூரியனிலிருந்து.

கு : சூரியன் எங்கே இருக்கிறது?

சி : ஆகாசத்திலிருக்கிறது.

கு : அந்த ஆகாசம் எங்கே இருக்கிறது?

சி : மேலே இருக்கிறது.

கு : அப்படியிருக்கிற சூரியன் உலகத்துக்கு எந்தப் பக்கம் இருக்கிறது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : மிகவும் உயரத்திலும் வெகு தூரத்திலும் இருக்கிறது.

கு : அப்பொழுது பூமியிலிருந்து எவ்வளவோ மேலேயிருக்கின்ற சூரியனுடைய கிரணம், எவ்வளவோ கீழேயிருக்கின்ற உலகத்தில், எல்லா பக்கங்களிலும் ஒரே விதத்தில் பரவியிருக்கிறது. அதுவுமல்லாமல், எவ்வளவோ மேலேயிருக்கின்ற சூரியனுடைய கிரணத்தால் எவ்வளவோ கீழேயிருக்கின்ற பூமியிலுள்ள சஸ்யாதிகளான தாவரங்களில் சத்தாய் ஜலரூபமாயிருக்கின்ற ஜீவனை ஆகர்ஷித்து அதாவது சத்தை இழுத்து, அசத்தாயிருக்கின்ற அதாவது சத்தில்லாமல் இருக்கின்ற தாவரங்கள் காய்ந்து விழுந்துபோகிறதல்லவா? அவ்விதமே நம் உள்ளிலும் சூரியன் இருக்கிறது. அந்தச் சூரியனுக்கே பிராணன் என்று பெயர். அந்தப் பிராணனாய் அக்கினி சொரூபமாய் இருக்கின்ற சூரியன், நம்முடைய மேல்பக்கத்தில் புருவமத்தியில் இருக்கின்றது. அந்தப் பிராணனாகிய அக்கினி சொரூபமான சூரியனின் கிரணங்கள், முன்சொன்ன சூரிய கிரணங்கள் உலகத்தில் எவ்வாறு வியாபித்திருக்கின்றனவோ, அவ்வாறு நம்முடைய சடத்தில் நகமுள்ள வரையும் வியாபித்திருக்கின்றன. அதுவுமன்றி, மிகவும் மேலேயிருக்கின்ற சூரியகிரணத்தால் எவ்வளவோ கீழே உலகத்தில் இருக்கிற தாவரங்களிலிருந்து சத்தாய் ஜலரூபமாய் இருக்கின்ற ஜீவனை சூரியன் எவ்வாறு இழுக்கின்றதோ. அவ்வாறு நம்முடைய எருக்குழியான வயிற்றிலுள்ள எருவிலிருக்கின்ற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சத்தினை நம்முடைய புருவமத்தியத்தில் இருக்கின்ற பிராணனாயிருக்கிற சூரியன் ஆகர்ஷித்து அதாவது இழுத்தெடுத்து அசத்தான மலத்தைவெளியே தள்ளுகிறது. அதனால் சூரியனாய், அக்கினிசொரூபமான பிராணன் இருக்கின்ற இடம் நமக்கு மேல்பக்கமாகிய புருவமத்தியத்திலாகும். அந்த இடத்திற்கே இருதயம் என்று பெயர். அதுமட்டுமன்றி, இருதயம் ஆகாசத்தில் இருக்கின்றது. அந்த ஆகாசம் எதுவென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி : ஆகாசமென்பது நம்முடைய சிரசின் மேல் பாகத்தில் மேலேயாகக் காணப்படுகிறது.

கு : அது ஒருக்காலும் ஆகாசமல்ல. ஏனென்றால் ஆகாசம் அதுவாக இருந்தால், அங்கேதான் இருதயம் இருக்க வேண்டும். இருதயம் அங்கே இருக்கின்றதானால், நமக்குப் பிரகாசம் உண்டாவதற்கு வழி உண்டோ?

சி : இல்லை.

கு : அதுவுமன்றி, இருதயம் நீர் சொன்ன இடத்தில் இருக்கின்றதானால், ஒரு பிணத்திற்கும் பிரகாசம் உண்டாக வேண்டியதல்லவா? நீர் சொல்லிய இருதயமும் ஆகாசமும் மறைந்து போனதில்லையல்லவா? ஆகவே பிணத்திற்குப் பிரகாசம் உண்டாகாமல் இருப்பதற்குக் காரணமென்ன?

சி : செத்துப் போனதால்.

கு : செத்துப்போனபோது அதில் என்ன இல்லை?

சி : ஜீவன்.

கு : ஜீவனில்லையெனில் பிரகாசம் உண்டோ?

சி : இல்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது பிரகாசமாகின்ற பொருள் எது?

சி : ஜீவன்.

கு : ஜீவனாயும் பிரகாசமாயும் தன்னிலிருக்கின்ற பொருள் தன்னிலிருந்து நசித்தபோது, பிரகாசமில்லாமல் ஆயிற்று. அதனால் எங்கிருந்து பிரகாசத்திருந்ததென்று வெளிப்படுகிறது?

சி : அது தன்னிலிருந்தாகும்.

கு : தன்னில் எங்கிருந்து பிரகாசித்திருந்தது?

சி : மேல்பக்கத்திலிருந்து.

கு : அப்பொழுது தன்னில்தானே மேலேயிருக்கின்ற இடத்திற்கே ஆகாசமென்று சொல்வது. ஆனால் ஆகாசமென்பது அதிகம் பிரகாசிக்கின்றதும் மேலே இருக்கின்றதும் காணமுடியாததுமாகும். அப்பொழுது நமக்குப் பிரகாசம் உண்டாவது எங்கிருந்து?

சி : இதோ காணுகிற ஆகாசத்தில் இருக்கின்ற சூரியனிலிருந்து.

கு : அதற்கு ஒருக்காலும் இடமில்லை. ஏனென்றால் செத்தபோதும் இக்காணுகின்ற ஆகாசமும் சூரியனும் இருந்ததல்லவா? அந்தப் பிணத்திற்குப் பிரகாசம் உண்டாகவில்லை என்று நீர் தானே சொன்னீர்? தவிர, இப்போது சூரியன் உதித்து மத்தியானம் என்றும் சொல்லுகின்றீரல்லவா? இதோ! இந்தச்சமயத்தில் ஒருவர் இங்கே படுத்துத் தூங்குகிறார். இப்போது இவருக்குயாதேனும் பிரகாசம் உண்டா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்? நீர் சொன்ன ஆகாசமும் சூரியனும் இல்லையா? இவருக்கு ஏன் பிரகாசம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டாகவில்லை?

சி : இவர் தூங்குவதால்.

கு : அப்படியென்றால், இவருக்கு எப்பொழுது பிரகாசம் உண்டாகிறது?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : அப்பொழுது எங்கிருந்து பிரகாசிக்கிறது?

சி : அவனவனில் இருந்தேயாகும்.

கு : அவனவனில் எங்கிருந்து பிரகாசிக்கிறது?

சி : அவனவனிலுள்ள ஆகாசத்திலிருந்தே.

கு : அந்த ஆகாசம் எது?

சி : அவனவனுடைய மேல்பக்கத்தில் உள்ளது.

கு : அது எது?

சி : அது சிரசு (தலை).

கு : நமக்கு அதிகம் பிரகாசிப்பது எங்கிருந்து?

சி : சிரசிலிருந்தேயாகும்.

கு : ஆகவே நமக்கு மேல்பக்கம் எது?

சி : சிரசு ஆகும்.

கு : அதுவுமன்றி, ஆகாசம் காணமுடியாததென்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால் நீர் சொன்ன ஆகாசம் இதுவாயிருந்ததானால், இதோ பாருங்கள், காணப்படுவதில்லையா?

சி : காணப்படுவதுண்டு.

கு : அப்போது ஆகாசத்தைக் காண்பதற்கு முடியாதது என்று சொல்லுவதற்கு இடமுண்டா?

சி : இடமில்லை.

கு : அதனால் நமக்குக் காணமுடியாத பொருள் அவ்வனவன் சிரசாகும். அது எப்படி என்றால்: ஒரு கண்ணாடி எடுத்துப்பார்க்கும் பொழுது முகம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மட்டும் காணலாம். பல கண்ணாடிகள் எடுத்து எல்லாப் பக்கங்களிலும் வைத்துப் பார்த்தாலும், நிலத்தில் வைத்துத் தலைகீழாகப் பார்த்தாலும் சிரசு முழுவதும் ஓரே சமயத்தில் காண்பதற்கு முடிவதில்லை. இதனால்தான் ஆகாசம் காணமுடியாது என்று சொல்லக் காரணம். அது அவனவனுடைய சிரசாகும். தவிர, **ஆகாசத்திலிருந்தே சப்தம் உண்டாகின்றதும், ஆகாசத்தினால்தான் சப்தம் கேட்கிறதுமாகும்.** அந்தசப்தம் உண்டாவது நீர் சொல்லிய ஆகாசத்திலிருந்து என்றால் நாம் நம் வாயை மூடிப்பேசாமலிருந்தால் நம்முடை சப்தம் இக்காணுகின்ற ஆகாசத்திலிருந்து உண்டாகுமா?

சி : உண்டாவதில்லை.

கு : அப்பொழுது எங்கிருந்து சப்தம் உண்டாகின்றது?

சி : அவனவனுடைய சிரசிலிருந்தாகும்.

கு : சிரசு இல்லை என்றால் சப்தம் உண்டாகுமா?

சி : உண்டாவதில்லை.

கு : அதனால்தான் சப்தம் ஆகாசத்திலிருந்து உண்டாவதென்று சொல்லக் காரணம். அந்த ஆகாசம் சிரசாகும். சிரசிலிருந்தாகும் சப்தம் உண்டாவது.தவிர, சப்தத்தைக் கேட்பதற்கு என்ன உண்டாயிருக்க வேண்டும்.

சி : சிரசு உண்டாயிருக்க வேண்டும்.

கு : இதனால்தான் ஆகாசத்திலிருந்துதான் சப்தம் உண்டாகிறது என்றும், ஆகாசத்தினால்தான் சப்தம் கேட்கிறது என்றும் சொல்லக் காரணம். அப்பொழுது ஆகாசமாயிருக்கின்ற ''சிரசு"

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இல்லையானால் சப்தம் உண்டாவதற்கோ, சப்தம் கேட்பதற்கோ முடிகிறதில்லை. தவிர, நமக்குக் கால், கை, கண், மூக்கு இவை இல்லையென்று வைத்துக் கொள்வோம். சிரசும் ஜீவனும் நாவும் இருக்கிறது. அப்பொழுது நமக்கு எப்படியும் சப்தம் உண்டாக்கலாம். சிரசு இல்லையென்றால் சப்தம் உண்டாக்க முடியுமா?

சி : முடியாது.

கு : இதோ பாருங்கள்! நாம் இரண்டு கைகளைத் தம்மில் தட்டுகின்றோம். அப்பொழுது என்ன உண்டாகிறது?

சி : சப்தம் உண்டாகிறது.

கு : அது எதனால் உண்டாகிறது?

சி : இரண்டு கைகளும் தம்மில் தட்டி உண்டாக்கியதாகும்.

கு : அது ஒருபொழுதும் கைகளைக் கொண்டு முடிவதில்லை. ஏனென்றால் நம்முடைய தலையை எடுத்துவிட்டால் உடலில் கைகள் இருக்கின்றதல்லவா? அப்பொழுது கைகளை எடுக்கவோ, தட்டவோ முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது எல்லா சக்தியுமிருக்கிறது எவ்விடத்திலாகும்?

சி : சிரசிலாகும்.

கு : சிரசில்லையானால் ஆகாசமென்றோ, ஆதியென்றோ, அந்தமென்றோ யாதேனுமுண்டா?

சி : இல்லை.

கு : எல்லா நிலைமைகளும் எவ்விடமிருந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


உண்டாகின்றன?

சி : அவனவனது சிரசிலிருந்தாகும்.

கு : நமக்குப் பிரகாசிப்பது சிரசிலிருந்துதான் என்பதற்கு மற்றொரு உதாரணம் : இதோ ஒரு மாடிவீடு. இந்த வீட்டிற்குக் கீழ் அடுக்கு, மேல்அடுக்கு இப்படி இரு அடுக்குகளும் உள்ளிருந்தே மேல் அடுக்கிற்குச் செல்ல ஓர் ஏணியும் உள்ளன. இந்த அடுக்குகளில் கீழடுக்கிலுள்ள அறையில் உள்ளே இரவில் மிகப் பிரகாசமாகிய ஒரு விளக்கை ஏற்றி வைத்து அந்த அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டு, ஏணி வழி மேலடுக்கிற்குச் செல்லுகிறோம். அங்கேயுள்ள அறைக்கு ஒரு ஜன்னலும் அதற்கு இரண்டு கதவுகளும் உண்டு. அந்தக் கதவுகளைத்திறந்து ஜன்னலின் வழியாக வெளியில் பார்த்தால் கீழடுக்கில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் விளக்கின் வெளிச்சத்தால் வெளியிலுள்ள யாதேனும் காணுவதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : அது என்ன காரணம்?

சி : அந்த வீட்டின் கீழடுக்கில்தான் பிரகாசமிருக்கிறது. அந்த அறையின் கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டதனால்தான் வெளியிலிருக்கும் பொருள்களைக் காணமுடியாமல் வந்தது.

கு : இப்படியே நமது இந்த சடத்தை ஒரு மாடி வீடாக ஒப்பிடவும், அதாவது கழுத்திற்குக் கீழ்ப்பக்கம் கீழடுக்காகவும் மேல்பக்கம் மேலடுக்காகவும் ஒப்பிடலாம். இதில் கழுத்திற்குக்கீழேயுள்ள

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கீழடுக்கினுள்ளில் பிரகாசவஸ்து இருக்கிறதென்றால், கழுத்திற்கு மேலுள்ள மேலடுக்கு வழி வெளியே பார்க்கும்பொழுது பிரகாசத்தைக் காணமுடியுமா?

சி : காணமுடியாது.

கு : அது எதனால்?

சி : பிரகாசமானது கழுத்திற்குக் கீழேயுள்ள கீழடுக்கினுள் இருந்ததால்.

கு : அப்பொழுது நமக்கு எங்கிருந்து பிரகாசிக்கிறது என்று வெளிப்படுகிறது?

சி : கழுத்திற்கு மேலேயுள்ள மேலடுக்கிலிருந்து.

கு : தவிர, இதோ! இந்த வீட்டிற்குள் வாசலுக்கு நேரே ஒரு விளக்கை ஏற்றி வைத்துக் கதவை மூடினால் வெளியில் எப்படியிருக்கும்?

சி : இருட்டாக இருக்கும்.

கு : கதவைத் திறந்தாலோ?

சி : வெளிச்சமாகும்.

கு : அப்பொழுது எங்கிருந்து வெளிச்சம் உண்டாகிறது?

சி : உள்ளிலிருக்கும் விளக்கிலிருந்து.

கு : அது வெளியில் எப்படிப் பிரகாசிக்கிறது?

சி : அந்த வாசலுக்கு நேரே விளக்கிலிருந்து எரிந்து கொண்டிருக்கின்ற அக்கினியினுடைய சக்திக்கு அனுசரித்து வெளியில் பிரகாசிக்கின்றது.

கு : அந்த விளக்கில் எண்ணெயும் திரியும் அக்கினியுமில்லையானால் பிரகாசிக்குமா?

சி : பிரகாசிக்காது.

கு : எனில் அந்த விளக்கின் கீழ்த்தட்டிலிருந்தோ அல்லது மேல்தட்டிலிருந்தோ பிரகாசிக்கின்றது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : மேல்தட்டிலிருந்து.

கு : அப்படியே நாம் இந்த சடத்தை ஒரு விளக்கிற்கு ஒப்பிடலாம். இந்த சடமாயிருக்கின்ற விளக்கில் கர்மமாய் வாயுவாயிருக்கின்ற தைலத்தை நிறைத்து, அதில் மனமாயிருக்கின்ற திரியைப்போட்டு, ஆத்மாவாகின்ற தீபத்தினால் எரிந்து கொண்டிருக்கின்றதாகும் இக்காணுகின்ற உலகம். அது எப்படியென்றால், விளக்கினுடைய மேல்தட்டிலிருக்கின்ற திரி எரிந்து சுடர்விட்டு எப்படி பிரகாசிக்கின்றதோ, அப்படியே இந்த சடமாயிருக்கின்ற விளக்கினுடைய மேல்தட்டிலிருந்து மனமாயிருக்கின்ற திரி எரிந்து சுடர்விட்டுக் கொண்டிருக்கின்றதாகும் இக்காணப்படுவது. மேல்தட்டில் எங்கிருந்து பிரகாசிக்கிறதென்றால், அது புருவமத்தியிலிருந்தாகும். காரணம் சிவனை ''விரூபாட்சன்'' என்றும் ''திரிலோசனன்'' என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சிவனுடைய உருவம் ஆகுமென்று சங்கற்பித்துப் படத்தை வரைந்து காணுவதுண்டு. அந்தப் படத்தைப்பார்க்கும்போது அதற்கு மூன்று கண்களிருக்கின்றன. அவற்றில் ஒன்று அக்கினி நேத்திரம் (நெருப்புக்கண்) என்றும் சொல்லுகிறோம். ஆனால் அந்த சிவன் யாரென்றால் ஜீவனாகும். அந்த ஜீவனாயிருக்கின்ற சிவனுக்கு மூன்று கண்களிருக்கின்றன. அதாவது இடகலை, பிங்கலை, சுழிமுனை. அதில் இடகலை பிங்கலை சந்திர சூரியர்களாகும். சுழிமுனை என்பது அக்கினியாகின்றது. இதனால்தான் சிவனுக்கு மூன்று கண்கள் உண்டென்றும் அவற்றில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஒன்று அக்கினி நேத்திரமென்றும் அது புருவமத்தியிலாகு மென்றும் சொல்லக் காரணம். அதை அனுசரித்துத்தான் முன் சொன்ன படத்திலும் புருவமத்தியத்தில் அக்கினி நேத்திரம் வரைந்து காணக் காரணம். அப்பொழுது **புருவமத்தியம் என்று சொல்லுகிறதே சுழிமுனை என்று சொல்லுகிற அக்கினி நேத்திரமாகும்.** எனில் அந்தப் புருவமத்தியத்தில் அக்கினியில்லா விட்டால் நமக்குப் பிரகாசிப்பதற்கு வழியுண்டோ?

சி : வழியில்லை.

கு : அப்படியென்றால் நம்மில் எங்கிருந்து பிரகாசிக்கிறது?

சி : புருவமத்தியத்தில் இருக்கின்ற சுழிமுனையான அக்கினி நேத்திரத்திலிருந்து.

கு : அதற்கேயாகும் **இருதயம்** என்று சொல்லுவது. **இவ்விதத்தில் தன்னில், ஆகாசமத்தியத்தில், புருவ மத்தியமாய், இருதயமாய், சுழிமுனை யாயிருக்கின்ற அக்கினி நேத்திரத்திலிருந்தே நமக்குப் பிரகாசிக்கின்றது.**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் மூன்று

சிஷ்யன் : தாங்கள் இதுவரை கூறியதிலிருந்து "தான் தானே" ஈஸ்வரன் என்றும் அப்படியிருக்கிற தன்னுடைய சக்தி வெளியில் வியாபித்தபோது அதிலிருந்து உலகம் உண்டானதென்றும் தெரியவந்தது. ஆனால் உலகத்தில் சாதாரணமாகப் புண்ணிய பாவங்களைக் கொண்டாகும் ஜனன மரணமென்று பொதுவில் சொல்லி வருகின்றனர். அதனுடைய உண்மை என்ன?

குரு : புண்ணியம் என்பதும் பாவம் என்பதும் என்னவென்று தாங்கள் புரிந்திருக்கின்றீர்?

சி : புண்ணியம் அதாவது சுகிர்தம் என்பது நல்ல தொழில்களைச் செய்வது அதாவது யாதொன்றையும் ஹிம்சிக்காமல் தயையுடன் இருப்பதும், அன்னதானம், கோதானம் முதலியவை செய்வதும், யாகம், ஹோமம், பூஜை முதலியவை செய்வதும் செய்விப்பதும் மற்றுமாகும். பாவம் அதாவது துஷ்கிருதம் என்பது கெட்ட தொழில்களைச் செய்வது. அதாவது தானம் தருமம் செய்யாதிருப்பதும் ஜீவஹிம்சாதிகள் செய்வதும் மற்றுமாகும். இப்படியேயாகும் நானும் கருதியிருக்கின்றேன்.

கு : அப்படிக் கருதியிருப்பது மிகவும் தப்பிதமாகும். புண்ணியமென்பது நல்ல செய்கையென்றோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பாவமென்பது கெட்ட செய்கையென்றோ சொல்லுவதற்கியலாது. அது ஏனென்றால்: புண்ணிய பாவங்களைக் கொண்டாகும் ஜனனமரணமென்று நீர்தானே சொல்லுகிறீர்! அப்பொழுது யானை முதல் எறும்பு வரையிலுள்ள எல்லா ஜீவிகளையும் புண்ணிய பாவங்கள் பாதிக்கின்றன அல்லவா? இவற்றில் எவையெல்லாம் புண்ணியம் கொண்டு பிறந்தன? எவையெல்லாம் பாவம் கொண்டு பிறந்தன?

சி : மனிதர்களாகிய நாமெல்லாம் புண்ணியத்தாலும் மீதியுள்ள ஜீவிகளெல்லாம் பாவத்தாலும் பிறந்தன.

கு : மனிதரென்று சொல்லி வருகிற நாம் மனிதராய்ப் பிறப்பதற்காக எப்பொழுது புண்ணியம் செய்தோம்? யானை முதல் எறும்பு வரை என்று சொல்லி வருகின்ற ஜீவிகள் யாவும் அப்படிப் பிறப்பதற்காக எப்பொழுது பாவம் செய்தன?

சி : அது முற்பிறவியிலாகும்.

கு : எனில் முற்பிறவியில் நாம் யாராக இருந்தோம்? இந்தப் பிறவியில் மனிதர்களாகப் பிறப்பதற்காக நாம் என்ன புண்ணியம் செய்தோம்? எறும்பு முதலான ஜீவிகள் முற்பிறவியில் யாராக இருந்தன? இந்தப் பிறவியில் முற்சொன்ன படியுள்ள ஜீவிகளாகப் பிறப்பதற்குச் செய்த பாவம் என்ன? சொல்ல முடியுமா?

சி : சொல்ல முடியாது.

கு : எனில் அவனவனுக்கு அனுபவமில்லாத சங்கதிகளை நம்புவதில் பயனில்லை. அவனவனுடைய அனுபவத்திற்கும் யுக்திக்கும் சுருதிக்கும் அனுசரித்தது எதுவோ, அதைத்தான்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நம்ப வேண்டும். ஏனென்றால், எறும்பு முதல் நாம் உட்பட என்னவெல்லாம் சிருஷ்டிகள் உலகில் கேட்கப்படுகின்றனவோ, காணப்படுகின்றனவோ, அறியப்படுகின்றனவோ, அவையெல்லாம் ஒரே ஜீவனாகும். இப்படி வித்தியாசமாய்க் காணப்படுவது உருவ வித்தியாசமேயாகும். தவிர, அவனவனுடைய ஜீவன் வெளியில் வியாபித்த போது சக்தியாயிற்று. அந்த சக்தியில் தன்னுடைய ஜீவன் மற்றுள்ளவைகளாகிப் பிரதி பிம்பித்ததாகும் இக்காணப்படும் உலகம். இதைப் பின்னால் விளக்கிச் சொல்வோம். புண்ணிய பாவங்களைக் கொண்டாகும் பிறப்பு இறப்பு என்றால் இராஜாக்களென்று அபிமானித்து வருகின்றவர்களுக்கும் அது பாத்தியப்படுவதாகும். அதுவுமன்றி, புண்ணிய பாவங்களைச் செய்தால், அதனுடைய குணதோசங்களை (நன்மை தின்மைகளை) எவ்வெப்போதாகும் அனுபவிப்பது?

சி : முற்பிறவியில் செய்தது இந்தப் பிறவியிலும் இந்தப் பிறவியில் செய்வது அடுத்த பிறவியிலும் அனுபவிப்பதாகும்.

கு : அது எப்படி? எவ்விதம் அனுபவிப்பது?

சி : புண்ணியம் செய்தவர்கள் பிராமணர்களாகவும் இராஜாக்களாகவும் தனவான்களாகவும், பாவம் செய்தவர்கள் தரித்திரர்களாகவும் நோயாளிகளாகவும் பிறந்து அனுபவிக்கிறார்கள்.

கு : எனில் பிராமணர்களுக்கும் இராஜாக்களுக்கும் தனவான்களுக்கும் நோய் உண்டாகின்றதா, இல்லையா?

சி : உண்டாவதுண்டு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அதன் காரணமென்ன? அவர்கள் எக்காலத்தில் செய்த பாவமாகும்?

சி : முற்பிறவியில் செய்ததாகும்.

கு : அப்படியாயின் அவர்கள் எப்படி பிராமணர்களாகின்றதும் இராஜக்களாகின்றதும் தனவான்களாகின்றதும்? அப்படியாயின் நாமும் மேற்சொன்ன விதத்திலுள்ளவர்களாகப் பிறக்கவேண்டுமல்லவா? ஏனென்றால் பாவம் முழுவதும் இல்லாமற் போகும்போதுதான் பிராமணர்களாகின்றதும் இராஜாக்களாகின்றதும். தவிர, **இராஜாக்கள் புண்ணியோத்கிருஷ்ட சரீரிகளாகும்** என்று சொல்லிவருகின்றனர். அதாவது புண்ணியம் உயர்ந்த பதவி ஆயிற்று. அப்போது பாவம் என்பது கொஞ்சமும் கிடையாது. ஏனென்றால் புண்ணியம் உயர்ந்த பதவியாகும்பொழுது ஈஸ்வரனாகும். ஏனெனில் உயர்ந்த பொருள் ஈஸ்வரனாகும். அப்பொழுது புண்ணியம் ஈஸ்வரனிடத்தில் சேர்ந்து ஈஸ்வரனாய்த் தீர்ந்தது அதாவது ஈஸ்வரமயமாகிவிடுகிறது. அப்பொழுதாகும் இராஜாவாகின்றது. **ஈஸ்வராம்ஸமாகும் இராஜா**. அதை அனுசரித்தே ''இராஜா பிரத்யக்ஷதேவதா" அதாவது இராஜா கண்கண்ட தெய்வம் என்று சொல்லக் காரணம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சுவர்களிலும்மற்றும் ''இராஜா பிரத்யக்ஷ தேவதா" என்று எழுதப் பட்டிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். அப்பொழுது பிரத்யக்ஷமான ஈஸ்வரன் அதாவது கண்கண்ட கடவுளாகும் இராஜா. அந்த இராஜாவிற்கு யாதொரு வியாதியும் உண்டாக இடமில்லை. அதுமட்டுமன்றி இராஜாக்களுக்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டாகின்ற விதத்தில் நமக்கு வியாதிகள் உண்டாவதில்லை. அவர்களுக்கு இராஜயக்ஷ்மா அதாவது க்ஷயம், இராஜபிளவை, பவுத்திரம், மூலம், பிரமேகம், பக்ஷவாதம் முதலிய பெரியவியாதிகளாகும் உண்டாகின்றன. அதனால் அவர்கள் பெரிய குற்றங்கள் செய்தவர்களாகும். அப்படிப் பெரிய பாவமான குற்றங்கள் செய்தவர்கள் இராஜாக்களாகப் பிறப்பதற்கு இடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : எனில் புண்ணிய பாவங்கள் உண்டாவது எங்கிருந்து?

சி : அது மனத்திலிருந்து ஆகும்.

கு : அப்பொழுது நமக்கு மனம் இல்லாவிட்டால் புண்ணியமோ, பாவமோ உண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : மனத்திலிருந்து உண்டாகின்ற பாவங்கள் அறவே உண்டாகாமல் இருந்தால் என்னவாயிருக்கும்?

சி : புண்ணியமாயிருக்கும்.

கு : புண்ணியமென்பது என்னவாகும்?

சி : ஈஸ்வரனிடம் சேருவதற்குள்ள ஒரு நிலை.

கு : எனில் ஈஸ்வரன் நம்மில் எவ்விடமிருக்கின்றான்?

சி : நம்மில் உயர்ந்த இடத்தில் இருக்கின்றான்.

கு : ஈஸ்வரன் நமக்கு மேலேயாகும். ஆனால் நமக்குமேலேயிருப்பது சிரசாகும். அந்த சிரசிலாகும் ஈஸ்வரனிருக்கின்றான். அப்படி மேலே சிரசிலிருக்கிற ஈஸ்வரனிடத்தில் சேர்ந்து ஒரே நிலையாக இருக்கவேண்டுமென்றால், ஈஸ்வரனிடம் ஒரே கதியாய் இருக்க வேண்டும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்த நிலைமைக்குதான் "புண்ணியோத்கிருஷ்டம்" என்று சொல்லுவது. புண்ணியம் உத்கிருஷ்டமாகிய சரீரிகளாகும் ஈஸ்வரர். அதாவது புண்ணியம் உயர்ந்த பதவியாய் வந்த சரீரிகள் யாரோ அவராகும் ஈஸ்வரர். அதனால்தான் ஈஸ்வராம்ஸமாகும் இராஜா என்று சொல்லக் காரணம். எனவே தன்னலிருந்து உண்டாகின்ற பாவங்கள் உண்டாகாமல் தன்னில் மேலே சிரசிலிருக்கின்ற ஈஸ்வரனிடம் ஏககதியாக வரும்பொழுது புண்ணியம் உத்கிருஷ்டமாகி இராஜாவாகின்றது. தவிர, நீர் சண்டாளரென்று சொல்லப்படுகின்ற ஒரு பறையனுக்கு மேற்சொன்னபடி உண்டாயிற்று என்றால் அவன் யாராகிறான்?

சி : அவன் இராஜாவாகிறான்.

கு : அப்பொழுது இராஜா என்றொரு சிருஷ்டி உண்டோ?

சி : இல்லை.

கு : எப்படியாகும் இராஜாவாகின்றது?

சி : அவனவனுடைய தொழிலைக் கொண்டாகும்.

கு : அது எப்படியென்றால்: தன்னுடைய சக்திவெளியில் வியாபித்து, பல விஷயங்களிலும் சென்று பதிந்து, மோஹமாய் பிரமித்து அதாவது மயங்கிக் கிடக்கின்றது வெளியில் வந்து வியாபித்து யாதொரு விஷயங்களிலும் போகாமல் உற்பவஸ்தானமாகிய (பிறப்பிடமான) தன்னில்தானே சேருவதற்குள்ள ஏககதியாகி வரும்பொழுதாகும் இராஜாவென்று சொல்லப்படுகிற நிலைமை. அதல்லாமல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இப்போது நாம் இராஜாவென்றபிமானித்து வருகிறவர்களுடைய நிலைமை, உலகம் முழுவதும் வியாபித்து இருக்கின்ற ஜீவிகளுக்குச் சமமாக அனுபவிக்க வேண்டியதாயிருக்கின்ற சொத்தை "கை வலுத்தவன் காரியக்காரன்" என்கிற நிலையில் அக்கிரமமாய்ப் பிடித்தடக்கி, ஸ்தானமானாதிகள் ஏற்படுத்தினதாகும். ஒருவர் அதிக பலமுள்ளவரும், பராக்கிரமியும் ஜனக்கட்டுள்ளவருமானால், மீதியுள்ள ஜனங்களைப் பிடித்துக்கட்டி, அடித்து, வெட்டி, "நீங்கள் எல்லாரும் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும். நான் இராஜாவாகும், என்னுடைய சொற்படி 'அனுசரித்து நடக்க வேண்டும்" என்றெல்லாம் பலவந்தமாக நிர்பந்தித்துத் தன்னுடைய அடிமைகளாக்கி கீழடக்கி ஆண்டுவருவதாகும். இப்படித்தான் இப்பொழுதுள்ள இராஜாக்கள் என்றும் பிரபுக்களென்றும் தனிகர்களென்றும் சொல்லி வருகின்றவர்கள். அதற்கு உதாரணம் : 1921 ல் அதாவது மலையாள வருடம் 1096 ல் மலையாள இராஜ்யத்தில் நடந்த மாப்பிள்ளைக் கலகத்தில் தலைவனா யிருந்தவர் குஞ்ஞி அஹம்மதுஹாஜியாய் இருந்தாரல்லவா? அவர் ஒரிரண்டு தடவைகள் அரசாங்கச் சிறைத்தண்டனை அடைந்த கேடி என்று கேள்விப்பட்டிருக்கின்றோம் அல்லவா? அவருக்கு மிக ஜனக்கட்டுண்டாகி சக்தி அதிகப்பட்டதனால் இந்திய அரசாங்கத்தோடு எதிர்த்துக் கலகத்திற்குப் புறப்பட்டு ஜனங்களைக் கொடூரமாக உபத்திரவம் செய்து, பிடித்துக்கட்டி, வெட்டித் துண்டு செய்ய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆரம்பித்தபோது, அந்த நாட்டுமக்கள் எல்லாரும் பயந்து அடங்கி அவருக்குக் கீழானால் அதாவது கீழ்ப்படிந்தால் அவரை அப்பொழுது யாரென்று சொல்லலாம்?

சி : இராஜாவென்று சொல்லலாம்.

கு : அப்பொழுது இராஜாவென்பது பிரத்தியேகமான (தனிப்பட்ட) ஒரு சிருஷ்டியோ அல்லது அவனவனுடைய துஷ்ட (கெட்ட) செய்கையால் உண்டாவதோ?

சி : அவனவனுடைய துஷ்ட (கெட்ட) செய்கையால் உண்டாவது.

கு : எனில் சுகிர்தம் (புண்ணியம்), துஷ்கிருதம்(பாவம்) என்பது இன்னதென்றறியாமல் இருக்கின்றதால் தவறாகப் புரிந்துகொள்ள இடமுண்டாயிற்று. பாவமென்பது நசிக்கின்றது. அதாவது புண்ணியம் இல்லாமலாகின்றது. எனில் ஒருவன் நோய்வாய்ப் பட்டு சக்தியற்றவனாய்க் கிடக்கின்றான். அப்பொழுது அவனைப் புண்ணியவானென்றோ, பாவியென்றோ சொல்ல வேண்டியது?

சி : பாவி என்று.

கு : அப்படிச் சொல்வதற்கிடமில்லை. காரணம் சுகிர்தம் நசித்தால் செத்துப்போகின்றான் அதாவது புண்ணியம் தீர்ந்தால் செத்துப் போகின்றான் என்று சொல்லுகின்றனர். நோய்வாய்ப்பட்டுக் கிடக்கின்ற ஆளுக்கு ஜீவன் இருக்கின்றதல்லவா? அவன் சாகவில்லையல்லவா? பாவம் என்றால் ஈஸ்வர சைதன்யம் இல்லாததாகும். நோய்வாய்ப்பட்டுக் கிடக்கின்ற சமயத்தில் அவனுக்கு ஈஸ்வர சைதன்யம் இல்லையோ?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


ஈஸ்வர சைதன்யம் இல்லையானால் அவன் ஒரு மரப்பொம்மைக்குச் சமமாகின்றான். அப்பொழுதுதான் பாவம் என்று சொல்லுவது. பாவம் என்கிறது ஈஸ்வர சைதன்யமில்லாமல், ஜீவன் அதிலிருந்து நசித்ததாகும். ஜீவனேயாகும் ஈஸ்வரன். அதாகும் புண்ணியம். அந்தப் புண்ணியமாயிருக்கின்ற பொருள் நசித்து, சந்திரமண்டலத்தில் பனிபோல்சென்று பதிகின்றது என்று சொல்லுகிறார்கள். எனில் அது உண்மையாகும். அதென்னவென்றால்: சந்திரன் என்பது மனமாகும். சந்திரமண்டல மென்று சொல்லப்படுகின்றது மனோமண்டல மாகும். பனியென்பது நீராயிருக்கின்ற ஆவியாகும். அதாவது விசாரமாயிருக்கின்ற புகையாகும். அதென்னவென்றால், சந்திரமண்டல மாயிருக்கின்ற மனோமண்டலத்தில் ஜீவனாயிருக்கின்ற புண்ணியம், அது, இது என்றுள்ள விசாராதிகளாகி நசித்துப் போகின்றது. அப்பொழுதாகும் செத்துப்போவது. இதாகும் புண்ணியம் ஒடுங்கி, சந்திரமண்டலத்தில் பனிக்கு சமமாய்ச் சென்று பதிகிறது என்று சொல்லக் காரணம். அப்படிப் போகிறது என்னவாகும்?

சி : ஜீவனாயிருக்கின்ற புண்ணியம் என்று வெளிப்படுகிறது.

கு : எனில் அந்தப் புண்ணியம் தன்னிலிருந்து நசித்துப் போகும் பொழுதாகும் செத்துப்போகின்றது. அதனால் புண்ணியமாயிருக்கின்ற ஒரு பொருள் நம்மிடம் உண்டென்று வருகிறது. அதாவது புண்ணியமாயிருக்கின்ற "தனம்". அதுவே

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


''புருஷார்த்தம்". அது புரத்திலிருக்கின்ற சுழிமுனையிலுள்ள அர்த்தமாகும். புரம் என்பது வீடு, அதாவது இந்த ஜடம். சுழிமுனை என்பது இருதயம். அர்த்தம் என்பது தனம் அதாவது பொருள். புருஷார்த்தம் என்பது புரத்திலுள்ள சுழிமுனையாகிய இருதயத்தில் இருக்கிற தனம். அந்த தனம் நசித்துப்போகும்பொழுதாகும் நாம் செத்துப் போகின்றது. அதெப்படியென்றால் இதோ பாருங்கள்! ஒரு பெட்டி. இந்தப் பெட்டி நிறைய தனம் இருக்கிறது. அந்த தனத்தைச் செலவு செய்து செய்து கொண்டே இருந்தால் கடைசியில் என்னவாய்த் தீரும்?

சி : தனம் தீர்ந்துபோகும்.

கு : அப்பொழுது என்ன மிச்சமுண்டு?

சி : பெட்டி மட்டும் மிச்சமுண்டு.

கு : இப்படியே இக்காணுகின்ற ஜடம் ஒரு பெட்டியென்று நினைத்துக் கொள்ளுவோம். இந்த ஜடமாயிருக்கின்ற பெட்டிக்குள்ளாகும் புண்ணியம் என்கிற தனம் இருக்கின்றது. அந்த தனம் செலவாகித் தீர்ந்துவிட்டால் கடைசியில் என்னவாய்த் தீருகிறது?

சி : செத்துப்போகிறது.

கு : அப்பொழுதுதான் புண்ணியம் என்கிற தனம் நசித்தது. பின் அங்கு என்ன மிச்சமுண்டு?

சி : ஜடமாகிய பெட்டி மட்டும் மிச்சமுண்டு.

கு : இந்த ஜடமாயிருக்கின்ற பெட்டியிலுண்டாயிருந்த புண்ணியம் என்கிற தனம் நசித்தபொழுது ஜடமாயிருக்கிற பெட்டி மட்டும் மிச்சமாகிறது. அதைக் குழிதோண்டிப் புதைக்கவோ அல்லது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சுட்டுச் சாம்பலாக்கவோ செய்கிறோம். இது நமக்குக் கண்கூடான அனுபவமல்லவா? அதனால் இந்த ஜடத்தில் ஒரு தனம் உண்டாயிருந்ததென்றும் அந்த தனம் புண்ணியமாயிருந்தது என்றும் வருகிறது. புண்ணியம் என்றால் சுகிர்தம். சுகிர்தம் என்பது விசேஷகிர்தம். விசேஷம் = அறிவு; கிர்தம் = செய்யப்படுவது; விசேஷகிர்தம் என்பது அறிவினால் செய்யப்படுவது. எனவே அறிவினால் செய்யப்படுவது புண்ணியம் என்றும் அறிவில்லாமல் செய்வது பாவம் என்றும் உலகத்தில் சொலலிவருகிறார்கள். அது உண்மையேயாகும். அது என்னவென்றால்: அறிவு என்பது என்னவென்று முன்பு சொல்லப் பட்டிருக்கிறது?

சி : ஜீவசக்தியாகிய வாயுவென்றாகும்.

கு : அது எப்படியிருக்கின்ற வாயுவாகும் என்று சொல்லப்பட்டது?

சி : பிரம்மரந்திரத்தில் தாக்கிக் கொண்டிருக்கின்ற சமீரணன்.

கு : அப்பொழுது அறிவாயிருக்கின்ற வாயுவினால் செய்யப்படுவதற்குப் புண்ணியம் என்றும் அது உள்வழியே அல்லாமல் வெளியில்போய்த் தீருவதற்குப் பாவம் என்றும் பெயர். இதனாலேயாகும் புண்ணியம் நசித்தால் பாவம் என்று சொல்லக் காரணம். அப்பொழுது பாவம் என்று சொல்லுவது என்னவாகும்?

சி : ஜீவனை நசிப்பிக்கிறதாகும்.

கு : உமது ஜீவனை நீர் சினேகித்தீரோ?

சி : ஓ! நான் சினேகித்து வருகின்றேன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : எனில் நீர் செத்துப்போவீரா?

சி : நான் செத்துப்போவேன்.

கு : உங்களுடைய ஜீவனை நீர் சினேகித்ததானால் செத்துப் போவதற்கு இடமுண்டோ?

சி : அது எப்படியென்று எனக்குத் தெரியவில்லை.

கு : சொல்லுகிறோம். அதாவது உமது ஜீவனை நீர் சினேகித்து வருவீராயின் அந்த ஜீவனை வெளியில் விடுவீரோ? அந்த ஜீவனை வெளியில்விடாமல் உமதுள்ளிலேயே ஒடுக்கவல்லவா செய்ய வேண்டியது?

சி : ஆம், ஒடுக்கத்தான் செய்ய வேண்டியது.

கு : அப்பொழுது நீர் செத்துப்போவதற்கிடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : அது மட்டுமல்ல, உங்கள் ஜீவனை நீங்கள் சினேகித்து வருவீராயின் மற்றொன்றினை இம்சிப்பதற்கு இடமேற்படுவதில்லை. எப்பொழுது தன்னைத்தான் சினேகிக்கின்றோமோ, அப்பொழுது மற்றொன்றினை இம்சிக்கமாட்டோம். தன்னைத்தான் சினேகித்தால் தன்னைவிட்டு வெளியே போகிறதில்லை. தன்னைவிட்டு வெளியே போகிறதில்லையானால் மற்றொன்றையும் இம்சிக்க வழியில்லை. அதெப்படியென்றால் இதோ பாருங்கள்! ஓர் அறையாகவும் இரண்டடுக்குகளாகவும் அவற்றில் மேலடுக்கிற்கு அனேக ஜன்னல்கள் உள்ளதாகவும் உள்ள ஒரு வீடு. அதன் கீழ் அடுக்கிற்குள் சென்று கதவை மூடி, அதிலிருந்து மேலடுக்கிற்கு ஏறிப்போய், அதிலுள்ள ஜன்னல்களின் வழியாகப் பார்த்தால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியிலுள்ள எல்லா நிலைமைகளையும் நீர் பார்த்துக் கொண்டிருக்கலாம். எனில் வெளியிலிருக்கிற யாதொரு ஜீவிகளையும் நீர் கீழே இறங்கி வெளியில் வராமல் இம்சிக்க முடியுமா?

சி : இல்லை. இம்சிக்க முடியாது.

கு : ஆகவே மேல்சொன்ன வீட்டிற்குள்ளே நீங்கள் இருக்கும்போது வெளியிலிருக்கிறதெல்லாம் பார்க்கலாமாக இருந்தது. இப்படியே தன்னிலிருக்கிற ஜீவன், கீழே இறங்கி வெளியில் வந்து வியாபிப்பது கொண்டாகும் பல இம்சைகளையும் செய்வதற்கு இடமாகிறது. அந்த ஜீவனை வெளியில் விடாமல், தன்னிலேயே உபரியாக அதாவது மேல்பாகத்தில் ஒடுக்கினால் யாதொன்றையும் இம்சை செய்யாமல் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருக்கலாம். அப்பொழுது மட்டுமே ஜீவனை சிநேகித்து வருகிறோமென்று சொல்லுவதற்கு முடியும். அப்படி ஜீவனை சிநேகிக்காமல் நம்முடைய ஜீவன் நானாவிஷயங்களிலும் சென்று பதிகின்றதற்கே அதாவது மூக்கின் வழியாகவும் வாயின் வழியாகவும் மற்றும் வெளியே போய் நசித்துக் கொண்டிருக்கின்றதற்கேயாகும் பாவம் என்று சொல்லுவது. அதாவது தன்னுடைய புண்ணியமாய், உள்ளிலுள்ள ஜீவசக்தியாயிருக்கின்றவாயு, பாவமாக வெளியில் அநுலோமப் பிரதிலோமமாகிச் சென்று சென்று தீருகின்றது. அது எப்படியென்றால்: மூக்கின் வழியாகவும் மற்றும் வெளியே விடுகிறது அநுலோமமும், அவ்வழியாகத்தானே உள்ளே இழுப்பது பிரதிலோமமும் ஆகிறது. இவ்வாறு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கமிக்கவும்(வெளியே போகவும்) அனுகமிக்கவும் (உள்ளேவரவும்) செய்து கடைசியில் தன்னிலிருந்துஜீவன் நசித்துச் செத்துப்போகின்றது. அதெப்படியென்றால்: நம்முள்ளிலுள்ள சத்தாயிருக்கின்ற ஜீவன் தன்னைத்தான் அறியாமல் அது, இதுஎன்றுள்ள விசாராதிகளால் பாவமாகி வெளியே போய் நசித்துப்போகின்றது. இந்த நிலைமையாகும் பாவம். அப்பொழுது இதுவரையும் நீர் உமது ஜீவனை சிநேகித்து வருகிறீரா?

சி : இல்லை.

கு : உமது ஜீவனை நீர் சிநேகித்து வந்ததானால் நீர் செத்துப்போவீரா?

சி : செத்துப் போகமாட்டேன்.

கு : எனில் நாம் எதற்காக வேண்டி புண்ணியம் செய்ய வேண்டும்?

சி : செத்துப் போகாமல் இருப்பதற்காக.

கு : செத்தபோது அந்தப் பிணத்திற்கு யாதேனும் ஞாபகமோ, போதமோ, மற்று ஏதாவ்து உண்டோ?

சி : யாதொன்றுமில்லை.

கு : என்ன காரணம்?

சி : செத்துப் போனதால்.

கு : செத்தபோது அதில் என்ன இல்லை?

சி : ஜீவசக்தியாகிய வாயு இல்லை.

கு : அப்பொழுது நம்மை ரக்ஷிப்பது யாராகும்?

சி : ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு : அதற்குத்தான் ஈஸ்வரன் என்று பெயர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் நான்கு

சிஷ்யன் : சுவாமி! முன் அத்தியாயத்தில் ஜீவசக்தியான வாயுவை ஈஸ்வரன் என்று கற்பித்தீர்களல்லவா? அது எப்படி என்று விவரமாய்ச் சொல்லித் தந்தருள வேண்டுகிறேன்.

குரு : எனில் ஈஸ்வரன் என்பதன் பொருள் ''பரணசிரேஷ்டன்'' என்றாகும். அதாவது ஈஸ் + வரன். ஈஸ் = பரணம் அதாவது காப்பாற்றுதல்; வரன் = சிரேஷ்டன். அப்பொழுது ஈஸ்வரன் என்பதன் பொருள் பரண சிரேஷ்டன் அதாவது ஆளுவதற்குரியவன் என்றாகிறது. அப்படி நம்மை ஆண்டு கொண்டிருப்பது அதர்வது காப்பாற்றிவருவது யாராகும்?

சி : ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும்.

கு : அந்த வாயு இல்லாமலிருந்தால் நாம் ஜலபானம் முதலிய ஆகாரங்கள் சாப்பிடவோ, பேசவோ, அசையவோ மற்றும் ஏதாவது செய்யவோ முடியுமா?

சி : முடியாது.

கு : அது மட்டுமல்ல, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலியன செய்வது ஈஸ்வரன் என்று சொல்லுகிறோம். அது உண்மைதான். அப்படிச் செய்கிறது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அதற்கு உதாரணம்: இங்கே ஒரு நெருப்புக்கனலைக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கொண்டுவந்து வைத்து, அதன் மேல் சிறிது ஓலைச் சருகுகளைப் போட்டால் அது தானாகவே எரியுமா?

சி : எரியாது.

கு : அது எரிய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

சி : ஊத வேண்டும்.

கு : அதை எப்படி ஊதுவது?

சி : ஜீவசக்தியாகிய வாயுவைக்கொண்டாகும்.

கு : அந்த வாயுவினால் என்ன உண்டாயிற்று?

சி : அக்கினியினுடைய பிரகாசமுண்டாயிற்று.

கு : அந்தப் பிரகாசத்தை நீங்கள் காண்பதுண்டோ?

சி : காண்பதுண்டு.

கு : காணப்படுவதற்கு என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி : உருவம் உண்டாயிருக்க வேண்டும்.

கு : வாயுவிற்கு உருவம் உண்டோ?

சி : இல்லை.

கு : உருவம் யாருக்கு உண்டாயிற்று?

சி : அக்கினிக்கு.

கு : அக்கினியினுடைய உருவம் என்ன?

சி : பிரகாசம்.

கு : அப்பொழுது பிரகாசமாயிருக்கின்ற உருவத்தை சிருஷ்டித்தது யார்?

சி : வாயுவாகும்.

கு : அப்பொழுது சிருஷ்டிகர்த்தா யார்?

சி : ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

கு : அப்படி வாயுவால் சிருஷ்டிக்கப்பட்ட பிரகாச

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மாகிய உருவத்தை அதாவது ஒரு விளக்கில் எண்ணெய் விட்டு, திரிவைத்து, அந்தத் திரியை ஏற்றி அதாவது கொளுத்தி, அந்த விளக்கைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினால் எரியுமா?

சி : எரியாது.

கு : காரணம் என்ன?

சி : அதன் உள்ளில் வாயு இல்லாததால்.

கு : அப்பொழுது அது எரிந்துகொண்டிருக்க வேண்டுமானால் என்ன வேண்டும்?

சி : வாயு வேண்டும்.

கு : அப்பொழுது ஸ்திதி செய்வது (இரட்சிப்பது) யார்?

சி : வாயுவாகும்.

கு : எரிந்து கொண்டிருக்கின்ற பிரகாசமான உருவத்தை அணைக்க வேண்டுமானால் என்ன வேண்டும்?

சி : வாயு வேண்டும்.

கு : வாயுவினால் எப்படி அணைப்பது?

சி : ஊதி அணைப்பது.

கு : அப்பொழுது சம்ஹாரம் செய்வது யார்?

சி : வாயுவாகும்.

கு : அப்பொழுது அவ்விதம் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் இவை செய்வது யார்?

சி : ஜீவசக்தியாய் இருக்கின்ற வாயுதான் என்று வெளிப்படுகிறது.

கு : எனில் அந்த வாயுவேயாகும் சக்தி. அந்த சக்தியிலிருந்தே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் இவை உண்டாகின்றன. இதற்கே சிவசக்தி என்று சொல்லப்படுவது. இதனால்தான் ''சக்தியொழிந்தால் சிவனும் சவரூபமாம்"

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று சொல்லக் காரணம். தவிர, சர்வ அர்த்தங்களும், அனர்த்தங்களும் அதாவது இன்பதுன்பங்கள் உண்டாக்குகின்றதும் உலகிற்கு ஏக காரணமாயிருக்கின்றதும் விசேஷமாயிருக்கின்றதும் சரீரமாகும்.

சி : ஓ சுவாமி! இதுவரையிலும் சொல்லியதெல்லாம் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகுமென்றும், இப்பொழுது சரீரம் என்றும் சொல்லுகின்றீர்கள். இதன் காரணம் என்ன?

கு : சரீரம் என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா?

சி : ஓ! தெரியும்.

கு : அது எது?

சி : அது இந்த உடல்.

கு : நீர் இப்பொழுது தொட்டுக்காட்டியதற்கு சரீரம் என்று பெயரில்லை. அதன் பெயர் மார்பு, சரீரத்தைத் தொட்டுக் காண்பிப்பதற்கு முடியுமா?

சி : எல்லா அவயங்களோடும் கூடிய ஒரு உருவத்திற்கே சரீரம் என்று பெயர்.

கு : எனில் எல்லா அவயங்களும் இல்லாதிருந்தால் அதை சரீரம் என்று சொல்லக்கூடாதா?

சி : சொல்லக்கூடாது.

கு : ஒரு மனிதனுக்குக் காலில்லை; ஒரு மனிதனுக்குக் கையில்லை; மற்றொருவனுக்குக் கண்ணில்லை; வேறொருவனுக்கு மூக்கு இல்லை; ஒருவனுக்கு மேற்கூறிய அவயங்களாகிய கால், கை, கண், மூக்கு இவை இல்லையானால் அவர்கட்கு சரீரம் இல்லையென்று சொல்லமுடியுமா?

சி : சொல்ல முடியாது.

கு : அதுவுமன்றி தேகத்திலுள்ள எல்லா

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவயங்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பெயருண்டு. அதனால் அவையொன்றும் சரீரமாகாது. அது மட்டுமல்ல, தோல், நரம்பு, எலும்பு முதலானவை சரீரத்தோடு சேர்ந்துள்ளவை என்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்குமானால் தோலையும் நரம்பையும் எலும்பையும் எடுத்துவிட்டால் சரீரத்தைக் காணமுடியுமா?

சி : காணமுடியாது.

கு : அது என்ன காரணம்? உம்மை இரண்டு மூன்றுபேர் தொட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தச்சமயத்தில் அவர்கள் உம்மைத் தொட்டுச் சேர்ந்திருக் கின்றார்கள் அல்லவா?

சி : ஆம்.

கு : அவர்கள் உம்மைத் தொடாதிருக்கும்பொழுது உம்மோடு சேர்ந்திருக்கிறார்களா?

சி : இல்லை.

கு : அப்பொழுது உங்களை வேறுபட்டவராகக் காண்பதில்லையா?

சி : காண்பதுண்டு.

கு : அவ்வாறு சரீரத்தைச் சேர்ந்திருக்கின்ற தோல், நரம்பு, எலும்பு முதலியவற்றை வெவ்வேறாக எடுத்தால் சரீரத்தைத் தனியாகக் காணவேண்டிய தல்லவா?

சி : ஆம், காணவேண்டும்.

கு : ஆனால் அப்படிக் காண்பதுண்டோ?

சி : காண்பதில்லை.

கு : அதனால் இக்காணப்படுவதற்கு சரீரம் என்று சொல்லுவதற்கு இடமில்லை. சரீரம் என்பது என்னவென்றால் திரவித்துக் கொண்டிருக்கின்றது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதாவது திராவகமாதல். அதெப்படியென்றால்: தண்ணீர் ஊறி ஓடிக் கொண்டிருப்பதுபோல ஓடிக்கொண்டிருப்பது; அல்லது க்ஷயித்துக் கொண்டிருப்பது; அதாவது குறைந்து குறைந்துபோய்க் கொண்டிருப்பது; அல்லது க்ஷீணித்துக்கொண்டிருப்பது, அதாவது மெலிந்து மெலிந்து (இளைத்து இளைத்து) கொண்டிருப்பது அதாவது அழிந்து கொண்டிருப்பது. அப்படியிருக்க நீர் தொட்டுக் காண்பித்தது சரீரம் என்று சொன்னால் அது அழிகிறதுண்டோ?

சி : ஓ! அழிகிறது அதாவது நசிக்கிறது உண்டு.

கு : எப்பொழுது?

சி : செத்தபொழுது.

கு : செத்தபோது இது அழிந்ததா?

சி : ஓ! அழிந்தது.

கு : அது தவறாகும். ஒரு பொழுதும் அழிவதில்லை. நீர் இதுதான் சரீரம் என்று தொட்டுக்காண்பித்துச் சொல்லுகிறீர். அப்படியிருக்க செத்துப்போன போதும் இதைக் காண்பதுண்டு. இது நசிக்கவில்லை. பின்பு இதை ஒரு குழியில் புதைத்தாலோ அல்லது அக்கினியில் வைத்து எரித்தாலோ அது பூராவும் நசிப்பதில்லை.

சி : ஓ! அது நசிப்பதுண்டு.

கு : அது எப்படி?

சி : சிலநாள் வைத்துக்கொண்டிருந்தால்.

கு : அவ்விதம் வைத்துக் கொண்டிருந்தால் அது எப்படி நசிக்கும்?

சி : அது ஜீரணித்து கெட்டு, கிருமி கீடங்கள் முதலியன தின்று நசிக்கிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்படியாயினும் அது பூராவும் நசிப்பதில்லை. அது எப்படியென்றால்: அதை மற்றொன்றினால் உபத்திரவம் நேரிடாதபடி பத்திரப்படுத்தினால் கொஞ்சம்கூட நசிப்பதில்லை. அதற்கு உதாரணம்: ஈஜிப்டு அதாவது எகிப்து முதலிய பல தேசங்களிலுள்ள அரண்மனைகளில் அநேக ஆயிரமாண்டுகள் சென்றுள்ள பிணங்கள் இப்பொழுதும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் அதை நாம் பார்த்ததில்லை. பார்த்ததைச் சொல்லலாம். பல மியூசியங்களில் அதாவது தொல்பொருள் காட்சிச் சாலைகளில் பல பிணங்களையும் ஒருவித திராவகத்திலிட்டு பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவை ஒன்றும் நசித்துப்போவதில்லை. ஆனால் அவற்றை எல்லாரும் பார்த்திருப்பார்களென்றும் நினைப்பதற்கில்லை. உலகில் யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும் உதாரணத்தைச் சொல்லலாம். அது எதுவெனில், சமுத்திரத்திலிருக்கின்ற ஏட்டை, சுறா, திரண்டி, திமிங்கலம் முதலான பலவிதத்திலுள்ள மீன்களையும் பிடித்து உப்பிலிட்டு, காயவைத்து, பத்து, ஆயிரம் வருட காலம் கடந்தவை இப்பொழுதும் இருப்பதுண்டு. இதை நாம் இப்பொழுதும் காண்கின்றோம். அப்படியே இதையும் பத்திரப்படுத்தினால் நசிக்குமோ?

சி : நசிக்காது.

கு : எனில், அது நசிக்கிறது எப்படியென்றால்: மேற்சொல்லிய மீன்களாகிய பிணத்தை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மனிதரென்று அபிமானித்து வருகிற புழுக்கள் தின்றுதீர்ப்பது போல், அந்தப் பிணத்தினுடைய தோல், சதைகள் முதலியவற்றைக் கிருமிகீடங்கள் முதலியன அதாவது புழுப் பூச்சிகள் தின்பதல்லாமல் பூராவும் தின்பதற்கு முடிவதில்லை. இவ்விதமல்லாமல் அது பூராவும் நசிப்பதில்லை. அது எப்படியெனில்: ஒருவன் செத்தால் பிணமாகிறான். அந்தப் பிணத்தை ஒருகுழியில் புதைத்துவிட்டு பத்து நூறு வருடம் சென்ற பிறகு அந்த இடத்தில் தோண்டிப் பார்த்தால் என்ன உண்டாயிருக்கிறது?

சி : எலும்பு, தலையோடு முதலானவை காணப்படுகின்றன.

கு : அது எப்படி? நசித்துப்போனால் காண்பதற்கு முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : அதற்கு ஓர் உதாரணம்: நிரம்பவும் வைரமுள்ளதான ஒரு மரத்தினுடைய துண்டை ஒரு குழிதோண்டிப் புதைத்து, பத்து நூறு வருடம் சென்றதன் பிறகு அதை ஓர் ஆள் தோண்டிப்பார்த்தால் அங்கே என்ன உண்டாயிருக்கும்?

சி:அந்த மரத்தினுடைய சேவு அதாவது வைரம் மட்டும் காணப்படும்.

கு : அது எப்படியென்றால்: மரத்தினுடைய பட்டை, சதைகள் எல்லாம் சிதல் (கரையான்), கருவாம்பூச்சிகள் தின்று வைரம் மட்டும் காணப்படுகிறது. இப்படியே ஒரு பிணத்தை மேல்சொன்ன மரத்துண்டைப் போல் ஒரு குழியில் புதைத்தால் கிருமி கீடங்கள் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



புழுப்பூச்சிகள் முதலிய ஜீவிகள் அந்தப் பிணத்தினுடைய தோல், சதை முதலியவற்றைத் தின்று, அதனுடைய அடிப்படையாய் இருக்கின்ற எலும்பு, தலையோடு முதலானவை காணப்படுகின்றன. தோல், சதைகளைக் கொண்டு சிருஷ்டியில்லை. அதன் அஸ்திவாரமாகிய தலையோடு, எலும்புகள் நசிப்பதில்லை. அதுவல்லாமல் நெருப்பில் போட்டு எரித்தாலும் பூராவும் நசிப்பதில்லை. அது ஏனென்றால், தீ இடுக்கியினாலோ, மற்ற கருவியினாலோ அந்த நெருப்பிலிருந்து அதன் எலும்புகளைப் பொறுக்கி எடுக்கிறார்கள். அவற்றைக் கங்கையில் கொண்டுபோடவோ, சேதுவில் கொண்டு போடவோ, அல்லது அஸ்தித்தரை கட்டி, அதாவது ஒரு சமாதி கட்டடம் கட்டி, அதனுள்ளில் அந்த எலும்புகளை ஸ்தாபித்து வரவோ செய்து வருகிறார்கள். இவ்விதம் பார்க்கும்போதும் யோசனை செய்யும்போதும் ஜடம் நசிக்கின்றதோ, அல்லது ஜடத்தைப் பூராவும் நசிப்பிக்க முடிவதோ இல்லை என்று தெரிகிறது. ஆகவே இந்த ஜடம் நசித்துப்போகிறது என்று சொல்லுவதல்லாமல் உண்மையில் என்னவாகும் இதிலிருந்து நசிக்கின்றது என்று ஆலோசிப்பதில்லை. அதனால் செத்தபோது இதிலிருந்து நசித்தது என்ன?

சி : ஜீவசக்தியான வாயு.

கு : இதிலிருந்து ஜீவசக்தி நசித்துச் செத்துப்போனால் இதற்கு என்னவென்று பெயர்?

சி : பிணம் என்று பெயர்.

கு : அதுவரையிலும் இதற்கு என்னவென்று பெயர்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சரீரம் என்று பெயர்.

கு : அப்படியானால் எப்பொழுது சரீரமென்றும், எப்பொழுது பிணம் என்றும் சொல்லுகிறார்கள்?

சி : ஜீவசக்தியாகிய வாயு இருக்கிறதுவரை சரீரம் என்றும், அது இல்லாமல் போனதற்குப் பின் பிணம் என்றும் சொல்லுகிறார்கள்.

கு : அதனால் ஜீவசக்தியான வாயுவிற்கே சரீரம் என்று சொல்ல வேண்டியது. அந்த சரீரமாகின்ற வாயு இந்த ஜடத்தில் நிலைத்திருக்கும் காலம் வரையிலும் சரீரமென்றும், எப்பொழுது இந்த ஜடத்திலிருந்து அந்த வாயு நாசமாகித் தீர்ந்து போகிறதோ அப்பொழுது: பிணம் என்றும் சொல்லப்படுகிறது. அதுஎப்படியென்றால் ஒரு வாழைப்பழத்தை இங்கு கொண்டுவந்து வைத்தால் அதற்கு என்ன பெயர் சொல்லுவது?

சி : வாழைப்பழம் என்று.

கு : அந்த வாழைப்பழத்தின் உள்ளில் உள்ள கனியை எடுத்தால் பின் என்ன மிச்சமுண்டு?

சி : தோல்.

கு : அப்பொழுது அதற்கு என்னவென்று சொல்லுவது?

சி : பழத்தோல் என்று.

கு : அவ்விதம் சொல்லுவதற்குக் காரணம் என்ன?

சி : அதனுள்ளில் கனி இல்லாததால்.

கு : அதனுள்ளில் கனி இருக்கும்பொழுது என்னவென்று சொல்லுவது?

சி : பழம் என்று,

கு : எனவே கனி இருக்கும்போது அதற்குப் பழம் என்றும், கனி இல்லாதபோது அதற்குத் தோல் என்றும் சொல்லுகிறார்கள். அப்படியே, ஜீவன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இதனுள்ளில் இருக்கும்வரை சரீரம் என்றும், ஜீவன் இதிலிருந்து நசித்துப் போனபின் இதற்குப் பிணம் என்றும் சொல்லுகிறார்கள். அதுபோலவே சரீரமாயிருக்கின்ற வாயு உடம்பிலிருந்து வேறுபடும்பொழுது பிணமாகிறது. அது கொண்டு வாயுவேயாகும் சரீரம். தவிர, சரீரம் இருக்கும்பொழுது மட்டுமே, ஆகாரங்கள் உட்கொள்ளுகிறதும், சேட்டைகள் செய்கிறதும், கேட்கிறதும் காண்கிறதும் அறிகிறதும் ஆகிய தொழில்களும் உண்டாகின்றன. சரீரம் இல்லாதிருந்தால் புசிப்பதற்கும், சேட்டைகள் செய்வதற்கும், கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடிவதில்லை. இந்த ஜடமாகும் சரீரமென்றால் செத்துப்போனபோதும் இந்த ஜடத்தைக் காண்கின்றோமல்லவா?

சி : காண்கின்றோம்.

கு : அப்பொழுது முன்சொன்ன ஏதாவது சேட்டைகள் முதலியவை அதற்கு உண்டாயிருந்ததா?

சி : இல்லை.

கு : அது சரீரமாயிருந்ததென்றால் முன் சொல்லப்பட்ட சேட்டைகள் உண்டாகவேண்டியதல்லவா?

சி : ஆம், உண்டாகவேண்டும்.

கு : அப்பொழுது அதற்கு சரீரம் என்று சொல்வதற்கிடமுண்டா?

சி : இடமில்லை.

கு : எனில் சரீரம் என்பது எது?

சி : ஜீவசக்தியாய் இருக்கின்ற வாயுதான் என்று வெளிப்படுகின்றது.

கு : எனில் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இந்த ஜடத்திலிருந்து குறைந்து குறைந்து நசித்துப் போகிறது. அது எப்படி என்றால்: நீர் ஊறி ஓடிக்கொண்டிருப்பது போல், பஞ்சேந்திரிய மென்று சொல்லிவருகிற ஐந்து துவாரங்களின் வழியாய்க் கரைந்து கரைந்து வெளியில்போய் க்ஷயித்து அதாவது குறைந்து குறைந்து, க்ஷீணித்து அதாவது மெலிந்து மெலிந்து நசித்து இல்லாமல் போகின்றது. அப்படி நசித்துப்போகின்ற பொருள் எது?

சி : **ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.**

கு : **அதற்குத்தான் சரீரமென்றும் தேகமென்றும் சொல்லுவது.** தவிர, ஒருவனது முழங்கால் முட்டில் இரத்தவாதத்தால் வீக்கம் உண்டானால் அந்தக் காலை அவனுக்கு அசைப்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : காரணம்?

சி : அந்த முழங்கால் முட்டின் மேல் இரத்தம் கட்டியதால் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவினுடைய கதாகதம் அதாவது போக்கு வரவிற்குத் தடை நேரிட்டது கொண்டாகும்.

கு : அதுவல்லாமல், பக்ஷவாதம் (பக்கவாதம்) பிடித்து கை கால் முடங்கியுள்ளவருடைய அந்தக் கைக்கும் காலுக்கும் ஏதாவது சக்தியோ, கிள்ளினால் வலியோ உண்டாகுமா? அல்லது அந்தக் கையையும் காலையும் தானாகவே அசைக்கமுடியுமா?

சி : முடியாது.

கு : அது என்ன காரணம்?

சி : ஜீவசக்தியாகிய வாயுவின் போக்குவரவு அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கதாகதம் இல்லாமையினால்.

கு : அப்பொழுது க்ஷீணிப்பது எது?

சி : ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு : அந்த ஜீவசக்தியாகிய வாயுதான் தேகம். தேகமென்றால் தகிக்கப்படுகிறது என்று பொருள். அப்படி தகிக்கப்படுகிறது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அது எவ்விதமென்றால்: ஒரு கல்லறையுண்டாக்கி அதில் சிரட்டையையும் காய்ந்த விறகையும் போட்டு மண்ணெண்ணெய் விட்டு அதனுள்ளில் ஒரு சடத்தைவைத்துத் தீயிட்டு அதற்குள்ளில் வாயு புகாமல் அடைத்துப் பத்திரம் செய்தால் அது எரியுமா?

சி : எரியாது?

கு : என்னகாரணம்?

சி : வாயு அதனுள்ளில் பிரவேசிக்காததால்.

கு : அப்படியானால் அக்கினி எதிலிருக்கிறது?

சி : வாயுவில் ஆகும்.

கு : இதோ தெரிகின்ற விறகில் அக்கினி பற்றி எரிந்து கொண்டு இருக்கும்பொழுது அதோடு சம்பந்தப்படாத மற்ற விறகு எரியுமோ?

சி : எரியாது.

கு : எப்பொருளில் அக்கினியிருக்கின்றதோ அப்பொருள்தான் எரிகின்றது. ஆகையினால் வாயுவில் அக்கினி இருப்பதால் அந்த வாயுதான் எரிகிறது அதாவது தகிக்கின்றது. அது எப்படியெனில்: சப்தம் அக்கினி சொரூபமாகும். அந்த சப்தம் மூலமாக ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு தகித்து அதாவது எரிந்து அழிந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


போகிறது. அதனால்தான் அதற்கு தேகம் என்று சொல்லுவது. இதனாலேதான் தமிழில் "கத்தாதே, கத்தாதே" என்று சொல்லுவதன் காரணம். மலையாளத்தில் சில இடங்களில் அழுவதற்கு "காளுக" (காளுதல்) என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லக் காரணம் கத்துவதும் காளுவதும் அக்கினியாகும். ஆகையால் அக்கினி சொரூபமாயிருக்கின்ற சப்தரூபமாகி ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு நசித்துப் போகிறபடியால்தான் வாயுவிற்கு தேகம் என்று சொல்லப்படுவது. அதனால் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுதான் ஈஸ்வரன். அந்த ஈஸ்வரன்தான் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலியவற்றைச் செய்வது. தவிர, நம்மை சிருஷ்டிக்கின்றதும் ஜீவசக்தியாகிய வாயுவாகும். அதற்கு ஓர் உதாரணம்: பிணம் சம்யோகம் (புணர்ச்சி) செய்யுமா?

சி : செய்யாது.

கு : என்ன காரணம்?

சி : பிணத்திற்கு ஜீவசக்தியாகிய வாயு இல்லாததால்.

கு : அப்பொழுது ஜடத்தில் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு கதாகதம் செய்யும்பொழுது மட்டுமே சிருஷ்டிப்பதற்கு முடிகிறது. அச்சமயம் மட்டுமே சம்யோகத்திற்கு விருப்பமும் சம்யோகம் செய்யவும் முடிகிறது. சம்யோகம் இல்லையானால் சந்தானம் (குழந்தை) உண்டாகுமா?

சி : உண்டாகாது

கு : என்ன காரணம்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சம்யோகம் இல்லாததால்.

கு : அப்பொழுது சம்யோகம் செய்ய என்ன வேண்டும்?

சி : ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு உண்டாயிருக்க வேண்டும்.

கு : அப்பொழுது சிருஷ்டிக்கிறது யார்?

சி : ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு : எனில் அந்த வாயு ஒன்றினாலேயே சிருஷ்டி உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்படியாயின் அந்த வாயு எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது?

சி : பஞ்சபூதங்களைக் கொண்டு.

கு : பஞ்சபூதங்கள் என்று சொல்லுவது எவையெல்லாமாகும்?

சி : பிருதிவி அதாவது மண், அப்பு அதாவது நீர், அக்கினி அதாவது நெருப்பு, வாயு அதாவது காற்று, ஆகாயம் அதாவது வெளி ஆகிய இவையாகும்.

கு : இவை எல்லாவற்றையும் உருவமில்லாமல் இருக்கின்ற ஈஸ்வரன் ஒரு ஸ்திரீயினுடைய வயற்றிற்குள் கொண்டுபோய் எப்படி சிருஷ்டிக்கின்றது? அப்படி சிருஷ்டிப்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் எதைக்கொண்டு சிருஷ்டிப்பதென்று நாம் ஆலோசிக்க வேண்டியது? அதற்கு உதாரணம்: நாலைந்து வயதுள்ள ஒரு குழந்தை சம்யோகம் செய்தால் அந்த சம்யோகத்தினால் சந்தானம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அதன் காரணமென்ன?

சி : அந்தக் குழந்தைக்கு இந்திரியம் இளகாததால்.

கு : இந்திரியம் என்றால் என்ன?

சி : சுக்கிலம்.

கு : சுக்கிலமாயிருக்கின்ற பீஜம் அதாவது வித்து ஸ்திரீயினிடம் சென்று விழாமலிருந்தால் கர்ப்பம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது?

சி : சுக்கிலத்தைக் கொண்டு.

கு : அந்த சுக்கிலம் ஜீவனுக்குக் கீழாகவோ, மேலாகவோ இருக்கிறது?

சி : ஜீவனுக்குக் கீழாகவேதான் இருக்கிறது.

கு : அந்த ஜீவன் இருப்பது எங்கே?

சி : ஆகாசத்தில்.

கு : ஆகாசமென்பது என்னவென்று முன் சொல்லப் பட்டிருக்கிறது?

சி : சிரசு என்றாகும்.

கு : எனில் அந்த ஆகாசம் புருவமத்தியத்தின் மீது தலைக்குள்ளில் உச்சிவரையாகும். அந்த ஆகாசத்திலாகும் ஜீவனிருக்கிறது. அந்த ஜீவனுடைய சலனத்திற்கே ஜீவசக்தியாகிய வாயுஎன்று சொல்லுவது. அந்த வாயு உற்பத்தியான புருவமத்தியத்தில்தான் சுக்கிலமிருக்கிறது. சுக்கிலம் புருவமத்தியத்தி லாகும் என்பதற்கு உதாரணம்: வியாதியினால் ஜடம் களைத்ததனாலோ, நாடிகளுக்குத் தளர்ச்சி ஏற்பட்டதனாலோ, அதிகதூரம் நடந்து தாதுக்களுக்குச் சோர்வு உண்டாகியதாலோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முன்னரே ஏதேனும் ஸ்திரீயைக் கண்டு மோஹித்ததனாலோ, மற்றோ சொஸ்தானம் அதாவது தன்னுடைய இருப்பிடமாகிய காமக்கலையிலிருந்து இளகியிருந்த சுக்கிலம் சம்யோக சமயத்தில் இன்ன இடத்திலிருந்து வருகிறது என்று அறிய முடிவதில்லை. முற்கூறிய யாதொரு காரணத்தாலும் காமக்கலையாகிய சொஸ்தானத்திலிருந்து முன்னமேயே இளகாமல், புணர்ச்சி சமயத்திலுள்ள சிரமத்தினால் மட்டும் சுக்கிலம் இளகுமேயானால் ஜடத்துக்கு நடுக்கமும் கண்கள் மூடிமூடிப் போவதும் தலைக்கு நடுக்கமும் உண்டாகின்றன. அதற்குக் காரணம், எல்லா நாடிகளும் வந்து சேருமிடம் புருவமத்தியம். அதுவாகும் சுழிமுனை என்று சொல்லப் படுகிற நெருப்புக் கண். நாடிகளிலிருந்துண்டாகிற வீரியம்தான் சுக்கிலம். அது அக்கினி நேத்திரமாகிய புருவமத்தியத்தில் இருக்கிறது. அதற்காகும் அக்கினி சொரூபமாய் இருக்கின்ற சுக்கிலம் என்று சொல்லுவது. ஜீவனிலிருந்து உற்பத்தியாகும் சக்தியாயிருக்கின்ற வாயு ஜடத்தில் கீழும் மேலும் கதாகதம் செய்யவும், அப்படியுள்ள சக்தி, மேற்படியுள்ள சலனம் நிமித்தம், பஞ்சேந்திரியங்களின் வழியாய் வெளியே போய் நசிக்கவும் செய்கிறது. இப்படி நசித்துக் கொண்டிருக்கின்ற சக்தியாகும் மாயை. சிருஷ்டி உண்டாகிறது சம்யோகத்தினாலாகும். ஆனால் சம்யோக சமயத்தில் மேற்படி பஞ்சேந்திரி யங்களின் வழியாய் வெளியில் போகின்ற சக்தி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியில் போகாமல் தன்னுள்ளூடாக ஒரே கதியாய் கெதப்பாய் அதாவது இளைப்பாய் மேல்பாகத்தில் தனது உற்பத்தி ஸ்தானமாகிய புருவ மத்தியத்திற்குச் சென்று அங்கே ஸ்திதி செய்து கொண்டிருக்கிற அதாவது நிலைத்திருக்கிற ஜீவனோடு சேருகிறது. அதாவது உள்வழியே கதாகதம் செய்து கொண்டிருக்கிற (நடமாடிக் கொண்டிருக்கிற) சக்தி ஸ்திரீயும், புருவ மத்தியத்தில் ஸ்திதிசெய்து கொண்டிருக்கிற ஜீவன் புருஷனுமாகும். இப்படியுள்ள ஸ்திரீபுருஷ சம்யோகத்தினால் அக்கினி சொரூபமாயிருக்கின்ற சுக்கிலத்தை இளக்கி, அந்த சுக்கிலத்தை மேற் சொன்ன ஜீவன் சக்தியோடு சேர்த்துக் கீழே கொண்டு வந்து, சக்தியின் வழியாய் சுக்கிலத்தைக் கொண்டு அந்த ஜீவசக்தியாய் இருக்கின்ற வாயு சிருஷ்டிக்கிறது. இந்த விதத்திலாகும் சிருஷ்டி உண்டாவது.

சி : குருவே! நான்கு விதத்திலாகும் சிருஷ்டி யென்றும் அதாவது சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம் என்றிவ் விதமாகுமென்றும் சொல்லுகிறார்கள். ஆகையினால் அதனுடைய நிலைமையைப் பற்றியும் விவரமாகச் சொல்லிக் கேட்க விரும்புகிறேன்.

கு : நீர் சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம் என நான்கு விதமாகும் சிருஷ்டியென்று சொன்னீரல்லவா? அவை என்னென்னவென்று புரிந்து கொண்டிருக்கிறீர்?

சி : சுவேதஜம் என்றால் வியர்வையிலிருந்துண்டாகிற பேன், மூட்டைப் பூச்சி முதலியவையும்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அண்டஜம் என்றால் முட்டையிலிருந்துண்டாகிற பட்சி (பறவை), பாம்பு, மீன் முதலியவைவயும், உத்பீஜம் என்றால் பூமியிலிருந்து முளைத்து உண்டாகின்ற புல், பூண்டு முதல் மரஞ்செடிகொடிகள் வரையிலும், ஜராயுஜம் என்றால் பிரசவித்து உண்டாகின்ற மனிதர், பசு முதலியவைவயும் ஆகும்.

ரு: எனில் இவ்விதத்தில் ஒருக்காலும் உண்டாக இடமில்லை. ஏனென்றால் நீர் நினைத்தபடி வியர்வையிலிருந்து உண்டாகின்றது வேறு, முட்டையிலிருந்து உண்டாகின்றது வேறு, பூமியிலிருந்து உண்டாகின்றது வேறு, பிரசவித்து உண்டாகின்றது வேறு என்றிப்படியில்லை. இவையெல்லாம் ஒரே விதத்திலேயே உண்டாகின்றன. அது எப்படியென்றால்: மூட்டைப் பூச்சியும் பேனும் முட்டையிலிருந்துதான் உண்டாகின்றன. மூட்டைப் பூச்சிகள் வசிக்கும் துவாரத்திலோ, மற்றோ பார்த்தால் அநேக முட்டைகளைக்காணலாம். அந்த முட்டைகள் உடைந்துதான் மூட்டைப் பூச்சிகள் உண்டாகின்றன. அதேவிதத்தில்தான் பேனுக்கும் முட்டையுண்டு. பேனினுடைய முட்டையாகும் ஈர். அந்த ஈர் உடைந்துதான் பேன் உண்டாகிறது. இது நமக்குக் கண்கண்ட அனுபவமல்லவா? ஆனால் இந்த இரண்டு இனங்களும் மனிதரென்று அபிமானிக்கப் பட்டவர்களுடைய இரத்தத்தைப் பானம் செய்து ஜீவித்து வருகின்றன. அதுகொண்டாகும் மூட்டைப் பூச்சிகள் ஜனங்கள் அதிகமாக வாசம் செய்யும் இடங்களிலும், பேன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜனங்களுடைய தலைகளிலும் காணப்படுகின்றன. இதல்லாமல் வியர்வையிலிருந்துதான் உண்டாகிற தென்றால் எல்லாருக்கும் வியர்வையுண்டு. எனில் எல்லாரிடமும் பேன் காணப்படுவதில்லை. தவிர, ஜனங்கள் வாசம்செய்து வருகின்ற எல்லா இடங்களிலும் மூட்டைப் பூச்சிகள் காணப்படுவதுமில்லை. ஆனால் "பிரம்மாண்ட கடாகமே சுவேதஜோத்பவம்" அதாவது உலகம் முழுவதும் சுவேதத்திலிருந்து உற்பத்தியானதாகும். சுவேதம் = சுயமாக உண்டாகின்ற வியர்வை. அவ்வியர்வை உண்டாகக் காரணம் என்ன?

சி : உஷ்ணம் அதிகரித்ததால்.

கு : உஷ்ணம் உண்டாகக் காரணமென்ன?

சி : சூடு அதிகரித்ததால்.

கு : சூடு எங்கிருந்து உண்டாகிறது?

சி : அக்கினியிலிருந்து.

கு : அக்கினி எங்கிருந்து உண்டாகிறது?

சி : வாயுவிலிருந்து.

கு : வாயு என்றால் என்ன?

சி : ஜீவசக்தியாயிருக்கின்ற தேகம்.

கு : எனில் வாயுவாயிருக்கின்ற தேகத்தில் அக்கினி அதிகரித்த போது அதிலிருந்து ஆவியாக உற்பவித்த வியர்வைதான் சுக்கிலம். இவ்வித சுக்கிலத்தினால்தான் சர்வ சிருஷ்டிகளும் உண்டாகின்றன. அப்பொழுது எல்லா உற்பவங்களும் சுவேதத்திலிருந்து உண்டாகின்ற தல்லாமல், நம்முடைய ஜடத்திலிருந்து உண்டாகின்ற வியர்வையினால் யாதொரு சிருஷ்டியும் உண்டாவதில்லை. தேகத்தின்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வியர்வைகொண்டாகும் சிருஷ்டி. தேகம் இன்னதென்று அறியாததால் உலகத்தில் தப்பபிப்பிராயத்திற்கு இடமுண்டாயிற்று. தேகம் என்பது முன்சொல்லப்பட்ட வாயுவாகும். அந்த உண்மையை எப்பொழுது உலகம் அறிகிறதோ, அப்பொழுதே அந்தத் தவறான எண்ணம் விட்டுப் போவதாகும். தவிர, ஒரு குழந்தை பிறந்தபோது, அக்குழந்தைக்கு சுக்கிலம் விருத்தியா யிருந்ததில்லை. அதில் அக்கினி அதிகரித்தபோது நாளடைவில் சுக்கிலம் விருத்தியாகிகாமாதிகள் உண்டாகி வருகிறது. இவ்வாறு எல்லாம் சுவேதத்திலிருந்துதான் உற்பத்தி ஆகின்றன.

சி : குருவே! சுக்கிலத்தைக்கொண்டு எவ்விதத்தில் சிருஷ்டிக்கிறதென்று விபரமாகச் சொல்லித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கு : இந்த சுவேதமாயிருக்கின்ற சுக்கிலம் முதலில் முட்டையாகின்றது. அந்த முட்டையிலிருந்துதான் உற்பவம். அதெப்படியென்றால்: காட்டாமணக்கின் பாலை ஓர் இலையில் பிடித்து ஈர்க்கில் கொண்டு வட்டமாகக் கட்டி அந்தப் பாலில் தொட்டு எடுத்து அதனை ஊதினால் அது எவ்விதமாகப் போகிறது?

சி : அது முட்டை வடிவமாகப் போகிறது.

கு : அதன்காரணமென்ன?

சி : அதை ஊதியபோது வாயு அதனுள் அடங்கியதால்.

கு : எனில் அந்தப் பால் ஒருவிதப் பசையுள்ளது. அவ்விதம் பசையுள்ள பாலில் வட்டமாகக் கட்டிய ஈர்க்கை தோய்த்தபோது அதற்குள்ளில் பசையாயிருக்கின்ற பால் வட்டவடிவமாகப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பற்றிப்பிடிக்கும். அதில் ஊதியபோது அந்தப் பசையாயிருக்கின்ற பால் ஈர்க்கிலிலிருந்து விடாது நீண்டு, அதனுள்ளில் வாயு நிறைந்து ஒரு முட்டை வடிவமாக ஈர்க்கிலிலிருந்து வேறுபட்டு அதாவது விடுபட்டுப் போகின்றது. சிலவற்றில் ஒன்றிரண்டாகவும், சிலவற்றில் ஐந்து பத்தாகவும், சிலவற்றில் சிறிது சிறிதாய் ஏராளமாகவும், சிலவற்றில் ஒன்றுமில்லாமலும் போய்விடுகிறது. ஊதுவதன் தன்மைக்கேற்பவாகும் இது சம்பவிக்கின்றது. இதைப் போலவே சுக்கிலமென்பது ஒரு பசையாகும். அந்தப் பசையாய் இருக்கின்ற சுக்கிலத்தை சம்யோக சமயத்தில் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு மூத்திர துவாரத்தின் வழியாகத் தள்ளிக்கொண்டு வருகிறது. மூத்திரதுவாரத்தின் நுனிவரையிலும் வந்தபோது, ஒரேவிதத்திலுள்ள சக்தியோடுள்ளதாயிருந்தது அந்த வாயுவினுடைய கதி என்றானால் அந்த சுக்கிலம் மூத்திரதுவார நுனியிலிருந்து கொஞ்சம் நீண்டு, அதில் அந்த ஜீவசக்தியாகிய வாயு நிறைந்து, அது முட்டை வடிவமாகி மூத்திர துவாரத்தினின்றும் வேறுபட்டு, கர்ப்பப் பையில் சென்று விழுகின்றது. பின்னரும் ஒரு துளியில்கூட, மேல் சொன்ன படியுள்ள சக்தியோடு சேர்ந்து வாயு நிறைந்தால், அதுவும் மேற்சொன்னபடி முட்டை வடிவாய், கர்ப்பப் பையில் சென்று விழுகிறது. இப்படி எத்தனைதுளிகள் மேற்சொன்ன படியுள்ள சக்தியோடு சேர்ந்து வாயு நிறைந்து முட்டை வடிவங்களாய் கர்ப்பப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பையில் விழுகின்றனவோ, அத்தனை குழந்தைகள் உண்டாகின்றன. தவிர, சிலர் பாம்பையும் முட்டையையும் பிரசவித்தன ரென்றும் சொல்லுகிறார்கள். எனில் அது பாம்பு சம்யோகம் செய்ததாலன்று. தாது சக்தி அதிகமானதால் சம்யோக சமயத்தில் இளைப்பு அதிகமாகி, ஜீவசக்தியாகிய வாயு சுக்கிலத்தை இளக்கிக் கொண்டு வரும்பொழுது, பன்னீர்ச் செம்புகொண்டு பன்னீர் வீசும்பொழுது எப்படி பன்னீர் செம்பிலிருந்து பன்னீர் வேறிட்டு அணு அணுவாய்த் தொட்டு தொட்டு விழுகிறதோ, அப்படியே மூத்திரதுவார நுனியிலிருந்து வாயுவினுடைய சக்திகொண்டு சுக்கிலம் சிறுசிறு துளிகளாகச் சிதறி, அதனுள்ளிலெல்லாம் ஜீவ சக்தியாகிய வாயு நிறைந்து வேறுபடாமல் அதாவது விட்டுப் போகாமல், தென்னம்பூக்குலை போல் கர்ப்பப்பையில் சென்றுவிழுகிறது. இவ்வாறு உண்டாகி பிரசவித்ததற்குத்தான் பாம்பையும் முட்டையையும் பிரசவித்ததென்று உலகத்தில் சொல்லுகிறார்கள். இந்த விதத்திலாகும் சிருஷ்டியினுடையநிலைமை. இவ்விதமல்லாமல் வேறுவிதமாக சிருஷ்டி உண்டாவதற்கு இடமுண்டோ?

சி : இப்படிச் சொன்னதை ஆலோசித்துப் பார்க்கும்பொழுது இந்த விதத்திலல்லாமல் மற்றெந்தவிதத்திலும் சிருஷ்டி உண்டாவதற்கு வழியில்லையென்று முடிவாயிற்று.

கு : அப்பொழுது நம்மை சிருஷ்டித்தது யார்?

சி : ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : அப்பொழுது சிருஷ்டிகர்த்தா யார்?

சி : ஜீவசக்தியாகிய வாயு.

கு : நாம் ஜீவித்திருக்க வேண்டுமானால் என்ன வேண்டும்.

சி : வாயு வேண்டும்.

கு : அப்பொழுது நம்மை ஸ்திதிசெய்கிறது அதாவது காப்பாற்றுவது யார்?

சி : வாயுவாகும்.

கு : ஒருவன் செத்துப்போகும்பொழுது அவனிடம் என்ன இல்லாமல் போகின்றது?

சி : ஜீவசக்தியாகிய வாயு இல்லாமல் போகின்றது.

கு : அப்பொழுது சம்ஹாரம் செய்வது யார்?

சி : வாயுவாகும்.

கு : அப்பொழுது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் அதாவது ஆக்கல், காத்தல், அழித்தல் செய்கின்றது யாராக வருகின்றது?

சி : ஜீவசக்தியாகிய வாயு ஆகும் என்றே நிச்சயமாகின்றது.

கு : அந்த வாயுவிற்குத்தான் ஈஸ்வரன் என்று சொல்லுவது. அதனாலாகும் ஈஸ்வரனுக்கு நாமரூபமில்லை என்றும், உள்ளும் வெளியும் (அகமும் புறமும்), அடிமுடியும் (ஆதியந்தமும்) இல்லாமல் சர்வவியாபி என்றும், உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருக்கின்ற பொருளென்றும் சொல்லக் காரணம். ஏனெனில் வாயுவிற்கு நாமமோ, ரூபமோ உண்டோ?

சி : இல்லை.

கு : அதனால்தான் ஈஸ்வரனுக்கு நாமரூபமில்லை யென்று சொல்லக் காரணம். வாயுவிற்கு உள்ளும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியும் உண்டோ?

சி : இல்லை.

கு : அதனால்தான் ஈஸ்வரனுக்கு உள்ளும் வெளியும் இல்லையென்று சொல்லக் காரணம். வாயுவிற்கு அடிமுடி உண்டோ?

சி : இல்லை.

கு : அதனால்தான் ஈஸ்வரனுக்கு அடிமுடியில்லை என்று சொல்லக் காரணம். எனில் வாயு எப்படி இருக்கின்றதாகும்?

சி : சர்வ வியாபியாகும்.

கு : அதனால்தான் ஈஸ்வரன் சர்வவியாபி என்று சொல்லக் காரணம். தவிர, ஈஸ்வரன் உள்ளிலும் வெளியிலும் நிறைந்த பொருளென்று சொல்லப்பட்டது. உள்ளும் வெளியுமில்லாத பொருளிற்கு உள்ளிலும் வெளியிலும் நிறைய இயலுமோ?

சி : இயலாது.

கு : எனில் நாம் இல்லையானால் நமக்கு உள்ளும் வெளியும் உண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : எப்பொழுது உள்ளும் வெளியும் உண்டாயிற்று?

சி : நாம் உண்டான பின்பு.

கு : தவிர, நாம் தூங்கும்போது நமக்கு உள்ளும் வெளியும் உண்டோ?

சி : இல்லை.

கு : எப்பொழுது உள்ளும் வெளியும் உண்டாகின்றன?

சி : தூக்கம் விழித்த பொழுது.

கு : அவை எங்கிருந்து உண்டாகின்றன?

சி : நம்மிலிருந்தேயாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது நித்தியமாயிருக்கின்ற ''தான்'' ஆகாசமாய்த் தோன்றி உள்ளும் வெளியும் உண்டாயின. அவை தன்னிலிருந்து உண்டாயிற்று. அப்பொழுது தன்னிலிருந்து உண்டாகி உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருக்கின்ற பொருள் எது?

சி : வாயுவாகும்.

கு : அதனாலேதான் ஈஸ்வரன் உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருக்கிறதாகும் என்று சொல்லக்காரணம். அப்பொழுது ஈஸ்வரனாயிருக்கின்ற பொருள் எது?

சி : நம் உள்ளிலுள்ள ஜீவனாயிருக்கின்ற வாயு.

கு : அறிவாயிருக்கின்ற பொருளோ?

சி : வாயுவேயாகும்.

கு : காப்பாற்றுகிறவராக இருக்கின்ற பொருளோ?

சி : அதுவும் வாயுவே.

கு : அப்பொழுது ஈஸ்வரனாய், அறிவாய், காப்பாற்றுகிறவராய் இருக்கின்ற பொருள் வாயுதானென்று வெளிப்படுகிறது. அதை நாம் அறியாமல், கல், மரம் முதலியவற்றால் உண்டாக்கிய பிரதிமைகளை அதாவது பொம்மைகளை ஈஸ்வரன் என்று சங்கற்பித்து நம் உள்ளில் நிலைத்திருக்கின்ற ஜீவசக்தியாகிய வாயுவை அதோகதியாக்கி (கீழ்ப்படுத்தி) வெளியில் விட்டுத் தீரும்பொழுதாகும் நாம் செத்துப்போகிறது. அதனால் அதை வெளியில்விடாமல் தன்னுள்ளூடாக நடத்தி ஈஸ்வரனிடத்தில் சேருகின்றதாகும் மோக்ஷம். இதற்கே ஈஸ்வர சேவை என்று சொல்லுவது. எனில் இப்பொழுது உலகத்தில் ஈஸ்வரசேவை என்று சொல்லிச் செய்து வருவது என்னவாகும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : குளித்து, கோவிலுக்குச் சென்று, விளக்கேற்றி, பிம்பத்தை இளநீர், பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து, வஸ்திரம், புஷ்பம் (பூ) இவற்றால் அலங்கரித்து, பழம், தேங்காய் முதலியவற்றை வைத்துப் பூசை, நைவேத்தியம், ஹோமம் முதலியன செய்வதும் செய்விப்பதும் ஆகின்றது.

கு : இதற்கு ஈஸ்வர சேவை என்று சொல்லக்கூடுமா?

சி : சொல்லக்கூடாது.

கு : ஈஸ்வரசேவையென்று சொன்னால் என்ன?

சி : ஈஸ்வரனை சேவிப்பது என்றாகும்.

கு : ஈஸ்வரனை சேவிப்பது என்று சொல்லுவது என்ன?

சி : ஈஸ்வரனை பஜிப்பது என்றாகும்.

கு : எனில் உலகத்தில் ஈஸ்வரனை சேவிக்கவேண்டியது எவ்விதமென்பதற்கு உதாரணம் சொல்லலாம். உங்களுக்கொரு வியாதிக்கு ஒரு வைத்தியர் ஒரு கஷாயத்திற்கு எழுதிக் கொடுத்தார். அதாவது ஆறு கழஞ்சு சீந்தில்கொடி, நாலு கழஞ்சு கடுக்காய்த்தோல், இரண்டு கழஞ்சு சுக்கு இவற்றை அரைப்படி ஜலத்தில் கஷாயம் வைத்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி, இறக்கி, வடிகட்டி, அதில் ஒரு அச்சுவெல்லம் தட்டிப்போட்டு, என்ன செய்யவேண்டுமென்று எழுதிக் கொடுக்கிறார்?

சி : அதை சேவிக்க வேண்டும் என்றாகும்.

கு : அப்பொழுது சேவிப்பது என்பது என்ன?

சி : குடிக்கிறது (உட்கொள்ளுவது) என்றாகும்.

கு : நாம் ஈஸ்வரமயமாகி ஈஸ்வரனோடு ஐக்கியமாக அல்லவா வேண்டும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : ஆம்.

கு : அப்பொழுது ஈஸ்வரமயமாவதற்கு வேண்டி ஈஸ்வரனை உட்கொள்ளாமல் வெளியில்விட்டால் ஈஸ்வரமயமாகுமோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது ஈஸ்வரமயமாவதற்கு வேண்டி ஈஸ்வரனை அறிந்து சேவிக்க வேண்டும். ஈஸ்வரனை அறியாவிட்டால் ஈஸ்வரனை சேவிப்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : நாம் இதுவரையிலும் ஈஸ்வரன் யாராகுமென்று கருதியிருந்தோம் என்றால், சிவன், ராமன், கிருஷ்ணன், குட்டிச்சாத்தன், பத்திரகாளி, பகவதி, கணபதி, சுப்பிரமணியன் என்றும் மற்றும் பலவாறாகவிருந்தது. **இப்பொழுது ஈஸ்வரன் யாராகுமென்று வெளிப்பட்டது?**

சி : **ஜீவசக்தியாகிய வாயு என்றாகும்.**

கு : **அந்தவாயுவை சேவிக்கிறதற்குத்தான் ஈஸ்வரசேவை என்று சொல்வது.** அதுமட்டுமல்லாமல், ஜீவன் பிரம்மரந்திரத்தில் சேராவிட்டால் மோக்ஷம் கிடைக்குமோ?

சி : கிடைக்காது.

கு : பிரம்மரந்திரம் என்பது எங்கிருக்கிறது?

சி : அது நம்மில் மேல்பாகத்திலிருக்கிறது.

கு : எனில் ஜீவன் நமக்கு உள்ளிலோ, வெளியிலோ இருக்கின்றது?

சி : உள்ளில்தான் இருக்கின்றது.

கு : உள்ளில் உள்ள ஜீவன் நமக்கு மேலாக, நம்மில்தானே இருக்கிற பிரம்மரந்திரத்தில் சேர்ந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


மோக்ஷம் கிடைப்பதற்கு வேண்டி நமக்கு மார்க்கம் அதாவது வழி உள்ளிலோ, வெளியிலோ உண்டாயிருக்கிறது?

சி : உள்ளிலாகும் உண்டாயிருக்கிறது.

கு : எனில் உள்ளிலுள்ள ஜீவனை நமக்கு மேலாக நம்மில்தானே உள்ள பிரம்மரந்திரத்தில் சேர்த்து மோக்ஷமடைவதற்காக வெளி வழியாகக் கொண்டு போனால் சேருமா? அல்லது சேர்ப்பதற்கு முடியுமா?

சி : இல்லை, முடியாது.

கு : உள்ளே இருக்கின்ற ஜீவன் வெளியில் போய்த்தீர்ந்து விட்டால் அப்பொழுது என்னவாகிவிடும்?

சி : செத்துப்போகும்.

கு : செத்துப்போனால் என்னவாக இருக்கும்?

சி : பிணமாக இருக்கும்.

கு : பிணத்திற்கு மோக்ஷமுண்டா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : அப்பொழுது யாருக்கு மோக்ஷம்?

சி : ஜீவனுக்குத்தான்.

கு : ஜீவனுக்கு என்ன மோக்ஷம்? ஜீவனை யாராகிலும் கட்டியிருக்கிறார்களா? ஜீவன் நிர்பந்தன் அதாவது கட்டுடனில்லாதவன், நிர்முக்தன் அதாவது முக்தி பூரணன் (சம்சார பந்தத்திலிருந்துவிடுதலை பெற்றவன்), நிர் அகங்காரன் அதாவது அகங்காரம் இல்லாதவன், நிர்மோஹி அதாவது ஆசையில்லாதவன், நிர்சங்கன் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சங்கமில்லாதவன் அல்லது பற்றில்லாதவன் ஆகும்.அப்படியிருக்கின்ற ஜீவனுக்கு எதற்காக மோக்ஷம்? மோக்ஷம் என்றால் என்ன?

சி : மோக்ஷம் என்பது விமோசனம்.

கு : விமோசனம் என்று சொன்னால் என்ன?

சி : விடுதலை.

கு : விடுதலை என்று சொன்னாலோ?

சி : பந்தத்திலிருந்து விடுபடுதல்.

கு : ஜீவனை யாரேனும் கட்டியிருக்கிறார்களா?

சி : இல்லை.

கு : எனில் தன்னிலிருக்கின்ற ஜீவன் வெளியில் வியாபித்து விஷயங்களைப் பற்றிப் பிடித்து புலம்பிக் கொண்டிருப்பதுவே பந்தம். அது எவ்விதமென்றால்: இதோ பாருங்கள்! இந்தப் பலகையை நாம் இப்பொழுது என்ன செய்திருக்கிறோம்?

சி : இந்தப் பலகையை மார்புடன் சேர்த்து இரண்டு கைகளினாலும் இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கு : நாம் இதை இரண்டு கைகளினாலும் கட்டிப்பிடித்துக் கொண்டு ''ஐய்யோ! நம்மை விட்டுவிடு! நாம் போக வேண்டும்" என்ற விதம் அழுது புலம்பிக் கொண்டிருந்தால் நம்மை இப்பலகை விடுமா?

சி : விடாது.

கு : என்ன காரணம்?

சி : பலகையைத் தாங்கள் மார்போடு சேர்த்துக் கட்டிப் பிடித்திருப்பதால்.

கு : பலகை நம்மைச் சேர்த்துக் கட்டிப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிடிக்கிறதுண்டா?

சி : இல்லை.

கு : அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டுமென்றால் யார் பிடித்திருக்கிறாரென்று பார்க்கவேண்டும். அதாவது நாம் பலகையைப் பிடித்திருக்கிறோமா அல்லது பலகை நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கிறதா என்று பார்க்கும்பொழுது பலகை நம்மைப் பிடிக்கவில்லை. நாம்தான் அப்பலகையைப் பிடித்ததாகும். எனில், இதோ பாருங்கள்! இப்பலகையை நாம் விடுகிறோம். இப்பொழுது என்னவாகிறது?

சி : பலகை வேறுபட்டுப் போகிறது.

கு : இப்படியேதான், தானாகிய சிவன் சக்தியாய் வெளியில் வியாபித்தபோது சிவசக்தியாயிற்று. அந்த சக்தியிலிருந்தே சிருஷ்டிகள் உண்டாயின. அவற்றையே தாயார், தகப்பனார், மனைவி, மணாளன், புத்திரன், புத்திரி, வீடு, தனம், ஸ்தானம், மானம், ஜாதி, சுத்தம், அசுத்தம் என்று கட்டிப் பிடித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறோம். எனில் இவையொன்றும் நம்மைக் கட்டிப் பிடிக்கவில்லை, நாமே இவற்றைக் கட்டிப் பிடித்திருப்பதாகும். அதெப்படியென்றால் நாம் தூங்கும்பொழுது தாயார் என்றோ, தகப்பனார் என்றோ, மற்று எதுவுமேயில்லை. அன்றியும் நமக்கு மிகவும் பிரியமான புத்திரனோ, சகோதரனோ நமதருகில் படுத்துத் தூங்குவதாயிருந்தான். நாமும் தூங்குகிறோம். அந்தச்சமயத்தில் நம்முடைய கையோ, காலோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்தப் பிரியப்பட்ட புத்திரனின் மேலேயோ, சகோதரனின் மேலேயோ விழுகிறது. அப்பொழுது யாதொன்றும் அறிவதில்லை. தவிர இருக்காலிகளாகிய நம்மில், பறையனென்று ஓர் இனத்தாரை நம்முடைய துரபிமானத்தால், மிகவும் கீழான ஒரு ஜாதி என்று ஸ்தாபித்து, வேறாக்கி வைத்திருக்கிறோம். அப்படியுள்ள ஒரு பறையன் நாம் தூங்குகிறசமயத்தில் நமதருகில் வந்து நம்மைத் தொட்டால் நாம் அறிவதுண்டோ?

சி : அறிவதில்லை.

கு : தூக்கம் விழித்தபின் ''நாம் தூங்கும்போது நம்மை ஒரு பறையன் தொட்டிருந்தான், நாம் குளிக்க வேண்டும்" என்று நினைப்பதுண்டோ?

சி : இல்லை.

கு : அதுவுமல்லாமல், மேற்சொன்ன பறையன் மிகவும் அருவருப்புக்கிடமான ஓர் உணவு உண்ணு வதுண்டு. அதாவது செத்த பசுவின் பிணத்தை ஒரு குழியில் போட்டு மூடி, அது புழுக்கும்பொழுது தோண்டி எடுத்து, அப்புழுக்களைக்கொண்டு புழுக்கஞ்சியாகக் காய்ச்சி அவன் குடிக்கிறான். எனில், நாம் தூங்குகிற சமயத்தில் மேல்சொன்ன புழுக்கஞ்சியை அந்தப் பறையன் ஒரு கரண்டியிலெடுத்து நமது வாயைத் திறந்து வாயில் ஊற்றினானென்றால் அது என்னவாகும்?

சி : தூக்கமானதால் அது உடனடியே உள்ளே இறங்கிவிடும்.

கு : அப்பொழுது நமக்குத் தெரியுமா?

சி : தெரியாது.

கு : அது என்ன காரணம்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : நாம் தூங்குவதால்.

கு : நாம் தூங்கும்பொழுது நம்முடைய சக்தி உள்ளிலா? வெளியிலா?

சி : உள்ளிலடங்கி உள்ளது.

கு : தன்னுடைய சக்தி தன்னிலிருந்து வெளியே வியாபிக்க, அந்த சக்தியிலிருந்து சிருஷ்டிகள் உண்டாயின. தன்னால் சிருஷ்டிக்கப்படுகிற பொருள்களைத் தானே கட்டிப்பிடித்துப் புலம்புகிறோம். அதெப்படியென்றால்: நாம் இப்பொழுது ஒரு பலகையைக் கட்டிப் பிடித்துபுலம்பிக் கொண்டிருந்தோமல்லவா? அதுபோலவே மேல்சொன்ன விஷயங்களையும் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருக்கிறோம். அவ்விதப் பிடிப்பை அதிலிருந்து வேறுபடுத்தி அந்த சக்தியைத் தன்னுள்ளூடே நடத்தி பிரம்மரந்திரத்தில் லயிக்கச் செய்வதே மோக்ஷம். அதற்காகவே உபதேசமாகும். உபதேசம் என்பது எதற்காக வேண்டி?

சி : மோக்ஷம் சித்திப்பதற்காக அதாவது அடைவதற்காக.

கு : மோக்ஷம் அடைய ஜீவனுக்கு மேல்கதியோ, கீழ்கதியோ வேண்டியது?

சி : ஜீவனுக்கு மேல்கதியே வேண்டியதாகும்.

கு : எனில் ஜீவனுக்கு மேல்கதி கிடைக்கத்தக்கதான உபதேசம் ஏதாவது உலகத்தில் இப்பொழுது நடப்பில் உள்ளதாக நீர் கேள்விப்பட்டதோ, அறிந்ததோ உண்டா?

சி : உண்டு. சிவ, ராம முதலிய நாமங்களும், பஞ்சாக்ஷரம் முதலிய பல மந்திரங்களும்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மஹாவாக்கியங்களாகிய பிரம்மோபதேசங்களும் இப்பொழுது உலகத்தில் நடப்பிலுள்ளதாய் நான் கேள்விப்பட்டும் அறிந்தும் இருக்கிறேன்.

கு : எனில், இவற்றிலிருந்தெல்லாம் ஜீவனுக்கு மேல் கதி கிடைப்பதில்லை. ஏனென்றால் சிவ, ராம, நாராயணா என்றும் மற்றுமுள்ள நாமங்களும், அதல்லாமல் நமசிவாய, ஓம்,ஐம், க்லிம், ஸெளம், வதவதவாக்வாதினி பாலபரமேஸ்வரி ஸ்வாஹா என்றும், ஓம் ஹ்ரிம்நமசிவாயா என்றும், ஓம் நமோ நாராயணாய என்றும், தவிர அஷ்டாக்ஷரி, திரயாக்ஷரி, ஏகாக்ஷரி, திரிபுரசுந்தரி, சுயம்வரம் முதலான மந்திரங்களும் அதல்லாமல் பிரம்மோபதேசமென்று சொல்லுகிற ''பிரக்ஞானம் பிரம்மம்" ''அஹம் பிரம்மாஸ்மி", ''தத்துவமஸி", ''அயம்ஆத்மா பிரம்மம்" என்ற இப்பேர்ப்பட்ட வாக்கியங்களும் காயத்திரி என்று சொல்லப்படுகின்ற ''ஓம் பூ: ஓம் புவ: ஓம் புவர்பவஸ்வ: ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்யதீமஹி தியோயோந: பிரசோதயாத்" என்ற வாக்கியமும் உபதேசமென்று சொல்லி உலகத்தில் இப்போது நடந்து வருகிறது. இவ்விதமாக நாம் உச்சரிப்பதாலோ, தியானிப்பதாலோ நம்முடைய ஜீவனுக்கு மேல்கதி கிடைக்குமென்று நினைக்க இடமுண்டா?

சி : இடமில்லை.

கு : எனில் இவ்விதமாக உச்சரிப்பதால் நமது ஜீவன் மேல்கதியாகவோ அல்லது கீழ்கதியாகவோ போகிறது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : கீழ்கதியாகத்தான் போகிறது.

கு : கீழ்கதியாகின்றது எப்படியென்றால், அக்கினி சொரூபமாயிருக்கின்ற சப்தமூலமாக ஜீவனாய், தேகமாயிருக்கின்ற வாயு தன்னிலிருந்து தஹித்து கீழ்கதியாய்ப் போகின்றது. அப்போதுதான் நாம் செத்துப்போகின்றோம். அவ்விதம் கீழ்கதியாகாமல் மேல்கதி கிடைப்பதற்குத்தான் உபதேசம். உபதேசம் என்பது உப + தேசம். உப என்பது என்ன?

சி : சமீபம்.

கு : தேசம் என்றாலோ?

சி : ஸ்தானம் அதாவது இடம்.

கு : அப்போது உபதேசம் என்பது என்ன?

சி : சமீபஸ்தானம்.

கு : இந்த சமீபஸ்தானம் யாருக்கு?

சி : நமக்கு.

கு : நமக்கு ஜீவன் இல்லாவிட்டால் ஸ்தானம் உண்டுமா?

சி : இல்லை.

கு : ஏன்?

சி : ஜீவன் இல்லாதிருந்ததால்.

கு : அப்பொழுது ஸ்தானம் யாருக்கு?

சி : ஜீவனுக்கு.

கு : நாம் ஏதேனும் ஒரு வழியில் நடக்கிற சமயத்தில் பின்னிலிருந்து நமக்கு அறியாமல், ஏதேனும் ஒரு சப்தம் திடீரென்று உண்டாகக் கேட்டு பயப்படவோ, ஏதாவது குழியில் (கால் தவறி) வீழவோ செய்தால் அந்தச் சமயத்தில் நமது ஜீவன் எவ்விதமாகப் போகிறது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : அப்பொழுது பயப்பட்டு ஜீவன் ஒரே கதியா மேல்பாகமாகப் போகிறது.

கு : அது நமக்கு எங்கிருந்து மேல்பாகமாகப் போகிறது? உள்ளிலிருந்தோ? வெளியிலிருந்தோ?

சி : அது நம்முடைய உள்ளிலிருந்து.

கு : அப்பொழுது ஜீவனுடைய ஸ்தானம் எது?

சி : மேல்பாகம்.

கு : எனில் நம்முடைய ஜீவன் நமதுள்ளில் வியாபித்து மூத்திர துவாரத்தின் நுனி வரை இருக்கின்றது. அந்த ஜீவனில்லாவிட்டால் சுக்கிலமில்லை. அந்த ஜீவன்தான் சுக்கிலம். அந்த ஜீவன் மூத்திர துவாரத்தின் பாதிவரையில்தான் வருவதென்றால் சுக்கிலமோ, மூத்திரமோ வெளியே வருவதில்லை. அது மூத்திர துவாரத்தின் கடைசி வரை வந்து சுக்கிலத்தையும் மூத்திரத்தையும் வெளியில் தள்ளுகிறது. இதனால் மூத்திரதுவாரத்தின் கடைசி வரை இருக்கின்ற ஜீவன் நாம் பயப்படும்பொழுது மேல்பாகத்திற்கு அதிவேகமாய் ஏறுகிறது. அந்தச் சமயம் ஜீவன் எங்கிருந்து ஏறுகிறது?

சி : மூத்திர துவாரத்தின் நுனியிலிருந்து.

கு : ஜீவன் உள்ளிலிருக்கிறது. அவ்விதம் உள்ளிலிருக்கிற ஜீவனுடைய மார்க்கத்தைத்தான் நன்றாக்க வேண்டியது. இதற்குத்தான் ஜீவனுடைய மார்க்கத்தை நன்றாக்க வேண்டுமென்றும் ஜீவனுக்கு மேல்கதி கிடைக்க வேண்டுமென்றும் சொல்லுவது. அது எவ்வித மென்றால்: தனதுள்ளில் வியாபித்திருக்கின்ற ஜீவனை, உள்ளிலுள்ள மார்க்கத்தை நன்றாக்கி, அதன் வழியே ஒரேகதியாக சதா நடத்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேண்டும். அப்பொழுதுதான் ஜீவனுக்கு கதி வருகிறது. மற்றெந்தவிதத்திலானாலும் ஜீவனுக்கு கதி வருகிறதில்லை. மட்டுமன்றி, யாராவது செத்துப்போகும் சமயத்தில் நீர் பார்த்திருக்கிறீரா?

சி : ஆம். பார்த்திருக்கிறேன்.

கு : அந்தச் சமயத்தில் சுவாசத்தின் கதி அதாவது மூச்சின் வழி எந்தப் பக்கம் அதாவது எந்த இடத்திற்கு?

சி : மேல்பக்கத்திற்காகும்.

கு : அத்தருணத்தில் வேண்டிய கதிதான் இப்பொழுது நாம் சொல்லிய கதி. அது எப்படியென்றால் இதோ பாருங்கள் : "..........." இவ்விதமாகும். இதுதான் வேண்டியது. இந்த கதி அப்பொழுது கிடைப்பதுண்டோ?

சி : கிடைப்பதில்லை.

கு : அது ஏனென்றால்: பிறப்பு உண்டானால் இறப்பு உண்டென்று நாம் எண்ணியிருக்கிறோம். அது தவறு. இறக்காமலிருப்பதற்கு ஏதேனும் வழியுண்டோ, இல்லையோ என யோசிக்காத காரணத்தால்தான் அப்படித் தீருமானித்திருக்கிறோம். எனவே, நாம் மரிக்கப்படிக்கவேண்டும். அப்படி மரிக்கப் படிக்காததால்தான் நாம் நரகம் அனுபவிப்பதற்கும் செத்துப்போவதற்கும் காரணமாயிற்று. மரிக்கப் படித்தால் நாம் நரகம் அனுபவிப்பதற்கும் செத்துப் போவதற்கும் இடமில்லை. மரிக்க என்றால் மறக்க என்று பொருள்படும். எதை மறக்கவேண்டியதென்றால் நான் என்று சொல்லப்பட்ட நிலை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மையையும் உலகத்தையும் ஆகும். அப்படி மறந்து தன்னுடைய ஜீவனை உள்ளில் அடக்க வேண்டும். அந்த மார்க்கத்தைப் படித்து ஜீவனை அடக்கம் செய்தால் நாம் செத்துப்போக இடமுண்டா?

சி : இடமில்லை.

கு : மறப்பதற்கு வேண்டிய கதிதான் முன்னமே நாம் காண்பித்துக் கொடுத்தது. அதை முன்னமேயே படிக்காததால்தான், செத்துப் போகும் சமயத்தில் அந்த கதி கிடைக்காமல், நான்கு, ஐந்து, பத்து, இருபது, முப்பது நாட்களும் ஏறக்குறைய ஓராண்டும் படுக்கையாய்க் கிடந்து, சுவாசம்மேலே இழுத்து, அதாவது மேல்மூச்சு வாங்கி, சுவாசம் முட்டி, ஜடம் புண்ணாகி, பழுத்து, புழுத்து, அப்புழுக்கள் குத்தித் துளைத்து, உணர்வில்லாமல் கிடந்து, மிகவும் கஷ்டப்பட்டுச் செத்துப் போகின்றதை நாம் காண்பதில்லையோ?

சி : காண்பதுண்டு.

கு : அப்பொழுது அவர்கள் அனுபவிக்கின்ற நரககஷ்டங்கள் இன்ன விதத்திலென்று அவர்களுக்குச் சொல்ல முடியுமா?

சி : சொல்ல முடியாது.

கு : அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களாகிய நமக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம் தோன்றுகிறது! அப்பொழுது அவருடைய கஷ்டத்தை இன்னவித மென்று சொல்ல நமக்கு முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் இப்பொழுது காண்பித்த கதியை நாம் அப்பியசித்திருந்தால், அந்தச் சமயத்தில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இப்படிப்பட்ட கஷ்டத்தை அனுபவிக்க வேண்டிவருமா?

சீ : வராது.

கு : நிற்க. நமக்கு இப்பொழுது பிரம்மரந்திரம் மூடியிருக்கின்றதோ, திறந்திருக்கின்றதோ?

சீ : மூடியிருக்கின்றது.

கு : மூடியிருக்கின்ற பிரம்மரந்திரம் திறக்காவிடில், ஜீவன் பிரம்மரந்திரத்தில் போய்ச்சேரமுடியுமா?

சீ : சேரமுடியாது.

கு : அது எப்படியென்றால், தன்னிலிருக்கின்ற ஜீவசக்தி பிரம்மரந்திரத்தைத் திறக்காமல், அத்துடன் சென்று முட்டி, அதோகதியாக வெளியில்போய் நசித்துப் போகின்றதால்தான் செத்துப்போகின்றது. அதனால் தன்னுடைய ஜீவசக்தியை வெளியில் விடாமல் தன்னுள்ளிலேயே மேல்கதியாக நடத்தி, அந்த ஜீவனால் பிரம்மரந்திரத்தைத் தட்டித் திறக்கவேண்டும். அவ்விதம் செய்து ஜீவன் பிரம்மரந்திரத்தில் லயித்து, தானாகி, தன்மயமாகித் தீருகின்றதே ''மோக்ஷம்'', இவ்விதத்தில் அல்லாமல் மற்றெந்த விதத்திலும் நமக்கு மோக்ஷம் சித்திப்பதில்லை. எனில் இதுவரையிலும் நம்முடைய ஜீவனுக்குக் கீழ்கதியா, மேல்கதியா?

சீ : கீழ்கதியாகும்.

கு : இந்த ஜீவன் கீழ்கதியாகப் போய்த் தன்னில் இல்லாமலாகித் தீர்ந்தால் என்னவாகிறது?

சீ : பிணமாகிறது.

கு : இப்பொழுது உம்முடைய ஜீவனுக்கு கதி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


என்னவாகிறுது?

சி : மேல்கதியாகிறது.

கு : கீழ்கதியாயிருக்கிற ஜீவனுக்கு இப்பொழுது மேல்கதி வந்தது. எனில், உம்மில் உமக்கு மேலான பொருள் எது?

சி : ஈஸ்வரன்.

கு : அப்பொழுது ஜீவன் ஈஸ்வரனோடு ஐக்கியமாயிற்று. இதற்கே "ஜீவேஸ்வரோரைக்கியம்" என்று சொல்லப்படுகிறது. ஜீவன் ஈஸ்வரனோடு ஐக்கியமானால் என்னவர்கும்?

சி : மோக்ஷமாகும்.

கு : இதற்குத்தான் பிராணாபானன்மார்களை ஐக்கியப்படுத்துவதென்று சொல்வது. பிராணன் நம்முடைய உள்ளில் இருப்பது. அபானன் வெளியில் போவது. அப்படி வெளியில் போகின்ற அபானனை, வெளியில் போகவிடாமல் பிராணனுடன் சேர்த்து உள்ளிலேயே ஒரே கதியாய் நடத்துவதற்குத்தான் "பிராணாயமம்" என்று சொல்லுவது. பிராணயாமம் என்றால் பிராணனை ஆயாமம் செய்கிறது. ஆயாமம் செய்கிறதென்றால் தடுத்து நிறுத்துகின்றது அல்லது நேரே கொண்டு போகின்றது அல்லது நீட்டுகின்றது. அதாவது உள்ளிருக்கின்ற பிராணனை அபானனாய் வெளியில் போகாமல் உள்ளிலேயே தடுத்து நிறுத்துகின்றது. அப்பொழுது பிராணனுக்கு நேர்கதியாகின்றது. இப்பொழுதோ பிராணன் நேரே போகாமல் வளைந்து ஐந்து துவாரங்களின் வழியாக வெளியில் போய் நசித்துக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கொண்டிருக்கின்றது. அப்படி வெளியில் போகாமல் தன்னுள்ளிலடங்கி மேல்கீழ் ஒரே கதியாய் வரும்பொழுது நேரே ஆகின்றது. அதற்காகவே பிராணனை நேரே கொண்டுபோக வேண்டுமென்று சொல்லுவது. "நீட்டுக" என்றால் நீளமாக்குக என்றாகின்றது. எதை நீளமாக்க வேண்டியதென்றால் நம் உள்ளிலிருக்கின்ற பிராணன் நீளமாக இல்லாமல் வளைந்துஅபானனாய் வெளியில்போய் நசித்துக் கொண்டிருக்கின்ற அதனையாகும். அந்த அபானனை வெளியில் விடாமல் பிராணனுடன் சேர்த்து மேலே கொண்டுபோகும் பொழுது நீளமாகின்றது. இதற்காகும் "நீட்டமாக்குக" என்று சொல்லுவது. அப்பொழுது நாம் தூங்குகிற சமயத்தில் நம்முடைய கதி எவ்விதமோ அவ்விதமே தூங்காதிருக்கின்ற சமயத்திலும் ஆகித்தீரும். எனில் தூங்கும் சமயத்தில் உள்ள கதி உள்ளிலேலா, வெளியிலேலா?

சி : உள்ளில்தான்.

கு : தூங்குகிற சமயத்தில் நமக்குப் பலவிதத்தில் சுவாச கதிகளுண்டு. அது எப்படியென்றால்: சிலருக்கு குறட்டை உண்டாகிறது. அதாவது சிலர் தூங்கும்பொழுது உள்ளில் நடக்கும் கதியிலிருந்து "குர்கு" என்றும் சிலர் "க்றும்" என்றும் சிலர் எருது முக்குவது போல் "க்றோ" என்றும் பலவித சப்தங்களும் உண்டாக்குகிறார்கள். அவையொன்றும் சரியான கதியன்று. சரியான கதி ஜீவ சக்தியான வாயுவிற்கு நேர்மையாய் அதாவது இலகுவாய் யாதொரு சேட்டையும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சப்தமுமில்லாமல், சுவாசம் உண்டோவென்று அறிவதற்குக்கூட முடியாமல் நெஞ்சுக்குழியி லிருந்தோ அல்லது தொண்டைக் குழியிலிருந்தோ, ஒரு துடிப்பு மட்டும் காணலாம். அதுதான் சரியான கதி. அந்த கதியே நமக்குத் தூங்காத சமயத்திலும் கிடைக்க வேண்டியது. அதுதான் நமக்கு மோக்ஷத்திற்குள்ள மார்க்கம். அந்த கதி வரும்போது நம்மிலேயே பிரகாசிக்கிறது. அது எப்படியென்றால்: இந்த இடத்தில் நெருப்பை அதாவதுதீக்கனலை வைத்துவிட்டு, கனல் இல்லாத மற்றொரு இடத்தில் ஊதினால் பிரகாசிக்குமா?

சி : பிரகாசிக்காது.

கு : அந்தக் கனல் பிரகாசிக்க வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்?

சி : அந்தக் கனலின் மேல் ஊத வேண்டும்.

கு : அதேவிதத்திலேயே அவனவனுடைய அக்கினி நேத்திரமாகிய சுழிமுனையில் ஊதாமல், வெளியில் ஊதினால் நமக்குப் பிரகாசிப்ப தில்லை. ஆனதனால் ஜீவசக்கியா யிருக்கின்ற வாயுவினால் நம்முடைய புருவமத்தியமாகிய சுழிமுனையாகின்ற அக்கினி நேத்திரத்தில் ஊதி, ராகத்துவேஷாதிகளாகிய துர்விசாரங்களை அதாவது துர்குணங்களை எப்பொழுது அங்கே எரிக்கின்றோமோ அப்பொழுதுதான் நம்முள்ளில் பிரகாசித்து ஞானம் உண்டாகின்றது. அவ்விதத்தில் அல்லாமல் வேறு யாதொரு விதத்திலும் நமக்கு ஞானம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டாவதில்லை. மேற்சொன்ன விதத்தில் செய்வதற்குத்தான் "பிராணாயாமம்" என்று சொல்லப்படுவது. இதை உலகில் அறியாமலும், அவ்வாக்கியத்தின் பொருள் தவறாக எண்ணியும் பலவிதத்திலும் செய்கிறார்கள். சிலர் மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து மற்றொரு துவாரத்தின் வழியாய் வாயுவை மேலிழுத்து ஏற்றி அடக்கிப்பிடித்து நிறுத்தி, தலையிலுள்ள மூளையை இளக்கி, பைத்தியம், க்ஷயம், நாடிப்பிழை முதலான வியாதிகளை உண்டாக்கிக் கொண்டு செத்துப் போகவும் செய்கிறார்கள். அதன் நிமித்தம் உலகத்தில் பிராணாயாமத்தை மிகவும் நிந்தித்து வருகிறார்கள். எனில் "சதா பிராணயாமிக்கு வியாதியே இல்லை" என்று ரிஷீஸ்வரர்கள் சொல்லியுள்ளனர். பிராணன் நமது உள்ளிலாகும். அப்படி உள்ளிலிருக்கின்ற பிராணனை மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து மற்ற துவாரத்தின் வழியாய் வெளியிலிருந்து பிராணன் என்று நினைத்துப் பிடித்திழுத்தால் கிடைக்குமா?

சி : கிடைக்காது.

கு : அதற்கோர் உதாரணம் : ஒரு சாக்கு நிறைய நெல் வைத்திருக்கிறோம். அதற்கு வெளியிலும் நிரம்ப நெல் உண்டு. அந்த நெல்லையும் இந்தச் சாக்கிலேயே நிரப்ப வேண்டுமென்று நினைத்தால் முடியுமா?

சி : முடியாது.

கு : அதைக் கவனியாமல் சிறிது நெல்லை கூட அதில் வாரிப்போட்டு மிதித்து அமுக்கினால் அந்தச் சாக்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்னவாகும்?

சி : அந்தச் சாக்குக் கிழிந்து போகும்.

கு : அவ்விதமேதான் நம்முள்ளிலிருக்கும் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவினோடு, வெளியிலிருக்கின்ற வாயுவையும் இழுத்துச் சேர்க்கக் கருதி, வெளியிலிருக்கின்ற வாயுவை இழுத்து ஏற்றினால் அபாயம் நேரிட்டு ஆபத்துகள் உண்டாகிச் செத்துப் போவதற்கிடமாகின்றது. ஆகையினால் பிராணயாமம் என்று சொல்வது நமது உள்ளிலிருக்கின்ற பிராணனை வெளியில் விடாமல் நம்முள்ளிலேயே நடத்துவதாகும். அப்படிச் செய்கின்றவருக்கு யாதொரு வியாதியும் உண்டாவதில்லை. அதனால்தான் ''சதா பிராணாயாமிக்கு வியாதியில்லை" என்று சொல்லக்காரணமாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# ஐந்து

சிஷ்யன் : சுவாமி! முன் அத்தியாயத்தில் சொன்னபடியே சிருஷ்டியென்பது எனக்கு உறுதிப்பட்டது. என்றாலும் பஞ்சபூதங்களி னால்தான் சிருஷ்டி என்பதாகச் சொல்லி வருகிறார்கள். அதன் காரணம் என்ன என்பதை விவரமாய் அருளிச் செய்து கேட்க விரும்புகிறேன்.

குரு: பஞ்சபூதங்கள் என்பது எவையெல்லாம்?

சி : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவையாகும்.

கு : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவற்றையே பஞ்சபூதங்களென்று சொல்லி வருகின்றனர். எனில் முன் அத்தியாயத்தில் விவரித்தவாயுவும் பஞ்சபூதங்களில் அடங்கிய ஒன்று என்றல்லவா புலனாகிறது. எப்படி யானாலும் பஞ்சபூதங்களினால்தான் சிருஷ்டி. எனில் பஞ்சபூதங்கள் இன்னின்னவைதான் என்று உலகத்தாருக்குத் தெரிவதில்லை. ஆகவே பஞ்சபூதங்களின் உற்பத்தியைச் சொல்லு கிறோம். அதாவது அக்ஷரத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாகின்றன என்று சொல்லப்படுகிறது.

https://lankathamilnews.blogspot.com


www.facebook.com/ebooksintamil



பிருதிவி என்று சொல்லி வருவது பூமியும், அப்பு என்று சொல்லிவருவது ஜலமுமாகும். அந்த ஜலத்திலிருந்தே பூமி உண்டானதென்று சொல்லுகிறார்கள். இதை நாம் ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றால் பூமி என்கிற ஓர் அவஸ்தை அதாவது நிலைமை இல்லாவிட்டால் ஜலம் முதலான யாதொரு பொருளும் உண்டாகாது. பூமியில்தான் ஜலம் இருப்பது. ஜலத்தில் பூமி நிற்கின்றதில்லை. காரணம் சமுத்திரம் என்று சொல்லப்படுவது பூமியில் ஜலம் நிறைந்திருக்கிற ஒரு பெரிய பாகமாகும். அந்த ஜலம் நிற்பதற்கு அடிப்படையாக பூமியில்லா விட்டால் ஜலம் நிற்காது. தவிர, அதில் பல தீவுகளும் உண்டாகின்றன. அடியில் பூமி இல்லையாயின் அப்படிப்பட்ட தீவுகளும் உண்டாக இடமில்லை. அதல்லாமல், நாம் ஒரு கிணற்றைத் தோண்டும் போது, கீழே போகப் போகத்தான் ஜலத்தைப் பார்க்கின்றோம். அந்த ஜலம் நிற்பதும் பூமியில்தான். ஆகையால் ஜலத்திலிருந்து பூமி உண்டாகிறதென்று நம்புவதற்கிடமில்லை. அது எப்படியோ இருக்கட்டும். நாம் இப்பொழுது நினைக்கிறபடி பஞ்ச பூதங்களைக் கொண்டு சிருஷ்டிக்கப்படுகிறதென்று ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றால் பஞ்சபூதங்களில் பிருதிவி என்று சொல்லுவது பூமியும் அதாவது மண்ணும், அப்பு என்று சொல்லுவது ஜலமும் அதாவது தண்ணீரும், தேயு அத்தாவது அக்கினி என்பது தேஜசும் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



HIS HOLINESS
SWAMI SIVANANDA PARAMAHAMSAR
Founder of siddhasamaj

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரகாசமும், வாயு என்பது சலித்துக் கொண்டிருக்கிறதும் அதாவது காற்றும், ஆகாயம் என்பது காண முடியாததும் மிகவும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதும் அதாவது வெளி அல்லது காலியும் ஆகும். இப்படியுள்ள ஐந்து பொருள்களையும் ஒன்றாகச் சேர்த்து சிருஷ்டி செய்ய முடியாது. அது ஏனென்றால்: இதோ காணுகிற காலி அதாவதுவெளி ஆகாசமாகும். இதைப்பிடித்துப் பாக்கியுள்ள நான்கு பூதங்களோடு சேர்க்க முடியுமா?

சி : முடியாது.

கு : வாயு என்று சொல்லுவது சலித்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காற்று. இதைப் பிடித்து பாக்கியுள்ள பூதங்களோடு சேர்க்க முடியுமோ?

சி : முடியாது.

கு : அக்கினி என்று சொல்லுவது தேஜஸாயிருக்கின்ற பிரகாசம். இதையும் பிடித்து பாக்கியுள்ள பூதங்களோடு சேர்க்க முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் பஞ்சபூதங்களும் தன்னில்தானே இருக்கின்றதாகும். அது எவ்விதமிருக்கின்ற தென்றால்: இதோ! ஒரு மேஜை விளக்கு. இதைப்பொருத்தி அதாவது ஏற்றி அதன்மேல் ஒரு கண்ணாடிக் குழல் வைத்தால் அதற்கு நல்ல பிரகாசம் உண்டாகிறது. அந்தக் கண்ணாடிக்குழல் காலியில்லாமல் முழுவதும் கெட்டியானதாய் இருந்ததானால் அதை விளக்கின்மேல் வைத்தால் என்னசம்பவிக்கும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : அப்பொழுது அது எரியாமல் அணைந்து போகும்.

கு : எனில் அந்த விளக்கிலிருந்து எரிந்துகொண்டி ருக்கின்ற அக்கினிக்குக் கண்ணாடிக் குழல் வைக்காமல் விட்டாலோ?

சி : சரியான பிரகாசம் கிடைக்காது.

கு : அப்பொழுது பரவிக்கிடக்கின்ற பிரகாசமா யிருக்கின்ற சக்திக்குக் கண்ணாடிக்குழல் வைத்தபோது அந்தப் பிரகாசம் பரவிப்போகாமல் பிரகாச சக்தி ஒன்றாக நின்றது. அது ஒன்றாக நின்றபோது அக்குழலாயிருக்கின்ற கண்ணாடியின் மூலமாய்ப் பிரதிபிம்பித்து நமக்கு அதிகம் பிரகாசமுண்டாகிறது. எனில் கண்ணாடியினால் செய்த அந்தக் குழலுக்கு காலியான உள் உண்டு. அந்தக் காலி ஆகாசம் ஆகும். அந்த ஆகாசமாயிருக்கின்ற காலியின் வழியாக வாயு கதாகதம்அதாவது நடனம் செய்கின்றது. அவ்விதம் அதில் வாயு நடமாடாதிருந்தால் அது எரியுமோ?

சி : எரியாது.

கு : எனில் கண்ணாடிக் குழலுக்கும் அக்கினிக்கும் தம்மில் யாதொரு பாத்தியதை அதாவது சம்பந்தமுமில்லை. கண்ணாடிக் குழலுக்குக் காலியான ஆகாசமிருந்தது. அந்தக் காலியான ஆகாயத்தில் வாயு நடமாடுகிறது. அந்த வாயுவின் நடமாட்டம் நிமித்தம் அந்த அக்கினி அதில் எரிந்து கொண்டிருக்கிறது. கண்ணாடிக்குழல் வைக்கா விட்டால் அந்தப் பிரகாசம் பரவியிருக்கும். அதற்கு அக்கண்ணாடிக் குழலினால் தடங்கல் வந்தபோது பரவாமல் அந்தப் பிரகாசம் ஒன்றாக ஒரே சக்தியாகின்றது. குழலாயிருக்கின்ற கண்ணாடி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மூலமாய் அந்த ஒன்றாக இருக்கின்ற சக்தி பிரதிபிம்பித்து மிகவும் வெளிச்சமாக நாம் காண்கின்றோம். குழலை எடுத்தபோதும் அக்கினி அங்கேதான் உண்டாயிருந்தது. ஆகாயமும் வாயுவும் இருந்தன. எனில் முன்போல் பிரகாசம் கிடைப்பதில்லை. ஏனென்றால் அந்தப் பிரகாச சக்தி பரவி விட்டது. அப்போது முன்போலப் பிரகாசம் கிடைப்பதுண்டோ?

சி : கிடைப்பதில்லை.

கு : ஏன்? அது எதனால்?

சி : அந்தப் பிரகாசமாகிய சக்திக்கு கண்ணாடிக் குழலினால் தடைநேரிட்டுப் பிரதிபிம்பிப்பதற்கு வழி இல்லாததாலேயாகும்.

கு : இப்படித்தான் நம்முடைய நிலைமையும். நம்மிலும் ஆகாயமும் வாயுவும் அக்கினியும் உண்டு. நமக்கு நான் என்ற நிலைமையான ஒரு கண்ணாடிக் குழலும் உண்டு. எப்பொழுது நான் என்கிற நிலைமையான கண்ணாடிக் குழல் வைக்கின்றோமோ, அப்பொழுது அதன் மூலமாகப் பிரதிபிம்பித்துக் காண்பதாகும் இந்த உலகு. எப்பொழுது நான் என்கிற கண்ணாடிக் குழலை எடுக்கின்றோமோ, அப்பொழுது உலகத்தைக் காண்பதில்லை. இதல்லாமல் பஞ்சபூதங்களினால்தான் சிருஷ்டிக்கப்படு வதென்று சொல்லுவதற்கு யாதொரு யுக்தியு மில்லை. காரணம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து சிருஷ்டித்ததாயிருந்தால் ஒருக்காலும் நாம் செத்துப்போக இடமில்லை. தவிர, நாம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஒருவனுடைய மூக்கையும் வாயையும் அடைத்துக் கெட்டியாகப் பிடிப்போமாக. அப்பொழுது அவர் செத்துப் போகிறார். அப்படி ஏன் அவர் செத்துப்போகிறார்? ஆகாசம் என்று சொல்லுகிற பூதத்தையும் சேர்த்து சிருஷ்டித்ததல்லவா? நாம் மூக்கும் வாயுமாக இருக்கின்ற காலி இடத்தை மட்டுமன்றோ அடைத்துப் பிடித்திருந்தோம்? வாயு என்கிற பூதமும் அதில் உண்டாயிருந்தது. அந்த வாயுவிற்கு வாய், மூக்கு என்கிற இரண்டு காலி இடம் போக மீதியுள்ள காலியிடம் வழி சஞ்சரிக்கலாமல்லவா? அக்கினி என்ற பிரகாசமும் அதில் உண்டாயிருந்தது. முன் அடக்கிப்பிடித்துள்ள இரண்டு காலி இடங்கள் வழி பிரகாசிப்பதற்கு முடிவதில்லையல்லாமல் மீதியுள்ள காலி இடங்கள் வழி பிரகாசிக்கலாமல்லவா? இவை எல்லாம் ஒன்றாகச் சேர்த்தல்லவா சிருஷ்டி என்று சொல்லுகிறது? அப்படியாக இருந்ததானால் முன் சொன்ன இரண்டு காலி இடங்கள் அதாவது வாயையும், மூக்கையும் மட்டும் அடைத்துப் பிடித்தபோது செத்துப் போகக் காரணமென்ன? எனில் முன்சொன்ன மேஜை விளக்கிலிருந்து அக்கினி எரிந்து கொண்டிருக்கும் பொழுது அதற்கு வைத்திருந்த கண்ணாடிக் குழலின் மேல் அதனுடைய காலி இடத்தை அடைத்து ஏதேனுமொரு பொருளை வைத்தால் அந்த விளக்கில் எரிந்துகொண்டிருக்கின்ற அக்கினி என்னவாகும்?

சி : அணைந்து போகும்.

கு : அதன் காரணம் என்னவென்றால், அதிலிருந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எரிந்து ஜொலித்து மேல்பக்கமாய் வருகிற ஆவியாகிய புகை வெளியில் போவதற்குத் தடை ஏற்பட்ட காரணம் அதிலேயே அடங்கி நிறைந்து நுடித்ததால் அக்கினி எரிவதற்கு முடியாமல் அணைந்துபோகிறது. இப்படியேதான் நமக்கும் விளக்காயிருக்கின்ற ஜடத்திலிருந்து அக்கினி எரிந்து ஜொலித்து, நான் என்கிற நிலைமையான கண்ணாடிக் குழலின்வழியாக விசாராதிகளாகிய புகையாயிருக்கின்ற ஆவி வெளியில் போகிறதற்குத் தடை நேரிட்டு, அந்த ஆவி சேரவேண்டிய இடத்தில் போய்ச்சேராமல், ஜடத்திலேயே தங்கி நிறைந்து வீங்கியதால் எரியாமல் அணைந்துபோகிறது. அப்போதுதான் செத்துப்போவது. தவிர, அக்கினி உண்டாயிருக்கிற தென்பதற்கு உதாரணம் : இப்பொழுது இந்த ஜடத்தைத் தொட்டுப் பார்த்தாலோ, தேய்த்துப் பார்த்தாலோ சூடு இருக்கின்றது. எனில் ஒரு பிணத்திற்கு அந்தச் சூடு இருப்பதில்லை. காரணம் முன் விவரித்த மேஜை விளக்கிலிருந்து எரிந்து கொண்டிருக்கும்போது, அதற்கு வைத்திருக்கிற கண்ணாடிக் குழலினுடைய அடியிலிருந்து, அந்தக் கண்ணாடிக்குழலுடன் யாதொரு தொடர்பு மின்றியாகும் அக்கினி எரிந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அந்தக் குழலினுடைய ஏதேனுமொரு பாகத்தைக் கையால் தொட முடியுமோ?

சி : முடியாது.

கு : காரணம்?

சி : அதன் எல்லா இடங்களிலும் சூடு இருப்பதால்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : எனவே அதன் காரணம் கண்ணாடிக் குழலுக்குக் காலி இடம் உள்ளதாலும், அதனுள் வாயு நடமாடுவதாலும் அந்த வாயுவோடு அக்கினி சேர்ந்து அந்தக் கண்ணாடிக் குழலின் காலி இடம் வரையிலும் வியாபிப்பதாலும், அந்தக் குழலுக்குச் சூடு உண்டாயிற்று. அதனால்தான் அந்தக் கண்ணாடிக் குழலைத் தொடுவதற்கு முடியாமலிருந்தது. இவ்வாறேதான் இந்த ஜடத்திற்கும் காலி இடமுண்டு. அந்தக் காலி இடத்தின் வழியாக ஜீவசக்தி சஞ்சரிக்கிறது. இதனுடைய ஒரு பக்கத்தில் அக்கினியும் உண்டு. அந்த அக்கினி ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவோடு சேர்ந்து, இந்த ஜடத்தில் காலியாக உள்ள எல்லா இடங்களிலும் வியாபிக்கின்றது. அப்பொழுது இந்த ஜடத்தைத் தொட்டால் சூடு உண்டாகிறது. அந்த அக்கினி அணைந்துபோனால் சூடு உண்டாவதில்லை. அது எப்படியென்றால்: முன் சொல்லப்பட்ட மேஜை விளக்கிலிருந்து அக்கினி எரிந்துகொண்டிருக்கும் பொழுது, அதற்கு வைத்திருந்த கண்ணாடிக் குழலுக்குச் சூடு உண்டாகிறது. அது அணைந்தபின் அந்தக் கண்ணாடிக் குழலைத் தொட்டுப்பார்த்தால் சூடு இல்லை. அது குளிர்ந்திருக்கும். இவ்விதமாகத்தான் இந்த ஜடத்தில் ஜீவசக்தியாகிய வாயுவோடு அக்கினி சேர்ந்து நடனம் அதாவது போக்குவரவு அல்லது கதாகதம் செய்கிற காலம் வரையிலும் சூடு உண்டாயிருக்கிறது. எப்பொழுது ஜீவசக்தியாகிய வாயுவினுடைய கதாகதமும் அக்கினியும் இதிலிருந்து நசித்துப் போகிறதோ, அப்பொழுதுதான் செத்துப்போகின்றது. செத்தபின்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


இந்த ஜடத்தைத் தொட்டுப் பார்த்தாலோ, தேய்த்துப் பார்த்தாலோ சூடு இருப்பதில்லை. ஆனால் நீர் சொன்னவாறுள்ள பஞ்சபூதங்களைக் கொண்டுதான் சிருஷ்டி என்று வந்தால் செத்துப் போவதற்கிடமில்லை. ஏனென்றால் ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி இவை தனித்தனியாக நசிப்பதற்கிடமில்லை. எப்பொழுது நசிக்கின்றதோ அப்பொழுது எல்லாம் ஒன்றாக நசிக்க வேண்டும். அதற்கு உதாரணம்: பஞ்சலோகமாகிய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவற்றை ஒன்றாகக் கலந்து ஓர் உருவம் உண்டாக்குங்கள். அது அழியும் போது ஒவ்வொன்றும் வெவ்வேறாக அழிவதில்லை. எல்லாம் ஒன்றாகவே அழிகின்றன. இதைப்போலவே பஞ்சபூதங்களைக் கொண்டு இந்த ஜடம் உண்டாக்கப்பட்ட தென்றால் பஞ்சலோகங்களினால் உண்டாக்கப்பட்ட உருவம் வெவ்வேறாக நசிக்காமல் ஒன்றாகவே நசிப்பது போல, இந்த ஜடமும் நசிக்க வேண்டியது. அதனால் இந்த ஜடத்தை ஒருபோதும் பஞ்சபூதங்களினால் உண்டாக்கியதென்று சொல்ல நியாயமில்லை.

எனில் பஞ்சபூதங்கள் இன்னின்னவை என்றும் அவற்றால் உண்டாகிற சிருஷ்டி இன்ன விதத்திலென்றும் தெளிவாகச் சொல்லுகிறேன், கேட்பாயாக: பஞ்சபூதங்களென்பது ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி இவையாகும். இவற்றில் ஆகாயம் என்பது சதாசிவனான ஜோதி. அது புருவமத்தியத்திற்கு மேற்பாகத்திலாகுமிருக்கிறது. அந்த ஜோதியிலிருந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கீழ்ப்பாகமாய் புருவமத்தியம் வரையிலும் சிவனாக ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவும், சிவனாயிருக்கின்ற வாயுவிலிருந்து புருவ மத்தியத்தின் கீழ்ப்பாகம் நாசிவரை ருத்திரனாயிருக்கின்ற வாயு பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற தேஜசான அக்கினியும், அந்த தேஜசாகிய அக்கினியிலிருந்து நாசியின் நுனி வரைக் கீழ்ப்பாகமாய் ஜலாம்சமாய் விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், விஷ்ணுவாகிய மனத்திலிருந்து கீழ்முகமாய் அதாவது அடிப்பாகத்தில் பிருதிவியாயிருக்கின்ற பிரம்மா அந்தகாரமாயும் கெட்டியாயுமிருக்கின்ற அகங்காரமும் ஆகும். அது எவ்விதமென்றால்: ஆகாசரூபியாய் சதாசிவனாயிருக்கின்ற ஜோதிஸிலிருந்து சர்வவியாபியாய் ஜீவனாய் சிவனாயிருக்கின்ற வாயுவும், அதிலிருந்து திரவித்து அதாவது திராவகரூபமாய் நசித்துக் கொண்டு ருத்திரனாக, அக்கினி சொரூபமான தேஜசும், அந்த தேஜசிலிருந்து வியர்வையாய் ஜலமாகி வியாபக சீலமாய் விஷ்ணுவான மனமும், அதிலிருந்து கெட்டியாய் அந்தகாரமாய் பிருதிவியாய் பிரம்மாவான அகங்காரமும் ஆயின. இவைதாம் பஞ்சபூதங்கள். இவைகளைக் கொண்டுதான் சிருஷ்டி. இதனால்தான் பஞ்சபூதங்களினால் சிருஷ்டிக்கிறதென்று சொல்லக் காரணம்.

இவ்விதமல்லாமல் மண், நீர், தீ, வாயு ஆகாசம் இவை ஒன்றுசேர்ந்து ஒரு சிருஷ்டி உண்டாகிறதில்லை. அது எதனாலென்றால்:

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தானாகிய சதாசிவனாய் இருக்கின்ற ஜோதி சலித்து, வியாபித்து, ஜீவ சக்தியாகிய வாயுவாகி, தேயுவாகிய அக்கினியாகி, ஜலமாகிய மனமாய், பிருதிவியாகிய அகங்காரமாய் வந்ததாகும். அப்பொழுதுதான் உலகம் உண்டானது. இவ்விதமாகும் உலகத்தின் நிலைமை. அதற்கு உதாரணம் : தூங்குகிறோம் என்று சொல்லும் சமயத்தில் தன்னிலிருந்து ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு பிரகாசித்து வெளியில் பரவாமலிருந்ததால் உலகத்தைக் காணுவதோ, அறிவதோ இல்லை. எப்பொழுது தூக்கம் விழித்து அந்த ஜீவசக்தியாகிய வாயு பிரகாசமாய் வெளியில் வியாபிக்கின்றதோ, அப்பொழுது மனமும் அகங்காரமும் உண்டாயின. அந்தச் சமயத்தில் உலகமும் உண்டாயிற்று. தவிர, பிணத்திற்கு உலகமில்லை. காரணம் தன்னிலிருந்து கதாகதம் செய்கிற ஜீவசக்தியாகின்ற வாயுவின் கதாகதம் இல்லாததாலாகும். ஆகவே தனது சக்தி எப்பொழுது வெளியில் வியாபிக்கின்றதோ, அப்பொழுது உலகம் உண்டாவதும் எப்பொழுது தனது சக்தி தன்னில் லயிக்கிறதோ, அப்பொழுது தன்னி லிருந்து உற்பவித்த உலகம் தன்னில் சேர்ந்து தானாய் தன்மயமாய் விடுவதும் ஆகும். இவ்விதந்தான் சிருஷ்டியினுடையதும் உலகத்தினுடையதுமான நிலைமை. இந்த விதத்திலுள்ள சக்திகளுக்குத்தான் பஞ்சபிரம்மம் என்றும், பஞ்சபூதங்கள் என்றும், பஞ்சேந்திரியங்கள் என்றும் சொல்லப்படுவது. ஆகையால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பஞ்சபூதங்களில் ஆகாயமென்பது சதா சிவனாயிருக்கின்ற ஜோதியும், வாயுவென்பது சிவனாயிருக்கின்ற ஜீவனும், அக்கினி என்பது ருத்திரனாயிருக்கின்ற தேயுவும், அப்பு என்பது விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், பிருதிவி என்பது பிரம்மாவாகின்ற அகங்காரமும் ஆகும். எனில் பஞ்சபூதங்களெல்லாம் அக்ஷரத்தி லிருந்தாகும் உற்பத்தியானது. அந்த அக்ஷரம் தானாய் இருக்கின்ற பிரம்மம். இதைப்பற்றி முன்னால் சொல்லப் பட்டிருக்கிறதல்லவா? அவ்விதமுள்ள ''தான்தானே" காலியா யிருக்கின்ற ஆகாசமாயிற்று. அப்பொழுது அத்துடன் ஐந்து குணங்களும் உண்டாயின. அந்த குணங்கள்தாம் முற்கூறிய நிலைமைகள். இந்த ஐந்து குணங்களாயிருக்கின்ற பஞ்சபூதங்களி ருந்தால் மட்டுமே சிருஷ்டிக்க முடியும். சிருஷ்டி உண்டாவது சம்யோகத்தினாலாகும். இவ்வைந்தில் ஒன்றேனும் இல்லாவிடின் சம்யோகம் உண்டாகாது. அதற்கு உதாரணம் என்னவென்றால்: தூங்கும்போது அகங்காரமும் மனமும் பிரகாசமும் இருப்பதில்லை. அச்சமயத்திலும் ஜீவனும் ஆகாயமும் தன்னிலேயே இருந்தன. எப்பொழுது தூக்கம் தெளிகிறதோ, அப்பொழுது பிரகாசமாயிருக்கின்ற ருத்திரனும், மனமாகின்ற விஷ்ணுவும், அகங்காரமாயிருக்கின்ற பிரம்மாவும் உண்டாயின. அப்பொழுது ஐந்து பூதங்களும் பூர்த்தியாகின்றன. அந்தத் தருணத்தில் ஐந்து பூதங்களும் சேர்ந்து ஏககதியாகி வியாபகமில்லாமல் ஒன்றாய்ச் சேர்ந்து சம்யோக

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


காரணத்தால் சிருஷ்டி உண்டாகின்றது. **இதனால்தான் பஞ்சபூதங்களால் சிருஷ்டி உண்டாகின்றதென்று சொல்லக்காரணம்.**

இவ்விதமான யாதொரு தத்துவங்களையும் உலகத்தில் கிரஹிக்காமல், அனுபவஸ்தர்கள் எழுதி வைத்திருக்கின்ற சாஸ்திரங்களினுடைய பொருளைத் தவறாகக் கருதி, யாதொரு உண்மை விவரமுமில்லாமல் உலகத்தில் ஜனங்கள் தம்மில் தம்மில் தர்க்கித்து, வாதப்பிரதிவாதம் செய்து, சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படியென்றால்: ஒருவர் ஒரு வாழைக் கன்றைக் கொண்டுவந்து நட்டார். அதற்கு எருவிட்டுத் தண்ணீர் வார்த்தார். அதுவளர்ந்து குலை தள்ளியது. அதில் உண்டான காய்கள் முதிர்ந்தன. அவற்றில் ஒரு காயைஎடுத்து பொரியலும், ஒரு காயை எடுத்து மோர்க்குழம்பும், ஒரு காயை எடுத்து சாம்பாரும், ஒரு காயை எடுத்து எரிசேரியும், ஒரு காயைக் கொண்டு கூட்டுக்கறியும், சிறிது காய்களைப் பழுக்கவைத்து, மூன்றோ, நான்கோ பழங்கள் எடுத்து தோல்போக்கி துண்டுசெய்து பாத்திரத்திலிட்டு வேகவைத்து மத்தினால் கடைந்து சர்க்கரையும் சேர்த்துச் சுண்டவைத்து தேங்காய்ப்பாலும் சேர்த்துப் பாயசம் உண்டாக்கி இவற்றையும்; ஒரு பழத்தைத் தனியாகவும், அவர் சாப்பிட்டு அனுபவித்தார். எனில் இவை யெல்லாம் யாருடைய அனுபவமாகும்?

சி : அந்த வாழைக்கன்றை வைத்து மேற்படி செய்து சாப்பிட்டவருடைய அனுபவமாகும்.

கு : எனில் நாம் வாழைக் கன்றையோ, அதன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


காய்கனிகளையோ, அவற்றைக்கொண்டு செய்யப்பட்ட பதார்த்தங்களையோ கேட்டதும், கண்டதும், அறிந்ததும் இல்லையென்று நினைத்துக் கொள்வீராக! அப்படியானால் மேற்சொன்ன வற்றையெல்லாம் கண்டதும், அறிந்ததும் யார்?

சி : அவற்றை உண்டாக்கியவர்.

கு : அந்த அனுபவம் யாருடையதாகும்?

சி : அவற்றை உண்டாக்கி அனுபவித்தவருடைய தாகும்.

கு : அவற்றை உண்டாக்காதவருக்கோ, மேற்சொன்ன பதார்த்தங்களைக் கேட்காமலோ, காணாமலோ, அனுபவிக்காமலோ இருப்பவர்களுக்கோ அவற்றைப்பற்றி யாதொரு அனுபவமாவது உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது அவற்றின் உருசியை அறிந்தவர் யார்?

சி : அவற்றைச் சாப்பிட்டவரே.

கு : எனில் மேற்சொன்னபடி வாழைக்கன்று நட்டு அதிலிருந்து உண்டாகிய பலனை எடுத்து, பலவித பதார்த்தங்களைச் செய்து அனுபவித்தவர், தன்னுடைய அனுபவவிவரங்களை ஓலையிலோ, காகிதத்திலோ எழுதிவைத்தது நம்மிடம் கிடைத்தது. நாம் அதை வாசித்துத் தெரிந்து கொண்டதால் முன் சொன்ன வாழைக் கன்றையோ, அதிலிருந்து உண்டான பலனையோ, அந்தப் பலனால் செய்த பதார்த்தங்களையோ காணவோ, அனுபவிக்கவோ, அவற்றின் உருசியை அறியவோ, மற்றோ செய்தோமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ரி : இல்லை.

கு : எனவே அந்த அனுபவஸ்தர்கள் எழுதி வைத்திருந்ததை மட்டும் வாசித்து, அதில் சொல்லப்பட்ட சாதனங்களின் உருசியை அறியாமல், இந்த உலகத்திலுள்ளவர்கள் தம்மில் போராடுகிறார்கள். அது எவ்விதமென்றால், ஒருவன் பாயசத்தில் காரம் அதிகரித்ததென்றும், மற்றொருவன் மோர்க் குழம்பில் தித்திப்பு அதிகமென்றும், இன்னொருவன் பொரியலில் புளிப்பு அதிகமென்றும் சொல்லி தம்மில் சண்டை போடுகிறதாகும். எனில் இவர்களில்யாரும் மேற்சொன்ன பதார்த்தங்களை உண்மையில் காணவோ, சாப்பிடவோ செய்தவர்களல்லர். சாப்பிட்டவர்கள் தங்களுடைய அனுபவங்களை எழுதி வைத்திருக்கின்றதாகும். அந்த அனுபவங்களின் உருசி அறியாதிருக்கின்றவர்கள் தம்மில் தம்மில் போராடுகிறார்கள். அது எவ்விதமென்றால்: மோர்க் குழம்பு, பொரியல், பாயசம் முதலான பதார்த்தங்களை ஓர் இலையிலிட்டு ஒருவர் சாப்பிட்டு, அந்த இலையிலுள்ள ரசத்தை முழுவதும் வழித்தெடுத்து உண்டுவிட்டுக் கடைசியில் அந்த இலையை வெளியே போட்டார். அந்த இலையை ஒருநாய் வந்து நக்குகின்றது. அந்த நாய்க்கு அந்த இலையில் இன்னின்ன பதார்த்தங்கள் பரிமாறியிருந்தன வென்றும், அதில் பரிமாறிய பதார்த்தங்கள் ஒவ்வொன்றினுடைய உருசி இன்னின்னதாகும் என்றும் அந்த இலையை நக்கியதனால் தெரியுமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : தெரியாது.

கு : அச்சமயம் மற்றொரு நாயும் வந்து அந்த இலையை நக்கத் தொடங்கினால் என்னவாகும்?

சி : அவை இரண்டும் தம்மில் கடிபிடிபோட்டு, கண், மூக்கு, உதடு முதலியவற்றைக் கடித்து கிழித்து இரத்தம் சிந்திக்கொண்டு போகும்.

கு : எனில் அந்த நாய்கள் கடிபிடி போட்டது மேற்சொன்ன பதார்த்தங்களின் ஏதாவது உருசியையேனும் அறிந்தது கொண்டதாலோ?

சி : அறிந்ததுகொண்டல்ல.

கு : எனில் அவற்றின் உருசியை அறிந்தது யாராக இருந்தது?

சி : அவற்றை அனுபவித்தவர்.

கு : இப்படியே அனுபவஸ்தர்களால் இயற்றப் பட்டதாகும் நூல்கள். அந்த நூல்களுக்காகும் சுருதிகள் என்று சொல்லுவது. சுருதி என்பது அறிவு. அந்த அறிவு யாருடையதென்றால் அனுபவஸ்தர் களுடையதாகும். அந்த அனுபவஸ்தர்களுடைய அறிவைத்தான் நூல்களில் எழுதிவைத்துள்ளது. அந்த நூல்களை வாசித்து உலகத்தில் அவனவன் அனுபவஸ்தன் என்று நடித்து, அந்த அனுபவஸ்தர்கள் எழுதிவைத்த அறிவு இன்ன தென்றறியாமல் பொருள் தவறாகக் கருதி, முன் விவரித்த நாய்களைப்போல ஜனங்கள் தம்மில் போராடுகிறார்கள். அதன்காரணம், உலகத்தில் தமக்கு அனுபவம் உண்டாகவேண்டுமென்றோ, அந்த அனுபவத்தை அறிய வேண்டுமென்றோ ஆவல் இல்லாமல், "எனக்குப் பெருமை உண்டாயிருக்க வேண்டும், பதவி வேண்டும்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மானம் வேண்டும், அந்தஸ்து வேண்டும், கீர்த்தி வேண்டும், வித்துவானென்று ஊரார்களால் புகழ்த்தப்பட வேண்டும்" என்றுள்ள வெறும் துரபிமானத்தில் மூழ்கிக்கிடந்து, யாதொரு விவரமுமில்லாமலும், அக்ஷராப்பியாசம் செய்யாமலும், மகாகர்விகளாய் அதோகதியாகிப் போகிறார்கள். அதனால்தான் உலகத்தில் தத்துவஞானமோ, அறிவோ இல்லாமலாகிப் போயிற்று.

சி : ஓ! பிரிய குருவே! அப்படியாயின் உலகில்யாரும் அக்ஷராப்பியாசம் செய்ததில்லையென்றோ சொல்லுகிறீர்கள்? பின் எப்படி உலகத்தார் நூல் முதலியவற்றைப் படித்து வருகிறார்கள்?

கு : அக்ஷரம் என்பது யாதென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி : "அ" முதல் 51 அக்ஷரமாகும். (ஆனால் தமிழில் உயிரெழுத்து பன்னிரெண்டும், மெய்யெழுத்து பதினெட்டும், ஆயுத எழுத்து ஒன்றும் ஆகமுப்பத்தொன்றாகின்றது)

கு : ஓ! அக்ஷரம் அவ்வளவு இல்லை. அகாரம் அக்ஷரமல்ல. அக்ஷரம் என்கிற வார்த்தைக்குப் பொருள் என்ன?

சி : நாசம் இல்லாதது என்றாகும்.

கு : நாசமில்லாமலிருக்கின்ற வஸ்து எதுவாகும்?

சி : அது பிரம்மமாகும்.

கு : அந்த பிரம்மம் என்பது எது?

சி : அதுவே "தான்" என்பது.

கு : தவிர "அ" என்ற சொல்லுக்கு சப்தம் எத்தனை?

சி : ஒரே சப்தம்.

கு : சப்தத்திற்கு வடிவம் உண்டோ?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : உண்டு.

கு : வடிவம் இருக்கிறதென்றால் பார்க்கலாமல்லவா?

சி : ஆம்.

கு : இதோ 'அ' என்று சொல்லிவிட்டேன். அதன் வடிவத்தைப் பார்த்தீரா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்? வடிவம் உண்டானால் காண வேண்டுமல்லவா?

சி : ஆம். எனில் சப்தத்திற்கு வடிவம் காணுவதில்லை.

கு : எனில் வடிவம் உள்ளது எதற்கு?

சி : அந்த சப்தம் இன்னதென்று தெரிய ஏற்படுத்தியுள்ள கோடுகளுக்காகும்.

கு : அகாரத்திற்கு எத்தனை வடிவம் உண்டு?

சி : உலகில் எத்தனை மொழிகள் இருக்கின்றனவோ அத்தனைக் கோடுகளான வடிவங்கள் இருக்கின்றன.

கு : அப்போது அந்த அகாரமெனப்பட்ட எழுத்துகளுக்கெல்லாம் ஒரே சப்தமில்லாமல் வெவ்வேறு சப்தம் சொல்லுவதுண்டோ?

சி : இல்லை. அகாரக் கோடுகளுக்கெல்லாம் ஒரே சப்தமில்லாமல் வெவ்வேறில்லை. எனில் எழுத்துக்கள் மட்டும் பலவிதத்திலிருக்கின்றன.

கு : நீர் முன்பு ''51 அக்ஷரங்கள்'' இருப்பதாகச் சொல்லியிருக்கிறீரல்லவா? தவிர, எத்தனை மொழிகளுண்டோ அவைக்கெல்லாம் தனித்தனியாக எழுத்துகளிருப்பதாகவும் சொல்லுகிறீரல்லவா? அப்படி ஆலோசிக்கும் பொழுது இந்த உலகில் 51க்கும் அதிகமான மொழிகள் இருக்கின்றன. (அந்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மொழிகளுக்கெல்லாம் ஒவ்வொரு வித எழுத்துக்கள் இருக்கின்றன.) அவ்வாறே 51 க்கும் அதிகமாக அகார எழுத்துக்களுமுண்டு. ஆகையினால் அக்ஷரமென்று சொல்லுவது நீர் மேற் சொன்னதைவிட எவ்வளவோ அதிகமான எண்ணிக்கை உண்டாகிறதல்லவா? அதுவும் தவிர, ''அ'' என்கிற எழுத்திற்கு சப்தம் இருப்பதாக நீரே சொன்னீரல்லவா? இதோ பாருங்கள்! நம்முடைய இரண்டு கைகளையும் என்ன செய்திருக்கிறோம்?

சி : இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கும்பிடுவதுபோல் கூப்பியிருக்கிறீர்கள்.

கு : இப்பொழுது நாம் நம்முடைய கைகளை என்ன செய்திருக்கிறோம்?

சி : கைகளைத் திறந்து ஒன்றுக்கொன்று வேறுபடாமல் விரித்துப் பிடித்திருக்கின்றீர்கள்.

கு : இது எந்த விதத்தில் இருக்கின்றது?

சி : அது திறந்து அகாரரீதியில் இருக்கிறது.

கு : இதற்கு சப்தம் உண்டாயிற்றோ?

சி : இல்லை.

கு : எனில் இதோ பாருங்கள்! இப்பொழுது நம்முடைய வாய் எப்படி இருக்கின்றது?

சி : மூடி இருக்கின்றது.

கு : இதற்கு அகாரமென்று சொல்லக்கூடுமா?

சி : சொல்லக்கூடாது.

கு : இப்பொழுது நாம் என்ன செய்திருக்கிறோம்?

சி : இப்பொழுது வாய் திறந்து அகார ரீதியில் இருக்கிறது.

கு : அதற்கென்ன சொல்ல வேண்டியது?

சி : அகாரமென்று சொல்லவேண்டும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது அகாரத்திற்கு சப்தம் உண்டோ?

சி : இல்லை.

கு : அதனால் சப்தம் என்பது உண்டாக்குவதோ அல்லது தானே உண்டாவதோ?

சி : உண்டாக்குவது.

கு : அப்பொழுது உண்டாக்குவது நாசமுள்ளதோ, நாசமில்லாததோ?

சி : நாசமுள்ளது.

கு : ''அ" என்கிற சப்தத்தை உண்டாக்கும்பொழுது நமதுள்ளிலிருக்கின்ற ஜீவன் உள்ளில் அடங்குகின்றதோ அல்லது வெளியில் போகின்றதோ?

சி : வெளியில் போகின்றது.

கு : அவ்விதமே நாம் ஒவ்வொரு சப்தமும் உண்டாக்கி நம்முள்ளிலிருக்கும் ஜீவன் நாள்தோறும் வெளியில் போய் (நாளடைவில்) தீர்ந்துவிடுகிறது. அச்சமயம் என்ன சம்பவிக்கிறது?

சி : செத்துப்போகிறோம்.

கு : அப்பொழுது நாம் நாசமுள்ளதையோ, நாசமில்லாததையோ, எதையாகும் அப்பியசிக்கிறோம்?

சி : நாசமுள்ளதைத்தான்.

கு : அதனால் தன்னைத்தான் அப்பியசிக்கின்றதுவே அக்ஷராப்பியாசம். அதுவேதான் வித்தியாப்பியாசம். முதல் அத்தியாயத்தில் வித்தை என்பது அக்ஷரம் ஆகுமென்றும் அக்ஷரம் என்பது ''தான்" ஆகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் வித்தையாய்த் தானாயிருக்கின்ற பொருளை அப்பியசிக்க வேண்டும். அப்பொழுது நாசம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இல்லாதவர் ஆகின்றோம். அவ்விதம் நசிக்காமலிருப்பதற்கு வேண்டியாகும் அக்ஷராப்பியாசம் செய்ய வேண்டியது. நீங்கள் இப்பொழுது சொன்ன அகாரம் முதலியவை யெல்லாம் நசிக்கின்றதாகும். அப்பொழுது அதற்கு அக்ஷரம் என்று சொல்லுவதற் கிடமுண்டோ?

சி : இல்லை.

கு : சப்தம் உண்டாக்கி நசிக்கின்றதற்கு என்னசொல்ல வேண்டியது? அக்ஷரமென்று சொல்லக்கூடுமோ?

சி : அக்ஷரம் என்று சொல்லுவதற்கிடமில்லை.

கு : எனில் நீங்கள் அக்ஷரத்தை அப்பியசிப்பதுண்டோ?

சி : அப்பியசிப்பதில்லை.

கு : அக்ஷரத்தை அப்பியசிக்காவிடில் பொருள் கிடைக்குமோ?

சி : கிடைக்காது.

கு : பொருள் கிடைக்காதபோது பொருள் தெரியுமோ?

சி : தெரியாது.

கு : தவிர, உங்களுடைய இலௌகீகப் பொருள் களாகிய தனங்களைப் பத்திரப்படுத்துவது உள்ளிலோ, வெளியிலோ?

சி : உள்ளில்தான்.

கு : இவ்வண்ணமேதான் பொருள் உள்ளில் இருக்கிறது. உள்ளில் எந்த இடத்திலென்றால் தாதுவிலாகும். தாதுவிலிருக்கின்ற பொருளைத் தெரியவேண்டுமானால் தாது உணரவேண்டும். தாது உணரவேண்டுமென்றால் அக்ஷராப்பியாசம் செய்ய வேண்டும். அக்ஷரம் அபியசிக்காவிடில் தாது உணர்வதற்கு முடியுமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : முடியாது.

கு : தாது என்று சொல்லுகிறது ஓலையிலோ, காகிதத்திலோ அல்லது அவனவனிலோ உள்ளது?

சி : அவனவனிலாகும்.

கு : அவனவனிலிருக்கின்ற தாதுவிற்கு உணர்வில்லாதிருந்தால் பொருள் கிடைக்குமோ?

சி : கிடைப்பதில்லை.

கு : அதனால் அக்ஷரமாய், நாசரகிதமாய் இருக்கின்ற பொருளை அப்பியசித்தால் மட்டுமே தாதுவிற்கு உணர்வு உண்டாகிப் பொருள் கிடைக்கிறது. அகரம் முதலிய கோடுகளையே அக்ஷரம் என்று சொல்லி அப்பியசித்தால் அனர்த்தமாகி அதாவது பொருளில்லாமலாகி, தாது நசித்து, உணர்வில்லாமலாய்த் தீருகிறது. அதனால் பொருளும் கிடைக்கிறதில்லை. உலகத்தில் யாதொரு அர்த்தம் அதாவது பொருள் நாம் எண்ணியிருக்கின்றோமோ, அது முழுவதும் தவறுதலாகும். சரியாயிருக்கின்ற பொருளை நமக்கு அறியவேண்டுமானால், மேற்சொன்ன கோடுகளுக்குள்ள சப்தங்கள் எங்கிருந்து உற்பவிக்கின்றதோ, அங்கேதான் பார்த்துப் படிக்கவேண்டும். அப்பொழுது நமக்கு சரியாயிருக்கின்ற தத்துவத்தை கிரஹிக்கலாம். அது எவ்விதமென்றால்: இதோ ஒரு காகிதம். இதற்கு அகம், புறம் அதாவது உள், வெளி இருக்கிறதென்றாலும், இதன் மேற்பாகத்திற்கு அகம், புறம் உண்டோ?

சி : இல்லை.

கு : எனில் இப்பொழுது நாம் இந்தக் காகிதத்தில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்ன செய்திருக்கிறோம்?

சி : '' ⌒ ''என்ற விதம் அரை வட்டம் அதாவது பிறை வடிவுபோல் ஒரு வரைவு வரைந்திருக்கிறீர்கள்.

கு : அப்பொழுது இந்த வட்டம் வரைந்ததில் என்னஉண்டாயிற்று?

சி : உள்ளும் வெளியும் உண்டாயின.

கு : அதற்குக் காரணமென்ன?

சி : மேற்காண்பித்தபடி ''⌒'' (அரை வட்டம்) வரைந்ததால்.

கு : அப்படி வரையாவிட்டால் உள்ளும் வெளியும் உண்டாகுமோ?

சி : உண்டாவதில்லை.

கு : அப்பொழுது முதலில் உள்ளோ, வெளியோ உண்டானது?

சி : உள்தான் முதலில் உண்டானது.

கு : உள் இல்லை என்றால் வெளி இருக்குமோ?

சி : இருக்காது.

கு : எனில் உள்ளோ, வெளியோ பெரியது?

சி : வெளியாகும் பெரியது.

கு : ஆகவே உள் நிரம்பவும் சிறியதும், வெளி மிகவும் பெரியதுமாகின்றது. அப்பொழுது சிறியதிலிருந்துதான் மிகவும் பெரியது உண்டாகின்றது. அது எப்படியெனில், ஒரு விதையோ (வித்து), மரமோ பெரியது?

சி : மரம்தான் பெரியது?

கு : விதை இல்லையென்றால் மரம் உண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது மிகப் பெரியதாயுள்ள மரத்தினுடைய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அஸ்திவாரம் எது?

சி : விதை.

கு : இப்படியே மிகப்பெரியதாய், வெளியாயிருக்கின்ற உலகம் எவ்வளவோ சிறிதாகிய தன்னுள்ளி லிருந்தாகும் உண்டானது. ஆகையினால் உள்தான் முதலில் உண்டானது. அதற்கு உதாரணம் : குயவன் மண்ணைச் சுத்தம் செய்து அந்த மண்ணை ஓர் உருண்டையாக்கி உருட்டி வைக்கின்றான். அப்பொழுது அந்த மண் உருண்டைக்கு உள் என்றோ, வெளி என்றோ இருக்குமா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்?

சி : அந்த மண்ணைக் குழைத்துச் சேர்த்து உருண்டை வடிவமாய் உருட்டி வைத்ததால்.

கு : பிறகு அந்த மண் உருண்டையை அவன் ஒரு சக்கரத்தின்மேல் வைத்து என்ன செய்கிறான்?

சி : அவன் அச்சக்கரத்தைச் சுற்றிவிட்டு அந்த மண் உருண்டையைக் கொண்டு ஒரு பாத்திரத்தை உண்டாக்குகிறான்.

கு : அதை எவ்விதத்தில் உண்டாக்குகிறான்?

சி : அந்தச் சக்கரம் சுற்றிக்கொண்டிருக்கும்பொழுது அந்த மண்ணுருண்டையின்மேல் தன்னுடைய இரண்டு கைகளின் பெருவிரல்களையும் வைத்துக் குழியாக்கி ''உள்'' உண்டாக்குகிறான்.

கு : அப்பொழுது முதலில் உண்டாகின்றது எது?

சி : உள்.

கு : அதல்லாமல் உமக்கு ''உள்'' தேவை; நமக்கு ''வெளி'' தேவை. அப்பொழுது உள் தேவையுள்ள நீர் எதை உண்டாக்க வேண்டும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : உள் தேவையானதால் நான் உள் உண்டாக்க வேண்டும்.

கு : வெளி தேவையுள்ள நாம் எதை உண்டாக்க வேண்டும்?

சி : வெளியைத்தான் உண்டாக்க வேண்டும்.

கு : அது ஒருக்காலும் முடிவதில்லை. ஏனென்றால், உள் இல்லையென்றால் வெளியில்லை. உள் உண்டாகும்பொழுது வெளியும் உண்டாகின்றது. ஆகையினால் வெளி தேவையுள்ள நாமும் உள்தான் உண்டாக்க வேண்டும். அப்பொழுது உள் தேவையுள்ள நீவிரும், வெளி தேவையுள்ளநாமும் இருவரும் உண்டாக்குகின்றது ஒன்றேதான். அதாவது உள் தேவையுள்ள நீவிர் உள்ளுண்டாக்கி உள்ளில் இருக்கிறீர்; வெளிதேவையுள்ள நாமும் உள் உண்டாக்கி அதனுடைய வெளியிலிருக்கின் றோம். தவிர, இதோ! ஒரு வீடு. இந்த வீடு இல்லை என்றால் உள் என்றோ, வெளி என்றோ சொல்ல முடியுமா?

சி : முடியாது.

கு : இந்த வீட்டின் திண்ணையில் இருந்து வெளியில் பார்த்துக் கொண்டிருந்தால், வீட்டின் உள்ளிலுள்ள யாதேனும் கேட்பதற்கோ, பார்ப்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : திரும்பி உள்ளே பார்க்கும்பொழுது வெளியில் உள்ளது யாதேனும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் உள்ளிலுள்ளது வெளியிலுண்டோ?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : இல்லை.

கு : தவிர, வெளியிலுள்ளது உள்ளில் உண்டோ?

சி : இல்லை.

கு : ஆகையினால் உள்ளுக்கு நேர் விபரீதமாய் (எதிராய்) வெளியும், வெளிக்கு நேர் விபரீதமாய் (எதிராய்) உள்ளுமாகும். உள் என்று சொல்லப்பட்டது அந்தரங்கமோ, பஹிரங்கமோ?

சி : அந்தரங்கம்.

கு : வெளி என்பதோ?

சி : பஹிரங்கம்.

கு : அந்தரங்கமென்பது தத்துவமோ, அதத்துவமோ?

சி : தத்துவம்.

கு : பஹிரங்கமோ?

சி : அதத்துவம்.

கு : தத்துவம் என்பது உள்ளதோ, இல்லாததோ?

சி : உள்ளது.

கு : அதத்துவம் என்பதோ?

சி : இல்லாதது.

கு : உள்ளது சத்தியமோ, அசத்தியமோ?

சி : சத்தியம்.

கு : இல்லாததோ?

சி : அசத்தியம்.

கு : அப்பொழுது அந்தரங்கமாய், தத்துவமாய், உள்ளதாய், சத்தியமாயிருக்கின்றது ''உள்'' ஆகும். அதற்கு எதிராய், பஹிரங்கமாய், அதத்துவமாய், இல்லாததாய், அசத்தியமாயிருக்கின்றது ''வெளி'' ஆகும். எனில், நம்முடையவும் அதுமட்டுமல்லாமல் உலகத்தில் காணப்படுகின்ற எல்லா சராசரங்களினுடையவும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உற்பத்திகள் எங்கிருந்து, உள்ளிலிருந்தோ? வெளியிலிருந்தோ?

ரி : உள்ளிலிருந்துதான்.

கு : அப்பொழுது உற்பத்தி ஸ்தானம் எது? உள்ளோ? வெளியோ?

ரி : உள்.

கு : அப்போது அதல்லவா நம்முடைய மூலஸ்தானம்?

ரி : ஆம்.

கு : அந்த மூலஸ்தானமல்லவா உற்பத்திஸ்தானம்?

ரி : ஆம்.

கு : அந்த உற்பத்தி ஸ்தானமல்லவா குடும்ப ஸ்தானம்?

ரி : ஆம்.

கு : அந்த குடும்பஸ்தானத்திற்கல்லவா நாம் போக வேண்டியது?

ரி : ஆம்.

கு : அப்பொழுது அங்கே போவதற்கல்லவா படிக்க வேண்டியது?

ரி : ஆம்.

கு : அப்பொழுது நாம் எங்கே போவதற்காகும் படிக்க வேண்டியது?

ரி : உள்ளில் போவதற்குப் படிக்க வேண்டும்.

கு : இப்பொழுது நாம் படிப்பதெல்லாம் எங்கே?

ரி : புத்தகத்தில்.

கு : புத்தகப் படிப்பு உள்ளிலோ, அன்றி வெளியிலோ?

ரி : வெளியில்.

கு : அப்பொழுது நாம் படிக்கின்றதெல்லாம் எங்கே?

ரி : வெளியில்.

கு : வெளியென்பது சத்தியமோ, அசத்தியமோ?

ரி : அசத்தியம் அதாவது பொய்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : ஆகையால் நாம் படித்ததும், படிக்கின்றதும், படிப்பிக்கின்றதும், செய்கிறதும் முதலியன வெல்லாம் பொய்யாகின்றன. சத்தியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் உள்ளில் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் சத்தியத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அது எப்படியெனில், ஒரு பிணத்திற்கு உலகமுண்டோ?

சி : இல்லை.

கு : அது என்ன காரணம்?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : ஜீவனில்லையென்றால் உலகம் இருக்கின்றதோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது உலகு எங்கிருந்து உண்டாகின்றது?

சி : ஜீவனிலிருந்து.

கு : எனில் ஜீவனிருக்கின்ற எல்லா சமயத்திலும் உலகம் இருக்கின்றதோ?

சி : இல்லை.

கு : அது எப்பொழுது?

சி : தூங்கும்பொழுது.

கு : தூங்கும்பொழுது ஜீவன் எங்கே இருக்கின்றது?

சி : நம்முடைய உள்ளில் அடங்கியிருக்கின்றது.

கு : அப்பொழுது நமக்கு அடி, முடி, இடம், பொருள் முதலிய ஏதேனும் நிலைமைகளுண்டோ?

சி : இல்லை.

கு : எப்பொழுதாகும் இவையெல்லாம் உண்டாயின?

சி : தூக்கம் விழித்து நம்முடைய உள்ளிலிருக்கின்ற ஜீவன் வெளியில் வந்தபோதாகும்.

கு : அப்பொழுது எங்கிருந்து ஜீவன் வெளியில் வந்தது?

சி : உள்ளிலிருந்து.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ப : ஆகையினால் நம்முடைய உள்ளிலிருந்து வெளியில் வந்த ஜீவனைத் திருப்பி உள்ளில் கொண்டுபோய்ப் பார்க்கும்பொழுதுதான், சத்தியத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான் ஞானம் உண்டாகின்றது. அதற்கே ''மத்தக ஞானம்'' என்று சொல்லுவது. இப்பொழுது உலகத்தில் அவ்விதம் செய்யாமல் வெறும் புத்தகத்தை மட்டும் படித்துப் புத்தக ஞானம் மட்டுமே இருக்கின்றது. அது பொய்யாகும். அதனால் நாம் படித்ததெல்லாம் பொய்யாகிப் போயிருக்கின்றன. எனில் வேதசாஸ்திர இதிகாசாதிகள் ஒன்றும் பொய்யல்ல. அவையெல்லாம் மெய் (சத்தியம்) ஆகும். அதெப்படியெனில்: மேலே சொல்லியபடி அவனவனுடைய ஜீவனை உற்பத்தி ஸ்தானமாகிய மத்தகத்திற்குக் கொண்டுபோய் சத்தியத்தை அறிந்தவர்கள் எழுதிவைத்திருக்கின்றவையாகும் வேதசாஸ்திர இதிகாசாதிகள். உலகவாசிகள் மேல் சொல்லப்பட்ட விதத்தில் செய்யாமலும், உண்மைத் தத்துவத்தை அறியாமலும், பஹிரங்கமாய் அதாவது வெளிப்படையாய், தத்துவமில்லாததாய், அசத்தியமாய் இருக்கின்ற நிலைமையைப் பார்த்தாகும் துரபிமான வாதப்பிரதிவாதங்கள்செய்து கொண்டிருக்கிறார்கள். அவை தவறாகும் அப்பொழுது தன்னுடைய உண்மைத் தத்துவத்தை அறிய வேண்டுமென்றால் தன்னிலுள்ள அந்தரங்கமாகிய தத்துவத்தைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மையை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அறியவும் பாஹிய அவஸ்தைகள் அதாவது பஹிரங்க நிலைமைகள் தப்பிதமென்று தோன்றவும் கூடும். அதல்லாமல் பாஹியவிர்த்தி அதாவது வெளித் தொழிலை மேற்கொண்டு, கிரந்தாதிகளை வாசித்து, கர்வமடைந்து, நான் மகாபண்டிதன் என்றபிமானித்தால் யாதொரு ஞானமும் உண்டாவதில்லை. ஞானம் உண்டாக வேண்டுமானால் தன்னில் ஆந்தரிகமாய் அதாவது அந்தரங்கமாயிருக்கின்ற தத்துவத்தைப் பார்த்து அக்ஷராப்பியாசம் செய்ய வேண்டும். அப்போது மட்டுமே தாதுவிற்கு உணர்வு உண்டாகின்றது. அந்தச் சமயத்தில் சர்வக்ஞனாய்த் தீருவோம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# ஆறு

*சிஷ்யன்:* சுவாமி! முன் அத்தியாயத்தில் விவரித்தவாறே சிருஷ்டி என்பது எனக்குப் பூரண நம்பிக்கையாயிற்று. ஆயினும் இயற்கை (பிரகிருதி) வித்தியாசமாக நானாவிதத்திலும் காணப்படுகிறது. அது கிரகவித்தியாசமென்றும், அதைப் பின் விவரிக்கிறோம் என்றும் மூன்றாம் அத்தியாயத்தில் கற்பித்தீர்களல்லவா? அதைத் தெளிவாக, விரிவாக அருளிச்செய்து கேட்க விரும்புகிறேன்.

குரு: நானாவிதமான சிருஷ்டிகள் என்னென்னவாகும்?

சி : அவை மனிதர், மிருகங்கள், பக்ஷிகள், ஊரும் ஜந்துக்கள், நீர்வாழும் ஜந்துக்கள், எறும்பு, புழு, பூச்சிகள் முதலியனவாகும்.

கு : மனிதர் என்று சொல்லப்படுவது யாரை?

சி : நம் எல்லாரையும்.

கு : நம்மை மனிதர் என்று சொல்லக் காரணம் என்னவாகும்?

சி : விசேஷப் புத்தி இருப்பதால்.

கு : மற்ற ஜந்துக்களுக்கோ?

சி : விசேஷ புத்தி இல்லை.

கு : எனில் அந்த நம்பிக்கை தவறு. விசேஷபுத்தி இல்லாதது நமக்காகும். பாக்கி எத்தனை விதமான ஜந்துக்கள் இருக்கின்றன என்று நாம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அபிமானித்துக்கொண்டு இருக்கின்றோமோ, அவற்றிற்கெல்லாம் விசேஷபுத்தி உண்டு. அது ஏனென்றால், ஆஹாரம், நித்திரை, மைதுனம் அதாவது உணவு, தூக்கம், புணர்ச்சி இவை சகல ஜீவிகளுக்கும் உண்டு. அறிவின்மையும் விசேஷ புத்தி இல்லாமையும் ஊர்வன, மிருகம், பக்ஷி, புழு, பூச்சி முதலியவற்றிற்காகும் என்றும், அறிவும் விசேஷ புத்தியும் மனிதர்களுக்குத்தான் என்றும், அவை நாம்தாம் என்றும் நாமே அபிமானித்து வருகின்றோம். இப்படியேதான் எல்லா ஜீவிகளும் தாம்தாம் மனிதரென்று கருதுகின்றன. உண்மையில் மனிதரென்று ஒரு சிருஷ்டி இல்லாததாகும். சிருஷ்டியில் இப் பொழுது காணப்படுவன மிருகங்களே ஆகும். அதாவது இருக்காலி மிருகம், நாற்காலி மிருகம் முதலியனவாகும். நாமே மனிதரென்றும் நமக்கே விசேஷபுத்தி உண்டென்றும் கருதியிருப்பதை எதைக்கொண்டும் ஸ்தாபிக்க முடியாது. காரணம்: நாம் ஒரு கிளியைப் பிடித்து வளர்த்து, சிலநாள் அத்துடன் பழகி "அக்கா, அக்கா, ரங்கா, ரங்கா" என்று பலவிதமாகச் சொல்லிக்கொடுத்து, அதனைச் சொல்லும்படி கற்றுக்கொடுக்கிறோம். அவற்றையெல்லாம் அந்தக் கிளியும் கவனித்து, அவற்றை கிரஹித்து, நாம் சொல்லுவது போலவே அதுவும் சொல்லுகிறது. அதுவுமன்றி, எந்தெந்த சொற்கள் அந்தக் கிளி முன்பாக நாம் பேசுகிறோமோ, அந்தச் சொற்களையெல்லாம் நாளடைவில் அந்தக் கிளியும் பேசுகிறது. அதற்கு விசேஷ புத்தி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இல்லாவிட்டால் நம்முடைய சொற்களை கிரஹிப்பதற்கும் அதன்படி பேசுவதற்கும் முடியாமலிருந்திருக்கும். ஆனால் நாம் எவ்வளவு காலம் அதனோடுபழகியிருந்தாலும், விசேஷ புத்தி உள்ளவர்கள் என்று அபிமானித்து வருகிற நமக்கு அக்கிளியினுடைய தாய்மொழியாகிய சப்தங்களை கிரஹிப்பதற்கு முடிவதில்லை. அது நமக்குப் புரிவதுமில்லை.

சி : சுவாமி! கிளிகட்கும் மிருகங்கட்கும் மொழிகளான ஒரு பேச்சும் இல்லையல்லவா?

கு : அப்படி ஒருபோதும் சொல்லக்கூடாது. உலகில் **எத்தனை வகையான ஜீவிகளிலிருக்கின்றனவோ அத்தனை மொழிகளுமிருக்கின்றன.** எனில் நாம் அவற்றை அறிவதில்லை. அதெப்படியெனில்: உமக்குத் தமிழ்மொழி ஒன்று மட்டும் தெரியும். அப்படியிருக்கின்ற உம்முடைய முன்னிலையில் ஓர் இந்துஸ்தானிக்காரன் இந்துஸ்தானியும், ஓர் ஆங்கிலேயன் ஆங்கிலமும், ஒரு கர்னாடகக்காரன் கன்னடமும் பேசுவதானால் அவை உமக்குப் புரிவதுண்டோ?

சி : இல்லை.

கு : காரணம் என்ன?

சி : அந்த மொழிகளை நாம் படிக்காததால்.

கு : இப்படியேதான் பட்சி, மிருகாதிகளென்று நாம்எண்ணிவருகின்றவற்றிற்கும் மொழிகளுண்டு. அவற்றை நீங்கள் படிக்காததால் புரியாததாகும். தவிர, மிருகங்களென்று நாம் கருதிவருகின்றவற்றினுடைய கூட்டத்திலிருந்து ஒன்று பிரிந்து போனால் அதனை ஏனையவை கூப்பிடுகின்றன.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்த தொனியை (குரல்) பிரிந்துபோனது கேட்டு, தன்னையே கூப்பிடுகிறதெனத் தெரிந்து, பதில் குரல் கொடுத்து ஓடி அந்தக் கூட்டத்தில் வந்து சேருகின்றது. இப்படியே நாம் பட்சிகளென்று கருதிவருபவையிலும், ஊர்வனவென்று கருதி வருபவையிலும் காணப்படுவதில்லையா?

சி : காணப்படுவதுண்டு.

கு : அப்பொழுது அவற்றிற்கும் மொழிகள் உண்டு. அவை தங்கள் தங்கள் மொழிகளில் அழைக்கவும் பேசவும் செய்வதை, ஒன்றுக்கொன்று புரிந்து கொள்ளவும் அனுசரிக்கவும் (கடைப்பிடிக்கவும்) செய்கின்றன. அது நமக்குப் புரியாமலிருப்பதற்குக் காரணம் நாம் அது படிக்காததாலாகும். அது எப்படியென்றால்: மனிதனாகுமென்று அபிமானித்து வருகிறதாகிய நமக்கு முன் சொன்னபடி ஒவ்வொரு மொழி வித்தியாசமாகப் பேசியது புரியாமலிருந்தது என்றும் அது நாம் படிக்காதது கொண்டாகுமென்றும் சொன்னீரல்லவா? இப்படித்தான் பட்சிமிருகாதிகளென்று நீங்கள் சொல்லி வருபவற்றினுடைய மொழிகளும் படிக்காததால் நமக்குப் புரியாதிருக்கின்றதாகும். ஆனால் அவற்றோடு நாம் எந்த மொழியில் பேசினாலும் அவை அதைப் புரிந்து அனுசரித்து நடக்கவும் செயல்படவும் செய்கின்றன. அது எவ்விதமென்றால்: அந்நிய மொழி பேசும் தேசத்திலிருந்து நாம் காளை மாடுகளென்று சொல்லுகின்ற இரண்டு ஜீவிகளைத் தமிழ் தேசத்திற்குக் கொண்டு வந்து ஏர் உழுவதற்காக அவற்றின் கழுத்தில் நுகம்வைத்துக் கலப்பை கட்டி,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வயலில் உழுகிறசமயத்தில், அவற்றுடன் வலம், இடம், அங்கே, இங்கே என்றெல்லாம் நாம் சொல்லி வருவன அனைத்தும் அவை கேட்டனுசரித்து, அவ்வாறு நடக்கின்றன. அதல்லாமல் காட்டு மிருகங்கள்என்று நாம் சொல்லி வருகின்ற சிங்கம், யானை, கரடி, புலி, சிறுத்தை இவற்றைப் பிடித்து அநேக விதமான தேகாப்பியாசங்களைக் கற்றுக்கொடுத்து, சர்க்கஸ்களில் கொண்டுவந்து, பலவிதத்திலும் அவற்றை ஆட்டிவைக்கவும், ஆடவும் செய்கிறோம். இவை நமக்குக் கண்கூடான அனுபவங்களாகும். இப்படிப் படித்துச்செயல்பட வேண்டுமென்றால் அவற்றிற்கு விசேஷபுத்தி உண்டென்றோ, இல்லையென்றோ நாம் நம்ப வேண்டியது?

ரி : அவற்றிற்கு நிச்சயமாகவும் விசேஷ புத்தி உண்டு. விசேஷ புத்தி இல்லையெனில் மேற்சொன்னபடி அனுசரிப்பதற்கோ, படிப்பதற்கோ, செயல் படுவதற்கோ முடிவதில்லை.

கு : தவிர, நமக்கு விசேஷ புத்தி இல்லையென்றும், விசேஷ புத்தியும் அறிவும் உள்ளது. நாம் இப்பொழுது மிருகம் முதலானவையென்று கருதிவருகின்றவற்றிற்குத்தான் என்றும் உள்ளதற்கு உதாரணம்: நமக்கு நம்முடைய தாய்மொழிதவிர மற்றொரு மொழி படிக்கவேண்டுமென்றால் அந்த மொழியினுடைய பொருள், நம்முடைய தாய்மொழியில் சொல்லித்தராமல் அந்த மொழியில்மட்டும் சொல்லித்தந்தால் அதனுடைய பொருள் புரிந்துகொள்ளவோ, அந்த மொழி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



படிக்கவோ முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் மேற்சொன்ன பட்சிகள், நாற்காலிகள் முதலிய ஜீவிகளைப் பிடித்து, நாம் படிப்பிக்கும்போதும், வேலைகளைச் செய்விக்கும்போதும் யாருடைய மொழியில் நாம் சொல்லிக்கொடுக்கிறோம்? நம்முடைய மொழியிலோ, அவற்றின் மொழிகளிலோ?

சி : நம்முடைய தாய்மொழியில்.

கு : எனில் நம்முடைய தாய்மொழியில் சொல்லிக் கொடுத்ததை அவை கேட்டுப் படிக்கவும், அனுசரிக்கவும் செய்யும்பொழுது விசேஷ புத்தியாருக்கிருக்கின்றது?

சி : பட்சிகள், நாற்காலிகள் முதலிய ஜீவிகளுக்குத் தானென்று வெளிப்படுகிறது.

கு : எனவே விசேஷ புத்தியும் அறிவும் நமக்காகும் என்றும் நாமாகும் மனிதர் என்றும் அபிமானித்து வருகிற நமக்கு வேறொரு மொழி படிக்க வேண்டுமென்றால் அவனவனுடைய தாய் மொழியில் சொல்லிக் கொடுத்தால் மட்டுமே படிக்கமுடிகிறது. பட்சிகள், நாற்காலி முதலிய ஜீவிகளோடு நம்முடைய தாய்மொழியில் சொன்னால் அவை அவற்றை அறிந்து அப்படியே அனுசரித்துச் செய்துவருகின்றன. ஆனால் நாம் அவற்றின் தாய்மொழியில் சொல்லிக் கொடுக்கவில்லை. அதுவுமல்லாமல் எவ்வளவோ காலம் அவற்றுடன் பழகி வேலைகளைச் செய்வித்தாலும், அவற்றுடன் சேர்ந்து வேலைகளைச் செய்தாலும் பேசினாலும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


எப்பொழுதும் சேர்ந்திருந்தாலும் அவற்றின் தாய்மொழியில் அவை பேசுவது நமக்குப் புரிவதில்லை. **ஆகையினால் விசேஷபுத்தியும் அறிவும் மேற்சொன்னவற்றிற்கே உள்ளது.**

தவிர, உங்களுடைய தொழுவத்தில் அதாவது மாட்டுக் கொட்டகையில் பிறந்துள்ளதோ அல்லாவிட்டால் நான்கைந்து வருடங்களாக உங்களுடைய பராமரிப்பில் இருக்கின்றதோ ஆன பசு மாடோ, காளை மாடோ, எருமையோ, எருமைக் கிடாவோ இவற்றில் ஏதேனும் ஒன்றை, அமாவாசை இரவில் மிகவும் கடினமாக மழை பெய்யும்பொழுது, அது முன்பு போகாததும் அறியாததுமான ஒரு காட்டிற்கிடையே ஓர் ஆற்றைக் கடத்தி, பத்தோ, இருபதோ நாழிகை தூரம், சிறுத்தை, புலி முதலானவற்றால் அதற்கு இம்சை ஏற்படாததுமான ஓர் இடத்தில் அதைக்கட்டாமல் விட்டு, நீர் திரும்பி வந்தால், அதை யாரும் பிடித்துக் கட்டாமலிருந்தால், அதுஎப்படியாவது திரும்ப உங்களுடைய வீட்டிற்கே வந்து சேருவதில்லையா?

சி : ஆம்! வந்து சேரும்.

கு : எனில் நம்மில் மனிதரென்று அபிமானித்துவருகிற இருக்காலி ஜீவியான ஒருவரைப் பகல் நேரத்தில் சாதாரணமாய் ஜனங்கள் அதிகமாக நடமாடிக் கொண்டிருக்கிற ஒரு பாதை வழியாகப் பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் முன்புபோகாத ஒரு பட்டணத்தில் நீங்கள் அழைத்துக் கொண்டுபோய், அந்தப் பட்டணத்தின் நடுவில் அவரை விட்டு, நீங்கள் திரும்பி வந்தால், அவருக்கு வேறொருவர்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உதவியில்லாமலோ, வழியைக் கேட்காமலோ, முதலில் புறப்பட்டுப்போன இடத்திற்குத் திரும்பி வந்து சேரமுடியுமா?

சி : வேறொருவருடைய உதவியில்லாமலோ, வழி கேட்காமலோ திரும்பிவர முடியாது.

கு : அதென்ன காரணம்? விசேஷபுத்தியும் அறிவும் உள்ளது மனிதர்களுக்கு மட்டுமாகுமென்றும், அம்மனிதர் நாமாகுமென்றும் நீர் சொன்னீரல்லவா? அப்படியிருக்க எக்காரணத்தால் திரும்பிவர முடியவில்லை? விசேஷ புத்தியும் அறிவுமில்லாமலிருக்கின்றது நீங்கள் மிருகாதிகளென்று அபிமானித்து வருகின்றவற்றிற்காகும் என்றும் நீரே சொன்னீரல்லவா? அப்படியுள்ள நாற்காலி ஜீவிகளில் ஒன்றை, இரவில் மிகவும் கடினமான இருட்டில் ஓர் ஆற்றைக் கடத்தி, காட்டின் வழியாக, பத்து, இருபது நாழிகை தூரம் கொண்டுபோய்விட்டால், அது கொஞ்ச நாட்களில் முதலில் கொண்டுபோன இடத்திற்கே திரும்பிவருகிறது. அப்பொழுது அதற்குத் திரும்பிவர யாருடைய உதவியாவது உண்டாயிருந்ததா? அல்லது யாராவது வழி சொல்லிக் கொடுத்தார்களா?

சி : இல்லை. அது தானாகவே வந்தது.

கு : ஆகவே விசேஷ புத்தி யாருக்காகும் இருக்கிறது?

சி : அது மிருகங்களென்று நாம் அபிமானித்து ஸ்தாபித்து வருகிறவர்களுக்காகும்.

கு : விசேஷ புத்தி உள்ளவர் யாராகும்?

சி : மனிதராகும்.

கு : அப்பொழுது மனிதர் யார்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



[illegible] : இதுவரை மிருகம், பட்சி முதலானவையென்று நாம் எண்ணி ஸ்தாபித்து வந்திருந்தவர்களாகும்.

[illegible] : அப்பொழுது மிருகங்கள் யார்?

[illegible] : இதுவரை மனிதரென்று அபிமானித்து ஸ்தாபித்து வந்திருந்தவர்களாகும் மிருகங்கள்.

[illegible] : எனில் முன் சொல்லப்பட்ட நாற்காலிமுதலான ஜீவிகளாகும் மனிதரென்று இப்பொழுது தீருமானிக்கப்பட்டதற்குக் காரணம், அவற்றிற்கு விசேஷ புத்தி உண்டாயிருந்ததாலாகும். ஆனால் அறிவாயிருக்கின்ற வஸ்து வாயு என்று முன் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டதல்லவா? அந்த வாயு அவற்றிற்கு சுவாதீனமாகும். அதெப்படியென்றால் நாம் தூங்கும்பொழுது நம்முடைய சுவாச கதி எவ்விதமோ அவ்விதமே முன் சொல்லப்பட்ட நாற்காலி முதலான ஜீவிகளுக்கு சுவாசகதி சதாகாலமும் இருக்கின்றது. அந்த அறிவாய் ஜீவசக்தியாயிருக் கின்ற வாயு அவற்றிற்கு ஏக கதியாகித் தீர்ந்தது. அந்த அறிவான வாயு ஏககதியாக வரும் பொழுது எல்லா நிலைமைகளும் சுவாதீனமாய் வருகின்றன. அதனால் அந்த வாயுவினுடைய சுவாதீனத்தால் இன்ன இடத்திலிருந்து புறப்பட்டோமென்றும் இன்ன வழியாக வந்தோமென்றும் மோப்பசக்தியினால் உணர்ந்து புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து சேருகிறது. அதன் காரணம், அவற்றிற்கு அந்த அறிவாயிருக்கின்ற வாயு ஏககதியானதுதான். நமக்கு அந்த வாயுவிற்கு ஏககதி இல்லாமல் பின்னகதியாகி வரும்பொழுது உண்டாகின்ற முன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ராகத்துவேஷாதிகளோடுகூட "இவன் என் மகன், என் சொத்துக்களையெல்லாம் இவனுக்குக் கொடுக்க வேண்டும். இவனைக் காப்பாற்ற வேண்டும், மற்றவன் அந்நியன், அவனுடைய சொத்தெல்லாம் நாம் கைப்பற்ற வேண்டும், அதனால் எவ்விதத்திலும் அவனைக் கெடுக்க வேண்டும், அடிக்க வேண்டும், கொல்ல வேண்டும்" என்றும் மற்றுமுள்ள கெட்ட எண்ணங்களுடன் சுத்த மிருகங்களாகி நடக்கின்றதாலேயே, மோப்பசக்தியில்லாமலும் முன் சொன்னதான புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிவர முடியாமலுமாயிற்று. எப்பொழுது நமக்குப் பின்னகதி இல்லாமல் ஏககதியாக வருகிறதோ, அப்பொழுது அறிவாகி, ஜீவசக்தியாகி, வாயுவாயிருக்கின்ற பொருள் நம்மில் அடங்கவும், அப்பொழுது நமக்கு அறிவுண்டாகவும் செய்கிறது. அப்பொழுது மட்டுமே நாம் மனிதராய் ஆகிறோம். மனிதரென்று ஒரு தனி சிருஷ்டி இல்லை. நம்முடைய தொழிலைக் கொண்டுவேண்டும் நாம் மனிதராவதற்கு. மனிதர்கட்கே மோக்ஷம் கிடைக்கிறது. தவிர, இல்லாத பொருள் நமக்கு உண்டென்று தோன்றுகிறது. அந்தத் தோற்றம் நசிக்கும்பொழுது மட்டுமே மனிதராகிறோம். அதுஎவ்விதமென்றால்: நடுப்பகல் சமயத்தில் மிகவும் கொடூரமான சூரியகிரணமிருக்கும் பொழுது ஒரு பாலைவனத்தின் வழியாக நாம் சஞ்சரிக்கும் சமயத்தில் அந்த இடத்தின் நாலுபக்கத்திலும் பார்த்தால் நமக்கு என்னவாகத் தோன்றுகிறது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : தண்ணீர் இருப்பது போல் தோன்றுகிறது.

கு : எனில் அந்தத் தண்ணீரிருப்பதுபோல் தோன்றிய இடத்தில் போய்ப் பார்த்தாலோ?

சி : தண்ணீர் காண்பதில்லை.

கு : அப்பொழுது அந்தத் தோற்றம் சரியாய் இருந்ததோ?

சி : சரியாயிருந்ததில்லை.

கு : தண்ணீர் இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் என்னவென்றால்: அந்தப் பாலைவனம் யாதொரு மரத்தின் நிழலுமில்லாமல் பரந்து காலியாய்க் கிடக்கின்ற இடமும், அந்த இடத்தில் மிகவும் கடூரமான சூரிய கிரணங்கள் தாக்கியபோது உண்டாகின்ற ஒளியால் ஜொலித்துக் கொண்டிருக்கின்ற அந்த ஒளியான ஜுவாலையைத் தண்ணீராகுமென்று நாம் தவறி எண்ணியதுமாகும். எனில் அது உண்மையில் தண்ணீர் அல்லவென்று நாம் போய்ப் பார்த்தபோது நமக்குத் தெரியவும் செய்ததல்லவா? இப்படியேதான் தன்னுடைய ஜீவசக்தி வெளியில் வியாபித்து ஜொலித்துக் கொண்டிருக்கிற அந்த ஜுவாலையில் தன்னிலிருந்து பிரதிபிம்பித்துக் கண்டபோது இவ்விதத்தில் ஒரு பொருள் இருக்கின்றதாகத் தோற்றமுண்டாகிறது. இதுதான் மிருகபுத்தி. இப்படியாயுள்ள தோற்றமுள்ளவர்கள் மிருகங்களாகும். இந்தத் தோற்றம் எங்கிருந்து உண்டானதென்றும், இவ்விதம் உண்டானது தன்னுடைய சக்தியிலிருந்துதான் என்றும், அந்த சக்தி வெளியில் வியாபித்தபோது பிரதிபிம்பித்ததாகுமென்றும் தெரிய வந்தது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதனால் அந்த சக்தி வெளியில் வியாபிக்காமல் அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய தன்னில் சேர்ந்து, தன்னில்தானே லயித்து, தோற்றம் நசிக்கும்போது மட்டுமே மனிதராகக்கூடும். தவிர, மனிதன்என்றால் மனனம் செய்கின்றவனாகும். மனனம் செய்வதென்பது "நித்யாநித்திய வஸ்து விவேகம்" செய்வது என்றாகும். அதாவது நித்தியம் இன்னது, அநித்தியம் இன்னது என்றறிவது. நித்தியம் இன்னதென்பதை அறிந்தால் அவனுக்கு சப்தமில்லை. அதென்ன காரணமென்றால்: சப்தம் நித்தியமல்ல, அநித்தியமாகும். அப்போது, சப்தத்தைத் தன்னில்தானே லயிப்பித்துத் தானாய் இருப்பான். தவிர ஓர் ஆலோசனை செய்யும் சமயத்தில் நமக்கு சப்தம் உண்டாக்க முடியுமா?

சி : முடியாது.

கு : சப்தம் உண்டாக்கும்பொழுது ஆலோசனை கிடைக்குமா?

சி : கிடைக்காது.

கு : அது தவிர, ஆலோசனையிலிருக்கும்பொழுது நமது பக்கத்திலிருந்து வேறொருவன் சப்தமுண்டாக்கினால் நாம் என்ன சொல்லுவோம்?

சி : ''ஏய்! சப்தம் போடாதிருங்கள், நான் ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லுவோம்.

கு : அப்பொழுது ஆலோசனை சமயத்தில் யாதொரு விதத்திலுள்ள சப்தமும் உண்டாக்க நமக்கு முடியாது. யாரேனும் சப்தம் உண்டாக்கினால் அது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நமக்கு வெறுப்பாகத் தோன்றும். இதேபோலவே மனன சமயத்திலும் யாதொரு சப்தமும் உண்டாக்க முடியாது. அப்பொழுது சப்தம் தன்னில் அடங்குகிறது. எப்பொழுது சப்தம் தன்னில் அடங்குகிறதோ, அப்பொழுது மனிதரா கிறோம். அப்பொழுது நம்முடைய மனம் தன்னில் லயிக்கிறது. மனம் தன்னில் லயித்தபோது தானாகித் தன்மயமாய்த் தீருகிறது. அப்பொழுது மோக்ஷமாகிறது. இதனால்தான் மனிதருக்கே மோக்ஷம் கிடைக்கிறது என்று சொல்லக் காரணம். இதல்லாமல் சப்தரூபமாய், ராகத்துவேஷ மதமாச்சர்யாதிகளான தொழில்களோடு கூடி மிருகங்களாகிய நாம் மனிதரென்று அபிமானிக்கிறதல்லாமல் உண்மையில் மனிதர்களல்லர். மனிதராக வேண்டுமென்றால் ராகத்துவேஷம் முதலான தொழில்களை விட்டு முன்சொன்ன நிலைமையில் சேர வேண்டும். அதற்கு முன் ஒருக்காலும் மனிதரல்லர்; மிருகங்களேயாகும்.

சி : சுவாமி! இதுவரைச் சொன்னதெல்லாம் உண்மைதான். எனினும் உலகத்தில் அநேக பிரகிருதி அதாவது உருவ வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதாவது மனிதரென்று அபிமானித்து வருகிற இருக்காலிகள், அவர் மிருகங்களென்று எண்ணி வருகின்ற யானை, குதிரை, மாடு, ஆடு, சிங்கம், புலி முதலிய நாற்காலிகள், பருந்து, கிளி, காகம், கோழி, மயில் முதலிய பறவை இனங்கள், பாம்பு, பல்லி முதலிய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


ஊர்வன, தவளை, மீன் முதலிய நீர் வாழ்வன, எறும்பு, கிருமி கீடாதிகள் முதலிய பிறவிகள் எல்லாம் பலவிதத்திலும் காணப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் சிருஷ்டி ஒரேவிதமென்று கற்பித்தீர்களல்லவா? நானாவிதத்தில் காணப்படுகின்ற இவற்றிற்கெல்லாம் எப்படியாகும் சிருஷ்டி ஒரே விதமென்று சொல்லுவது? அதை விரிவாகச் சொல்ல வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு : நீர் சொன்ன விதத்தில் பிரகிருதி அதாவது உருவவித்தியாசமாய் வேறுவேறாகக் காணுகிறது எவ்விதமென்றால்: எட்டடுக்கு மாளிகை, நான்கடுக்கு மாளிகை, மூன்றடுக்கு மாளிகை, இரண்டடுக்கு மாளிகை, ஓரடுக்கு மாளிகை, மாளிகை இல்லாத மச்சு வீடு, மச்சில்லா வீடு, முதலிய மாளிகைகளோடுள்ளதும், மச்சுள்ளதும் மச்சில்லாததுமான, கல் கொண்டும், செங்கல் கொண்டும், பெட்டிக்கட்டை அதாவது சிமிண்டினாலுண்டாக்கும் கல்போல் மண்ணில் உண்டாக்கியது கொண்டும், உருளங்கட்டை அதாவது மண்ணுருளை கொண்டும் உண்டாக்கிய வீடுகளும், மேற்சொன்னபடி உண்டாக்க முடியாதோர் மூங்கிலாலும் ஓலைகளினாலும் உண்டாக்கிய குச்சுகளும், அதற்கும் இயலாதவர்கள் ஈச்சஞ்சோலை (ஈந்தம் பட்டை), தேக்கு இலை முதலிய பலவிதமான இலைகளைக் கொண்டும் உண்டாக்கிய பர்ணசாலை முதலிய குடிசைகளும் உண்டாக்கி அவற்றினுள்ளே வசிக்கிறார்கள். இப்படி வசித்து வருகிறவர்கள்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எல்லாம் யாராகுமென்று சொல்ல வேண்டியது?

சி : மனிதரென்றாகும்.

கு : இவ்விதமே எட்டடுக்கு, நாலடுக்கு முதலான மாளிகைகள் முதல் இலைகளினாலும் மற்றும் மறைத்துக் கட்டியுள்ளதான குடிசைகள் வரை உள்ளது, நாம் பல ஜீவிகளென்று அபிமானித்து வருகின்ற நாம் முதல் சர்வ ஜீவிகளுக்கும் இருப்பதற்குள்ள கூடுகளாகின்ற, இந்த பிரகிருதி (உருவம்) வித்தியாசமாய்க் காணப்படுகின்ற, சரீரமென்று அபிமானித்து வருகின்ற ஜடங்களாகும். இப்படி பிரகிருதி அதாவது உருவ வித்தியாசமாகிய கூடுகளிலிருக்கின்றது என்னவாகும்?

சி : ஜீவனாகும்.

கு : ஜீவன் எத்தனை உண்டு?

சி : ஜீவன் ஒன்று மட்டும்.

கு : அப்பொழுது இவற்றை உருவ வித்தியாசத்தால் வேறுபடுத்தி உயர்ந்தது என்றும் தாழ்ந்தது என்றும் சொல்லக்கூடுமோ?

சி : சொல்லக்கூடாது.

கு : எனின் எட்டடுக்கு மாளிகையிலிருப்பவரைக் காட்டிலும் இலைகளினால் மறைத்துக்கட்டி அதில் வசிக்கின்றவர்களுக்கு புத்திசக்தி இருக்கக் கூடாதோ?

சி : இருக்கக்கூடும்.

கு : அப்படியாயின் அதற்குக் காரணம் ஏதேனும் சொல்லுவதற்கு உண்டோ?

சி : பல காரணங்கள் சொல்லுவதற்குண்டு. அவை என்னவென்றால்: பல இராஜாக்களிடமும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரபுக்களிடமும், அவர்கள் நீசர்கள் என்று கருதிவருபவர்களாகிய பள்ளர், பறையர் இவர்களிடத்திலும் நான் பழகியிருக்கின்றேன். அவர்களுள் இராஜாக்களைக் காட்டிலும், பிரபுக்களைக் காட்டிலும் யோக்கியதையும், காரியத்திறமையும், துணிவும் (திடநிச்சயமும்), அறிவும் உள்ள பள்ளர் பறையர்களைப் பார்த்திருக்கிறேன். தவிர, திருவள்ளுவர், பாக்கனார், நந்தனார் முதலிய மகா யோக்கியர்களான ஞானிகள் இருந்தனரென்றும், அவர்களை இப்பொழுதும் புகழ்த்தவும் அவர்களுடைய நிச்சயங்களையும் சாஸ்திரப் பிரமாணங்களையும் சரியானவையென்று அனுசரித்து நடந்து வருவதாகஅறியவும் காணவும் செய்வதுண்டு. அவர்களுடைய யோக்கியதை முன்சொன்ன இராஜாக்களென்றும் பிரபுக்களென்றும் அபிமானித்து வருபவர் கட்குள்ளதைவிட மேலானது என்பதாகும் என்னுடைய நம்பிக்கை.

கு : அப்பொழுது இன்னவருக்குத்தான் புத்திசக்தி உண்டாயிருக்கக்கூடும் என்று உண்டோ?

சி : இல்லை.

கு : எனில் நீர் சொன்ன பள்ளர்கள், பறையர்கள் முதலானவரும் மகா ஞானிகளாகிய திருவள்ளுவர், பாக்கனார், நந்தனார் முதலானவர்களும் எங்கேயாகும் வசித்திருந்தார்கள்?

சி : நான் பழகியதான பள்ளர்கள், பறையர்கள் முதலானவர்கள் ஓலை கொண்டும் மற்றும்மறைத்துக் கட்டியதான குடிசைகள்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


என்றுசொல்லி வருபவைகளிலும் வாசம் செய்துவருவதைக் கண்டும் திருவள்ளுவர், பாக்கனார், நந்தனார் முதலியவர்கள் காடுகளில் இலைமுதலானவற்றால் கட்டிய குடிசை களிலாகும் வசித்திருந்தார்கள் என்றும் கேட்டும் தெரிந்திருக்கிறேன்.

கு : எனில் இப்பொழுது இன்ன வீட்டில் வசிப்பவருக்கே விசேஷ புத்தியும் அறிவும் உண்டாகும் என்றுண்டோ?

சி : அப்படியில்லை.

கு : இவ்விதமே மனிதரென்று அபிமானித்து வருபவர்களுக்கு வாசம் செய்வதற்குள்ள வீடாகிற இந்த ஜடம் அதாவது உடம்பு எட்டடுக்கும், மிருகங்களென்று நாம் சொல்லி வருகிற நாற்காலிகளுக்கு வாசம் செய்வதற்குள்ள வீடாகிற ஜடம் நான்கடுக்கும், இதே போல் எறும்பு முதலானவை வாசம் செய்வதற்குள்ள வீடாகிற ஜடங்கள் குடிசை முதலானவையும் ஆகும். எனில் எறும்பு என்று சொல்லி வருகிற குடிசையாய், வீடாயிருக்கின்ற ஜடத்திலுள்ள ஜீவனுக்கும் மனிதரென்று சொல்லி வருகிற எட்டடுக்கு மாளிகையாயிருக்கின்ற வீடான ஜடத்திலுள்ள ஜீவனுக்கும் ஏதேனும் வித்தியாசமுண்டோ?

சி : யாதொரு வித்தியாசமுமில்லை.

கு : எனில் எதற்காகும் வித்தியாசமுள்ளது?

சி : வீடாகிய உடம்பிற்கு.

கு : கிரகம் அதாவது வீடு வித்தியாசப்பட்டதனால் புத்திசக்தியும் அறிவும் இல்லாமலாகிப் போகுமோ?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : போகாது.

கு : எனில் குச்சு குடிசை, பர்ணசாலை முதலானவற்றில் வாசம் செய்கின்றவருக்குச் சமமாக உள்ள எறும்பு, ஈ முதலானவற்றின் ஜடத்தில் வாசம்செய்கிற ஜீவனுக்குள்ள சக்தியும் புத்தியும் மனிதன் என்று அபிமானித்து வருகின்ற கிரகங்களிலிருக்கின்ற ஜீவிகளுக்கு இல்லையென்றே தெளிவாக்கலாம். அது எவ்வாறெனில்: எறும்பு தன்னைக் காட்டிலும் பெரியதாயுள்ளதையும் கனமாயுள்ளதையும் தனியே தூக்கி எடுத்துக்கொண்டு போவதைப் பார்க்கவில்லையா? அதுபோல மனிதரென்ற பிமானித்து வருகிற ஜீவிகளுக்குத் தன்னைக் காட்டிலும் கனமும் பெரியதுமானதைத் தனியே எடுத்துத்தூக்க முடியுமா?

சி : தூக்க முடியாது.

கு : தவிர, எறும்பு மிகவும் புத்திசக்தியுள்ளதாகும். அது தனக்கு வேண்டுகிற தொழிலுக்குத் தடையுள்ளதனைத் தடை தீர்க்கின்றதும், முன்கூட்டி தன்னுடைய உபஜீவனத்திற்குள்ளதை அதிஜாக்கிரதையிலும், சோம்பலின்றியும் சேகரிக்கின்றதும் நாம் கண்டிருக்கிறோமல்லவா?

சி : ஆம். கண்டதுண்டு.

கு : அது மட்டுமல்ல, அதனுடைய விரைவு அதாவது சுறுசுறுப்பு நிலைமை எப்படியென்றால்எறும்புக் கூட்டங்கள் ஓர் இடைவழி வழியாக நடமாடும்போது, மனிதரென்று அபிமானித்து வருகிற ஒருவர் அதிவேகமாக அந்த இடைவழி வழியாகப் போகின்றார். அப்பொழுது அந்தஎறும்புக் கூட்டங்கள் அவரை என்ன

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செய்கின்றன?

சி : அவருடைய பாதம் முதல் சிரசுவரை ஏறுகின்றன.

கு : அப்பொழுது யாருக்கு விரைவு அதாவது சுறுசுறுப்பு அதிகம்?

சி : எறும்பிற்கேயாகும்.

கு : அதுமட்டுமல்ல, பல ஜீவிகளும் பலவிதமுள்ள யுக்தியோடும் மிக நுட்பமாகவும் ஒவ்வொரு வேலையையும் செய்து வருகின்றன. அதேபோன்று நாமும் ஒரு ஜீவி. பல யுக்திகளும் தொழில்களும் நாமும் செய்கின்றோம். எனில் நம்மால் ஒருக்காலும் செய்ய முடியாத கைத்தொழில்களைத் தூக்கணங் குருவி, குளவி, தேனி, எட்டுக்கால் பூச்சி முதலான பல ஜீவிகளும் செய்து வருகின்றன. மேற்சொன்ன ஜீவிகளில் குறிப்பாகத் தேனீக்கள் மரக்கிளைகளின் கவரு அதாவது பிரிவின் அடிப்பாகத்தில் மிகவும் பெரிதாயுள்ள கூடுகட்டியும் அதில் ஐந்தும் பத்தும் அதற்கதிகமும் படிகள் தேனைக்கொண்டு வந்து பத்திரப் படுத்தியும் வாசம் செய்கின்றன. எனவே மனிதரென்றபிமானித்து வருகிறவர்கள் தவிர, மற்றெல்லா ஜீவிகளும் கூடுகள் கட்டுவது அவற்றினுடைய சுயசக்தியினால் ஏதாவது சமான்களைக் கொண்டு உண்டாக்குவதல்லாமல் வேறொன்றினுடைய உதவியோடு கூடி அவ்விதம் உண்டாக்குவதில்லை. அவ்விதம் கட்டுவதில் மற்ற யாதொரு ஜீவிகளுக்கும் யாதொரு விதத்திலும் யாதொரு உபத்திரவமோ, கஷ்டநஷ்டமோ அவர்களால் உண்டாவதில்லை. நாம் ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் எவ்வளவோ ஜீவிகளை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


நசிப்பிக்க வேண்டும்; எத்தனையோ மரங்களை நசிப்பிக்க வேண்டும்; எத்தனையோ ரம்பக்காரர் அதாவது வாள்காரர்கள் முதலான வேலையாட்கள் வேண்டும். எனினும் அவனவனுடைய சுயசக்தியினால் ஒரு வீட்டைக் கட்டவோ, ஏதேனும் செய்யவோ வேறொன்றினுடைய சகாயமில்லாமல் முடிவதில்லை. அதிகம் சொல்லுவானேன்! நாம் பல் தேய்ப்பதற்கு வேண்டி ஆலம் விழுதோ, கருவேலங் குச்சியோ, வேப்பங்குச்சியோ ஏதாவதொன்றை அறுத்து எடுப்பதற்கு வேண்டி ஏதாவது ஓர் ஆயுதத்தினுடைய உதவியில்லாமல் முடிவதில்லை.

எனில் மேல்சொன்ன ஜீவிகளுக்கு வேறொன்றின் உதவியில்லாமல் தங்களுடைய சுயசக்தி கொண்டு அவற்றிற்குத் தேவையான பொருள்களைத் தயாரித்து, அவற்றிற்கு வாசம் செய்வதற்கு வேண்டிய வீடு உண்டாக்க முடிகிறது. அவ்விதம் உண்டாக்கின தங்கட்கு இருக்க வேண்டியதான கூடாகிய வீடு எவ்விதமான கொடுங்காற்றினாலோ, மிகவும் கடினமான மழையினாலோ வீழ்ந்து நசிக்கவோ, மற்று யாதொரு உபத்திரவங்களும் அதற்கு நேரிடவோ செய்வதில்லை. மனிதரென்று அபிமானித்து வருகிற நாம் நமக்கு வாசம் செய்வதற்கு வேண்டி, கோடி ரூபாய் வரையில் செலவு செய்து, கருங்கல்லினால் நிரம்பவும் உறுதியாயும் பலமாயும் அஸ்திவாரம் கட்டி, அதன்மேல் ஒரு வீடு கட்டினால், அந்த வீடு மிகக் கடினமான மழையும் கொடுங்காற்றும் வந்ததானால் இடிந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



விழுந்து நசித்துப் போகின்றது. எனில் மேற்சொன்ன தேனீயின் கூடு அவ்விதம் விழுந்து நசிக்கிறதில்லை. காரணம் அவை கூடு உண்டாக்குகிற இடத்தைக் கவனித்து, இந்த இடத்தில் கூடு உண்டாகினால் எந்த விதத்திலுள்ள காற்றோ, மழையோ வந்தாலும் இங்கு உபத்திரவம் நேரிடாதென்றுள்ள உணர்வினால் உண்டாக்குகின்றதாகும். நமக்கு அவ்விதத்திலுள்ள உணர்வு இல்லாததாலாகும் நாம் கட்டுகின்றவை நசித்துப்போகக் காரணம். ஆகையினால் மேற்சொன்ன ஜீவிகளுடைய ஞானம் அதாவது அறிவு எவ்வளவோ மேன்மையாயும் ஆச்சரியமாயும் உள்ளதாகுமென்பதை நாம் அறியவேண்டியிருக்கிறது.

தவிர, ஒரு பறவைக்கு கற்பமுண்டானால் அந்தப் பெண் பறவையும் அதன் புருஷனான ஆண் பறவையும் சேர்ந்து பல சுள்ளிகளும் மற்றும் கொத்திக் கொண்டுவந்து, விசித்திரமாகக் கூடு உண்டாக்கி, பின் பெண் பறவை அந்தக் கூட்டில் முட்டையிட்டு, அதன்மேல் ஆணும் பெண்ணும் மாறி மாறி அடை காத்துக் கொண்டிருக்கின்றன. இவ்விதமிருந்து அந்த முட்டைகள் கருவாகி, அதனுள்ளில் குஞ்சுகள் உண்டாயிற்றென்று அறியும்பொழுது, அந்த முட்டைகளைக் கொத்தி உடைத்து, அதிலிருந்த குஞ்சுகளை அதிகப் பிரீதியுடன் கூடி வளர்க்கின்றன. அக்குஞ்சுகளுக்கு அச்சமயத்தில் சுயசக்தி இல்லாததால் அவற்றினுடைய சுயரக்ஷைக்கு அவற்றிற்கு சாத்தியமில்லை என்று எண்ணி, தாய் தகப்பன்மாராகிய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


இரண்டு பறவைகளும் அவற்றிற்கு வேண்டி மிகவும் கஷ்டப்பட்டு அலைந்து, ஆகாரம் முதலானவற்றைக் கொத்திப் பொறுக்கிக் கொண்டுவந்து வாயில் ஊட்டிக் காப்பாற்றி வருகின்றன. இறகு முதலானவை உண்டான பொழுது, அக்குஞ்சுகளைக் கொத்திப் பறக்குமாறும் இரை முதலியவற்றை எடுக்குமாறும் பழக்குகின்றன. அவற்றிற்குத் தனியே பறந்துபோய் உபஜீவனாதிகள் (உணவு முதலியன) எடுப்பதற்குரிய சுயசக்தி உண்டானபோது தாய் தகப்பன்மாருக்கு அவற்றின் பேரில் அதுவரையிலுண்டாயிருந்த பற்றையும், அவற்றைக் குறித்துள்ள முயற்சிகளையும் விட்டு, அவற்றை சமபாவனையில் கருதி, கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுகின்றன. **அதன் பிறகு தாய் என்றோ, தகப்பன் என்றோ, மகன் என்றோ, மகள் என்றோ யாதொரு பந்தமும் அவை தம்மில் இல்லை. தாயார் என்றால் எல்லாரும் தாயார், தகப்பனார் என்றால் எல்லாரும் தகப்பனார், புத்திரன் என்றால் எல்லாரும் புத்திரன், இப்படி சமபாவனையாய் நடக்கின்றன. ஆகையினால் அவற்றின் விசேஷ புத்தி மிகவும் அற்புதமாகத் தோன்றுகிறது.**

அதென்னவென்றால்: சுயசக்தியில்லாமலும், யாதொருவகை விவரமில்லாமலும், யாதொரு உணர்வு மில்லாமலும் இருக்கிற காலத்தில் அப்படியுள்ள குஞ்சுகளுக்கு சுயசக்தியுண்டாகி, தாங்கள் தாங்களே பறந்துபோய் உணவுக ளெடுத்து, ஜீவித்திருக்கிறதற்கு சக்தி உண்டாகும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வரையில் அந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்குத் தாங்களே உத்திரவாதிகளென்றுள்ள ஒரு விசேஷ புத்தியானது தாய் தகப்பன்மாராகிய அவற்றிற்கு உண்டாயிருந்ததால், முன் சொல்லிய விதத்திலுள்ள கஷ்டங்களை அனுபவித்து அந்தக் குஞ்சுகளை ரக்ஷிக்கவும், அவற்றிற்கு உபஜீவனத்திற்குள்ள பூர்ண சக்தி வந்திருக்கிறதென்றுள்ள பூர்ண நம்பிக்கை தாய் தகப்பன்மாருக்கு வந்தபோது அவற்றைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்து நடக்கவும் செய்கின்றன. அப்படியே அக்குஞ்சுகளும் இவர்கள் தங்களுடைய தாய் தகப்பன்மார்களாகும் என்றுள்ள மமதை அதாவது நேசத்தை விட்டு, கூட்டத்தில் சேர்ந்து, ஒன்றாகி, சமபாவனையாகி நடக்கின்றன. இவை அனைத்தும் நமக்குக் கண்கூடான அனுபவங்களல்லவா?

ரி : ஆம். கண்கூடான அனுபவங்களாகும்.

கு : மனிதரென்றும், விசேஷபுத்தியுள்ளவரென்றும் அபிமானித்து வருகின்றவர்களாகிய நமக்கு ஒரு சந்தானம் உண்டானால், அந்த சந்தானத்துக்குமுன் சொல்லப்பட்ட பறவைகள் கஷ்டப்பட்டு காப்பாற்றுகிறவிதத்தில் யாதொரு சம்ரக்ஷணையும் செய்வதில்லை. அந்தக் குழந்தையை ஏதாவது ஒரு பாயிலோ, மற்றோ படுக்கவைத்துத் தாய்மார்கள் அவரவருடைய வேலைக்காகப் பல இடங்களுக்கும் போகிறார்கள். அவருடைய வேலைகள் முடிந்த சமயம் எப்போதாகிலும் வந்து குழந்தைக்கு உணவு முதலியன கொடுக்கிறார்கள். அப்பொழுது குழந்தையினுடைய வயிறு காய்ந்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சமயமாய் இருக்கும். தவிர, இந்த ஆகாரமான முலைப்பால் அதிகம் கொதித்து நிறைந்து, பல நீர்களும் சேர்ந்து கெட்டதாகவுமிருக்கும். அதல்லாவிட்டால் பல வியாதிகளும் உள்ளதான பெண்களின் முலைப்பாலும் அல்லது ஏதாவது பழங்களும் யாதொரு யோசனையோ, புத்திவிவேகமோ இல்லாமல் தாய்மார்கள் கொடுக்கிறார்கள். அதனால் அக்குழந்தைக்குப் பலவித வியாதிகளுண்டாகி கஷ்டப்படவும் செய்கின்றது. எனில் பறவைகளில் ஒன்று ஆகாரத்திற்கு வேண்டிவெளியே போகும்பொழுது மற்றொன்று குஞ்சுகளுடைய பக்கத்திலிருந்து வேண்டியதான ரக்ஷணை செய்து வருகின்றது. இப்படி நாம் செய்வதில்லை.

தவிர, மனிதர்களாகுமென்றும் விசேஷபுத்தியுள்ளவர்களாகுமென்றும் அபிமானித்து வருகிறவர்களுக்குண்டாகிற சந்தானத்திற்கு நூறு வயதானாலும் அவருடைய தாயாரோ, தகப்பனாரோ உண்டாயிருந்தால், அவர் ''என்னுடைய மகன், என்னுடைய மகள், என் மகனுக்குக் கொடுக்க வேண்டும், என் மகளுக்குக் கொடுக்க வேண்டும், அவன் அந்நியன், அவனுக்குக் கொடுக்கக் கூடாது, அவன் வருகிறான், மறைத்து வைக்க வேண்டும்" என்றும், அதைப் போலவே அம்மக்களும் (புத்திரர்களும்) ''என்னுடைய தாய், என்னுடைய தகப்பன், என் தாய்க்குக் கொடுக்கவேண்டும், என் தகப்பனுக்குக் கொடுக்கவேண்டும், இது தாயினுடையது, தகப்பனுடையது, இவர்கள் நமக்கு சொந்தம்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


மற்றுள்ளவர் நமக்கு அந்நியர், அவர்களுக்குக் கொடுக்கவேண்டாம், அவர்களுக்குக் காண்பிக்கக் கூடாது". என்றும் மற்றுமுள்ள கெட்ட எண்ணங்களான ராகத்துவேஷம் முதலான கொடூர அதாவது கடினமான அந்தகாரத்தில் அதாவது இருட்டில் யாதொரு விசேஷ புத்தியும் அறிவும் இல்லாமல் மிருகங்களாகத்தான் உலகத்தில் மனிதரென்று அபிமானித்து வருகிற இருக்காலிகளுடைய நிலைமை காணப்படுகிறது. இதுவும் நமக்குக் கண்கூடான அனுபவமல்லவா?

சி : ஆம்; கண்கூடான அனுபவமேயாகும்.

கு : எனில் இம்மாதிரி நிலைமைகள் நாம் ஆலோசிக்காதது கொண்டாகும் நமக்கு ஞானம் உண்டாகாதது. என்னவென்றால்: "நான் மனிதனாகும், எல்லா ஜீவிகளைக் காட்டிலும் மேலானவனாகும், நான் செய்கிறது மட்டுமே புத்தி சக்தியோடும் யுக்தியோடும் அறிவோடும் கூடி செய்து வருகிறது" என்றும் "மற்ற ஜீவிகளுக்கு மேன்மையில்லை. அவை நமக்குத் தாழ்ந்தவை" என்றும் மற்றும் துரபிமானம் நிமித்தம் ஒரு குருட்டு நம்பிக்கை உலகத்தில் யாவரும் பொதுவாகக் கருதி வந்திருக்கிறார்கள். அப்படி வந்தது எதனாலெனின், மனிதர்களென்று அபிமானித்து வருகிறவர்களுக்கு யாதொரு விவேகமும் இல்லாதது கொண்டாகும். எனவே யாதொரு பொருளையும் கேட்கவோ, பார்க்கவோ, அறியவோ செய்தால் அதைப் பற்றி நாம் சரியாய் மனத்தை ஊன்றிக் காரிய காரணங்களைக் கொண்டு ஆலோசித்தால்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அதனுடைய உண்மை தெரியலாம். அவ்விதம் ஆலோசிக்காமலே ''நான் மேலோனாகும், மற்றெல்லாம் இழிந்தவையாகும், நமக்குக் கீழேயாகும்" என்றுள்ள மூட நம்பிக்கையின் நிமித்தம் உண்டாகிய துரபிமானத்தால் ஜனங்கள் யாதொன்றும் தெரியாதவராய்ப்போனார்கள். அதெப்படியென்றால்: ஈஸ்வரன் ஜீவனாகும். அந்த ஜீவனாய் இருக்கின்ற ஈஸ்வரன் தன்னுடைய இருதயத்திலிருந்துகொண்டு மாயையாய் இருக்கின்ற யந்திரம் நிமித்தம் சர்வ பூதங்களிலும் சலித்துக் கொண்டிருக்கின்றது. சர்வபூதங்களிலும் இருக்கின்ற பொருள் ஈஸ்வரனாகும். அந்த ஈஸ்வர சைதன்னியத்திற்கு ஒரே சக்தியல்லாமல் இரண்டு சக்தியில்லை. நாம் அதனுடைய உண்மையைத் தெரிந்து கொள்ளாததாலாகும் நம்முடைய சக்தி வேறென்றும், மற்றுள்ளவற்றிற்கு சக்தி வேறென்றும் எண்ணுகிறோம். எப்பொழுது உண்மையைத் தெரிந்துகொள்ளுகின்றோமோ அப்பொழுது இரண்டு சக்திகளில்லை என்றும் ஒரே சக்தியே இருக்கிறதென்றும் அது தன்னுடைய சக்திதான் என்றும் தெரியும். அப்பொழுது துரபிமானம் விட்டு ராகத்துவேஷம் முதலியன நசித்துத் தானாகின்றோம்.

சி : சுவாமி! இப்படிக் கற்பித்த நிலைமையில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகின்றது. அதாவது உலகத்தில் யாதொரு ஜீவிகளுக்கும் வித்தியாசம் இல்லையென்றல்லவா இதுவரை போதித்தீர்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எனில் உலகத்தில் ஸ்திரீபுருஷவித்தியாசம் கண்ணாரக் கண்டு வருகின்றோமல்லவா! அதை இல்லையென்று சொல்லுவதற்கிடமுண்டோ?

கு : இதுவரை சொன்னவற்றில் உமக்கு என்ன தோன்றுகிறது?

சி : எல்லாம் ஒரே சக்திதான் என்று சொன்னதற்குப்பின் மற்றொன்று வேறுபட்டு உண்டாவதற்கு இடமில்லை.

கு : ஆயினும் அதையும் விவரித்துச் சொல்லுகிறோம். கேட்பீராக! ஸ்திரீ புருஷன் என்பதில் யாராகும் ஸ்திரி, யாராகும் புருஷன் என்று சொல்லுவதற்கு முடியுமா?

சி : ஓ! சொல்லுவதற்கு முடியும். நாமெல்லாரும் புருஷர்களும் நம்மைப் பிரசவித்த தாய்மார்கள் ஸ்திரீகளுமாவர்.

கு : எனில் ஆதி முதல் இதுவரை உலகத்தில் சொல்லி வருவதும் நாம் தெரிந்துள்ளதும், நாமெல்லாம் ஸ்திரீகளாவரென்றும், ஸ்திரீகளெல்லாம் புருஷர்களாவரென்றும் சொல்லிவந்ததாக இருந்ததென்றால் இப்பொழுது நம்மை யெல்லாம் யாரென்று சொல்லுவோம்?

சி : அப்படியாக இருந்ததென்றால் நம்மையெல்லாம் ஸ்திரீகளென்று சொல்லுவோம்.

கு : அப்பொழுது நாம் ஸ்திரீயென்றோ, புருஷரென்றோ நமக்குத் தெரியவில்லை. உலகத்தில் சொல்லிவருவதை மட்டும் நாம் கிரஹித்தோம். அதனுடைய உண்மை எவ்விதமாகுமென்று ஆலோசிப்பதுமில்லை. எனில் புருஷன் என்று சொல்லுவதன் பொருள் என்னவாகும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : புரத்தில் வசிக்கின்றவன் புருஷன்.

கு : அப்பொழுது யானை முதல் எறும்புவரையிலும் உள்ள ஜீவிகள் எங்கே வசிக்கின்றன?

சி : தங்கள் தங்களுடைய வீடுகளில்.

கு : அவரவருடைய வீடு என்று சொன்னது எதைக் குறித்தாகும்?

சி : நமக்கெல்லாம் நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வீடுகளுக்கும் மற்றுள்ள ஜீவிகளுக்கு வசிப்பதற்காக எந்தெந்தவிதத்தில் இடங்களை அவை ஏற்படுத்தியிருக்கின்றனவோ அந்த இடங்களுக்குமாகும்.

கு : எனில் ஜீவனில்லாமலிருந்தால் நீர் சொன்னவிதத்திலிருக்கின்ற வீட்டினாலோ, இடங்களினாலோ ஏதாவது பயன் உண்டோ?

சி : யாதொரு பயனுமில்லை.

கு : அப்பொழுது புரம் அதாவது வீடு எதற்காக?

சி : அவரவர்கள் சுகமாக வசிப்பதற்காக.

கு : ஜீவனில்லாவிட்டால் சுகமாக வசிக்கலாமோ?

சி : வசிக்க முடியாது.

கு : அதென்ன காரணம்?

சி : ஜீவனில்லாததால்.

கு : அப்பொழுது யாருக்கு சுகமாக வசிக்க வீடு வேண்டும்?

சி : ஜீவனுக்கு.

கு : ஜீவன் வசிக்கும் வீடு யாதாகும்?

சி : இக்காணுகின்ற ஜடமாகும்.

கு : அப்பொழுது இந்த ஜடத்திற்கு என்ன பெயர் சொல்ல வேண்டும்?

சி : புரம் என்று சொல்ல வேண்டும்.

கு : அப்படியாயின் இந்த வீட்டில் (புரத்தில்)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எப்பொழுது ஜீவன் அடங்கி வெளியே சலிக்காமலிருக்கிறதோ அப்பொழுது புருஷனாகிறது. அந்தப் புருஷனாகும் ஜீவன். அது எவ்விதமென்றால்: ஒருவன் இதோ இக்காணுகின்ற வீட்டிற்குள் நுழைந்து கதவுகளை மூடி இருந்தால், அவனுக்கு வெளியேயுள்ள ஏதாவது நிலைமையைக் கேட்கவோ, காணவோ, அறியவோ முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் அவன் அந்த வீட்டிலிருந்து எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து திண்ணையில் வந்திருந்தால் அவனால் வெளியேயுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடியுமல்லவா?

சி : ஓ! முடியும்.

கு : எனில் உள்ளே இருந்தபொழுது வெளியே இருக்கின்றவற்றைக் கேட்காமலிருப்பதற்கும் காணாமலிருப்பதற்கும் அறியாமலிருப்பதற்கும் காரணமென்ன?

சி : அவன் வெளியேயுள்ள எல்லாத் தொழில்களையும் விட்டு உள்ளே சென்று கதவை மூடி சொஸ்தமாக இருந்தது கொண்டாகும்.

கு : வெளியே திண்ணைக்கு வந்தபொழுதோ?

சி : வெளியேயுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் முடிகிறது.

கு : எனில் வெளியேயுள்ள எல்லா நிலைமைகளைக் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் முடிகின்றபோது அவன் வீட்டிற்குள்ளேயோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியேயோ இருந்தான்?

சி : வெளியேயாகும்.

கு : அதெப்படியாகும்? அவன் வீட்டிற்கு வெளியே இருந்தானென்றால், அந்த வீட்டை விட்டுப்போக வேண்டும். அப்படி வீட்டைவிட்டுப் போனானென்றால், அவ்வீட்டினுடைய யாதொரு அவஸ்தை அதாவது நிலைமையையும் கேட்பதற்கோ, காணுவதற்கோ, அறிவதற்கோ முடிவதில்லை. அதுவல்லாமல் அவன் இந்த வீட்டின் திண்ணையிலிருந்து வெளியே இறங்கவில்லை. வெளியே இறங்காமல் வீட்டின் வெளியே இருந்தானென்று சொல்லுவதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : வீட்டிற்குள் இருந்தானென்று சொல்ல முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது அவன் வீட்டிற்குள்ளேயும் வெளியேயும் இல்லாமல் வீட்டின் திண்ணையிலிருக்கிறான். அச்சமயத்தில் வீட்டினுடைய வெளியேயுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் இடமாயிற்று. வீட்டை விட்டு வெளியே போயிருந்தாலும், வீட்டிற்கு உள்ளேயிருந்தாலும், வீட்டின் வெளியேயுள்ள யாதொரு நிலைமைகளையும் அறிவதில்லை. இப்படியே, நாம் படுத்துத் தூங்கும்பொழுது நம்முடைய ஜீவன் எங்கேயாகும்?

சி : அப்பொழுது நம்முடைய ஜீவன் உள்ளே அடங்கியிருக்கிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : தூக்கம் விழித்து இவற்றைக் கேட்கவும் பார்க்கவும் அறியவும் செய்யும்பொழுது, ஜீவன் எங்கேயாகும்?

சி : வெளியேயாகும்.

கு : நமது ஜீவன் எப்பொழுது வெளியே போய்விட்டதோ, அப்பொழுது நமக்கு இவற்றைக் கேட்கவும் காணவும் அறியவும் முடியுமோ?

சி : முடியாது.

கு : அது எதனால்? ஜீவன் வெளியே போய்விட்டால் என்னவாயிருக்கும்?

சி : பிணமாயிருக்கும்.

கு : உள்ளே இருந்ததென்றால் வெளியேயுள்ள யாதொன்றையும் அறிய முடியுமோ?

சி : முடியாது.

கு : எதனால்?

சி : ஜீவன் வெளியே வியாபிக்காமல் உள்ளே அடங்கியிருந்ததால்.

கு : அது எங்கே இருக்கின்றது?

சி : ஜீவனுடைய வீடாகிற புரத்திலாகும்.

கு : எனில் ஜீவனுடைய வீட்டில் ஜீவன் யாதொன்றிலும் சலிக்காமல் அடங்கியிருக்கும் பொழுது யாராய்த் தீருகிறது?

சி : புருஷனாய்த் தீருகிறது.

கு : அது எதனால்?

சி : ஜீவசக்தி வெளியில் வியாபிக்காமல் புரத்திலேயே அடங்கியதால்.

கு : அவ்விதம் வீட்டில் சொஸ்தமாய் அடங்கியவர் யாராகும்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : அவர்களெல்லாம் புருஷராகும்.

கு : அவ்விதம் வீட்டில் அடங்காதவர் ஆராயிருக்கும்?

சி : அவர்கள் அவர்களுடைய ஜீவன் உள்ளேயும் வெளியேயுமில்லாத நிலைமையில் உள்ளவராகும்.

கு : எப்பொழுது வெளியேயுள்ள நிலைமைகளைக் கேட்பதும் காண்பதும் அறிவதும் செய்கின்றது?

சி : தூக்கம் விழித்து ஜீவன் உள்ளேயும் வெளியேயும் அல்லாத தன்மையில் இருக்கும்பொழுது.

கு : எனில் எப்பொழுது ஜீவன் அடங்குகிறதோ, அப்பொழுது புருஷனும், எப்பொழுது தூக்கம் விழித்து உள்ளேயிருந்து ஜீவசக்தியாய் வெளியே வியாபிக்கின்றதோ, அப்பொழுது சிவசக்தியுமாகின்றது. அதாவது புருஷபிரகிருதி ஆகும். புருஷ பிரகிருதி என்று சொல்லுவது புருஷன் வீட்டிலிருந்து வெளியினுள்ளில் சக்தியாய் சலிப்பதற்காகும். புருஷன் என்பது ஜீவனாயிருக்கின்ற சிவனும், சக்தி என்பது ஸ்திரீயாய் இருக்கின்ற பிரகிருதி அதாவது மாயையும் ஆகின்றன. அந்த ஜீவனாயிருக்கின்ற சிவனாகிய புருஷனுக்கு வெளியே சலனம் உண்டான பொழுதாகும் புருஷபிரகிருதி என்று சொல்லுவது. அந்த பிரகிருதியாகும் சக்தி. அதாகும் தாயார். அதிலிருந்தாகும் ஜனனம் உண்டாகிறது. அப்பொழுது நம்முடைய தாய் யாராகும்?

சி : மாயையாயிருக்கின்ற சக்தி.

கு : ஜீவன் யார்?

சி : சிவன்.

கு : சக்தி நமக்குத் தாயாராகும்பொழுது சிவன் யார்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : தகப்பன்.

கு : **அப்பொழுது சிவன் தகப்பனும், அது புருஷனும் (ஆணும்), சக்தி தாயும், அது ஸ்திரீயும் (பெண்ணும்) ஆகின்றன.** அப்பொழுது நம்மை ஆணென்றோ, பெண்ணென்றோ சொல்ல இடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : அப்பொழுது ஆணும் பெண்ணும் தகப்பனும் தாயுமாகின்றனர். அதனால் நாம் ஆணும் பெண்ணும் அல்லாதவராகிறோம். அப்பொழுது நம்மை என்னவென்று சொல்ல வேண்டும்.

சி : ஆணும் பெண்ணும் அல்லாதவர் என்று சொல்ல வேண்டும்.

கு : ஆணும் பெண்ணும் அல்லாதவரை யாரென்று சொல்ல வேண்டியது?

சி : ''நபும்ஸகம்'' அதாவது ''அலி'' என்று.

கு : **அப்படியாயின் நம்மில் புருஷனாக, சிவனாக இருக்கின்ற ஜீவன் வெளியே வியாபித்துச் சலனம் உண்டானபோது சக்தியாகி விடுகின்றது. அந்த சக்தியாகும் மனம். அந்த மனமாகின்ற சக்தியிலிருந்தாகும் நான் என்று அபிமானிக்கின்ற அகங்காரமாகிய நபும்ஸகம் அதாவது அலியின் உற்பத்தி.** அதற்கு உதாரணம்: நமக்கு மிகவும் பழக்கமாயிருக்கின்ற ஓர் அறையில், கதவுகளை மூடித் தாழிட்டுப் படுத்துத் தூங்குகையில், திடீரென்று தூக்கம் கலைந்து எழுந்திருந்தால், யாதொரு பழக்கமுமில்லாத விதம் கதவு தெரியாமல் தட்டுத்தடுமாறி நடந்து, தலை, முகம் முதலானவற்றைச் சுவற்றிலோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மற்றோ மோதிக் காயப்படுத்திக் கொள்கிறோம். அதன் காரணம்: தூக்கம் கலைந்தபோது புருஷனாயிருக்கின்ற சிவன் சக்தியாய் வெளியே வந்தது. அந்த சக்திதான் மனம். அப்பொழுது மனம் மட்டுமே உண்டாயிருந்தது. அதனால்தான் கதலைத் தெரிய முடியாமலிருந்தது. தெரிய வேண்டுமென்றால் நான் என்கிற அகங்காரமாகிய நபும்ஸகம் வேண்டும். அந்த நபும்ஸகத்திற்காகும் இன வித்தியாசங்களுள்ளது. நான் என்றுள்ள அகங்காரமாகிய நபும்ஸகத்தின் வழியாகும் மனதாகின்ற சக்தி பின்னப்பட்டு பிரகாசிக்கின்றது. அந்த அகங்காரமாகிய நான் என்றுள்ள நிலைமை இல்லாதிருந்தால் யாதொன்றுமில்லை. வெளிப்படையாய் நாம் யாதொன்றைக் கேட்பதோ, காணுவதோ, அறிவதோ செய்கின்றோமோ அவையெல்லாம் அகங்காரமாகும்.

அந்த அகங்காரமாகும் பிரம்மா. அப்படியுள்ள பிரம்மா மனமாக இருக்கின்ற சக்தி கொண்டாகும் சிருஷ்டிக்கின்றது. அதனாலாகும் பிரம்ம சிருஷ்டி என்று சொல்லுவது. அந்த பிரம்மா இல்லையென்றால் யாதொரு சிருஷ்டியுமிராது. அந்த பிரம்மா எப்பொழுதும் யக்ஞத்திலிருக்கின்றார். யக்ஞம் என்பது யாகம். அந்த யாககுண்டமானது புருவமத்தியம். அந்த புருவமத்தியம் சுழிமுனை என்கிற அக்கினி நேத்திரம். அத்தன்மையுள்ள அக்கினிகுண்டத்தினருகே நான் என்கிற அகங்காரமான பிரம்மா இருந்து கொண்டு விசாராதிகளாகிய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பொருள்களை அந்த அக்கினிகுண்டத்தில் ஓமம் செய்கின்றது. அந்த ஓமத்திலிருந்து உற்பவித்த தூமம் அதாவது புகையாகும் இக்காணப்படுகிற உலகம். உலகம் என்று சொல்லப்படுவது புகையாகும். அந்தப் புகைக்குள் அகப்பட்டது கொண்டாகும் நமக்கு ஸ்திரீபுருஷர்கள் இன்னதென்று அறியமுடியாமற்போயிற்று. எப்பொழுது உலகமாயிருக்கின்ற அந்தப்புகை நீங்குகிறதோ அப்பொழுது விளக்கமாக நமக்குப்புலப்படும். புகை நீங்க வேண்டு மென்றால் ஓமம் செய்த பொருள்கள் எரியவேண்டும். எரிந்தால் பிரகாசிக்கும். பிரகாசிக்கும்பொழுது சர்வமும் தன்னுடைய ஜீவசக்தியாயிருக்கிற மனமென்று அறிப்படும். அப்பொழுது அந்த ஜீவசக்தியாயிருக்கின்ற மனம் தன்னில்தானே அடங்கித்தானாயிருக்கும். இந்த உண்மையை கிரஹிக்கும்பொழுது மட்டுமே நபும்ஸகம் விட்டுப் புருஷனாய்த் தீருவோம்.

ரி : ஓ! குருவே! நமக்குத் தாய் மாயையென்றும் அது சக்தியென்றும் முன் சொன்னீர்களல்லவா? எனில் உலகத்தில் பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாகவும், அவர்கள் குழந்தைகளைப் பிரசவிக்கவும் செய்கிறார்கள். அப்படி பிரசவிப்பவரையாகும் நாம் தாயாரென்று சொல்லுகிறோம். இது எவ்விதமென்று விவரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு : யார் பிரசவிக்கிறார்கள்?

ரி : பெண்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : பெண்கள் பிரசவிப்பதன் காரணமென்ன?

சி : கர்ப்பம் உண்டாயிருந்ததால்.

கு : கர்ப்பம் எப்படி உண்டாகின்றது?

சி : சம்யோகத்தினால்.

கு : சம்யோகமில்லையானால் கர்ப்பம் உண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : சம்யோகம் செய்தால் கர்ப்பம் உண்டாகக் காரணமென்ன?

சி : சுக்கிலம் அதாவது விந்து சென்று விழுவதனாலாகும்.

கு : சுக்கிலமில்லையென்றால் கர்ப்பமுண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : அப்பொழுது கர்ப்பம் உண்டாவதற்கு சுக்கிலம் என்னவாகிறது?

சி : பீஜமாகிறது.

கு : பீஜமென்றால் என்ன?

சி : வித்து அதாவது விதை.

கு : வித்து இல்லாமல் யாதேனும் உண்டாகுமோ?

சி : உண்டாகாது.

கு : உங்களுடைய கைவசம் கொஞ்சம் நெல் விதை இருக்கின்றதாக வைத்துக் கொள்ளுவோம். அதைப் பயிர் செய்ய வேண்டும். அதை எவ்விதம் பயிர் செய்கிறது?

சி : வயலின் ஒரு பாகத்தை உழுது சேறாக்கி சமப்படுத்தி அதில் விதைக்கிறோம்.

கு : அந்த விதையை விதைக்க வேண்டிய இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் விதைத்தால் முளைக்குமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : முளைக்கும்.

கு : ஒருக்காலமும் முளைக்காது. விதைக்க வேண்டிய இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் விதைத்தால் ஒருக்காலமும் முளைப்பதில்லை. நீங்கள் அவ்விதையைப் பத்திரப்படுத்தியிருந்த களஞ்சியத்திலிருந்தோ, அறையிலிருந்தோ முளைக்குமோ?

சி : முளைக்காது.

கு : அந்த விதையை ஒரு பாறையின்மேல் போட்டாலோ, அல்லது தண்ணீருள்ள ஒரு கிணற்றிலோ, குளத்திலோ, நதியிலோ, சமுத்திரத்திலோ போட்டாலோ அது முளைக்குமா?

சி : முளைக்காது.

கு : காரணமென்ன?

சி : வித்து விதைப்பதற்காகத் தயார் செய்த இடத்தில் அல்லாததால்.

கு : அப்பொழுது வித்து விதைக்க ஏற்படுத்திய இடத்தில் அல்லாமல் விதைத்தால் முளைப்பதில்லை. அந்த வித்து விதைப்பதற்காகத் தயார்செய்த இடத்தில் விதைத்தால், அது முளைத்து வளர்ந்து, முதிர்ந்து, கதிர் உண்டாகிறது. எனில் அந்தக் கதிரை நீர் நெற்கதிரென்றோ, வயலின் கதிரென்றோ சொல்லுவீர்?

சி : நெற்கதிரென்றே சொல்லுவேன்.

கு : அந்தக் கதிர் வயலில் அல்லவா உண்டாயிற்று? எதைக் கொண்டாகும் நெற்கதிரென்று சொல்லுவது?

சி : அந்த வயலில் நெல்விதையை விதைக்கவில்லை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



யென்றால் அந்த நெற்கதிர் உண்டாவதில்லை. அப்பொழுது அந்த நெல்விதையிலிருந்துதான் அந்தக் கதிர் உண்டாயிற்று. அதனால்தான் நெற்கதிர் என்று சொல்லக் காரணம்.

கு : அந்த வயலைக்கொண்டுள்ள தேவை என்னவா யிருந்தது?

சி : விதை விதைத்துப் பயிர்செய்ய வேண்டிய தேவைக்காகும்.

கு : அந்த விதையை வயலில் பயிர் செய்து கதிர் உண்டானபோ வயலிலிருந்து உண்டானது என்று சொல்லக்கூடுமோ?

சி : கூடாது.

கு : அப்படியானால் அந்த நெற்கதிர் எதிலிருந்து உண்டானது எனச் சொல்ல வேண்டும்?

சி : விதையிலிருந்து.

கு : அப்பொழுது அந்தக் கதிரைப் பிரசவித்தது யாராகும்? வயலோ, வித்தோ?

சி : வித்தாகும் பிரசவித்தது.

கு : எனில் அந்த வித்தை விதைக்க வேண்டியதல்லாத இடத்தில் விதைத்தால் முளைப்பதில்லை. அதுமட்டுமல்லாமல் அந்த வயலை உழுது சமப்படுத்தி அதில் வித்திட்டால், சமமாகித் தளர்ச்சியாயிருக்கும் சேற்றில் அவ்வித்து விழுந்து, சேற்றில் பதிந்து, தளர்ச்சியினால்பருக்கவும் முளைக்கவும் வேரிறங்கவும் முடிகிறது. அப்பொழுது அதற்கு யாதொரு தடையுமில்லாமல் அது வளர்ந்து வருகிறது. அந்த இடம் தளர்ச்சி இல்லாமலிருந்தால் சேறு இறுகி, விதை நெருங்கி, முளைப்பதற்கும் வேர் இறங்குவதற்கும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முடியாமல் நசித்துப் போகிறது. அப்பொழுது வித்து விதைக்க வேண்டிய இடம் உழுது சமப்படுத்தியும் தளர்ச்சியாயும் இருக்க வேண்டும். இப்படியேதான் சுக்கிலம் அதாவது விந்து என்னும் வித்தினைப் போட்டு முளைப்பிக்க வேண்டிய இடமாகும் கர்ப்பம் உண்டானதென்றும் பிரசவித்ததென்றும் சொல்லிவருகிற ஸ்திரீகளுக்குள்ள சம்யோக இடம் என்று நினைப்பீராக. அந்த இடம் தவிர மற்றெந்த இடத்திலாவது சுக்கிலமாகிய வித்தைப் போட்டால் கர்ப்பம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : காரணம்?

சி : சுக்கிலமாகிய விதையை விதைக்க வேண்டிய இடத்திலன்றி வேறிடத்தில் போட்டதனாலாகும்.

கு : சுக்கிலமாகிய விதையைப் போட வேண்டிய இடமாகிய வயலைத் தளர்த்தி செய்கின்றதுதான் புணர்ச்சி. அந்த சம்யோகம் அதாவது புணர்ச்சியினால் அந்த இடம் தளர்ச்சியாகிறது. அப்பொழுது நான்காம் அத்தியாயத்தில் சொன்னபடி முட்டை வடிவாகி சுக்கிலம்சென்று விழுகிறதும் அந்தத் தளர்ச்சியாயிருக்கின்ற இடம் அதற்குச் சேர்க்கையாய் நின்று முட்டை வடிவாகிய வித்து முளைத்து வருவதற்காக தளர்ச்சியாவதும் அது பருத்து மூப்படைந்தபோது, உடைந்து வெளியில் வருவதுமாகும். அதுவாகும் சந்தானம் (குழந்தை). அப்பொழுது அந்த ஸ்திரீ பிரசவித்தாளென்று சொல்லுவதற்கிடமுண்டோ?

சி : இல்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : என்ன காரணம்?

சி : அது சுக்கிலத்தில் இருந்தாகும் உண்டானது. சுக்கிலம் இல்லை என்றால் பிரசவிப்பதில்லை.

கு : அப்படியானால் புருஷன் சுக்கிலத்தை தரிக்கின்றது அதாவது நிலைநிறுத்துவதுதான் கர்ப்பம். அதெப்படியென்றால்: ஜடமாகிய புரத்தில் சுக்கிலத்தை கர்ப்பிக்கிறது. அதாவது வெளியில் விடாமல் பத்திரம் செய்து விருத்தியாக்குகின்றது. அப்பொழுதாகும் கர்ப்பம்தரித்தது. அப்படிச் செய்யாவிட்டால் சுக்கிலமுண்டாகி சந்தானமுண்டாவதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது யாராகும் கர்ப்பம் தரித்திருந்தது?

சி : புருஷன்.

கு : அப்படியானால் பிரசவிக்கின்றது யார்?

சி : புருஷன்.

கு : இவ்விதம் சொல்லப்படும் புருஷன் தரிக்கின்ற கர்ப்பத்தை ஸ்திரீகளென்று சொல்லப் பட்டவர்களுடைய புணர்ச்சியிடமாகிய, வித்தை விதைக்கவேண்டிய இடத்தில் புணர்ச்சி செய்து, தளர்ச்சியாக்கி, அந்தத் தளர்ச்சியில் வித்தாகின்ற சுக்கிலத்தை புருஷன் பிரசவிகின்றான். அந்த சுக்கிலத்திலிருந்து மனிதரென்றபிமானித்து வருகின்றவராகிய பிரகிருதி அதாவது இயற்கையாயிருக்கின்ற உருவத்துடனுள்ளவர் உற்பவிக்கின்றதைக் காண்கிறோம். அதில் புருஷரென்று சொல்லுகின்றவரில் அடங்கி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



யிருக்கின்ற சுக்கிலத்திலிருந்து உற்பவித்தால் அதாவது உண்டானால் புருஷரென்று சொல்லி வருகிறவருடைய உருவமும், ஸ்திரீயென்று சொல்லிவருகின்றவரில் அடங்கியிருக்கின்ற சுக்கிலத்திலிருந்து உற்பவித்தால் ஸ்திரீயென்று சொல்லி வருகிறவருடைய உருவமும் உண்டாகின்றன.

சி : சுவாமி! ஸ்திரீக்கு சுக்கிலமுண்டோ? அப்படி உண்டெனினும் அது எப்படி கர்ப்பப்பாத்திரத்தில் விழுகிறது?

கு : ஸ்திரீக்கும் சுக்கிலமுண்டு. ஸ்திரீக்கும் சுக்கிலம் உற்பத்தியாகி வருவதாகிய ஒரு கருவி அதாவது புருஷனென்றபிமானித்து வருபவர்களுக்குள்ள மூத்திரக் குழாய்க்கு சமமான ஒரு கருவி உண்டு. அதன் வழியேதான் அவர்களுக்கு சுக்கிலம் வருகின்றது. நமக்கும் அவ்விதமேதான் மூத்திரக் குழாயின் வழி சுக்கிலமும் வருகின்றது. எனில் ஸ்திரீகளுக்குள்ள குழாய்க்குக் கீழே கர்ப்பப் பாத்திரமாகிற பை போலிருக்கிற ஒரு தோல் சேர்ந்து மூடப்பட்டிருக்கிறது. அது புணர்ச்சி சமயத்தில் வாயுவின் சக்தியினால் திறக்கப்படுகிறது. அது எவ்விதமெனில்: ஒரு தோல்பந்திற்குள் பம்பினால் அதாவது குழலால் காற்றை உட்செலுத்துவது போலாகும். அது திறந்த சமயத்தில் அதில் இரத்தம், நீர், முதலியவை சென்றுவிழுந்து தளர்ச்சியாகின்றது. அதில் புருஷரென்று சொல்லி வருகின்றவருடையவோ அல்லது ஸ்திரீகளென்று சொல்லி வருகின்ற வருடையவோ சுக்கிலம் முட்டை வடிவமாகச்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சென்றுவிழுவதும், அது அந்தத் தளர்ச்சியிலிருந்து பெரிதாகி, முதிர்ந்து, உடைந்து வெளியில் வரவும்செய்கின்றது. அதில் ஸ்திரீ என்கிற உருவமும் புருஷன் என்கிற உருவமும் உண்டாகின்றன.

சி : ஸ்திரீயின் சுக்கிலம் ஸ்திரீ ரூபமென்றும், புருஷனின் சுக்கிலம் புருஷ ரூபமென்றும்சொன்னீர்கள் அல்லவா? அந்த ஸ்திரீரூபம் சில தகப்பனின் நிறமும் (உருவமும்), புருஷரூபம் சில தாயின் நிறமு(உருவமும்)மாய்க் காணப்படுகின்றனவே! அதன்காரணமென்ன?

கு : புணர்ச்சி சமயத்தில் புருஷன் ஸ்திரீயிடத்தில் அதிக மோகத்துடன் ஏக விசாரமாயிருக்கின்ற சமயத்தில் சுக்கிலம் இளகியதானால் அந்த ஸ்திரீயினுடைய உருவம் அச்சுக்கிலத்தில் பிரதிபிம்பிக்கின்றது. ஸ்திரீக்கும் இப்படியே புருஷனிடத்தில் அதிக மோகத்துடன் ஏகவிசாரமாயிருக்கின்ற சமயத்தில் சுக்கிலம் இள்கியதானால் அப்புருஷனுடைய உருவம் ஸ்திரீயினுடைய சுக்கிலத்தில் பிரதிபிம்பிக்கின்றது. அப்பொழுது அந்நியோந்நியம் பிரதிபிம்பிக்கின்றதே உருவமாக அமைகின்றது. காரணம், விசாரமாகும் உருவம்; விசாரமில்லை யென்றால் உருவமில்லை, அந்த விசாரம் மனத்திலிருந்துண்டாகின்றது. அந்த மனம்தான் சுக்கிலம். அச்சுக்கிலத்தினால்தான் சிருஷ்டி. அந்த சிருஷ்டியே உருவம். அந்த உருவமே விசாரம். இதனால்தான் நிற(உருவம்) வித்தியாசம் ஏற்படுகின்றது. அதற்குள்ள திருஷ்டாந்தம்: குதிரையை இணை சேர்க்கின்றது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எப்படியெனில் நல்ல அழகுள்ளதான ஓர் ஆண் குதிரையைப் பெண் குதிரையின் முன்பு நிறுத்தி, அதன்பின் அப்பெண் குதிரையினுடைய கண்களைக் கட்டி, கோவேறு கழுதையை அந்தப் பெண் குதிரைக்குத் தெரியாமல் அதனுடன் இணை சேர்க்கப்படுகிறது. அந்தச் சமயத்தில் தன் முன்னிலையில் நிறுத்திய ஆண் குதிரைதான் தன்னுடன் இணை சேருகிறதென்று அது நினைக்கிறது. அப்பொழுது அந்தக் கோவேறு கழுதையினுடைய பீஜமாகிய சுக்கிலம் இளகுகிற சமயம் அந்த சுக்கிலத்தில் பெண் குதிரையினுடைய விசாரம் அதாவது நினைப்பு பிரதிபிம்பித்து கர்ப்பப்பாத்திரத்தில் சென்று விழுகிறது. அதன் பிறகு கோவேறு கழுதையை அப்புறப்படுத்தி, பெண் குதிரையினுடைய கண்கட்டியதை அவிழ்த்துவிடப்படுகிறது. அப்பொழுது மேல்சொன்ன புணர்ச்சி சமயத்தில் உண்டாயிருந்த விசாரத்தை அனுசரித்து (தன் முன்பு நிறுத்திய ஆண் குதிரையே தன்னோடு புணர்ச்சி செய்ததென்ற விசாரத்திற்கனுசரித்து) தன் முன்பு நின்றிருந்த ஆண் குதிரைக்குச் சமமான குட்டி உண்டாகின்றது. ஆனால் உண்மையில் அப்பெண்குதிரையோடு சேர்ந்தது கோவேறு கழுதையாகும். அதை அறியாது அதன் முன்பு நின்றிருந்த ஆண் குதிரையே இணை சேர்ந்தது என்ற விசாரத்துக்கு அனுசரித்து குட்டி உண்டாயிற்று. அதுகொண்டு உருவம் என்றுசொல்லுவது விசாரமாகும். அதனால் சுக்கிலம் இளகும்பொழுது எப்படி விசாரமிருந்ததோ அதை அனுசரித்துத்தான்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உற்பத்தி ஏற்படுகின்றதென்பது இதிலிருந்து நமக்கு விளங்குகின்றதல்லவா?

சி : ஆம். மேற்கூறியவாறே என்று வெளிப்படுகிறது. எனினும் சுவாமி! புருஷ சுக்கிலம்கொண்டு மட்டுமோ அல்லது ஸ்திரீ சுக்கிலம்கொண்டு மட்டுமோ ஒரு சந்தானம் உண்டாவதற்கிடமுண்டோ?

கு : அவ்விதம் உண்டாவதில்லை. ஸ்திரீகளுக்கு சுரதமும் இரத்தமும் சுக்கிலமும் உண்டு. சம்யோக சமயத்தில் அவர்களுக்கு முதலில் சுரதம் என்ற நீரும், இரத்தம் என்ற சுரோணிதமும் உண்டாகும். கர்ப்பப்பை திறந்திருக்குமானால் நீரும் சுரோணிதமும் அதில் விழுகிறது. அப்பொழுது ஸ்திரீயினுடையதோ, புருஷனுடையதோ, அதில் யாருடைய சுக்கிலம் முதலில் முன்னே இளகுகிறதோ, அஃது நான்காம் அத்தியாயத்தில் சொன்னவாறு முட்டை வடிவமாகச் சென்று விழுகிறது. புருஷனுடைய சுக்கிலம் கர்ப்பப்பையில் விழுந்ததன் பின் ஸ்திரீயினுடைய சுக்கிலம் முன்சொன்ன முட்டை வடிவமாய் விழுந்ததானால், அதுவும் ஒரு சிசுவாய்த் தீரும். அது முட்டை வடிவாய் விழாவிட்டால் சுரோணிதத்தில் விழுந்து அதோடு கரைந்துவிடும். அதனால்தான் ஆண்களுக்குத் தோல் மிருது (மென்மை) இல்லாமலிருக்கக் காரணம். அதேவிதமாய் முட்டை வடிவமாய் ஸ்திரீயினுடைய சுக்கிலம் கர்ப்பப்பையில் விழுந்ததன் பின், புருஷனுடைய சுக்கிலம் முட்டை வடிவாய்விழுந்தால் அதுவும் ஒரு சந்தானமாகிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அப்படி முட்டை வடிவாகாமல் அந்தப் புருஷனுடைய சுக்கிலம் சுரோணிதத்தில் விழுந்தால் அது சுரோணிதத்தோடு கரைந்துவிடும். அப்படிப் பிறக்கிறதாகும் பெண் குழந்தைகள். அதனால்தான் பெண்களுடைய சடம் மிருதுவாக இருக்கக் காரணம்.

சி : ஸ்திரீபுருஷர்களுடைய சுக்கிலம் இரண்டும் ஒரேவிதமல்லவா? அப்படியிருக்க புருஷனுடைய சுக்கிலம் சுரோணிதத்தோடு சேர்ந்தபொழுது உண்டாகிற பெண் குழந்தைகளின் ஜடம் மிருதுவாய் இருக்கவும், ஸ்திரீயினுடைய சுக்கிலம் சுரோணிதத்தோடு சேர்ந்தபொழுது உண்டாகிற ஆண் குழந்தைகளின் ஜடம் மிருது இல்லாமலிருப்பதற்கும் காரணம் என்னவென்று சொல்லித்தரவேண்டும்.

கு : புருஷனுடைய சுக்கிலம் மிருதுவாயும், இளகலாயும், ஸ்திரீயினுடைய சுக்கிலம் கட்டியாயும் இருக்கும். அதனால்தான் அந்த வித்தியாசங்கள் உண்டாகக் காரணம்.

சி : சுவாமி! பெண்களுடைய சுக்கிலம் கட்டியாயும் ஆண்களுடைய சுக்கிலம் மிருதுவாயும் இளகலாயும் இருக்கக் காரணமென்ன?

கு : பெண்களுக்கு சம்யோககாலத்தில் மூன்றுவிதமான முறையில் அதாவது முதலில் சுரதம் என்னும் நீரும், இரண்டாவதாக சுரோணிதம் என்னும் இரத்தமும், மூன்றாவதாக வீரியமாயிருக்கின்ற சுக்கிலமும் இளகி வருகின்றன. இவை மூன்றும் தனித்தனியாய் இளகி வருவதால்தான் சுக்கிலம் கெட்டியாய் அதாவது கட்டியாய்வரக் காரணம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆண்களுக்கு மேற்சொன்ன சுரதம், சுரோணிதம், சுக்கிலம் மூன்றும் தனித்தனியல்லாமல் ஒன்றாய்ச் சேர்ந்ததனாலாகும் அது கட்டியன்றி, மிருதுவாயும் இளகலாயுமிருக்கக் காரணம். ஆனால் ஸ்திரீ புருஷர்களுடைய சுக்கிலத்தை ஊதிக் கட்டி நிறுத்தும்போதுதான் ஞானம் உண்டாகின்றது. அது ஊதிக்கட்டி நிறுத்தும்பொழுது மணியாகும். அதற்காகும் ரசமணி என்று சொல்லுவது. ரசம் சுக்கிலமாகும். அந்த சுக்கிலத்தை ஊதிக்கட்டி நிறுத்துவதற்காகும் ரசவாதம் என்று சொல்லுவது. ரசம் = சுக்கிலம். வாதம் = வாயு. அதனால் நம்முடைய ஜீவசக்தி வாயு வடிவாய் வெளியே போய் நசிப்பதை அப்படி நசிக்கவிடாமல் நம் உள்வழியாய் மேலும் கீழும் ஊதி சுக்கிலத்தைக் கட்டி நிறுத்த வேண்டும். அப்பொழுதாகும் நமக்குப் பிறவிப் பெரும்பயன் கிடைப்பது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# ஏழு

சிஷ்யன் : சுவாமி! விசாரமே உருவம் என்றும், உருவம் விசாரமாகும் என்றும் கற்பித்தீர்கள் அல்லவா? எனில் அப்படியே காணப்பட்டு வருகின்றது. அதனுடைய பொருள் என்னவென்று எனக்குப் புலப்படவில்லையே?

குரு : இப்படி கேட்கப்படுவதும் காணப்படுவதும் அறியப்படுவதும் ஒன்றுமில்லாததாகும். இவையெல்லாம் தன்னிலிருந்து உண்டானதென்றும் தன்னிலேயே லயிக்கப்படுவதென்றும் இதற்கு முன்பு பல தடவைகளிலும் சொல்லியிருக்கிறதல்லவா? எனில் இவற்றைக் கேட்பதும் காண்பதும் அறிவதும் எல்லாம் சொப்பனமாகும்.

சி : குருவே! இவை எல்லாம் சொப்பனமா? நான் இப்பொழுது தூங்கவில்லையல்லவா? தூங்கும்பொழுதல்லவா சொப்பனம் காண்பது? இப்பொழுது எப்படிச் சொப்பனமென்று சொல்லுவது?

கு : ஓஹோ! நீர் இப்பொழுது உணர்வோடுதான் இருக்கின்றீரோ! ஒருக்காலுமில்லை. இப்பொழுது தூங்குவதாகும். அத்தூக்கத்தில் கேட்பதும் காண்பதும் அறிவதுமாகும் இவையெல்லாம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சுவாமி! என்ன இவ்விதம் கற்பிக்கிறீர்கள்? நான் தூங்கும்பொழுது யாதொன்றும் அறிவதில்லை. இப்பொழுது நான் உணர்வுடனிருப்பதாகும். அதனாலேதான் இவையெல்லாம் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் வழியானது. இவ்விதமிருக்க, இது தூக்கமென்றும் இக்காணுவதெல்லாம் சொப்பனமென்றும் சொல்லுவதை எவ்விதத்தில் நம்புவது?

கு : எனில் உங்களுக்கு இப்பொழுது தூக்கம் தெளிந்திருக்கிற தல்லவா? தூக்கம் தெளிந்திருக்கிற நிலைமைக்கு என்னவென்று சொல்ல வேண்டும்?

சி : இந்த நிலைமைக்கு ஜாக்கிரதை என்றாகும்.

கு : எத்தனை நிலைமைகள் உண்டு?

சி : மூன்று நிலைமைகள் உண்டு.

கு : அவை என்னென்னவாகும்?

சி : **ஜாக்கிரதை, சொப்பனம், சுழுத்தி**

கு : இப்பொழுது எந்த நிலைமையாகும்?

சி : ஜாக்கிரதையாகும்.

கு : ஜாக்கிரதை என்று சொல்லப்படுவது என்ன?

சி : உணர்வோடிருக்கிறது.

கு : இப்பொழுது உமக்கு உணர்வுண்டோ?

சி : உணர்வுண்டு.

கு : உணர்வுண்டானால் உம்மை நீர் அறியவேண்டிய தல்லவா?

சி : ஆம். அறியவேண்டியதாகும்.

கு : அப்படியாயின் நீர் உம்மை யாராகுமென்று அறிந்திருக்கிறீரா?

சி : இல்லை; என்னை நான் யாரென்று அறிந்ததில்லை.

கு : உம்மை நீர் அறிந்ததில்லையென்று நீரே தான்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சொல்லுகிறீர். எனில் உம்மை நீர் அறியவில்லை யென்றால் பின்னர் உமக்கு உணர்வு இருக்கிற தென்று சொல்லுவதற்கு வழியுண்டா?

சி : சொல்லுவதற்கு வழியில்லை.

கு : உணர்வில்லாத நிலைமைக்கு ஜாக்கிரதையென்று சொல்லலாமா?

சி : சொல்லக்கூடாது.

கு : ஜாக்கிரதை அல்லவென்றால் பின் என்னவா யிருக்கும்?

சி : சுழுத்தியாயிருக்கும்.

கு : சுழுத்தியென்றால் என்ன?

சி : தூக்கம்.

கு : எனில் உமக்கு இப்பொழுது நல்ல தூக்கமாகும். அதற்கு உதாரணம்: நீர் படுத்துத் தூங்குகிற சமயம், நான் இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கிறேன் என்கிற நினைவு உமக்கு உண்டா?

சி : இல்லை.

கு : **இவ்விதமேதான் நீர் இப்பொழுது தூங்குகிறீர். அப்படித் தூங்குவதால்தான், நான் இப்பொழுது தூங்குகிறேன் என்கிற நினைவு இல்லாமலாயிற்று.**

சி : நாம் தூங்குகிற சமயத்தில் இவ்விதமான யாதொரு நிலைமையும் நாம் காணவில்லையல்லவா? இப்பொழுது இவை காணப்படுகின்றன. இப்படி காணப்படுவதற்குக் காரணமென்ன?

கு : நீர் தூங்கும்பொழுது சொப்பனம் காண்பதில்லையா?

சி : சொப்பனம் காண்பதுண்டு.

கு : அந்தச் சமயத்தில் நான் இப்பொழுது தூங்கிக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கொண்டிருக்கிறேனென்றும் இக்காணப்படுவது சொப்பனமென்றுமுள்ள நினைவு உமக்கு இருக்கின்றதா?

சி : இல்லை.

கு : அந்த சொப்பனம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது உமது நினைவு என்னவாயிருந்தது?

சி : இது ஜாக்கிரதை நிலைமையென்றும் உண்மையில் நான் அனுபவிப்பதென்றுமாயிருந்தது.

கு : தூக்கம் விழித்த பொழுதோ?

சி : நான் இதுவரை தூங்கிக்கொண்டிருந்தேனென்றும், அப்பொழுது தோன்றிய யாவும் தூக்கத்தில் கண்ட சொப்பனமென்றும் தெளிவாகிறது.

கு : இதைப்போலவே நாம் இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால் இக்கேட்பதும் காண்பதும் அறிவதுமாகிய யாவும் சொப்பனமே. அது எவ்விதமென்றால்: நீர் தூங்கும்போது சொப்பனம் காணுவதும் அது உண்மையில் நாம் அனுபவிப்பதாயும் இருந்தது. எனில் அப்போதைய தோன்றல், தூக்கம் விழித்த போதாகும், நாம் அப்பொழுது கண்டது உண்மையல்லவென்றும், நாம் தூங்கியது கொண்டு சொப்பனம் கண்டதென்றும் அறிவானது. இதைப்போலவேதான் இது தூக்கமாகும். இதில் காணுவதெல்லாம் சொப்பனமாகும். இந்தத் தூக்கம் எப்பொழுது தெளிகின்றதோ அப்பொழுது மட்டுமே, நான் இதுவரை தூங்கிக்கொண்டிருந்தேன் என்றும், அப்பொழுது பார்த்ததெல்லாம் சொப்பனமாய் இருந்தது என்றும் புலப்படுகின்றது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சுவாமி! இந்த நிலைமை தூக்கமென்றும், இப்பொழுது காணப்படுவனயாவும் சொப்பனம் என்றும் தெளிவாகிறது. எனில் நான் சாதாரணமாய்த் தூங்குவதும் சொப்பனம் காண்பதும் உண்டல்லவா? அதற்கென்னவென்று சொல்ல வேண்டும்?

**கு : உமக்கு இந்தத் தூக்கமும் சொப்பனமும் அல்லாமல் வேறு நீர் தூங்குவதோ, சொப்பனம் காணுவதோ உண்டாவதில்லை.**

சி : சுவாமி! என்ன இவ்விதம் கற்பிக்கின்றீர்கள்? நான் சாதாரணமாய்த் தூங்குவதும் சொப்பனம் காணுவதுமுண்டு. இது எனக்கு அனுபவமாயிருக்கையில் தாங்கள் இல்லையென்று சொல்லுவதை எப்படியாகும் நம்பவேண்டியது?

கு : எனில் நீர் சாதாரணமாய்த் தூங்குவதுண்டென்றும், சொப்பனம் காணுவதுண்டென்றும் சொல்லுவது எவ்விதமென்றால்: உம்முடைய வீட்டிலிருந்து சுமார் ஒரு நாழிகை தூரத்திற்கப்பால் ஒரு தொழிற்சாலை உண்டாயிருந்தது. அத்தொழிற்சாலையில் நீர் இருக்கும்பொழுது உம்முடைய பார்வை காணுமிடம் வரையும், சப்தம் கேட்குமிடம் வரையும், என்ன சங்கதிகள் நடக்கின்றனவோ அவை யாவும் கேட்கவும் காணவும் அவற்றை உங்களுக்கு அறியவும் முடியும். அந்த இடம் விட்டு சொந்த வீட்டிற்கு வந்தால் தொழிற்சாலையில் நடக்கிற யாதொரு சங்கதிகளும் உங்களுக்கு கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : அதென்ன காரணம்?

சி : தொழிற்சாலையிலுள்ள எவ்வித சங்கதிகளையும் நான் காணாததால்.

கு : ஏன் காணுவதில்லை?

சி : தொழிற்சாலையை விட்டு சொந்த வீட்டிற்கு வந்ததால்.

கு : தொழிற்சாலையை விட்டு சொந்த வீட்டிற்கு வந்தபோது தொழிற்சாலையிலுள்ள எவ்வித சங்கதியும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடிவதில்லை. எனில் அச்சமயத்தில் நீர் தூங்குகின்றீரென்று சொல்லுவதற்கு இடமுண்டா?

சி : இடமில்லை.

கு : அதெப்படியென்றால்: இக்காணப்பட்ட சடம் உலகமாகும். அதனுடைய அடிப்பாகம் தொழிற் சாலையும் மேல்பாகம் சொந்த வீடுமாகின்றது. எனில் தொழிற்சாலை இருக்கின்ற பூமி வேறு என்றும் சொந்த வீடு இருக்கின்ற பூமி வேறு என்றும் இவ்விதம் இரண்டு பூமிகளுண்டோ?

சி : இல்லை, ஒரே பூமியாய்த்தான் இருக்கிறது. ஆனால் ஒரு பாகத்தில் சொந்த வீடும், மற்றொரு பாகத்தில் தொழிற்சாலையும் இருக்கின்றன.

கு : இந்த விதமாகத்தான் இக்காணப்பட்ட உலகு நமக்கு ஒரு தொழிற்சாலையாகும். நீர் சாதாரணமாகத் தூங்குகிறேனென்று சொல்லும் சமயம் இந்தத் தொழிற்சாலையை விட்டு சொந்த வீட்டில் இருக்கின்ற சமயமாகும். எனில் தொழிற்சாலையை விட்டு சொந்த வீட்டிலிருந்தபோது தொழிற்சாலையிலுள்ள

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


யாதொன்றையும் கேட்கவோ, காணவோ, அறியவோ, முடியாமலிருக்கின்ற நிலைமை, நீர் சாதாரணமாய்த் தூக்கமென்று சொல்லிவருகிற நிலைமையாகும். அது தூக்கமன்று, தொழில் விட்ட சமயமாகும்.

சி : எனில் அந்தத் தொழிற்சாலையை விட்டு வந்தவர் யாரென்று எனக்குத் தெரியவில்லையே?

கு : கேட்பதும் காண்பதும் அறிவதும் உம்மில் யாராகும்?

சி : என்னுடைய மனமாகும்.

கு : மனம் இல்லாவிட்டால் உமக்கு யாதேனும் கேட்பதற்கும் காண்பதற்கும் அறிவதற்கும் தொழில் செய்வதற்கும் முடியுமா?

சி : முடியாது.

கு : அப்பொழுது யாராகும் தொழிற்சாலையில் இருந்ததென்று தெரியவேண்டியது?

சி : மனமாகும்.

கு : எனில் தூங்குவதென்று சொல்லுவது மனம் சொந்த வீட்டிற்கு வந்திருப்பதற்காகும். அதற்குத் தூக்கம் என்று சொல்லுவதற்கிடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : எனில் அதற்கென்னவென்று சொல்ல வேண்டும்?

சி : மனத்தினுடைய வேலை விட்ட சமயம் என்றாகும்.

கு : தவிர, ஒரு கடையில் கடைக்காரன் அநேக சாமான்களை வைத்துக்கொண்டு பகல் முழுவதும் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறான். வியாபாரத்தை நிறுத்துகிற சமயம் சாமானங்களை எடுத்து உள்ளே வைத்துக் கதவை மூடி, தான் உள்ளே இருக்கிறான். அந்தச் சமயத்தில் அவனுக்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


யாதேனும் வியாபாரங்கள் உண்டாயிருந்ததா?

சி : உண்டாயிருந்ததில்லை.

கு : அந்தச் சமயத்திற்கு அவனுக்கு என்ன சமயம் என்று சொல்ல வேண்டும்?

சி : வியாபாரத்தை நிறுத்தின சமயம் என்று சொல்ல வேண்டும்.

கு : **இப்படியே மனம் ஒரு வியாபாரியாகும். அந்த மனம் விசாராதிகளாய் இருக்கின்ற சாமான்களை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கிறது. பிறகு அந்த வியாபாரத்தை நிறுத்தி விசாராதிகளாய் இருக்கின்ற சாமான்களுடன் உள்ளே போய்க் கதவை மூடியிருக்கிறது. அந்த நிலைமைக்காகும் நாம் தூங்குகிறோமென்று சொல்லுவது. அது தூக்கமன்று. அது மனத்தினுடைய வியாபாரம் நிறுத்தின சமயமாகும். தூக்கமென்று சொல்லவேண்டியது இப்பொழுதுள்ள நிலைமைக்கேயாகும்.**

சி : குருவே! தூக்கம் இவ்விதமானால் சொப்பனம் எவ்விதம் உண்டாகும்?

கு : எனில் நீங்கள் தூங்காமலிருந்து சொப்பனம் காண்பதில்லை என்று சொன்னது சரியன்று. தூங்கும்போது ஒரு பொழுதும் சொப்பனம் காண்பதில்லை. அவ்விதம் சொப்பனம் காண்பதானால் அந்தச் சமயத்திற்குத் தூக்கம் என்று சொல்லுவதற்கிடமில்லை. அதெப்படியென்றால்: நீங்கள் முன் சொல்லப்பட்ட தொழிற்சாலையை விட்டு சொந்த வீட்டிற்கு வந்திருந்தபோது தொழிற்சாலையிலிருந்து கேட்டதும் கண்டதும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அறிந்ததும் செய்ததுமாகிய எல்லாக் காரியங்களைப் பற்றியும் நீர் ஆலோசிப்பதில்லையா?

சி : ஆலோசிப்பதுண்டு.

கு : தூங்கும் சமயத்தில் ஆலோசிக்க முடியுமா?

சி : முடியாது.

கு : அவ்விதம் ஆலோசிப்பதற்கு சொப்பனம் என்று சொல்லக்கூடுமா?

சி : கூடாது.

கு : எனில் அந்த நிலைமைக்கு என்னவென்று சொல்ல வேண்டும்?

சி : நான் செய்தவையும் செய்ய வேண்டியவையுமாகிய தொழில்களைப் பற்றி யோசிக்கின்ற சமயமென்று சொல்லலாம்.

கு : எனில் யோசனை செய்வது எப்பொழுது? எங்கிருந்து?

சி : தொழிலைவிட்டு சொந்த வீட்டில் வந்திருக்கும் சமயம்.

கு : எனில் நீர் தூக்கமென்று சொல்லுகின்ற சமயம் மனத்தினுடைய தொழில்விட்டு சொந்த வீட்டிலிருக்கின்ற நிலைமையல்லவா? அவ்விதம் இருக்கும்பொழுது, மனம் தன்னுடைய தொழில்களைப் பற்றி ஆலோசிப்பதைத்தான் சொப்பனம் என்று சொல்லுவது. அதெப்படியென்றால்: நீர் தொழிலைவிட்டு சொந்த வீட்டிற்கு வந்திருந்து உமக்கு அறிவுண்டாகியதற்குப் பின் நடந்ததான காரியங்களில் சில உமக்கு ஞாபகமிருப்பது வரை ஆலோசிக்க முடிவதும் ஆலோசிப்பதும் அல்லாமல், மேலும் இன்னது செய்ய வேண்டுமென்றும், செய்விக்க

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேண்டியதென்றும் உமக்கு ஆலோசிக்க முடிவதும், நீர் ஆலோசிப்பதும் சகஜமல்லவா? அதைப் போலவேதான் மனத்தினுடைய தொழிலை விட்டு சொந்தவீட்டிலிருந்து தன்னால் கேட்கப்பட்டதும் காணப்பட்டதும் அறியப்பட்டதும் ஆலோசிப்பதுதான் நீர் சாதாரணமாய் சொப்பனம் காணுவதென்று சொல்லுவது. அது சொப்பனமன்று. மனம் தொழிற்சாலையை விட்டு, சொந்த இடத்திலிருந்து கொண்டு முன் சொன்ன சங்கதிகளைப் பற்றி ஆலோசிப்பதாகும். இந்த ஆலோசனைக்கு சொப்பனம் என்று சொல்லுவதற்கிடமுண்டா?

சி : இடமில்லை.

கு : அது மட்டுமன்று; நீர் பிறந்த பிறகு கேட்காதிருந்ததோ, காணாதிருந்ததோ, அறியாதிருந்ததோ ஆகிய யாதொரு சங்கதியை யாவது சொப்பனம் காணுவதுண்டா?

சி : காணுவதுண்டு.

கு : நீர் பிறந்ததன் பிறகு கேட்காதவையோ, காணாதவையோ, அறியாதவையோ, ஆகிய யாதொன்றைக் குறித்தும் சொப்பனம் காண்பதில்லை. எனின் ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்சு, காசி, இராமேஸ்வரம், கிஷ்கிந்தை, அயோத்தி, ஹரித்துவாரம், சத்திய லோகம், பாதாளம், நரகம், சொர்க்கம் முதலானவற்றைப் பார்த்ததாகவும், மேலே பறந்தேன், சமுத்திரத்தில் விழுந்தேன், தீயில் குதித்தேன், யானை முட்டியது, சிறுத்தை பிடித்தது, புலி கடித்தது, பாம்பு கடித்தது, மரத்தின் மேலிருந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


விழுந்தேன், கப்பலேறினேன், ஓடினேன், விழுந்தேன், தாயார் இறந்தாள், தகப்பனார் இறந்தார், குழந்தை கிணற்றில் விழுந்தது, வண்டியில் போனேன், கால் முறிந்தது, கை முறிந்தது, கண் குருடாகியது, தூக்குப் போட்டிறந்தேன், உத்தியோகம் பார்த்தேன், ஆற்றில் விழுந்தேன், வியாபாரம் செய்தேன் என்றும் மற்றுமுள்ள பலவிதத்திலுள்ளவை சொப்பனத்தில் காணுவதில்லையா? இவற்றில் ஏதாவது நீர் பிறந்தபின் கேட்காததோ, அறியாததோ, காணாததோ ஆன சங்கதி களாகுமா?

சி : அல்ல.

கு : அதனால் மனம் தன்னுடைய தொழில்விட்டு சொந்தவீட்டிலிருந்து தன்னால் கேட்கப் பட்டதும் காணப்பட்டதும் அறியப்பட்டதும் ஆலோசிப்பதாகும் அந்த நிலைமை. அதனால் அது சொப்பனமன்று. சொப்பனமென்பது இப்பொழுது நாம் அனுபவிக்கின்றதாகும்.

சி : சுவாமி! இது சொப்பனமென்று சொன்னீர் களல்லவா? எனில் இவ்வளவு அதிகமாக சொப்பனம் அனுபவிப்பதில்லையல்லவா?

கு : சாதாரணமாகப் படுத்துத் தூங்குகிறேன் என்று சொல்லுகிற சமயத்தில் நீர் அனுபவித்தேன் என்று சொல்லுகிற சொப்பனமோ, அதல்லாமல் இப்பொழுது நீர் அனுபவிக்கிற சொப்பனமோ அதிகம்?

சி : இப்பொழுது அனுபவிக்கிற சொப்பனமாகும்.

கு : எனில் நீர் தூங்குகிறேன் என்று சொல்லும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சமயத்தில் அனுபவிக்கும் சொப்பனத்தினுடைய ஒரு நிமிஷ நேரமாவது இப்பொழுது அனுபவிப்பதில்லை. அதெப்படியென்றால்: இப்போதுள்ள அனுபவம் நிமிஷ சொப்பனமும் தூங்கும் சமயத்தில் அனுபவிப்பதென்று சொல்லுகிற சொப்பனம் நீண்ட சொப்பனமும் ஆகும். நீர் சாதாரணமாகப் படுத்துத் தூங்கினேனென்று சொல்லுகிற சமயத்தில் அனுபவித்ததென்று சொல்லுகிற சொப்பனம் எவ்வளவு நேரம் உண்டாயிருக்கலாம்?

சி : மிகவும் குறைந்த நேரமாகும். அதாவது ஒன்றோ, இரண்டோ நிமிஷநேரம் உண்டாயிருக்கலாம்.

கு : அந்தச் சமயத்திற்குள்ளாக நீர் எவ்வளவோ அநேக காலத்திலுள்ள நிலைமைகள் அனுபவிக்கிறீர். எப்படியென்றால்; தாய் இறந்தாள்; தகப்பனிறந்தார்; காசியிலும் ராமேஸ்வரத்திலும் திருநெல்லியிலும் போய் பிண்டம் வைத்தேன், இன்ன வருஷம், இன்ன மாதம், இன்னதேதியிலாகும் நான் பிறந்தது; இன்றைக்கு அறுபது வயதாயிற்று; ஷஷ்டிபூர்த்தியாயிற்று; நான் வாதரோகம் பிடித்துக் கிடக்கிறேன்; மிகவும் கஷ்டப்பட்டுப்போனேன்; வெட்டுண்டு காயம்பட்டது; கேஸில் தண்டிக்கப்பட்டேன்; சிறைக்குப் போனேன்; இராஜாவாகினேன்; இன்ன இடத்தில் இறந்தேன்; இன்ன இடத்தில்பிறந்தேன்; இன்ன மனிதனைத் தூக்கத்தில் போய்க் கூப்பிட்டேன்; நாங்களிருவரும் ஒரே இடத்தில் படுத்துத் தூங்கினோம் என்று இவ்விதத்தில் அநேக சதுர்யுக காலங்களில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அனுபவித்ததாக சொப்பனம் கண்டு பயப்பட்டு அழவும் செய்கிறீர். அச்சமயம் நீர் சொல்லும் தூக்கத்திலிருந்து விழித்தால் இப்படி ஏதேனும் உண்டானதோ, அனுபவித்ததோ உண்டா?

சி : அப்படி உண்டானதோ, அனுபவித்ததோ இல்லை.

கு : எனில் மேற்சொல்லியவிதம் அனுபவித்ததாய்த் தோன்றியது எவ்வளவு நேரத்திலாகும்?

சி : ஒரு நிமிஷநேரத்திலாகும்.

கு : ஒரு நிமிஷநேரம் கொண்டு எவ்வளவு காலங்களின் வரலாறுகளாகும் நமக்குத் தோன்றி அனுபவிக் கப்படுகிறது?

சி : அது அநேக சதுர்யுக வரலாறுகள் அனுபவித்ததாய்த் தோன்றுகிறது.

கு : அப்பொழுது ஏதாகும் நீண்ட சொப்பனம்?

சி : தூங்குகிறோமென்று எண்ணிவருகிற சமயத்தில் தோன்றுகிற சொப்பனமாகும்.

கு : எனில் நாம் இப்பொழுது தூங்குவதாகும். இப்படித் தூங்குவதனால்தான், உலகம் உண்டென்றும் தாய்தகப்பன்மார் இருக்கின்றனர் என்றும், பிறந்தோம் என்றும், இறந்தோம் என்றும், ஐந்து வயது முதல் நூறு வயது வரையிலும், நூற்றிருபது வயது வரையிலும் ஜீவித்திருந்தோம் என்றும், பிறந்தவுடன் இறந்தோம் என்றும் மற்றுமுள்ள இக்காணுகின்ற எல்லா நிலைமைகளும் தோன்றுகின்றன. இது நமக்கு ஒரு நிமிஷ நேரத்துச் சொப்பனமாகும். எந்தச் சமயத்தில் நம்முடைய இத்தூக்கம் தெளிகின்றதோ, அப்பொழுது மட்டுமே நாம் இதுவரையிலும் தூங்கிக் கொண்டிருந்தோம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்றும், கண்டதெல்லாம் சொப்பனமாம் என்றும் தோன்றுவதாகும். ஆகையினால் இப்பொழுது நமக்குத் தூக்கமும், இதில் கேட்பதும் காண்பதும் அனுபவிப்பதும் அறிவதும் சொப்பனமுமாகும். எனில் இது உண்மையன்று. மட்டுமன்றி, தூக்கமென்று சொல்லுவது அறியாமைக்காகும். அது அறிய வேண்டுவதை அறிந்துகொள்ளாமல் இருப்பதாகும்.

சி : சுவாமி! ''நான் சுகமாய்த் தூங்கினேன், யாதொன்றும் அறியவில்லை" என்று தூக்கம் விழித்தபின் சொல்லுகின்றோம். இந்த வாசகத்தில் ஒன்றுமே தெரிவதில்லை; தூங்கிப் போனேன் என்று அறியப்படுகிற ஓர் அறிவு மிச்சப்படுகிற தல்லவா? அது என்ன?

கு : இந்த வார்த்தையானது மிகவும் தவறாகும். எப்படி யென்றால்: நீர் தூங்குவதற்காகப் படுத்துத் தூக்கம் வரும்ளவும், நான் தூங்குவதற்காகப் படுத்துக் கொண்டு இருக்கிறேன் என்றும், தூக்கம் விழித்தால் நான் இதுவரையிலும் தூங்கிக் கொண்டிருந்தேன் என்றும், ஒரு நினைவு உண்டாயிருக்கலாம், தூங்குகிற சமயத்தில் நாம் தூங்குகிறோம் என்கிற நினைவு உண்டாயிருந்ததோ?

சி : இல்லை.

கு : தூக்கம் விழித்தபோது தூங்கிக்கொண்டிருந்தோ மென்று நீர் அனுமானிப்பதல்லாமல் தூங்கிய போது என்ன நிலைமையிலிருந்தோமென்று உங்களுக்குச் சொல்ல முடியுமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : முடியாது.

கு : எனில் உலகத்தில் சாதாரணமாகப் படுத்துத் தூங்கும்பொழுதோ, உணர்வற்றுக் கிடக்கும் பொழுதோ, 'அபஸ்மாரம் அதாவது காக்கை வலிநோய் பாதித்துக் கிடக்கும்பொழுதோ, ஜன்னி வந்து உச்சிவரை ஏறி மயங்கிக் கிடக்கும் பொழுதோ, அதுவுமின்றி ஆஸ்பத்திரியிலிருந்து குளோரோபோம் அதாவது உணர்வு கெடுப்பதற் குள்ள மயக்க மருந்து மூக்கின் நேரே பிடித்து மயக்கம் செய்த தருணத்திலோ உலகத்தைப் பற்றியோ, மற்றோ ஏதாவது அறிவோ, உணர்வோ உண்டோ?

சி : இல்லை.

கு : எனில் அவையெல்லாம் எவ்விதம் கருத வேண்டும்?

சி : தூக்கமாகவேதான் கருத வேண்டும்.

கு : அதனால் தூக்கமென்று சொல்லுகிறது அறிவை அறியாமலிருப்பதற்காகும். எனில் அறிவா யிருக்கின்ற பொருள் எதுவாகும்?

சி : அது தானாயிருக்கின்ற ஜீவன்.

கு : அறியாமையாய் ஆவதற்கு என்னவென்று சொல்ல வேண்டும்?

சி : ''மாயை" என்றாகும்.

கு : அப்பொழுது நாம் எந்த நிலைமையிலிருக் கிறோம்?

சி : மாயையிலாகும்.

கு : அப்பொழுது மாயை என்னவாகின்றது?

சி : தூக்கமாகின்றது.

கு : ஆகையினால் மாயையாயிருக்கின்ற தூக்கத்தில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கண்டு அனுபவிக்கின்ற சொப்பனமாகும் இக்காணுகின்ற நிலைமை. எப்பொழுது மாயையாயிருக்கின்ற தூக்கம் தெளிகின்றதோ அப்பொழுது உணர்வு உண்டாகும். அந்த உணர்வாகும் ஜாக்கிரதை. ஜாக்கிரதை என்று சொல்லுவது அநித்தியமாகி, என்னுடையதென்றும் உன்னுடையதென்றும் மற்றுமுள்ள ராகத்துவேஷாதிகளான எண்ணங்களை விட்டு, நித்தியமாயுள்ள தன்னைத்தான் அறிகின்ற நிலைமையாகும். அப்பொழுது மட்டுமே ஜாக்கிரதை என்று சொல்லுவதற்கு இடமுண்டு. இப்பொழுது "ஜாக்கிரதை" இல்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# எட்டு

சிஷ்யன் : குருவே! உலகம் தன்னிலிருந்து உற்பத்தியானதென்றும், அது ஒரு புகையென்றும், சொப்பனமென்றும் கற்பித்தீர்களல்லவா? எனில் உலகம் கர்ம பந்தமென்றும், அவ்விதம் கர்மத்தினால் பந்திக்கப்பட்டதனால் கர்மம் செய்தால் மட்டுமே விமோசனம் கிடைக்குமென்றும், எல்லாம் கர்மமாகுமென்றும், கர்மமில்லையென்றால் ஒன்றும் இல்லையென்றும் சொல்லுகிறார்களே! இதனுடைய பொருள் என்னவென்று தெரியவில்லை.

குரு : உலகம் உம்மிலிருந்து உண்டான ஒரு புகையாமென்றும், அது சொப்பனமாகுமென்றும் நீர் பூரணமாக நம்பியிருந்தீரானால் உமக்கு ஏது கர்மம்? என்ன கர்மபந்தம்? அதல்லாமல் கர்மம் என்பது என்ன?

சி : கர்மம் என்பது தொழில்.

கு : ஒருக்காலும் கர்மத்திற்குத் தொழில் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நமக்கு மூன்று நிலைமைகளில்லாமல் யாதொன்றும் செய்வதற்கு முடியாது. அதாவது கர்த்தா (எழுவாய்), கர்மம் (செயப்படுபொருள்), கிரியை (பயனிலை) என்பனவாம். இவ்விதமுள்ள மூன்று நிலைமைகள் இல்லையெனில் உலகமில்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவை இல்லாமல் ஒரு தொழில் என்கிற சொல் உண்டாகுமா?

சி : உண்டாவதில்லை.

கு : எனில் இம்மூன்றினுடையவும் பொருள் என்னவாகும்?

சி : கர்த்தா = தொழிலைச் செய்கின்றவன். கர்மம் =முன்சொன்ன தொழில். கிரியை = யாதொன்றைச் செய்கின்றோமோ அது.

கு : செய்கிறது என்பதன் பொருளென்ன?

சி : தொழில் என்றாகும்.

கு : அப்பொழுது செய்கை என்பது என்னவாகிறது?

சி : தொழிலாகிறது.

கு : அப்பொழுது கிரியைக்கும் தொழில் என்று அர்த்தமாகிறது. கர்த்தா, கர்மம், கிரியை இவ்விதம் மூன்று நிலைமைகளில் கர்த்தாவென்பது செய்கின்ற ஆளென்றும், கர்மத்துக்கும் கிரியைக்கும் தொழில் என்றும் வருகிறது. அப்படி வருவதற்கிடமில்லை. ஏனென்றால்: ''கண்ணன் முயலைக் கொன்றான்'' என்கிற வாசகத்தில் கர்த்தா, கர்மம், கிரியை உளவோ? உளவாயின் அவை எவையெவை?

சி : உள. கண்ணன் என்பது கர்த்தாவும் முயலை என்பது கர்மமும் கொன்றான் என்பது கிரியையுமாகும்.

கு : அப்பொழுது கர்மத்திற்குத் தொழில் என்கிற அர்த்தம் போய்விட்டது அல்லவா? 'கண்ணன் முயலைக் கொன்றான்' என்கிற வாசகத்தில் நீர் சொல்லிய விதமன்றி வேறுவிதமான பொருள் இருக்குமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ரி : இருக்காது.

கு : அப்பொழுது கர்மம் என்பதற்கு தொழிலென்ற பொருளுண்டா?

ரி : இல்லை.

கு : எனில் கர்மம் என்பது என்னவாகும்?

ரி : பெயரோடு கூடியிருக்கின்ற ஒரு பொருளாகு மென்று வந்தது.

கு : எனில் உலகத்தில் கர்மமென்பது இன்னதாகு மென்று தெரியாமலே, அதைத் தொழிலென்று கருதியிருக்கின்றார்கள். அது அவ்விதமன்று. ஒரு பொருள் இல்லையென்றால் தொழில் செய்வதற்கு முடியாது. அவ்விதமல்லாமல் உலகத்தில் எப்படிப் பார்த்தாலும் கர்மமென்பது பொருள் என்றல்லாமல் தொழிலென்று காண்பதில்லை. ஏனென்றால் கர்த்தா, கர்மம், கிரியை இவை மூன்றும் அடங்கியிருக்கின்ற வாசகமும், கர்த்தாவும் கிரியையும் அடங்கிய வாசகமும், கர்மமும் கிரியையும் அடங்கியிருக்கிற வாசகமும் நாம் பேசுகிறோம். அவற்றைப் பற்றியும் நாம் ஆலோசித்துப் பார்ப்போம். எனினும்கர்மம் என்பது ஒரு பொருள் என்றே வெளிப்படும். அதாவது 'கிருஷ்ணன் புசித்தான்', இந்த வாசகத்தில் என்னென்ன இருக்கின்றன?

சி : கர்த்தாவும் கிரியையும் மட்டுமாகும்.

கு : எது கர்த்தா? எது கிரியை?

சி : கிருஷ்ணன் என்பது கர்த்தாவும் புசித்தான் என்பது கிரியையுமாகும்.

கு : புசித்தான் என்பதைக் கிரியை என்று சொல்லு வதன் காரணமென்ன?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : புசித்தல் தொழிலாகும். அந்தத் தொழிலுக்காகும் கிரியை என்று சொல்லுவது.

கு : நீரல்லவா முன்னால் கர்மமென்பது தொழில் என்று சொன்னது? இப்பொழுது கிரியையாகுமென்று சொல்லுகிறீர். எனில் 'கிருஷ்ணன்புசித்தான்' என்கிற வாசகத்தில் கர்மம் வெளிப்பட்டிருக்கின்றதா?

சி : இல்லை.

கு : எனில் கர்மத்தை வெளிப்படுத்தலாம். 'கிருஷ்ணன் எதைப் புசித்தான்' என்கிற கேள்வியில் பழத்தைப் புசித்தான் என்று பதில் கிடைக்கிறது. அந்த வாசகத்தில் கர்மம் என்னவாகும்?

சி : அதில் கர்மம் என்பது பழமாகும்.

கு : அப்பொழுது பழம் என்று சொல்லுவது தொழிலோ அல்லது பொருளோ?

சி : பொருளேயாகும்.

கு : அப்பொழுது கர்மம் என்பது ஒரு பொருள் என்று இதிலும் வெளிப்படுகின்றது. தவிர, உம்முடைய வீட்டில் ஒரு மாம்பழத்தைப் பத்திரப்படுத்தக் கொடுத்தீர். பின்பு ஒரு சமயத்தில் அந்த மாம்பழத்தைத் தேவைப்பட்டீர். அப்பொழுது அதற்குப் பதிலாக 'அந்த மாம்பழத்தைத் தின்று விட்டேன்' என்று சொல்லுகிறார். இந்த வாசகத்தில் என்னென்ன உள?

சி : கர்மமும் கிரியையும் மட்டும் உள.

கு : அதில் கர்மம் எது? கிரியை எது?

சி : மாம்பழம் என்பது கர்மமும் தின்றுவிட்டேன் என்பது கிரியையும் ஆகும்.

கு : இந்த வாசகத்திலும் கர்மம் பொருளென்றுதான்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளிப்படுகிறது. அதனால் இப்படி, எந்தவிதம் உலகத்தில் நடக்கின்ற சங்கதிகளைப் பார்த்தாலும், கர்மம் என்பதற்குப் பொருள் என்றல்லாமல் தொழில் என்கிற அர்த்தம் இல்லாததேயாகும். அதனாலாகும் கர்மம் இல்லையானால் ஒன்றுமில்லை என்றும், எல்லாம் கர்மமாகுமென்றும் சொல்லக் காரணம். அதனால் கர்மம் பொருளாகுமென்று வெளிப்பட்டது. அப்பொழுது அந்தப்பொருள் இல்லையானால் ஒன்றுமில்லையென்றும் எல்லாம் அப்பொருளாகுமென்றும் வருகிறது. அதனால் அந்தப் பொருளைத்தான் நாம் அறிய வேண்டும். அந்தப் பொருளென்பது எதுவென்று சொல்ல முடியுமா?

சி : சொல்ல முடியும். அது என்னதாகுமென்று பார்த்தால் எவையெல்லாம் காணப்படுகின்றனவோ அவை அனைத்தும் பொருளாகும். அதனால் இக்காணப்படுவன எல்லாம் பொருளாகும்.

கு : இக்காணப்பட்டவை அனைத்தும் ஒவ்வொரு பொருளென்றாலும் நீர் இல்லாவிட்டால் உமக்கு இந்தப் பொருள்களைக் காண்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : அது என்ன காரணம்?

சி : நான் இல்லாததால்.

கு : நீர் இருக்கிறீர் என்றால் காண்பதற்கு முடியுமா?

சி : முடியும்.

கு : எனில் நீர் தூங்குகிற சமயத்தில் இவற்றைக் காண்பதுண்டா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : காண்பதில்லை.

கு : அது என்ன காரணம்? நீர் இல்லாதிருந்தீரா?

சி : அப்பொழுது நான் இருந்தேனென்றாலும், என்னிலிருந்து உண்டான சக்தி என்னிலேயே அடங்கியிருந்தது. அதனால் காணவில்லை.

கு : அந்த சக்தி என்னவாயிருந்தது? ஒரு பிணத்திற்கு அந்த சக்தி உண்டாயிருந்ததோ?

சி : அந்த சக்தி என்னுடைய ஜீவசக்தியாயிருந்தது. பிணத்திற்கு ஜீவனில்லாதிருந்ததால் அந்த சக்தி உண்டாயிருந்ததில்லை.

கு : அந்த ஜீவசக்தி என்னவாயிருந்தது?

சி : வாயுவாயிருந்தது?

கு : அந்த ஜீவசக்தி வெளியில் வாயுவாகச் சலிக்காமலிருந்ததானால் இவ்விதமான யாதொரு நிலைமையும் காணப்படுமா?

சி : காணப்படுவதில்லை.

கு : அந்த ஜீவனுடைய சக்தியாகும் இக்காணப்படுகின்ற நிலைமை. அப்பொழுது காணுவதற்குக் காரணமானது ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயுவாகும். அந்த வாயுவே பொருள். அந்த வாயுவாயிருக்கின்ற பொருள் இல்லையானால் யாதொன்றுமில்லை. அந்தவாயுவினால் பந்திக்கப் பட்டதாகும் உலகம். அந்த வாயுவாகும் கர்மம். இதனால்தான் கர்ம பந்தமாகும் உலகு என்று சொல்லுவதற்குக் காரணம். அந்தக் கர்மம் செய்தாலே மோக்ஷம் அதாவது விமோசனம் அதாவது விடுதலை கிடைப்பதாகும். அந்தக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கர்மமாயிருக்கின்ற வாயுவிற்கு நானாவிதமான எண்ணங்கள் தட்டுகின்றதால் பந்தமாகிறது. எனில் கர்மமாயிருக்கின்ற வாயு மேற்சொன்ன எண்ணங்களை விட்டுத் தன்னில் தானே லயித்தால் மோக்ஷமாகின்றது. இதனால்தான் கர்மம் செய்தால் மட்டுமே மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லக் காரணம். கர்மம் = வாயு, செய்கை = தொழில். அதனால் கர்மமாயிருக்கின்ற வாயுவைக் கொண்டு செய்ய வேண்டும். அப்பொழுதே விமோசனமாகின்றது. எனில் கர்மமாயிருக்கின்ற வாயுவைக்கொண்டு எவ்விதமாகும் உலகத்தை பந்தித்து இருக்கிற தென்பதைச் சொல்லுகிறோம், கேட்பீராக! எட்டுக்கால் பூச்சி என்று சொல்லப்படுகிற ஜீவியானது ஒரு வலை கட்டுகின்றது. அந்த வலையானது, அது இருப்பதற்கும், அதனுடைய ஆகாராதிகளைச் சம்பாதிப்பதற்கும் மற்றுமுள்ளதாகும். அந்த வலை கட்டினது எதனாலென்றால், நூலைக் கொண்டாகுமென்று நமக்குத் தெரிகிறதல்லவா? எனில் அந்த நூல் எங்கிருந்தாகும் கிடைக்கிறது?

சி : அதனுடைய உள்ளிலிருந்தாகும்.

கு : அது அதனுடைய உள்ளிலிருக்கின்ற ஒரு சக்தியாகும். அந்த சக்தி ஒரு பசையாகும். அந்த சக்தியாயிருக்கின்ற பசை கொண்டு நூலாக்கி, அந்த நூலைக்கொண்டு முன்சொன்ன வலையா யிருக்கின்ற உலகத்தை சிருஷ்டித்து, அதனுடைய ஒரு பாகத்தில் அந்த ஜீவி இருக்கின்றது. அதில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஏதேனும் ஜீவிகள் அகப்பட்டால் அவற்றைப் பிடித்துத் தின்னவும் செய்கிறது. எனில் மேற்சொன்னவாறு நூலைக்கொண்டு கட்டப் பட்ட உலகத்தை, அது தானாகவே அவிழ்த்துத் தன்னுள்ளிலே கொண்டுபோய் சொஸ்தமா யிருக்கின்றது. திரும்பவும் மேற்சொன்னவாறே நூல் வெளியில் கொண்டுவந்து உலகத்தைக் கட்டுகிறது. இவ்விதம் கட்டுவதும், அவிழ்ப்பதும் செய்து, கடைசியில் அதனுடைய புச்சம் அதாவது உற்பத்தி ஸ்தானத்திலிருந்து அதாவது அந்நூல் உண்டாகிக் கொண்டிருக்கின்ற இடத்திலிருந்து அந்த நூல் அற்றுப் போகின்றது. அப்பொழுது தான் கட்டியிருக்கிற உலகத்தில் தான்தானே விழுந்து சாகிறது. எனில் அந்த நூல் வெளியில் வந்ததில் சிறிது தூரத்திலிருந்து அறுந்து போனால், அந்த அறுந்த துண்டோடுபசையாயிருக்கின்ற நூலை இணைத்துச் சேர்த்து கட்டவும் அவிழ்க்கவும் செய்யுமாயிருந்தது. ஆனால் அது அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய நூல் உண்டாகிக் கொண்டிருக்கின்ற இடத்திலிருந்துதானே அற்றுப் போனதாலாகும் செத்துப்போனது. எனில் தன்னுடைய சக்தியாயிருக்கின்ற பசையான நூலை, வெளியில் விடாமல் உள்ளேயே வைத்துக் கொண்டிருந்தால் ஒருக்காலும் நசிப்பதில்லை. அதைத் தன்னுள்ளே நிறுத்தாமல் வெளியில் விட்டதாலாகும் அதற்கு நாசம் வந்தது. அதைப் போலவேதான் நமக்குக் கர்மமென்று சொல்லுவது வாயுவாய் இருக்கின்ற நூலாகும். அது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எவ்விதமென்றால் நம்முடைய ஜீவசக்தியான வாயுவாய் இருக்கின்ற நூலை, நாம் வெளியில் விட்டு உலகத்தைக் கட்டி, அந்த உலகத்தில் மோகாந்தகாரர்களாகி, தன்னைத் தானறியாமல், நான் மிகவும் சமர்த்தன், நான் ஸ்தானி (உயர்ந்த ஸ்தான முடையவன்) ஆகும், நான் மானியாகும், செல்வந்தனாகும், உயர்ந்தவனாகும், பண்டிதனாகு மென்றும் மற்றுள்ள அனைவரும் தாழ்ந்தவர்களாகு மென்றும் அபிமானித்து, ராகத்துவேஷம் முதலான துரபிமானத்துடன் கூடி இருக்கிறோம். எனில் மேல்சொன்னவாறு முன்சொன்ன எட்டுகாலியைப் போல நாம் கட்டிய உலகத்தை நாமே அவிழ்த்து நமதுள்ளில் லயிப்பித்து சொஸ்தமாய் இருக்கவும் செய்கிறோம். அந்த சந்தர்ப்பமே நீர் தூங்குவ தென்று சொல்லுகிற நிலைமை. அந்த நிலைமையில் நமக்கு உலகம் இருக்கின்றதோ?

சி : உலகமில்லை.

கு : அதென்ன காரணம்?

சி : தன்னுடைய சக்தி தன்னில் அடங்கி சொஸ்தமாய் இருக்கிறதுகொண்டு.

கு : பின் எப்பொழுதாகும் உலகத்தைக் காணுவது?

சி : தனது சக்தி தன்னிலிருந்து வெளியே வந்து வியாபித்தபோது.

கு : அது எவ்விதமென்றால்: முன்சொன்ன எட்டுக்கால் பூச்சி எவ்விதம் தன்னுள்ளிலிருக்கின்ற சக்தியான பசையை வெளியில் விட்டு நூலாக்கி வலையாகிய உலகத்தைக் கட்டுவதும் அவிழ்ப்பதும் செய்கிறதோ, அவ்விதமே நாமும் நம்மிலுள்ள

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜீவசக்தியாய், வாயுவாய், கர்மமாயிருக்கின்ற நூலை வெளியில் விட்டு உலகத்தைக் கட்டவும், அவிழ்க்கவும் செய்கிறோம். கடைசியில் எப்படி அந்த எட்டுக்கால் பூச்சியினுடைய சக்தியா யிருக்கின்ற நூலினுடைய உற்பத்தி ஸ்தானமான இடத்திலிருந்து அந்த நூல் அறுந்து அது செத்துப்போகிறதோ, அதைப் போலவேதான் நம்முடைய ஜீவசக்தியாய், கர்மமாய், வாயுவாயிருக்கின்ற நூல் அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய புருவ மத்தியத்திற்குக் கீழே, மூக்கிற்கு மேலாக உள்ள இடத்திலிருந்து அற்று நாம் செத்துப்போகின்றோம். இதனால்தான் ஒருவன் செத்தபொழுது அவனுடைய கர்மம் அற்றுப் போயிற்றென்று சொல்லக் காரணம். அந்தக் கர்மமாய், வாயுவாயிருக்கின்ற நூலைக்கொண்டாகும் உலகத்தைக் கட்டியிருப்பது. அதனால்தான் கர்மபந்தம் என்றும் சொல்லக்காரணம். தவிர, ஒருவன் செத்துப்போனால் அவனுடைய கர்மம் என்னவாயிப் போயிற்றென்று சொல்லுவது?

சி : அவனுடைய கர்மம் முடிந்து போயிற்று என்றாகும்.

கு : ஒருவன் படுத்துத் தூங்குகிறானென்று சொல்லும் சமயத்தில் அவனுடைய கர்மம் முடிந்து போயிற்றென்று சொல்லுவதுண்டா?

சி : இல்லை.

கு : செத்தபோது கர்மம் முடிந்துபோயிற்றென்று சொல்லுவதற்கும், தூங்குகிறானென்று சொல்லும் சமயத்தில் கர்மம் முடியவில்லையென்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சொல்லுவதற்கும் காரணமென்ன?

சி : செத்தபொழுது வாயு அதனுள் கதாகதம் அதாவது நடனம் செய்வதில்லை. படுத்துத் தூங்குகிறானென்று சொல்லும் சமயத்தில் அவனுடைய உள்ளில் கூடி வாயு கதாகதம் செய்கிறது. அதனால்தான் அவ்விதம் சொல்லக் காரணம்.

கு : அதுமட்டுமல்லாமல், ஒரு நிமிஷநேரமாவது கர்மமில்லாமல் யாதொன்றுக்கும் ஜீவித்திருக்க முடியாதென்று சொல்லுகிறார்கள். எனில் கர்மம் என்கிறது தொழிலாகுமென்று உலகில் சொல்லுகின்றனர். கர்மமென்பது தொழிலென்றால் தூக்கமென்று சொல்லுகிற சமயத்தில் யாதேனும் தொழிலுண்டோ?

சி : உண்டு.

கு : என்னவாகும்?

சி : தூங்குவது.

கு : அதெப்படி? தூக்கமென்று சொல்லும் சமயத்தில் ''நான் இப்பொழுது தூங்குகிறேன்" என்றுள்ள நினைவு உமக்கு உண்டோ?

சி : இல்லை.

கு : என்ன காரணம்?

சி : மனமாகிய சக்தி ஜீவனில் சேர்ந்தடங்கியதால்.

கு : எப்பொழுது நினைவும் தொழிலும் உண்டாகின்றன?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : எங்கிருந்து?

சி : மனத்திலிருந்து.

கு : மனமில்லையென்றால் யாதொன்றும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கேட்பதற்கோ, செய்வதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : எனில் நீர் தூங்குகிறேனென்று சொல்லும் சமயம் தொழில் உண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது கர்மம் இல்லையா? தொழில் என்பது கர்மம் என்றால் அறியவேண்டியதல்லவா?

சி : கர்மம் உண்டு. கர்மமென்பது தொழில் அன்று. அதனால் தெரியவில்லை.

கு : கர்மம்இல்லையானால் ஒரு நிமிஷநேரங்கூட இருக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. தூக்கமென்று சொல்லுகிற சமயத்திலும் கர்மம் இருக்கிறதென்று வருகிறது. அதனாலும் கர்மம் தொழில் அன்று என்றும், வாயுவாகு மென்றும் வந்தது. அந்தக் கர்மமானது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும். அந்த வாயு வெளியில் வியாபித்து உலகத்தை சிருஷ்டித்து உலகமாய் பந்தித்துக் கொண்டிருக்கிறது. அப்பொழுது உலகம் கர்மபந்தமாகின்றது. எப்பொழுது செத்துப் போகின்றோமோ அப்பொழுது வாயுவாயிருக்கின்ற கர்மம் தீர்ந்து போகிறது. ஆகவேதான் கர்மம் தீர்ந்து போனதென்று உலகோர் சொல்லுகின்றனர். அதனால் உலகம் என்கிற விஷயத்தைப் பந்தித்திருக்கின்ற கர்மமாய் வாயுவாயிருக்கின்ற சக்தியை அந்த பந்தத்திலிருந்து வேறுபடுத்தித் தன்னுள்ளிலேயே நடத்தி அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆகாயத்தில் அதாவது பிரம்மரந்திரத்தில் சேர்த்து ஒன்றுபடுத்துவதற்காகும் மோக்ஷமென்று சொல்லுகிறது. இதாகும் ''கர்ம யோகம்". கர்மம் என்பது வாயு. யோகம் என்பது சேர்க்கை; கர்மயோகம் என்பது வாயுவின் சேர்க்கை, அதாவது வாயுவினுடைய உற்பத்தி ஸ்தானமாய் ஆகாயமாய் இருக்கின்ற பிரம்மரந்திரத்தில் அது சேருவதாகும். அவ்விதம் செய்யாமல் நானா விதமாக ஈஸ்வரன் என்று சங்கற்பித்து பூஜித்தல், பஜித்தல், தொழுதல், மந்திரங்களென்று கருதி பெயர்களை ஜெபித்தல், தானம் கொடுத்தல், விரதம் அனுஷ்டித்தல் முதலானவை செய்து, ஜனங்கள் பட்டினி கிடந்து, கஷ்டப்பட்டு, யாதொரு விவரமுமில்லாமல் அதோகதியாகி நசித்துப் போவதல்லாமல் யாதொரு ஞானமும் உண்டாவதில்லை. ஞானம் உண்டாக வேண்டுமேயானால் முன் சொன்னபடி செய்ய வேண்டும். அப்பொழுதே ஞானம் உண்டாகும். அதுவே கர்மயோகம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# ஒன்பது

சிஷ்யன் : குருவே! உலகத்தில் இதுவரைக் கருதியதற்கு நேர் விரோதமாக இப்போது கற்பிக்கின்றீர்கள். பஞ்சபூதங்களைப் பற்றி சொன்னபோது அகங்காரம், மனம், ஜீவன் இவையாகும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று சொல்லியிருக்கின்றீர்கள் அல்லவா? எனில் உலகில் பரம்பரையாகச் சொல்லிவருவது மும்மூர்த்திகளாகும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் செய்வதென்றும், அதில் பிரம்மா ரஜோகுணம் என்றும், விஷ்ணு சாத்வீக குணமென்றும், சிவன் தமோகுணமென்றுமாகும். அதனால் இவ்விஷயத்தைப் பற்றித் தெளிவு படுத்திச் சொல்லித்தருமாறு வேண்டுகிறேன்.

குரு : உலகம் என்பது உண்மைத் தத்துவத்திற்கு விபரீதமாக உள்ளதாகையால் விபரீதமாய்த் தோன்றுவதாகும். அதைப்பற்றியும், பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் யாராகுமென்று வைத்தால் அவர்களைப் பற்றியும் சொல்லு கிறோம். பிரம்மாவானது அகங்காரமும், விஷ்ணுவானது மனமும், சிவனானது ஜீவனுமாகும் என்பதனைப் பற்றியும் ஐந்தாமத்தி யாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறதல்லவா? அதல்லாமல் மேற்கூறிய மும்மூர்த்திகள் மூன்று குணங்களாகுமென்றும். அந்த குணங்கள் தாமசம், இராஜஸம், சாத்வீகம் இவையாகுமென்றும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சொல்லியிருக்கிறதல்லவா? எனில் சிவன் தாமஸ குணமாகுமென்றும் விஷ்ணு சாத்வீக குணமாகுமென்றும் பிரம்மா இராஜஸ குணமாகுமென்றும் நீங்கள் இப்பொழுது சொல்லுகிறீர். அப்படி ஒருக்காலும் வருவதற்கிடமில்லை. அது ஏனென்றால் **பிரம்மா சிருஷ்டி கர்த்தாவல்ல.** பிரம்மா என்பது அகங்காரமாகும். அந்த அகங்காரமாகிய பிரம்மா மனத்திலிருந்தாகும் உண்டானது. அந்த மனமாகும் விஷ்ணு. அதெப்படியென்றால்: விஷ்ணுவினுடைய நாபியிலிருந்தாகும் பிரம்மா உண்டானதென்று சொல்லுகின்றனர். அப்பொழுது விஷ்ணு இல்லையென்றால் பிரம்மாவும், சிருஷ்டியும் இல்லை. நீர் பிரம்மாவாகும் சிருஷ்டித்ததென்று சொல்லுகிறீர். சிருஷ்டி கர்த்தாவாக இருக்கின்ற பிரம்மா விஷ்ணுவிலிருந்து உண்டானதென்றும், அந்த பிரம்மாவாகும் சிருஷ்டித்ததென்றும் வந்தால், அந்தப் பிரம்மனைச் சிருஷ்டித்தது விஷ்ணுவாகும். அதனால் விஷ்ணு இல்லையென்றால் பிரம்மாவும் சிருஷ்டியும் இல்லை.

**அதல்லாமல் பிரம்மாவுக்கு அண்டஜன் என்ற பெயரும் உண்டு. அண்டஜன் என்றால் முட்டையிலிருந்து ஜனித்தவரென்று பொருள்படும்.** அந்த முட்டை எதுவென்றால் இக்காணப்பட்ட உலகமாகும். இந்த உலகமென்று சொல்லுவது நம்மிலிருந்து ஒரு முட்டையினுடைய வடிவமாய்ப் பிரதிபிம்பித்திருக்கின்றதாகும். அதற்கு உதாரணம்: பூமியில் எங்கிருந்து பார்த்தாலும் நாம் காணுகின்ற ஆகாசம் நானாபாகத்திலும் பூமியோடு தொட்டு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இருப்பது போலவும், உருண்டையாய், முட்டையினுடைய வடிவத்திலும் காணப்படுகிறது. அதனுடைய உற்பத்தி தன்னுடைய மனத்திலிருந்தாகும். அது எவ்விதமென்றால்: மனமாகும் சக்தி. அதாகும் விஷ்ணு. அப்பொழுது சக்தியாய் மனமாயிருக்கின்ற விஷ்ணு சுக்கிலமாகும். அந்த சுக்கிலம் நம்முடைய சிரசாயிருக்கின்ற ஆகாயத்தில் தரித்திருக்கின்றதாகும். அந்த ஆகாயத்தில் தரிக்கப்பட்டிருக்கின்ற சுக்கிலமாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவாய் இருக்கின்ற சுக்கிலம் நம்மிலிருந்து வேறுபடாமல் நம்மிலேயே ஒரு முட்டையினுடைய வடிவத்தில் நீர்க்குமிழியைப் போல் வெளியே தள்ளியிருக்கிறது. அதையும் தாங்கிக் கொண்டாகும் நாம் இருக்கிறோம். அதெப்படியென்றால்: நான்காமத்தியாயத்தில் சொன்ன காட்டாமணக்கின் பாலில் ஓர் ஈர்க்கெடுத்து வட்டமாகக் கட்டி, தோய்த்து, ஊதிப் பிடித்தால் அது அதிலிருந்து விட்டுப்போகாமல் பொள்ளையாய் (போரையாய்) முட்டை வடிவமாய் வெளியே தள்ளி நிற்கிறது. கொஞ்ச நேரத்தில் உடைந்துபோகவும் செய்கிறது. இப்படியே ஜீவன் மனமாகிய சுக்கிலத்தைத் தள்ளிக் கொண்டு தன்னிலிருந்து வெளியே வருகின்றது. அந்த மனமாகிய சுக்கிலம் தன்னிலிருந்து விட்டுப் போகாமல் முட்டை வடிவத்தில் பொள்ளையாய் வெளியே தள்ளி உப்பி நிற்கின்றது. **இதற்காகும் பிரம்மாண்டம் என்று உலகத்தில் சொல்லப் படுகிறது. எனில் அது சரியன்று. நம்மிலிருந்து வெளியே தள்ளிக்**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



காணுகின்ற இந்த உலகம் பிண்டாண்டம் ஆகும், பிரம்மாண்டம் அன்று. பிரம்மாண்டம் என்று சொல்லுவது பிரம்மசொரூபமாகிய சுக்கிலமிருக்கின்ற சிரசிற்கேயாகும். அச்சிரசி விருந்து மேற்சொன்ன உலகத்தை, ஜீவசக்தியாய் பரமாத்மாவாய் இருக்கின்ற வாயு பிரகிருதியாய் அதாவது இயற்கையாயிருக்கின்ற மாயாசொரூபமாய் வெளியில் தள்ளிக்கொண்டு வந்ததாகும், இக்காணுகின்ற உலகம். அதனால் இப்பொழுது உலகமென்று சொல்லிவருகின்ற இக்காணுகின்ற உலகு பிண்டாண்டமாகும். அப்பிண்டாண்டமாய் இருக்கின்ற உலகம், பிரம்மாண்டத்திலிருந்து முட்டை வடிவமாய் உற்பத்தியானபொழுது நான் என்கிற அகங்கார முண்டாயிற்று. இதனால்தான் பிரம்மாவிற்கு அண்டஜன் என்ற பெயருண்டானது. அந்த அகங்காரத்திற்காகும் பிரம்மா என்றுபெயர். இப்படியாகும் பிரம்மாவினுடைய உற்பத்தி.

சி : சுவாமி! பிரம்மாவினுடைய உற்பத்தி மேற் சொல்லியவிதமாகுமென்று பூரண நம்பிக்கை யானது. எனில் சுவாமி சொல்லுவதைக் கேட்கும்பொழுது அவனவன்தானேயாகும் பிரம்மா என்று வெளிப்படுகிறது. ஆனால் வேதசாஸ்திராதிகளில் பிரம்மாவிற்கு நான்கு முகங்கள் உண்டென்றும், அப்படி நான்கு முகங்களோடுள்ள பிரம்மாவே சிருஷ்டிக்கின்ற தென்றும் காணப்படுகிறது. இவ்விதமாகும் உலகத்தில்கருதிச் சொல்லி வருவது. இதனுடைய பொருளென்னவென்று விவரமாகச் சொல்லித்தர

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு : அது சரியே. எனில் முகம் என்பதென்னவென்று கருதியிருக்கின்றீர்?

சி : முகம் என்பது இக்காணுகின்ற சிரசில் காது, கண், மூக்கு, வாய் இவை அடங்கியிருக்கின்ற பாகமாகிறது.

கு : இந்த முகம் இல்லாவிட்டால் யாதொருவித அறிவும் உண்டாகுமா?

சி : இல்லை.

கு : எனில் முகம் என்பது என்னவென்றாகும் நாம் அறியவேண்டியது?

சி : அறிவாகுமென்று.

கு : எனில் நீர் சொல்லுகிற பாகம் முகம் என்றால் ஒரு பிணத்திற்கு இந்த முகம் இல்லையா?

சி : உண்டு.

கு : அதற்கேதாகிலும் அறிவுண்டோ?

சி : இல்லை.

கு : அதென்ன காரணம்?

சி : அதில் ஜீவனில்லாததால்.

கு : அப்பொழுது ஜீவன் இல்லையென்றால் அறிவு இருக்குமா?

சி : இருக்காது.

கு : அப்பொழுது அறிவென்பது என்னவாகும்?

சி : ஜீவனாகும்.

கு : அப்பொழுது அறிவாகி முகமாயிருக்கின்ற பொருள் ஜீவனாகின்றது. அந்த முகமாயிருக்கின்ற ஜீவனிலிருந்தாகும் உலகமுண்டானது. அதெப்படியென்றால்: ஒரு வித்தினுடைய எந்த பாகத்திலிருந்தாகும் முளை உண்டாகின்றது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : அதனுடைய முகத்திலிருந்து.

கு : அப்போது அதனுடைய உற்பத்தி எங்கிருந்து?

சி : முகத்திலிருந்து.

கு : ஒரு பொருள் இல்லையென்றால் முகமிருக்குமா?

சி : இருக்காது.

கு : அந்தப் பொருளாயிருக்கின்ற வித்திற்கு முதலில் உண்டாகிறது எந்த பாகம்?

சி : அதனுடை முகம்.

கு : எனில் முதலில் உண்டாகிறது முகம். அந்த முகத்திலிருந்தாகும் எல்லாம் உண்டாகின்றன. அதல்லாமல் அந்த முகம் வித்தினுடைய மேல்பாகமோ, அல்லது கீழ்பாகமோ?

சி : மேல்பாகம்.

கு : எனில் முகமென்று சொல்லுகிறது அறிவாகியும் மேல்பாகமாயும் முதலில் உண்டாகின்றதாயும் உற்பத்திஸ்தானமாயும் இருக்கின்றதாகும். அப்படியுள்ள முகமாகிய ஜீவனிலிருந்து உண்டான பொருள் நமக்கு உலகமாகின்றது. ஜீவனில்லையென்றால் நமக்கு இப்படி ஏதேனும் உண்டாகுமா?

சி : இல்லை.

கு : ஒரு பிணத்திற்கு உலகமுண்டோ?

சி : இல்லை.

கு : காரணம் என்ன?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : ஜீவன் இல்லையென்றால் உலகமுண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது உலகம் எங்கிருந்துண்டாகின்றது?

சி : ஜீவனிலிருந்து.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது ஜீவன் உலகத்திற்கு என்னவாயிற்று?

சி : உலகத்தின் முகமாகின்றது.

கு : அதனால் முகமென்பது ஜீவனாகிறது. அதாகும் அறிவு. அப்பொழுது ஜீவனாய் அறிவாயிருக்கின்ற முகம் நான்கு அறிவுகளாயிருக்கின்ற முகங்கள் ஆகின்றது. அவை எவையென்றால் மனம், சித்தம், புத்தி, அகங்காரம். இந்நான்கு முகங்களுமில்லா விட்டால் சிருஷ்டி உண்டாவதில்லை. இந்நான்கு முகங்களோடுகூடியாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா சிருஷ்டித்து வருவது. அதனால் நான் என்கிற நிலைமை இல்லாவிட்டால் நமக்கு ஏதாகிலும் உண்டாக்குவதற்கு முடியுமோ?

சி : முடியாது.

கு : எனில் உண்டாக்குவது யார்?

சி : நான்தான்.

கு : நீர் ஏதாகிலும் உண்டாக்கினால் யாருண்டாக்கியதென்று சொல்லுகிறீர்?

சி : நான் உண்டாக்கியதென்று சொல்லுகிறேன்.

கு : அதல்லாமல், உமக்கு ஒரு மகனிருக்கிறான். அவனை வேறொருவன் பிடித்தடிக்கின்றான். அப்பொழுது உமக்கு கோபம் உண்டாகி, நீர் அவரோடு யார் உண்டாக்கிய மகனை நீர் அடித்தீர் என்று கேட்பீர்?

சி : ''நானுண்டாக்கிய மகனை நீங்கள் யார் அடிக்கிறதற்கு" என்று கேட்பேன்.

கு : அந்தச் சமயத்தில் அவரோடு ''பிரம்மா உண்டாக்கிய மகனையா நீர் அடித்தீர்" என்று கேட்பீரா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : இல்லை.

கு : அப்பொழுது யாராகும் உண்டாக்கியது?

சி : "நானே".

கு : அதனால் பிரம்மாவிற்கு நான்கு முகங்கள் உண்டென்று சொல்லுகிறது மேற்சொல்லப் பட்ட மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவையாகும். இந்த நான்கும் இல்லாமல் யாதொன்றும் உண்டாக்குவதற்கு முடியாது. அதற்கு உதாரணம் என்னவென்றால்: குழந்தைகளுக்கு ஏதேனும் உண்டாக்குவதற்கு முடிவதில்லை. அவர்கட்கு மனமும் சித்தமும் உண்டு. கொஞ்சம் முதிர்ந்து அதாவது வளர்ந்ததற்குப்பின் அவர்களுக்குப் புத்தி உண்டாகிறது. அச்சமயம் நாம் சொல்வதை அவர்கள் கவனித்து ஆலோசிப் பதுண்டு. நான் என்கிற நிலைமை அவர்களுக்குப் பூர்த்தியாகாததால் யாதொன்றையும் உண்டாக்குவதற்கு முடிவதில்லை. அவர்களுக்குப் நான் என்கிற அகங்காரம் பூர்த்தியாகும்போது அவர்கள் ஏதாவது உண்டாக்குகின்றனர். அதற்கு வேறொரு உதாரணம் என்னவென்றால்: வயதான ஒருவர் எழுந்திருக்கவும்கூட முடியாமல் ஒருவித வியாதியுடன் படுத்திருக்கும்பொழுது அவருக்கு மனம், சித்தம், புத்தி இவை இல்லையோ?

சி : உண்டு.

கு : அந்தச் சமயத்தில் அவருக்கு நான் என்கிற அகங்காரம் உண்டா?

சி : அகங்காரம் உண்டு. எனில் அந்த அகங்காரத்திற்கு யாதொன்றும் செய்வதற்கு சக்தியில்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது அவருக்கு ஏதாவது உண்டாக்கு வதற்கு முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : காரணமென்ன?

சி : ''நான்'' என்கிற அகங்காரத்தினுடைய சக்தி குறைந்து போனதால்.

கு : எனில் ஏதாவதொன்றை உண்டாக்க வேண்டு மானால் எவையெல்லாம் வேண்டியிருக்கின்றன?

சி : மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவை நான்கும் வேண்டும்.

கு : அதனால் மேற்சொன்ன நிலைமைகள் இல்லாமல் ஏதேனும் உண்டாக்குவதற்கோ, நிலைநிறுத்து வதற்கோ முடியுமா?

சி : முடியாது.

கு : அதனாலாகும் இந்நான்கு நிலைமைகளுக்கு நான்கு முகங்களென்று சொல்லுவது. அதனால்தான் பிரம்மாவிற்கு ''நான்முகன்'' என்றுசொல்லி வருவது. இந்த நான்கு முகங்கள் இல்லாவிட்டால் பிரம்மாவுக்கு யாதொரு சிருஷ்டியுமில்லை. இதனால்தான் பிரம்மாவிற்கு ''நான்முகன்'' என்றும், அந்த நான்முகனாகும் சிருஷ்டிக்கிறதென்றும் சொல்ல காரணம்.

சி : சுவாமி! மனம், சித்தம், புத்தி, அகங்காரங்களாகிய நான்கு முகங்களோடுள்ள நானே பிரம்மாவென்று வெளியாயிற்று. எனில் பிரம்மாவிற்கு மனைவி (சம்சாரம்) உண்டென்றும் அவள் தன்னுடைய மகளாகுமென்றும், அவளுக்கு சரஸ்வதியெனப் பெயரென்றும், சரஸ்வதி பிரம்மாவுக்குத்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தாயென்றும், தங்கையென்றும் வேதசாஸ்திராதி களிலெல்லாம் சொல்லப்படுகிறது. அப்படியுள்ள பிரம்மா நான் என்று வெளிப்பட்டிருக்கும்பொழுது இதனுடைய பொருள் என்ன?

கு : சரஸ்வதி பிரம்மாவிற்கு மகளானால் முன்னர் ஒருத்தியைக் கல்யாணம் செய்து, அவளில் ஒரு மகள் பிறந்து, அவளுக்கு சரஸ்வதியென்று பெயரிட்டு, அவளைப் பிரம்மா கல்யாணம் செய்தார் என்று ஏதாகிலும் ஒரு வேதசாஸ்திராதி களில் சொல்லியிருக்கின்றதா?

சி : இல்லை.

கு : அல்லாவிட்டால் பிரம்மா விபசாரம் செய்யப் போய், அவரில் யாரிடத்திலாகவும் ஒரு மகள் பிறந்து, அந்த மகளுக்கு சரஸ்வதியென்று பெயரிட்டு அவளை பிரம்மா கல்யாணம் செய்தா ரென்று வேதசாஸ்திராதிகளில் சொல்லியிருக் கிறதா?

சி : இல்லை.

கு : தவிர, ஒரு ஸ்திரீயானவளே, தாய், தங்கை (சகோதரி) மனைவி, மகள் ஆகிய இந்த நான்கு நிலைமைகளிலும் ஏற்படுவதற்கு எப்படி முடியும்? எந்த விதத்தில் பார்த்தாலும் அது யுக்தியாய்த் தோன்றுவதில்லை. ஏனென்றால் பிரம்மா, தன் தாயைத்தான் கல்யாணம் செய்து மனைவியாக்கிக் கொண்டதாக நினைக்கலாம். அப்பொழுது தங்கையாகவும், மகளாகவும் இருக்க முடிகின்றதோ?

சி : இல்லை.

கு : அதல்லாவிட்டால் தன் தங்கையையே கல்யாணம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செய்து மனைவியாக்கிக்கொண்டதாக வைத்துக் கொண்டால் அப்பொழுது தாயாகவும் மகளாகவும் இருப்பதற்கிடமுண்டோ?

சி : இல்லை.

கு : அதனால் எப்படிப் பார்த்தாலும் ஒரு ஸ்திரீயானவளே முற்கூறிய நான்குவிதமாகின்றாளென்று சொல்லுவதற்கு யாதொரு யுக்தியும் தோன்றுவதில்லை; அதல்லாமல் அவ்விதமாய் ஏற்படுவதற்கு யாதொரு காரணமுமில்லை. இவ்விதத்திலானால் வேதசாஸ்திராதி புராணங்களை நம்புவதற்கிடமுண்டோ?

சி : இடமில்லை.

கு : அவ்விதம் ஒருக்காலும் சொல்லக்கூடாது. வேதசாஸ்திர புராணங்களொன்றும் பொய்யல்ல. ஏனென்றால் வேதசாஸ்திர புராணாதிகள்யாவும் எழுதியிருக்கின்றது யாரென்று உமது நம்பிக்கை?

சி : அநுபவஸ்தர்களான மகாத்மாக்களாகிய ரிஷீஸ்வரர்களென்று எனது நம்பிக்கை.

கு : அப்படியுள்ள அநுபவஸ்தர்களான ரிஷீஸ்வரர்கள் பொய் எழுதி வைத்திருப்பார்களென்று சொல்ல முடியுமா?

சி : ஐயோ! அப்படி ஒருக்காலமும் சொல்லமுடியாது.

கு : எனில் அநுபவஸ்தர்கள் எழுதியிருக்கின்ற அநுபவங்களை உலகோர் சரிவர அறியாமல் தவறாக எண்ணியிருக்கிறார்கள். அநுபவஸ்தர்கள் பிரம்மாவையும் சரஸ்வதியையும் நன்றாய்ப் பார்த்தறிந்து இன்னின்ன சங்கதிகளினால் சரஸ்வதி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரம்மாவிற்கு மகள் என்றும், மனைவி என்றும், தாயென்றும், தங்கையென்றும் தெரிந்து அனுபவப்பட்டு, அந்த அனுபவத்தையே வேத சாஸ்திரங்களில் எழுதி வைத்ததாகும். அதனால் பிரம்மா யாரென்றும் சரஸ்வதி யாரென்றும் ஆலோசிக்க வேண்டும். பிரம்மா என்பது தேகமல்லாமல் இருக்கின்ற இந்த ஜடத்தை தேகமென்று அபிமானித்துக் கொண்டிருக்கின்ற அகங்காரமாகும் என்று நான்காம் அத்தியாயத்திலேயே சொல்லியிருக்கின்றதல்லவா? அப்படி அபிமானித்துக் கொண்டிருப்பது இந்த ஜடத்திற்கேயாகும். அப்பொழுது இந்த ஜடமாகும் பிரம்மா. சரஸ்வதி யாரென்று ஆலோசிப்பதானால் நாவாகும். எப்படியென்றால்: சரஸ்வதிக்குப் பல பெயர்கள் உண்டு. எவையென்றால் பிராம்மி, பாரதி, பாஷா, கீர், வாக்கு, வாணி, சரஸ்வதி, வ்யாஹாரா, உக்தீர், அபிக்திரி, பாஷிதம், வசனம், வச: இவையெல்லாம் சரஸ்வதியினுடைய பெயர்களாகும். இவையெல்லாம் ஒவ்வொரு காரணத்தால் ஏற்பட்டுள்ள பெயர்களாகும். தவிர, பஞ்சேந்திரியங்களில் ஒன்று சரஸ்வதியாகிறது. அதாவது வாக்கு என்கிற இந்திரியம். அந்த வாக்கு என்ற இந்திரியத்திற்கு ''நாவு" என்றும் சொல்லுவதுண்டு. ஆகையால் சரஸ்வதியென்ற பெயர் நாவிற்கேயாகின்றது. அதுவும் தவிர, உலகவாசிகள் ஒருவனுடைய விஷயமாகப் பேசும்பொழுது அவனுடைய ''கெட்டவாக்கு, கெட்ட சரஸ்வதி, கெட்ட நாவு" என்று சொல்லுகின்றனர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவையெல்லாம் நாவைப் பற்றி சொல்லுகின்ற வார்த்தைகளாகும். அதனால் இந்த நாக்காகும் சரஸ்வதி. இவள் பிரம்மாவிற்கு மகளென்று சொல்லக் காரணம் என்னவென்றால், இந்த ஜடமாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா என்று முன்னமே சொல்லியிருக்கின்றதல்லவா? இந்த அகங்காரமாயிருக்கின்ற ஜடம் இல்லாவிட்டால் நாவு உண்டாகுமா?

சி : இல்லை.

கு : அப்பொழுது நாவு எங்கிருந்து உண்டாகின்றது?

சி : இந்த ஜடத்திலிருந்தே.

கு : இந்த ஜடத்தில் நாவு உண்டானதுகொண்டு இந்த ஜடத்திற்கு நாவு என்னவாகிறது?

சி : சந்தானம் அதாவது மகள் ஆகிறது.

கு : அதனால்தான் பிரம்மாவிற்கு மகள் சரஸ்வதி என்று சொல்லக் காரணம். அது ஏனெனில் தேகமல்லாமல் இருக்கின்ற ஜடத்தினை தேகமென்று அபிமானித்துக் கொண்டிருக்கின்ற அபிமானமே நான் என்று சொல்லுகிற அகங்காரமாகிய பிரம்மாவாகின்றது. அந்தப் பிரம்மாவே ஜடம், அந்த ஜடத்திலிருந்து நாவு உண்டானதால் தனக்கு மகளாயிற்று.

சி : குருவே! மகளென்று சொல்லுவது ஸ்திரியையல்லவா? அப்பொழுது இந்த நாவு ஸ்திரீயோ, புருஷனோ? எவ்விதத்தில் நிர்ணயிக்க வேண்டும்?

கு : ஸ்திரீயென்றால் சக்தியாகின்றது. சக்தியில்லையென்றால் உலகமில்லை. இந்த உலகம் சக்தியிலிருந்து உற்பத்தியானதாகின்றது. அந்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சக்தியேயாகும் சப்தம். அதாவது ஓசை. சப்தம் இல்லாவிட்டால் சக்தி இல்லை. சக்தி இல்லாவிட்டால் சப்தமும் இல்லை அதாவது ஓசையும் இல்லை. அப்பொழுது சப்தமும் அதாவது ஓசையும் சக்தியும் ஒன்றேயாகும்; இரண்டல்ல. சக்தியில்லாவிட்டால் பேச்சும் மூச்சுமில்லை. அப்பொழுதுள்ள நிலைமைக்கே சமீரணமென்று சொல்லுவது. அது நாம் தூங்குகிற சமயத்திலுள்ள நிலைமை. அதாவது சக்தி வாயுரூபமாய் வெளியில் சலிக்காமல் தன்னுடைய உள்வழியாய் மேலாகவும் கீழாகவும் மட்டுமாய் கதாகதம் அதாவது நடனம் செய்கின்ற நிலைமை. அதென்னவென்றால்: தன்னுடைய சக்தி வாயு ரூபமாய் வெளியில் சலிக்காமல் இருந்ததால் தானாயிருக்கின்ற சிவன் மட்டுமாகின்றது. அதெப்படியென்றால்: தன்னுடைய சக்தியாகிய சப்தம் அதாவது ஓசை தன்னில்தானே அடங்கி தான் மட்டுமாய் இருக்கின்றது. அதற்கோர் உதாரணம்: நீர் சாண்டோ இராமமூர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர் அல்லவா? அவர் தன்னுடைய ஒரு கையை நீட்டிப் பிடித்தால் அக்கையை மடக்குவதற்கு ஐந்து அல்லது பத்து பேர் முயற்சி செய்தால் முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : காரணமென்ன?

சி : அவர் சக்திவானான பலவானாயிருந்ததால்.

கு : எனில் அவர் படுத்துத் தூங்கும் சமயத்தில் நான்கு அல்லது ஐந்து வயது பிராயமுள்ள ஒரு குழந்தைக்கு அவருடைய கையைத் தூக்கி மடக்குவதற்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முடியுமல்லவா?

சி : ஆம்; முடியும்.

கு : அதென்ன காரணம்? அவர் பலவானல்லவா? அவர் தன்னுடைய ஒரு கையை நீட்டிப்பிடித்தபொழுது சுமார் ஐந்து அல்லது பத்து பலவான்களான ஆட்களுக்கு அக்கையை மடக்க முடியாமலிருப்பதற்கும், அவர் தூங்கிய சமயத்தில் நாலைந்து வயதுள்ள குழந்தைக்கு அந்தக்கையைத் தூக்கி மடக்க முடிவதற்கும் காரணமென்ன?

சி : அவர் தூங்கியதனால் சக்தியில்லாதது கொண்டு.

கு : அப்பொழுது அவருடைய சக்தி என்னவாகி இருந்தது?

சி : தன்னிலே லயித்து அதாவது ஒடுங்கியிருந்தது.

கு : எனில் சக்தி எங்கிருந்தாகும் உண்டாகின்றது?

சி : தன்னிலிருந்தே யாகும் உண்டாகின்றது.

கு : எனில் தன்னிலிருந்துண்டாகின்ற சக்தி தன்னில் தானே லயித்துத் தானாயிருக்கும் பொழுது மற்று ஏதேனுமுண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது சப்தம் அதாவது ஓசை உண்டோ?

சி : இல்லை.

கு : அதனால் சப்தம் இல்லாவிட்டால் இக்காணுகின்ற யாதொரு நிலைமைகளையும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : அப்பொழுது இதற்கெல்லாம் காரணமென்ன?

சி : சப்தம் அதாவது ஓசை.

கு : அப்பொழுது அச்சப்தம் என்னவாகின்றது?

சி : சக்தியாகின்றது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அந்த சப்தசொரூபமாகிய சக்தியிலிருந்தாகும் இக்காணப்படுகிற எல்லா நிலைமைகளும் உண்டாயின. அதனால் சப்தசொரூபமாயிருக்கின்ற சக்தி ஸ்திரீயோ, புருஷனோ?

சி : ஸ்திரீ அதாவது பெண்.

கு : அப்பொழுது சப்தம் என்னவாகின்றது?

சி : பெண் ஆகின்றது.

கு : அந்த சப்தம் உண்டாவதற்கு வேண்டிய ரூபம் எது?

சி : நாவு.

கு : ஸ்திரீயாகிய சப்தத்தை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்ற ரூபம் நாவு ஆகின்றதால்தான் அதை ஸ்திரீ என்று சொல்லக் காரணம். அந்த சப்தத்திற்காகும் சரஸ்வதி என்று பெயர். அதனால்தான் நாவிற்கு சரஸ்வதி என்று பெயர் வந்தது. இந்த நாவு பிரம்மாவாகிய ஜடத்திலிருந்து உற்பத்தியானதால் பிரம்மாவுக்கு நாவு மகளாயிற்று. இதனாலாகும் பிரம்மாவிற்கு மகள் சரஸ்வதி என்று சொல்லக் காரணம். பிரம்மாவிற்கு சம்சாரம் அதாவது மனைவி சரஸ்வதி என்று சொல்லக் காரணம், தான் தன்னுடைய மகளாகிய சரஸ்வதியைக் கொண்டு வேலைகளை செய்விக்கின்றதாலாகும்.

சி : நமக்கெல்லாம் பெண் குழந்தைகளிருக்கின்றனவல்லவா? நாமும் அந்தக் குழந்தைகளைக் கொண்டு வேலைகளைச் செய்விக்கிறது உண்டல்லவா? அப்பொழுது அவர்கள் நமக்கு மனைவியர் ஆவரோ?

கு : நாம் நம்முடைய குழந்தைகளைக் கொண்டு வேலைகளைச் செய்விக்கின்றது போன்றல்ல

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரம்மா தன்னுடைய மகளைக்கொண்டு வேலைகளைச் செய்விக்கின்றது. பிரம்மா தன்னுடைய மகளைப் புணர்ச்சி செய்தாகும் வேலைகளைச் செய்விக்கிறார். அதெப்படியென்றால்: நாம் தூங்கும் சமயத்தில் நமக்கு யாதொரு சப்தமும் உண்டாக்குவதற்கோ, கேட்பதற்கோ முடிவதுண்டோ?

சி : முடிவதில்லை.

கு : அதென்ன காரணம்?

சி : நான் என்கிற நிலைமை இல்லாததால்.

கு : தவிர, ஒரு கையை மட்டும் வீசினால் சப்தம் உண்டாகுமா?

சி : உண்டாகாது.

கு : இப்பொழுது நாம் தூங்குவதால் நான் என்ற நிலைமையுமில்லை. அப்பொழுது யாதொரு சப்தமும் உண்டாக்க முடிவதில்லை. தூக்கம் விழித்தபொழுது நான் என்கிற நிலைமை உண்டாகிறது. அந்த நானென்கிற நிலைமையாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா. அந்த அகங்கார மாயிருக்கின்ற பிரம்மா தன்னிலிருந்துண்டாகிய தன்னுடைய மகளாயிருக்கின்ற நாவைப் புணர்ச்சி செய்து சப்தமுண்டாக்கிப் பேச்சாயிருக்கின்ற வேலைக்கு உபயோகிக்கிறது. இதனால்தான் பிரம்மாவிற்கு சரஸ்வதி சம்சாரம் அதாவது மனைவியென்று சொல்லுகிறது. சம்யோகம் அதாவது புணர்ச்சி எப்படியென்றால்: நான் என்கிற அகங்காரம் இல்லாதிருந்தால் நாவிற்கு யாதொரு சப்தத்தையும் உண்டாக்கமுடிவதில்லை. நான் என்கிற அகங்காரம் உண்டாகும்பொழுது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தன்னுடைய மகளாகிய நாவுடன் சேருகிறது. அந்தச் சேர்க்கையே சம்யோகம். அதாவது புணர்ச்சி. சம்யோகம் என்றால் (சம் + யோகம்; சம் = அது அல்லது அவள்; யோகம் = சேர்க்கை) அவளோடு சேருகிறது. அப்பொழுது அகங்காரமாயிருக்கின்ற நான் நாவுடன் சேர்ந்து அந்த நாவினை மேலும் கீழும் தட்டி சப்தம் உண்டாக்கி, பேச்சாயிருக்கின்ற தொழிலை உண்டாக்குகின்றது. இதனால்தான் பிரம்மாவிற்கு சரஸ்வதி மனைவி என்று சொல்லுவது. தாய் என்று சொல்லுவதற்குக் காரணம் என்னவென்றால்: சப்தம் இல்லாவிட்டால் யாதொன்றுமில்லை. சப்தம் இல்லையென்றால் நான் என்கிற நிலைமையுமில்லை.அது எவ்விதமென்றால்: நாம் தூங்கும்பொழுது நமக்கு சப்தம் கேட்பதற்கோ, சப்தம் உண்டாக்குவதற்கோ முடிவதில்லை. எப்பொழுது சப்தம் தட்டுகின்றதோ அப்பொழுது தூக்கம் தெளிகின்றது. அப்பொழுதாகும் நான் என்கிற நிலைமை உண்டாகிறது. அந்த நான் என்கிற நிலைமை எங்கிருந்து உண்டாயிற்று?

சி : சப்தத்திலிருந்து உண்டாயிற்று.

கு : சப்தத்திலிருந்து நான் உண்டான பொழுது எனக்கு சப்தம் யாராகின்றது?

சி : தாயாராகின்றது.

கு : அதனால்தான் சரஸ்வதி பிரம்மாவிற்குத் தாய் என்று சொல்லக் காரணம். பிரம்மாவிற்கு சரஸ்வதி சகோதரி அதாவது தங்கை என்று சொல்லுவதற்குக் காரணம்: சப்தத்திலிருந்து 'நான்' முதலில் உண்டாகி, அதன் பின்பு சப்தம் உண்டாகியது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அப்பொழுது சப்தம் உண்டாவதற்கு முன்பு நான் உண்டானது. அதன் பிறகு ஸ்திரீயாகிய சப்தமும் தன்னிலிருந்துண்டானது. அதனால் முதலில் நானும் அதற்குப்பின் தன்னிலிருந்து சப்தமாகிய ஸ்திரீயும் உண்டானதால் அந்த ஸ்திரீ எனக்கு யாராகின்றாள்?

சி : தங்கையாகின்றாள்.

கு : ஆகையினால் நான் என்கிற நிலைமை முதலில் உண்டாயிற்று. அதன்பிறகு சப்தமாகிய ஸ்திரீ உண்டானதால் தன் கூடப் பிறந்தவள் தங்கை என்றாயிற்று. இதனால்தான் பிரம்மாவிற்குத் தங்கை சரஸ்வதி என்று சொல்லிவருவது. அதனால் முன்சொல்லிய முறையிலாகும் பிரம்மாவினுடையவும் சரஸ்வதியினுடையவும் நிலைமைகள். இதனாலாகும் வேதசாஸ்திராதிகளில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றினுடைய உண்மைத் தத்துவத்தை அறியாமல் உலகத்தில் ஜனங்கள் இன்னின்னவை தப்பிதமென்று அறியாமலும் நியாய அநியாயங்களை ஆலோசிக்காமலும் யாதொரு நாணமுமில்லாமல், 'நான் பண்டிதன், எனக்குப் பண்டித பட்டம் கிடைக்க வேண்டும்' என்று அபிமானித்தும் அகங்கரித்தும் ஏதாகிலும் சொல்லி அட்டகசித்தும் கொண்டிருக்கிறார்கள். அதனால் மேற்சொல்லிய விதத்திலாகும் பிரம்மாவினுடையவும் சரஸ்வதியினுடையவும் உற்பத்தி. அது மனத்திலிருந்து உற்பத்தியானதாகும். அந்த மனமாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவிலிருந்தாகும் விஸ்வம் அதாவது உலகு உண்டானது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்த விஷ்ணுவாகின்ற மனமாகும் விஸ்வத்தை, அதாவது உலகத்தை பரித்து அதாவது ஆண்டுகொண்டிருக்கிறது. அதனால் விஷ்ணுவிற்கு விஸ்வம்பரன் என்று பெயர் உண்டாயிற்று. விஸ்வம் என்பது உலகு. இந்த உலகம் மனமாகின்ற விஷ்ணு இல்லையேல் உண்டாவதில்லை. அதெப்படியென்றால்: ஒருவன் தூங்குகிறான் என்று சொல்லும் சமயம் அவனுக்கு விஸ்வம் அதாவது உலகு இல்லை. எப்பொழுது தூக்கம் விழிக்கின்றானோ அப்பொழுது மனமாகின்ற விஷ்ணு முட்டைவடிவமாக வெளியில் வருகிறது. அப்பொழுது விஸ்வமாயிருக்கின்ற உலகு உண்டாகின்றது. அப்பொழுது முன் விவரித்தபடி, பிண்டாண்டமாய், முட்டை வடிவமாய் வெளியில் தள்ளி நிற்கின்ற உலகத்தில் அதாவது, தன்னுள்ளிலிருந்து விட்டுப் போகாமல் வெளியில் தள்ளி நிற்கின்ற பிண்டாண்ட மாயிருக்கின்ற உலகமாகிய வெளியினுள்ளில் தன் உள்ளிலிருக்கின்ற ஜீவசக்தி பிரதிபிம்பித்துக் காணுகின்றதாகும் நாம் காணுகின்றதும் கேட்கின்றதும் அறிகின்றதுமாகிய எல்லா நிலைமைகளும். இவற்றிற்கெல்லாம் காரணம் மனமாகும். அந்த மனமாகும் விஸ்வம்பரனாயிருக்கின்ற விஷ்ணு. அந்த விஸ்வம் பரனாயிருக்கிற விஷ்ணுவாகும் இரஜோகுணம். அது எதனாலென்றால்: இராஜ்யம் பரிபாலிக்கின்ற வருக்கு இராஜா என்று சொல்லுகின்றனர். காரணம், அந்த இராஜ்யத்தினுடைய எல்லா பரிபாலன அதிகாரங்களும் இராஜாவுக்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இருக்கிறது. அதுபோன்று விஸ்வத்தை அதாவது உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதனால் மனமாயிருக்கின்ற விஷ்ணுவுக்கு விஸ்வம்பரன் என்று பெயர். அப்பொழுது விஸ்வமாகிய உலகுக்கு இராஜா மனமாயிருக்கின்ற விஷ்ணுவாகும். அதனால் பரிபாலனத் தன்மை யாருக்கிருக்கின்றதோ அவராகும் இராஜா. தவிர, விஷ்ணுவென்றும் சிவனென்றும் சங்கற்பித்து எழுதியதான ஒரு படத்தை அதாவது சித்திரத்தைப் பார்த்தால் விஷ்ணுவென்பது அனந்தசயனனாய், கிரீடாதிபதியாய், முத்துமாலை, கங்கணம் முதலிய ஆபரணங்கள் அதாவது நகைகளும் பட்டுவஸ்தி ரங்களும் அணிந்து, சர்வ அலங்கார பூஷணனாகி, மனைவிமார்களான இலக்குமி, க்ஷம இவரோடும் பரிவாரங்களாகிய தும்புரு நாரதர், வீணா நாரதர், கருடன் முதலியவர்களோடும் மிகவும் இரஜோகுண மூர்த்தியாய்க் காணப்படுகிறது. அதல்லாமல் கிரீடம் இராஜாக்களுக்காகும். அதனால் இரஜோகுணம் விஷ்ணுவாகும்.

**தவிர, நீர் இரஜோ குணம் கொண்டு சிருஷ்டி கர்த்தாவாக பிரம்மாவைச் சொல்லுகிறீர். அதுவும் சரியாகும்.** அதெப்படியென்றால்: இரஜோகுணமாயிருக்கின்ற மனதாகிய விஷ்ணு சுக்கிலமாகும். அந்த சுக்கிலத்தைக் கொண்டாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா சிருஷ்டிக் கின்றது. அதெவ்விதம் என்பதற்கு உதாரணம்: ''வாளினால் இராமன் வாழையை வெட்டினான்'' என்கிற வாசகத்தில் ஒருக்காலும் வாள் இராமன் ஆவதில்லை. வாள் என்று சொல்லுவது ஒரு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பொருள் ஆகும். வாழையென்று சொல்லுவதும் ஒரு பொருள் ஆகும். வாழை என்கிற பொருளை வாள் என்கிற பொருளைக் கொண்டு இராமன் வெட்டிய தாகும். வாள் என்றும் வாழை என்றும் உள்ள பொருள்கள் இல்லையென்றால் வெட்டுகின்ற தொழிலில்லை. இப்படியேதான் இரஜோகுணமென்று சொல்லுகிற விஷ்ணு வென்ற சுக்கிலம் ஒரு பொருளாகும். அந்த சுக்கிலமாய் இருக்கின்ற பொருளைக் கொண்டாகும் சிருஷ்டிகள். அந்தப் பொருள் இல்லையென்றால் சிருஷ்டியில்லை. சிருஷ்டிக்கின்றது அகங்காரமாயிருக்கின்ற பிரம்மாவாகும். அந்த அகங்காரம் இல்லை யென்றால் சம்யோகம் என்கிற புணர்ச்சியில்லை. அந்த அகங்காரம் உண்டாயிருந்தும் மனம் இல்லையானால் சம்யோகம் என்கிற புணர்ச்சி உண்டாவதில்லை. மனமாகிய சுக்கிலம் நிமித்தம், அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா, சம்யோக மாகின்ற தொழிலினால் மேற்சொன்ன இரஜோ குணமாயிருக்கின்ற சுக்கிலத்தைக் கொண்டு சிருஷ்டிக்கின்றது. **இதனால்தான் இரஜோ குணம் கொண்டு பிரம்மா சிருஷ்டிக்கிறதென்று சொல்லுகிறது. ஆகையினால் பிரம்மா இரஜோகுணம் அன்று, தாமஸகுணமாகும்.**

சிவனென்பது தாமஸ, இராஜஸ குணங்களை விட்டு சுத்த சாத்வீகம் ஒன்று மட்டுமாகி, சடை, மரவுரி, திருநீறு, உருத்திராக்கம் அதாவது ருத்தி ராட்சம் தரித்து, மௌனியாகி, எப்பொழுதும் தபோ நிஷ்டையாய், யாதொரு அலங்காரமும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இல்லாமல் காணப்படுகிறது. அது சாத்வீக குணமாகும். அதாவது சிவனாயிருக்கின்ற ஜீவனாகும். இந்த ஜீவனாகும் இரக்ஷிக்கின்றது. அதுகொண்டாகும் சத்துவகுணம்கொண்டு "இரக்ஷகர்த்தா" அதாவது பரிபாலன கர்த்தா விஷ்ணுவென்று சொல்லுவது. அதனால் மனமாகின்ற விஷ்ணு இரக்ஷிக்க வேண்டு மென்றால் ஜீவன் வேண்டும். ஜீவனைக் கொண் டாகும் மனமாகிய விஷ்ணு இரக்ஷிக்கின்றது. ஜீவன் இல்லையென்றால் யாதொன்றுமில்லை. இரஜோ குணமாயிருக்கின்ற மனத்திலிருந்து பூதமாயிருக்கின்ற அகங்காரம் உண்டாகின்றது. அந்தப் பூதமாயிருக்கின்ற அகங்காரத்தை சாத்வீகமாயிருக்கின்ற ஜீவன் இரட்சிக்கின்றது. அது எந்த விதத்திலென்றால்: மனமாகிய இரஜோகுணத்தைக் கொண்டு சம்யோகம் நிமித்தம் அகங்காரமாயிருக்கின்ற இக்காணுகின்ற ஜடத்தை சிருஷ்டித்தது. இந்த சடத்தை சாத்வீகமாயிருக்கின்ற ஜீவனாகும் இரட்சிக்கின்றது அதாவது காப்பாற்றுகிறது. அதெப்படியென்றால்: சம்யோகம் நிமித்தம் இரஜோகுணமாயிருக்கின்ற சுக்கிலத்தால் அகங்காரமாய் பூதமாயிருக்கின்ற உருவத்தை சிருஷ்டிக்கிறது. அதாகும் பிறந்து விழுந்ததாகிய குழந்தை. அந்தக் குழந்தைக்குள்ளில் ஜீவனாயிருக்கின்ற சாத்வீக குணம் இல்லையென்றால் அது பிணமாகிறது. அதனால் ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயு இருக்கும் பொழுது ஜீவன் உண்டென்றும் சொல்லுவது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அந்த ஜீவனாகி வாயுவாகி சாத்விகமாயிருக்கின்ற ஜீவனிலிருந்து இரஜோகுணமாய் இருக்கின்ற மனம் உற்பவித்தது. அதனால் சாத்வீகத்திலிருந்து இராஜசம் உண்டானதென்றும் சொல்லுவது. சாத்வீக குணமாயிருக்கின்ற ஜீவனுடைய சலனமாகிய வாயு என்கிற பொருளைக் கொண்டு காப்பாற்றி வருகிறது அந்த இராஜசமாகும். இதனால்தான் சத்துவகுணம் கொண்டு "இரக்ஷகர்த்தா" என்று விஷ்ணுவைச் சொல்லுவது.

தமோ குணத்தால் "சம்ஹார ருத்திரன்" ஆகும் என்று சிவனைச் சொல்லுகின்றனர். அது எவ்விதமென்றால்: தமோகுணத்தால் சிவன் சம்ஹார ருத்திரனாய்த் தீருகிறது. அதாவது ஆத்மாவாகி, ஜீவனாகி, வாயுவாகி, தேஜஸாய் இருக்கின்ற பொருளாகும் சிவன். 'ருத்திரன்' என்பதில் ருகாரம் என்பது தேஜஸ். அது அக்கினியாகும். அந்த அக்கினி திரவித்து நசிக்கின்றது. அதற்காகும் ருத்திரனென்று சொல்லுவது. ஆகையினால் முன்சொன்ன சிவனாகி, தேஜஸாகி இருக்கின்ற பொருள் திரவித்து நசித்துக் கொண்டிருப்பதனால் ருத்திரனென்று சொல்லுவது. அதற்குக் காரணம் தமோகுணமாயிருக்கின்ற அந்தகார மாகும். அந்த அந்தகாரமாகும் அகங்காரம். அந்த அகங்காரம் நிமித்தம் தன்னைத் தானறியாமல், அது வேண்டும், இது வேண்டும், நான் உயர்ந்தவன், ஸ்தானி, மானி, என்றிவ்விதத்திலுள்ள துரபிமானத்தால் மோகாந்தகாரர்களாகி, ஜீவனாகி, தேஜஸாய்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இருக்கின்ற பொருள் திரவித்து, அதோகதியாகி, ஜனங்கள் நசித்துப் போகின்றார்கள். இதனால்தான் சிவன் ருத்திரனாக விளங்கி சம்ஹாரம் செய்கிறதென்று சொல்லுவது. இவ்விதமல்லாமல் நம்மிலிருந்து வேறுபட்டு ஒரு சிவன் ருத்திரனாகப் பிறந்து வந்து நம்மைக் கொல்லுவதில்லை. நம்மிலிருக்கின்ற ஜீவனாய், வாயுவாய், பிரகாசமாய் இருக்கின்ற பொருள் அகங்காரம் நிமித்தம் தன்னைத்தான் அறியாமல் முன்சொல்லிய துரபிமானமாகிய விசாரங்களால் நசித்துப் போகின்றதாகும்.

அதுவுமல்லாமல் உலகத்தில் பிரதிஷ்டாதிகள் செய்து பூஜித்து வருகிறார்கள். இவற்றைப் பார்க்கும் பொழுது தமோகுணம் பிரம்மாவும், இரஜோ குணம் விஷ்ணுவும், சத்துவகுணம் சிவனும் ஆகவும் காண்கிறது. ஏனென்றால் பிரம்மாவை உலகத்தில் எவரும் பூசிக்கின்றதாகக் காணுவதில்லை. விஷ்ணுவையும் சிவனையும் மட்டுமே பூஜித்து வருகின்றார்கள். இரஜோகுணம் பிரம்மாவாய் இருந்தால் கட்டாயமாய் பிரம்மாவையும் பூஜிக்க வேண்டியதாகும். அவ்விதம் உலகத்தில் தமோகுணத்தை யாரும் பூஜிப்பதில்லை. சத்துவ குணத்தையும் இரஜோ குணத்தையும் மட்டுமே பூஜிப்பதாகக் காணுகிறது. அது எதனாலென்றால், இரஜோகுணம் இராஜாவாக இருப்பதால் இராஜாவை பூஜிக்க வேண்டும். ஏனென்றால் இராஜா இரக்ஷாகர்த்தாவாகும். அதனால் இரக்ஷிக்கின்ற இராஜாவை சாதாரணமாகப் பூஜித்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வருகின்றனர். அதுவுமல்லாமல் இராஜாவும்பாக்கி பிரஜைகளும் சாத்வீகத்தை பூஜித்துவருகின்றார்கள். சாத்வீகம் சந்நியாசியாகின்றது. அதெப்படியென்றால்: அவர் இராஜஸ, தாமஸகுணங்கள் விட்டு, சுத்த சாத்வீக குணத்தோடு மட்டும் நடக்கின்றவராகும். அவ்விதமுள்ளவர் உலக குருக்களாகும். அம்மாதிரியுள்ள உலக குருக்களாகிய சந்நியாசிகளை இராஜா முதலான எல்லா ஜனங்களும் பூஜித்து வருகிறார்கள். அப்பொழுது உலகத்தில் சாத்வீக குணத்தையும் இராஜஸ குணத்தையும் மட்டுமே பூஜித்துவருவதாயிருக்கிறது. தமோ குணக்காரர்களாகி ராகத்துவேஷாதிகளாகி நடக்கின்றவரை எவரும் பூஜிப்பதில்லை. இதற்கு அனுசரித்தாகும் உலகத்தில் பூஜாகிரமங்களும் காணுகின்றன. அதெப்படியென்றால்: விஷ்ணு க்ஷேத்திரங்களில் விஷ்ணு என்று சங்கல்பித்ததான பிம்பங்களை எந்த முறையிலாகும் பூஜிக்கின்றனர்?

சி : அதைக் குளிப்பித்து பிதாம்பரம் அதாவது பட்டுவஸ்திரங்கள் முதலியன உடுத்தி, கிரீடம் வைத்து பல ஆபரணங்களையும் அணிவித்து, பரிமளதிரவியம் முதலானது சாத்தி, பல அலங்காரங்களும் செய்து, வெகு அழகாக நிறுத்தி, பலவிதத்திலுள்ள புஷ்பங்களை அர்ச்சித்து பூஜிக்கின்றனர்.

கு : மேலே சொன்ன நிலைமைகளெல்லாம் என்ன ஆகின்றன?

சி : அலங்காரமாகின்றன.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அலங்காரம் என்பது எந்தக் குணத்திற்கு?

சி : இரஜோகுணத்திற்கு.

கு : அப்பொழுது விஷ்ணுவை எந்தக் குணமாய்ப் பூஜித்து வருவது?

சி : சுத்த இராஜோகுணமாயாகும் பூஜித்து வருவது.

கு : அதனால் இரஜோகுணமென்பது எது?

சி : விஷ்ணு.

கு : சிவக்ஷேத்திரங்களில் சிவலிங்கங்களைப் பூஜிக்கின்றது எவ்விதத்தில்?

சி : சிவலிங்கங்களுக்கு அபிஷேகமாகும் முக்கியமாய் இருக்கின்றது. காசி, கோகர்ணம் முதலான க்ஷேத்திரங்களிலுள்ள சிவலிங்கங்களுக்குச் சதா காலமும் அபிஷேகமாகும் முக்கியமாயுள்ளது. அதல்லாமல் கோகர்ணத்தில் சிவலிங்கத்திற்கு மேல்பாகத்தில் ஒரு தோணியைக் கட்டித் தொங்க விட்டு அதில் தண்ணீர் நிறைத்திருக்கின்றனர். அந்தத் தண்ணீர் சதா காலமும் அந்த சிவலிங்கத்தின் மேலே ஒழுகி விழுந்துகொண்டே யிருக்கிறது. இதல்லாமல் பல க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவலிங்கங்களுக்கு மேல்பாகத்தில் ஒவ்வொரு தாராபாத்திரத்தைக்கட்டித் தொங்கவிட்டிருக்கின்றனர். அந்தப் பாத்திரத்தினுடைய அடிபாகத்தில் சிறு துவாரமுண்டாக்கி அதில் தண்ணீர் நிறைத்திருக்கின்றனர். அந்தத் தண்ணீர் எப்பொழுதும் சிவலிங்கத்தின்மேல் விழுந்து கொண்டிருக்கும்.

கு : அதனால் சிவலிங்கத்திற்கு முக்கியம் எது?

சி : அபிஷேகம்.

கு : மேல்சொல்லியவாறு அதன்மேல் சதாகாலமும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தண்ணீர் விழுந்து கொண்டிருந்தால் அதை அலங்கரிப்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : முன் சொல்லியபடி சதா காலமும் அபிஷேகம் செய்தால் அதன்மேல் ஏதாகிலும் களங்கமோ அழுக்கோ உண்டாகுமா?

சி : உண்டாவதில்லை.

கு : களங்கமும் அழுக்கும் இல்லாமலும், அலங்காரம் இல்லாமலும் இருக்கின்றது எந்தக் குணமாகும்?

சி : சுத்த சாத்வீக குணமாகும்.

கு : அப்பொழுது சிவனை எந்தக் குணமென்றாகும் சொல்லவேண்டியது?

சி : சுத்த சாத்வீக குணம் என்றாகும்.

கு : அதனால் சாத்வீக குணம் சிவன் என்றும் இரஜோ குணம் விஷ்ணு என்றும் வெளிப்படுகிறது. அந்த இரஜோ குணத்திலிருந்து உண்டாகிய அகங்காரமாய் இருக்கின்ற தமோகுணமாகும் பிரம்மா. அதனால் உலகில் சத்துவகுணமாய் இருக்கின்ற சிவனையும் இரஜோகுணமாய் இருக்கின்ற விஷ்ணுவையும் மட்டும் பூஜித்துவருகின்றனர். தமோ குணமாய் இருக்கின்ற பிரம்மாவை பூஜிப்பதில்லை. உலகத்தில் பூஜிக்கின்ற ஜனங்கள் இன்னின்னவைகள்தான் குணங்கள் என்று தெரியாமலும் அதைப் பற்றிச் சிந்திக்காமலும் தாம் செய்கின்ற தொழில் இன்னதென்று அறியாமலும் சத்துவகுணம் விஷ்ணு என்றும் தமோ குணம் சிவன் என்றும் இரஜோகுணம் பிரம்மா என்றும் சொல்லி யாதொரு விவரமும் இல்லாமல் புகழ்ந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நடக்கிறார்கள். இது தவறுதலாகிறது. எனில் உண்மை ஏதென்றால் சாத்வீகம் என்பது ஜீவனும் அது சிவனும், இராஜஸம் என்பது சாத்வீகமாயிருக்கின்ற ஜீவனிலிருந்து உண்டாயிருக்கின்ற மனமும் அது விஷ்ணுவும், தாமஸம் என்பது இராஜஸமாய் இருக்கின்ற மனத்திலிருந்து உண்டாயிருக்கின்ற அகங்காரமும் அது பிரம்மாவும் ஆகும். இதாகும் திருமூர்த்திகள் அதாவது மும்மூர்த்திகள். மும்மூர்த்திகளாகி இப்படியாக இருக்கின்ற முக்குணங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து உற்பத்தி ஸ்தானமான ஆகாசத்தில் எப்பொழுது லயிக்கின்றதோ அப்பொழுது திரிகுண ரகிதமாய் திரிகுணாதீதமாய்த் தீருகிறது. அதாகும் மோக்ஷம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# பத்து

**சிஷ்யன் :** குருவே! மனம் என்பது விஷ்ணுவாகும் என்றும் சக்தியாகும் என்றும் ஜலமாகும் என்றும் சுக்கிலமாகும் என்றும் கற்பித்தீர்களல்லவா? ஒரே பொருளைத்தானே இவ்விதமாக மாறிமாறிச் சொல்வதன் காரணம் என்னவாகும்?

**குரு :** அது ஒரே பொருளே (வஸ்துவே) ஆகும். அதற்கு சந்தேகமில்லை. எனில் அதற்குப் பல மாற்றங்கள் உண்டாவதால் பல பெயர்களும் உண்டாவதாகும். அதெப்படியென்றால்: அக்ஷரமாய், தானாயிருக்கின்ற பொருள் ஆகாசமான வெளியாகியது. அந்த வெளியாயிருக்கின்ற ஆகாசத்திற்காகும் சதாசிவன் என்று சொல்லுவது. அதாகும் தானாயிருக்கின்ற ஜோதி. அந்த ஜோதியாயிருக்கின்ற தனக்குச் சலனம் உண்டானதற்கு ஜீவன் என்று சொல்லுகிறோம். அந்த ஜீவனாகும் ஆத்மாவாய், சைதன்யமாயிருக்கின்றது. அதாகும் தேகம். அந்த தேகத்தில் இருந்து ஆவியாய், வியர்வையாய், அக்கினி சொரூபமாகிய சுக்கிலம் உண்டாகின்றது. அந்த சுக்கிலமாகும் மனம். அது ஜலாம்சம் ஆகும். அதாகும் விஷ்ணு. அதற்காகும் சக்தி என்று சொல்லுவது. அதனால்தான் சக்தியிலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் உண்டாவதென்றும் சொல்லுவது. சக்தி இல்லாவிட்டால் சிருஷ்டி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஸ்திதி சம்ஹாரம் உண்டாவதில்லை. அந்த சக்தி சுக்கிலமாகும். சுக்கிலம் இல்லையென்றால் யாதொரு சிருஷ்டியும் உண்டாவதில்லை. அந்த சுக்கிலமாயிருக்கின்ற சுவேதஜமாகும் பிரம்மாண்டம்.

அது எவ்விதமென்றால் : சமுத்திரத்தில் ஜலமில்லை என்றால் சமுத்திரமென்ற பெயரில்லை. அப்பொழுது அது மிகவும் ஆழமான தரிசாயிருக்கின்ற ஓர் இடமாயிருக்கும். அதில் ஜலம் உண்டானதால் சமுத்திரமென்று பெயர் சொல்லி வருகிறோம். அப்படியுள்ள சமுத்திரத்தில் சில நீர்க்குமிழிகள் உண்டாகின்றன. அவை உண்டாகக் காரணம் ஜலம் அசைந்து அலை அடிப்பதாலாகும். அந்த ஜலத்திற்குச் சலனம் உண்டாகாமலிருந்தால் மேற்சொன்ன நீர்க் குமிழிகள் உண்டாவதில்லை. அலை அடித்தபோது உண்டானது நீர்க்குமிழிகளல்ல, நுரையாகும். அந்த நுரை இல்லையெனின் நீர்க்குமிழிகள் உண்டாகா. அதனால் ஜலத்திலிருந்து உண்டானது நுரையும் அதிலிருந்துண்டானது நீர்க்குமிழிகளுமாகும். அந்த நீர்க்குமிழிகள் ஜலத்தின்மீது எழும்பி உருண்டு, முட்டை வடிவில் பளிங்கு வர்ணமாய்க் கிடக்கின்றன. எனவே, ஜலத்தின் மேலாக நுரை நீர்க்குமிழிகளாய் மிதந்து கிடக்கிறது.

இப்படியேதான் ஆகாசம் என்பது சமுத்திரத்தில் ஜலமில்லாத நிலைமை எவ்விதமோ அவ்விதமாகு மென்று கருதவும். ஜலம் உண்டான போதாகும் சமுத்திரம் என்று சொல்லுவது. அதேபோன்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆகாசத்தில் வாயு உண்டானபோது சமுத்திரம் என்றும் அந்த சமுத்திரம் மாயா சமுத்திரம் ஆகுமென்றும் கருதவும். சமுத்திரத்திலிருந்து அலையடித்தபோது நுரையுண்டானதென்று சொல்லுவதற்கு மாயா சமுத்திரத்தில் வாயுவாய் இருக்கின்ற ஜலத்தினுடைய அலையடிக்கின்றதிலிருந்து மனமாகிய நுரையுண்டாயிற்று. சமுத்திரத்தில் அலையடித்ததால் உண்டான நுரை நீர்க்குமிழிகளாய் உருண்டு முட்டை வடிவமாய், பளிங்கு வர்ணமாய் ஜலத்தின்மீது கிடப்பதென்று சொன்னது மாயாசமுத்திரத்தில் சலனமாகிய வாயுவிலிருந்து நுரையாயிருக்கின்ற மனம் உண்டாகவும் அந்த மனம் குமிழியாய் உருண்டு முட்டை வடிவாகி பளிங்கு வர்ணமாய் மாயா சமுத்திரத்தின்மீது அகங்காரமாய்க் கிடக்கவும் செய்கிறது. எனில் சமுத்திரத்தில் உண்டாயிருந்த ஜலம்தானே அலைகளாகவும், நுரைகளாகவும், நீர்க்குமிழிகளாகவும் உண்டாகி, ஜலத்தின் மீது கிடப்பதாகும். அதெல்லாம் சமுத்திரத்திலே ஜலமாய்த்தான் இருந்தது. ஜலம் உண்டாயிருந்ததில்லை என்றால் இவ்விதம் யாதொன்றும் உண்டாவதில்லை. அதைப் போலவேதான் ஆகாசத்தில் வாயு உண்டானதால் மாயாசமுத்திரம் என்றும் அந்த மாயாசமுத்திரத்திலே வாயுவின் அலைகளினுடைய சலனம் நிமித்தம் நுரையாகின்ற மனமும் அகங்காரமாயிருக்கிற நீர்க்குமிழியும் உண் டாகின்றன. எப்படி ஜலம் நுரையாகவும்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நீர்க்குமிழியாகவும் உண்டாயிற்றோ அப்படியேதான் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு, மனமாகவும் அகங்காரமாகவும் உண்டானதாகும். நீர்க்குமிழிகள் எவ்விதத்தில் ஜலத்திலேயே ஜலத்திற்குமீது கிடந்திருந்ததோ அவ்விதத்தில்தான் அகங்காரமாயிருக்கின்ற குமிழியும் ஜீவசக்தியாகிய வாயுவிலேயே வாயுவின் மீது கிடக்கின்றது. அது பளிங்கு நிறம் ஆனதால் அதில்கூடி பிரதிபிம்பித்து, தான் யாரென்றறியாமல் 'நான் எல்லாவற்றுக்கும் மேலாகும், சர்வமும் எனக்குக் கீழாகும்' என்றிப்படி துரபிமானித்து கிடக்கின்றது. எனில் முன்சொன்ன நீர்க்குமிழிகள் ஒரு நிமிஷ நேரத்திற்குள் உடைந்து அவை உண்டானதாகிய ஜலத்திலேயே லயிக்கின்றது. இதே போன்றுதான் அகங்காரமாய் இருக்கின்ற குமிழிகள் தன்னைத்தான் அறியாமல் அபிமானித்து, கொஞ்ச நேரத்திற்குள் உடைந்து, அவை உண்டான ஜீவசக்தியாகிய வாயுவில் தானே லயிக்கின்றன. அது ஒரே பொருளேதான் இப்படியெல்லாம் உண்டாகின்றதாகும். அதற்குப் பல மாற்றங்களும் உண்டானதால் அந்த மாறுதல்களுக்கு அனுசரித்து பல பெயர்களும் சொல்லுவதற்குக் காரணமாயிற்று.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் பதினொன்று

சிஷ்யன் : சுவாமி! முன் அத்தியாயத்திலும் அதற்கு முந்தின அத்தியாயங்களிலும் கற்பித்தபடி தேகம் வாயுதான் என்றும், இக்காணுகின்ற ஜடம் தேகம் அல்லவென்றும் தெரிகிறது. எனில் உலகத்தில் ஸ்தூலம் என்றும் சூக்ஷமம் என்றும் காரணம் என்றும் மூன்று தேகங்கள் உண்டென்று சொல்லுகிறார்கள். தேகம் சுவாமிகள் கற்பித்தது போல என்றால் மேல்சொல்லிய மூன்று தேகங்கள் எவையெவை என்று விவரித்துச் சொல்ல வேண்டும்.

குரு : ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் இப்படி மூன்று தேகங்கள் எவையெவை என்று நீர் எண்ணியி ருக்கின்றீர்?

சி : ஸ்தூலம் என்பது இதுவரை தேகமென்று சங்கற்பித்த இக்காணுகின்ற ஜடமாகும் என்றும் காரணம் என்பது அவித்தையாகி அதாவது வித்தையில்லாமல் ஒன்றும் அறியாமலிருக்கின்ற சுஷுப்தியாகுமென்றும் சூக்ஷமம் என்பது மனம் என்றுமாகும்.

கு : இவையெல்லாம் மிகவும் தப்பிதம்தான். ஏனென்றால் நீர் சொல்லியவாறு மூன்று தேகங்கள் உண்டாவதற்கிடமில்லை. எனில் ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்று சொல்லுபவை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜீவனும், அந்த ஜீவனின் சலனமாயிருக்கின்ற சக்தியாகிய மனமும், அதிலிருந்துண்டாகிய மாயையாகிய அகங்காரமும் ஆகும். இக்காணுகின்ற ஜடத்தை அதாவது உடம்பை ஒருக்காலும் ஸ்தூல தேகம் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் சூக்ஷ்மதேகம் என்பது மனம் என்று நீர் தானே சொல்லுகின்றீர். அந்த மனம் ஸ்தூலம் என்று சங்கற்பிக்கின்றதாகிய இந்த ஜடத்திலேயே என்றும் சொல்லுகின்றீர். ஸ்தூலம் என்பது தடித்ததும் சூக்ஷ்மம் என்பது சிறியதாயிருக்கின்றதும் ஆகின்றன. மிகவும் சிறியதாயிருக்கின்ற பொருள் மனமாகும். மிகவும் சிறியதாயிருக்கின்ற மனத்திலிருந்தாகும் இக்காணு கின்ற உலகு உண்டானது. அந்த மனத்திலேயேதான் உலகம் இருக்கின்றதும். அதனால் மனத்தினுடைய கல்பிதமாகும் உலகம் என்று சொல்லுவது. அப் பொழுது எவ்வளவோ இலகுவாயும் சிறிதாயும் சூக்ஷ்மமாயும் இருக்கின்ற மனத்திலிருந்து உலகம் உற்பவிக்கவும் அந்த மனத்தில்தானே உலகம் அடங்கவும் செய்கிறதென்று வருகிறது. இக்காணு கின்ற ஜடமும் அந்த மனத்திலிருந்தேதான் உண்டானதாகும். மனம் இல்லையானால் ஜடம் உண்டாவதில்லை. அதனால் சூக்ஷ்மமாயிருக்கின்ற மனத்தினால் உண்டாக்கப் பட்டதாகும் ஜடம். அதல்லாமல் ஒருவன் செத்தபோது பிணமாயிருக்கின்ற ஜடத்தை நாம் காண்கிறோம். அதில் மனம் உண்டாயிருப்ப தில்லை. அதனால் அந்தப் பிணத்திற்கு உலகமில்லை. இந்த ஜடமாகும் ஸ்தூல தேகம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று வைத்தால் செத்தபோது பிணமாகிய ஜடத்தைக் காண்கிறோம். அதனுடைய அவையங்களுக்கு யாதொரு கெடுதியும் காணவில்லை. **ஸ்தூலமுள்ள காலம் வரையில் சூக்ஷமம் உண்டென்றும் ஸ்தூலம் இல்லாமல் ஆகும்பொழுதும் சூக்ஷமம் நசிக்கின்றதில்லை என்றும் சொல்கின்றனர்.** எனில் இந்த ஜடம் ஸ்தூலமாய் இருந்தது என்றால் சூக்ஷமம் நசித்தும் ஸ்தூலம் என்கிற ஜடம் நசிக்காமலும் காணுகிறது. அதனால் இந்த ஜடத்திற்கு ஒருக்காலமும் ஸ்தூலம் என்று சொல்லக்கூடாது. செத்தது என்று சொல்லும் சமயத்தில் என்னவாகும் அதில் இல்லாமற் போனது என்று வைத்தால் ஜீவனேயாகும். **அதனால் அந்த ஜீவனாகும் ஸ்தூலதேகம். அந்த ஜீவனாயிருக்கின்ற ஸ்தூல தேகத்தில் உள்ளதாகும் சூக்ஷமமாய் இருக்கின்ற மனம்.** காரணதேகம் என்று சொல்லுவது அவித்தையாய் அதாவது வித்தை இல்லாமல் ஒன்றுமறியாத சுழுத்தி ஆகுமென்று நீர்தானே சொல்லுகிறீர். அதாவது ஜீவன் வெளியே சக்தியாய் சலித்தபோது அந்த சக்தியிலிருந்து உண்டான அகங்காரத்திற் காகும் மாயை என்று பெயர். அந்த மாயையாகும் ஒன்றுமறியாத சுழுத்தி என்று ஏழாம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. **எனில் இந்த ஜடத்திற்கு ஸ்தூலம் என்று சொல்வதன் காரணம், ஸ்தூலமாகிய ஜீவனை அறியாததாலாகும்.**

அது எவ்விதமென்றால்: ஒரு வஸ்திரத்தினுடைய இரண்டு பக்கங்களிலும் கனமாகப் பசை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தேய்த்து உலர்த்தினால் அதைத் தேய்த்தவன் தவிர, பாக்கி யாருக்காகிலும் அதைப் பார்த்தால் அது வஸ்திரமென்று அறியாமல் அது என்னவோ பசை தேய்த்து உலர்த்திய ஒரு பொருள் என்றே சொல்ல முடியும். அவ்விதம் பசை தேய்த்துள்ள பொருளின் மேல் சாயத்தினால் உலகத்திற்கு ஒப்பாக்கி ஒரு படம் வரைந்து, அதாவது ஆகாசமும் பூமியும் சமுத்திரமும் தவிர, மனிதன், மிருகம், பறவை, ஊர்வன என்றும் மற்றும் நாம் சொல்லி வருகின்றவையும் அடங்கிய ஒரு சித்திரம் வரைக்கப்பட்டது. எனில் சிருஷ்டிகளில் மிருகம், பறவை ஊர்வன என்றும் மற்றும் சொல்லி வருபவற்றிற்கு வழக்கத்திலில்லாததான ஒரு நிலைமை மனிதன் என்று அபிமானித்து வருகின்றவர்களாகிய நமக்குண்டு. அது என்னவென்றால் வஸ்திரம் கட்டுவதாகும். மேல்சொன்ன பசை தேய்த்து உலர்த்திய பொருளின்மீது மனிதர் என்று அபிமானித்து வருகிறவர்களின் உருவத்தையும் வரைந்திருக்கிற தல்லவா? அதற்கொரு வஸ்திரம் கட்ட வேண்டும். அம்மனித உருவம் பசை தேய்த்து உலர்த்திய பொருளின்மீது வரைந்ததால் ஒரு வஸ்திரத்தைக் கொண்டுவந்து அதற்குக் கட்டுவதற்கு முடிவதில்லை. ஆகையால் வஸ்திரத்தினுடைய நிறத்திலுள்ள சாயத்தால் மேற்சொன்ன உருவத்தின் மேல் வஸ்திரம் கட்டியது போன்று தேய்த்து, அதை வஸ்திரம் என்று அபிமானிக் கிறோம். எனில் அது உண்மையில் வஸ்திரமன்று; அது வஸ்திரத்தைப் போல் எழுதியுள்ள வர்ணமாகும். அதில் யதார்த்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அதாவது உண்மை வஸ்திரத்தைக் காண்பதில்லை. உண்மை வஸ்திரத்தைக் காணும் பொழுது முன் சொன்னவை யாதொன்றும் அதன் மேல் உண்டாயிருப்ப தில்லை. உண்மை வஸ்திரத்தைக் காண வேண்டும் என்றால் அதன் மேல் பூசியுள்ள பசையைப் போக்க வேண்டும். பசையைப் போக்கினால் அதன்மேல் எழுதியிருந்த யாதொன்றும் காணுவதில்லை. அவ்விதமுள்ள உண்மை வஸ்தி ரத்தைக் காணாமல் வஸ்திர வடிவில் சாயம் பூசியுள்ளதையே வஸ்திரமென்று அபிமானித்து வருகிறோம். இவ்விதம் எழுதிய சித்திரங்களுக்கும் உண்மை வஸ்திரத்திற்கும் தம்மில் யாதொரு பந்தமும் இல்லை. இந்த வஸ்திரத்தில் பசையைப் பூசிய தாலாகும் முன்சொன்னவை எழுதக் காரணம். அதனால் அந்தப் பசையைப் போக்குவதற்குள்ள பிரயத்னம் செய்ய வேண்டும். அதெப்படி யென்றால்: பசை பூசியுள்ளதான வஸ்திரம் ஜலத்தில் போட்டு ஊற வைத்துத் துவைத்தால் அதிலிருக்கின்ற பசை நீங்கி உண்மை வஸ்திரம் காணப்படும். அப்பொழுது அதில் எழுதப்பட்ட சித்திராதிகள் ஒன்றும் காணுவதில்லை. இதில் வஸ்திரம் ''ஸ்தூலமும்" அதன்மேல் பூசியிருக்கின்ற பசை ''காரணமும்", அதன் மேல் எழுதியிருக்கின்ற சித்திரங்கள் ''சூக்ஷமமும்"ஆகின்றன.

இவ்விதத்தில் தானாயிருக்கின்ற ஜீவன் வஸ்திர மாய் இருக்கின்ற ''ஸ்தூலமும்", ஜீவனுடைய சலனத்திலிருந்து உண்டான யாதொன்றும் அறியாமல் சுழுத்தியாய் மாயையாயிருக்கின்ற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அகங்காரம் வஸ்திரத்தின்மேல் பூசியிருக்கின்ற பசையாகிய "காரணமும்", தானாயிருக்கின்ற ஜீவனுடைய சலனத்திலிருந்து உண்டான மனம் காரணமான பசையின் மீது வரையப்பட்ட சித்திரங்களான "சூக்ஷ்மமும்" ஆகின்றன. அதனால் மேற்சொல்லியபடியுள்ள உண்மையான வஸ்திரத்தை அறியாமல் சாயத்தினால் வஸ்திர வடிவாய் எழுதப்பட்டதனையாகும் வஸ்திரமென்று அபிமானித்திருந்தது. இப்படியேயாகும் மாயையைக் கொண்டு உண்டாக்கிய அகங்காரமான இந்த ஜடத்தை ஸ்தூலம் என்று அபிமானித்தது. எப்பொழுது தனது உண்மையான ஜீவனாயிருக்கின்ற ஸ்தூலத்தை அறிகிறோமோ, அப்பொழுது மற்றொன்றும் இல்லை. அதெப்படியென்றால் உண்மையான வஸ்திரத்தைக் கண்டு தெரிந்து கொண்டபொழுது வேறுபட்டு யாதொன்றும் இல்லை. வேறுபட்டுள்ளதற்கு ஸ்தூலம் என்று சொல்லக்கூடாது. ஸ்தூலம் என்பது தானாயிருக்கின்ற ஜீவனும் காரணம் என்பது அந்த ஜீவனுடைய சலனமாயிருக்கின்ற சக்தியிலிருந்து உண்டான சுழுத்தியாய் இருக்கின்ற மாயையாகிய அகங்காரமும் சூக்ஷ்மம் என்பது ஜீவனுடைய சலனசக்தியாகிய மனமும் ஆகும். இவற்றிற்காகும் ஸ்தூலம், காரணம், சூக்ஷ்மம் என்று சொல்லுவது. தவிர, இப்பொழுது நாம் காரணமாயிருக்கின்ற சுழுத்தியில் இருக்கின்றோம். அவ்வாறு நாம் சுழுத்தியில் இருப்பதால் நாம் அனுபவிக்கிறோம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று தோன்றுவதெல்லாம் சொப்பனமாகும். இதைப்பற்றி விவரமாக ஏழாம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கின்றது. அப்படியுள்ள சொப்பனத்திலானது கொண்டாகும் ஸ்தூல காரண சூக்ஷ்மம் என்கிற தோற்றம் உண்டானது. மேற்சொன்னபடி எல்லா நிலைமைகளும் நாம் சுழுத்தியில் இருப்பதால் சொப்பனம் தோன்றுவதல்லாமல் இப்படி யாதொன்றுமே இல்லாததாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# பன்னிரெண்டு

சிஷ்யன் : குருவே! சுழுத்தி என்று சொல்லுகிறது மாயையென்றும், அந்த மாயை தன்னுடைய சக்தி வெளியில் சலித்துத் தானும் சக்தியும்கூடிக் கலந்து மயங்கிக் கிடப்பதாம் என்றும் வருகிறது. அவ்விதம் கலந்து மயங்கிக் கிடக்கின்ற தன்னை வேறாக அறிவதற்கு எவ்விதத்தில் சாத்தியப்படும் என்பதை அருளிச் செய்ய வேண்டுகிறேன்.

குரு: தானும் தன்னுடைய சக்தியிலிருந்துண்டான மாயையும் என்று சொல்லுவது நித்தியமும் அநித்தியமுமாகும். அவற்றை வெவ்வேறாக அறிய வேண்டியதற்கு ஓர் உதாரணத்தால் தெளிவுபடுத்தலாம். அதாவது: ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து, அதில் உப்பைப் போட்டால் உப்பைக் காணமுடியாது. உப்பு ஜலத்தில் லயித்துப்போகிறது. மீண்டும் உப்பைக் காணவேண்டுமென்றால் தண்ணீரைச் சுண்டச்செய்ய வேண்டும். அப்பொழுது அதுவரைக் கண்டுகொண்டிருந்த தண்ணீர் சுண்டி, காணாமலிருந்த உப்பைக் காணவும் செய்கின்றோம். அதுபோல நித்தியமாயிருக்கின்ற தான் அநித்தியமாயிருக்கின்ற மாயையில் கலந்திருக்கிறது. அவ்விதம் லயித்துக்கிடக்கின்ற தன்னை அறிய வேண்டும் என்றால் மாயையைச் சுண்டச் செய்ய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


வேண்டும். அப்பொழுது அதுவரையில் பார்த்துக்கொண்டிருந்த மாயையாயிருக்கின்ற உலகம் நசித்து, பார்க்காமலிருந்த நித்தியமான பிரம்மத்தைப் பார்க்கக் கூடும். எவ்விதமென்றால்: மேல் சொன்ன உப்பு கலந்திருக்கின்ற தண்ணீரைச் சுண்டச் செய்வதற்கு நெருப்பு வேண்டி வந்ததல்லவா? அதே மாதிரிதான் பிரம்மம் கலந்ததான மாயையாயிருக்கின்ற உலகத்தைச் சுண்டச் செய்வதற்கு அக்கினி வேண்டும். அது விவேகம் என்கிற அக்கினியாகும். எனில் முன்சொன்ன உப்புக்கு நாசமில்லை என்று நினைத்து, தண்ணீரிலிருந்து உப்பை வேறாக்கி தண்ணீரைச் சுண்டச் செய்ய முடியாது. அதனால் நசிக்கின்றதான தண்ணீரை அதில் கலந்திருக்கின்ற உப்புடன்கூடி தீ எரித்து சுண்ட வைத்தால் நாசமுள்ள தண்ணீர் நசித்து, நாசமில்லாத உப்பைப் பார்க்கலாம். அதுபோலவே நித்தியமாயிருக்கின்ற "தான்" அநித்தியமாயிருக்கின்ற மாயையாகிய உலகத்தில் கலந்ததால் தனக்கு நாசமில்லையென்று கருதி மாயையாயிருக்கின்ற உலகத்திலிருந்து தன்னை வேறாக்கி, உலகத்தை நசிக்கச் செய்வதற்கு முடிவதில்லை. அதனால் நாசமுள்ளதான உலகத்தை அதில் லயித்திருக்கின்ற நாசமில்லாத தானாயிருக்கின்ற பிரம்மத்துடன் விவேகம் என்கிற விசேஷ அக்கினியினால் நாசமுள்ள மாயையை நசிப்பித்தால் நித்தியமாயிருக்கின்ற தன்னை அறியலாம்.

சி : குருவே! மாயையாயிருக்கின்ற உலகத்தை விவேகமென்கிற விசேஷ அக்கினி கொண்டு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எவ்விதம் எரிக்க வேண்டும் என்று விவரமாகச் சொல்லித்தர வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கு : நீர் நித்தியனோ? அநித்தியனோ?

சி : நான் என்கிற நிலைமை அநித்தியம்.

கு : அப்பொழுது உமக்கு நாசமுண்டோ?

சி : நான் என்றுள்ள நிலைமைக்கு நாசமுண்டு.

கு : நான் என்றுள்ள நிலைமை உமக்கு இல்லையென்றால் இக்காணுகின்ற உலகம் உமக்குண்டோ?

சி : இல்லை.

கு : அப்பொழுது உமக்கு இந்த உலகம் உண்டானது எங்கிருந்தாகும்?

சி : என்னிலிருந்தாகும்.

கு : எனில் நீர் காணுகின்ற எல்லா நிலைமைகளும் உம்முடைய உள்ளில் இருக்கின்றதாகும். அது எவ்விதமென்றால்: சாதாரணமாக உலகில்சொல்லுவது என்னுடைய ஊர், என்னுடையதாயார், என்னுடைய தகப்பனார், என்னுடைய மனைவி, என்னுடைய சந்ததிகள், என்னுடைய ஜாதி, என்னுடைய வீடு, என்னுடைய தனம் என்றும் எனக்கு ஸ்தானம், மானம், சுத்தம், அசுத்தம், சுகம், துக்கம், சுவர்க்கம், நரகம், கோவில், வாகனம், பந்து (சுற்றம்), பகைவன் இந்தவிதமெல்லாமாகும். எனில் இத்தகைய யாதொன்றும் நான் என்றுள்ள நிலைமையும் நித்தியமல்ல, அநித்தியமேயாகும். அப்பொழுது இவ்வளவு பெரியதாயிருக்கின்ற உலகத்தோடு கூடி நான் என்கிற அகங்காரம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டானது எங்கிருந்து என்றால் மனமா யிருக்கின்ற சக்தியிலிருந்தாகும். அதற்கு உதாரணம் : ''நான் அந்த மலையேறி இறங்கி வந்தேன். அதனால் எனது ஜடம் தளர்ந்து விழுந்து போயிற்று" என்ற இந்த வாசகத்தில் ''நான்" விழுந்ததில்லை, ஜடமாகும் விழுந்தது. தவிர ''என்னுடைய காலின் விரல் கல்லோடு மோதி விரலில் காயம் பட்டபோது, ''ஐயோ! என்னுடைய ஜீவன் போய் விட்டது" என்று சொல்லுகிறோம். இந்த வாசகத்திலும் நான் போகவில்லை. என்னுடைய ஜீவனாகும் போனது. அதல்லாமல் ''நான் இராத்திரி மயானத்து வழியே வரும்போது, ஏதோ ஒரு பயங்கரமான சத்தத்தைக் கேட்டுப் பயந்து என்னுடைய மனம் மிகவும் பிரமித்து நடுங்கிப் போனேன்". இந்த வாசகத்திலும், நான் பிரமித்ததில்லை, என்னுடைய மனம்தான் பிரம்மித்தது. அதனால் முன் சொன்னவர் யாரும் நானல்ல; எனது பந்துவாகும் என்று வருகிறது. அது தவிர, நீர் வேறே மூன்றோ, நான்கோ பேர்களுடன் கூடி ஓர் இடத்தில் பேசிக்கொண்டிருக்கிற பொழுது வேறொருவர் வந்து உம்மை மிகவும் கெட்டவார்த்தைகளைச் சொன்னால் அச்சமயத்தில் உமக்கு அவமானமோ, வெட்கமோ, விசனமோ, அது நிமித்தம் ஆத்திரமோ உண்டாகிறது. அதன்பிறகு நீர் அந்த இடத்தை விட்டு வீட்டிற்கு வந்து உமது சினேகிதரிடமோ, வீட்டுக்காரரிடமோ நான் இன்னின்னவரோடு கூடி இன்ன இடத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது, இன்னவர் வந்து என்னை மிகவும் கெட்ட

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


வார்த்தைகளைச் சொன்னார். அதைக் கேட்ட பொழுது ''நான் இல்லாமலாய்ப் போனேன்" என்றும் சொல்லுகிறீர். அந்த வாசகத்தில் யாரில்லாமலாய்ப் போனது? ஜடம், ஜீவன், மனம் இவையெல்லாம் உண்டு. இவை ஒன்றும் போகவில்லை. அப்பொழுது யாராகும் இல்லாமலானதென்றால் நான் என்று அபிமானித்திருந்த அகங்காரமாகும். தவிர, நீர் வெறொருவருடன் உரையாடியதில் அவரைத் தோற்பித்து உமக்கு வெற்றி கிடைத்தால் நீர் என்ன சொல்லுவீர்? நானும் இன்னவரும் கூடி பேசியதில் நான் அவரைத் தோற்பித்தேனென்றும், அவருடைய வாயில் நீர் சுண்டவைத்தேனென்றும், தவிர, நான் யாராகும், நான் ஸ்தானியாகும், மானியாகும், சமர்த்தனாகும் என்றும் மற்றும் சொல்லி, தன்னைத் தானே புகழ்ந்து பேசவும் செய்கிறீர். அதற்காகும் அபிமானமாயிருக்கின்ற அகங்காரம் என்று சொல்லுவது. அந்த அகங்காரம் நசிப்பதாகும். அவ்விதம் நசிப்பதான அகங்காரத்தினுடைய உற்பத்தி மனத்திலிருந்து என்று தெளிவாகிறது. அந்த மனம் உண்டானது ஜீவனிலிருந்தாகும். அதற்காகும் சக்தியென்று சொல்லுவது. இதாகும் ஜீவனுடைய சக்தி. அந்த ஜீவன் சிவனாகும். அந்த சிவன் தானாகும். தானாயிருக்கின்ற சிவனுடைய சக்தியாகும் மனம். அதற்காகும் சிவசக்தி என்று சொல்லுவது. அந்த சக்தியையாகும் தன்னிலடக்க வேண்டியது. அதனால்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மேற்சொன்னவாறு விசாரணை செய்து தன்னுடைய சக்தி இன்னதென்று அறிந்து அந்த சக்தியை வெளியினுள்ளில் பிரதிபிம்பிக்காமல் விவேகமாகிய விசேஷ அக்கினி கொண்டு மேல்சொன்ன உலகத்தைத் தகிப்பித்து அதாவது எரித்து தன்னில் சேர்த்து தானாயிருக்க வேண்டும். இதற்காகும் நித்தியாநித்திய வஸ்து விவேகம் என்று சொல்லுவது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் பதிமூன்று

சிஷ்யன் : சுவாமி! தேகம் வாயுவாகும் என்றும், அதிலிருந்து உற்பத்தியானதாகும் பாக்கியுள்ளவை யெல்லாம் என்றும் கற்பித்தீர்கள் அல்லவா! தேகம் என்பது அன்னமயகோசம் என்றும் அதனால் அன்னம் புசித்தாலே ஜீவித்திருக்க முடியும் என்றும், தேகம் அன்னத்தைக் கொண்டு போஷிப்பிப் பதாகும் என்றும் சொல்லுகின்றனர். அப்படியிருக்க வாயுவாகும் தேகம் என்றால் அதற்கு அன்னத்தைப் புசிக்க வேண்டியதும் அன்னத்தைக்கொண்டு போஷிப்பிக்கப்பட வேண்டியதும் அதாவது வளர்ப்பிக்கப்பட வேண்டியதும் இல்லை யல்லவா?

குரு : அன்னம் என்பது என்னவென்றாகும் நீர் கருதியிருக்கிறீர்?

சி : அன்னம் என்பது ஏதொன்றைப் புசிக்கிறோமோ, குடிக்கிறோமோ அவையாவும், விசேஷமாக சாதமும் ஆகும்.

கு : இவற்றை மட்டும் புசிப்பதனாலோ, குடிப்ப தனாலோ ஜீவித்திருப்பதற்கு முடியுமோ?

சி : ஆம், முடியும்.

கு : எனில் உலகில் இதுவரை யாரும் செத்துப் போனதில்லையா?

சி : ஏராளமாகச் செத்துப் போயிருக்கிறார்கள்.

கு : அதென்ன காரணம்? ''அன்னம் புசித்தாலே

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜீவித்து இருப்பர்" என்று நீரே சொல்லுகிறீர். எனில் செத்தவர் எல்லாம் நீர் சொன்ன அன்னத்தைப் புசிக்காதவர் ஆவரோ?

சி : அவரெல்லாம் புசித்தவரேயாவர்.

கு : அதெப்படியாகும்? "அன்னம் புசித்தாலே ஜீவித்து இருப்பர்" என்றும், அன்னத்தைக் கொண்டுதான் தேகத்தைப் போஷிப்பிக்கிறதென்றும் நீர் சொன்னீர் அல்லவா? அப்படிச் செய்திருந்தால் அவர் செத்துப்போவதற்குக் காரணமென்ன?

சி : ஆயுள் குறைந்து போனதால்.

கு : ஆயுள் குறைந்து போவதென்று சொல்வது மிகவும் தப்பிதமாகும். எனில் உலகத்தில் அன்னத்தைப் புசிப்பதில்லை. அன்னத்தைக் கொண்டே ஜீவித்திருக்க முடியுமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் அந்த அன்னத்தை நாம் அறிவதில்லை. **அன்னம் என்பது அசனம். அசனம் என்றால் அசுவாயிருக்கின்ற பிராணனை அயனம் செய்கிறது. அயனம் என்றால் தடுத்து நிறுத்துதல். அதாவது தன்னுள்ளிலுள்ள பிராணனை வெளியினுள் விடாமல் தன் உள்வழியே பிரம்மரந்திரம் வரை நேரே கொண்டுபோகின்றதாகும். அந்தப் பிராணன் என்பது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.** அந்த ஜீவன் போனால் பிணம். பிணத்திற்கு ஏதேனும் புசிப்பதற்கு முடியுமோ?

சி : முடிவதில்லை.

கு : காரணமென்ன?

சி : ஜீவசக்தியாகிய வாயு அதாவது அசனம் இல்லாததால்.

கு : அதல்லாமல் ஏறக்குறைய ஏழெட்டு நாள்வரை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சோறு முதலியவை புசிக்காதிருந்தால் ஜீவன் இல்லாமற் போகுமா?

சி : இல்லை.

கு : அதல்லாமல் ஒருநாள் பூராவும் தாகத்திற்குத் தண்ணீருங்கூட குடிக்காமலிருந்தால் செத்துப் போவோமா?

சி : இல்லை?

கு : எனில் வாயு ஒரு நிமிஷ நேரம் நமக்குக் கிடைக்காமல் இருந்தால் என்னவாய்த் தீருவோம்?

சி : செத்துப் போவோம்.

கு : அப்பொழுது நமக்கு ஆகாரமாயிருப்பது எது?

சி : வாயு.

கு : அதாகும் அன்னம். அந்த வாயுவான அன்னம் உள்ளபோது மட்டுமே அசிக்கிறதற்கும் அதாவது எரிகிறதற்கும், பசிக்கிறதற்கும் அதாவது கொதிக்கிறதற்கும், தெஹிக்கிறதற்கும் அதாவது வேகிறதற்கும், பக்ஷிக்கிறதற்கும் அதாவது உண்கிறதற்கும் முடிவதாயுள்ளது. அதற்கு உதாரணம் என்னவென்றால்: ஒரு பிணத்திற்கு மேல்சொன்ன யாதொன்றும் முடிவதில்லை. இதனால் அசிக்கிறதும், பசிக்கிறதும், தெஹிக்கிறதும், பக்ஷிக்கிறதும் எதுவாகும்?

சி : வாயுவாகும்.

கு : அதனால்தான் அன்னமயம் அதாவது அன்னத்தினால் போஷிப்பிக்கின்றது அதாவது வளர்த்துவது அன்னமயம் என்றும், அன்னமயத்திலிருந்து உண்டானது சைதன்னியம் என்றும், அந்தச் சைதன்னியத்தால் அதாவது தேஜஸ்ஸினால் உண்டானது உலகம் என்றும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சொல்லுவது. அதனால் இக்காணுகின்ற உலகம் எதனுடைய சைதன்யமாகும்?

சி : வாயுவினுடைய சைதன்யமாகும்.

கு : அதனால் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும் அன்னம். அந்த வாயுவை பக்ஷித்தால் (உட்கொண்டால்) மட்டுமே ஜீவித்திருக்க முடிகிறது. அதனால்தான் அன்னத்தால் போஷிப்பிப்பதாகும் தேகமென்று சொல்லுவது. ஆகையால் அன்னமாய் இருக்கின்ற அந்த வாயுவை நிறைத்து பூரிப்பிக்க வேண்டும். அவ்விதம் செய்தால் செத்துப் போகமாட்டோம்.

சி : அந்த வாயுவாகும் தேகமென்றும் அது தானாகும் என்றும் அதிலிருந்து உற்பத்தியானதாகும் இக்காணுகின்ற உலகமென்றும் பூரணமாக நம்புகின்றேன். எனில் இவ்வளவு சிறியதான நம்மிலிருந்து எவ்வளவோ பெரியதான உலகம் எவ்விதத்தில் உற்பத்தியாகிறதென்று வெளிப் படுத்தித் தரவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு : இவ்வளவு சிறியதாய் இருக்கின்ற நம்மிலிருந்து எவ்வளவோ பெரியதாகக் காணப்படுகிற இந்த உலகம் உற்பத்தியானது எவ்விதமென்றால் சொல்லுகிறோம். மிகவும் சிறியதாய் இருக்கின்ற வித்திலிருந்து எவ்வளவோ் பெரியதாகிற விருக்ஷம் அதாவது மரம் உண்டாகிறது. இப்படியேதான் நம்முடையவும் உலகத்தினுடையவும் நிலைமை. அதெப்படியென்றால்: உலகத்தில் மிகவும் பெரியதாகவும் விசாலமாகவும் படர்ந்திருக்கின்ற மரம் ஆல மரமாகும். அம்மரத்தினுடைய காய் எவ்வளவோ சிறியதும் அக்காயில் இருக்கின்ற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வித்து அணுவிலும் சிறியதாயுள்ளதும் அதாவது ஒரு கடுகில் நாலுபாகம் செய்தால் ஒரு பாகம் எவ்வளவு பருமனுண்டோ அவ்வளவு மட்டும் இருப்பதுமாகும். அவ்விதமிருக்கிற வித்தி லிருந்தாகும் மிகவும் பெரியதாகிய மரத்தின் உற்பத்தி. அவ்வித்து இல்லையெனில் அம்மரம் உண்டாவதில்லை. எவ்வளவோ பெரியதா யிருக்கின்ற அம்மரம் மிகவும் அணுவாயிருக்கின்ற அதனுடைய பீஜத்தில் அதாவது வித்தில் அடங்கியிருக்கிறது. வித்து காயினுடைய உள்ளிலும் அடங்கியிருக்கிறது. மரம் வித்தினுள்ளில் இருக்கின்ற பருப்பிலிருந்து முளையாகி உற்பவித்து, அந்தப்பருப்பு அடங்கியிருக்கின்றதான தோலின் வழியாய் வெளியே வந்து, வளர்ந்து படர்ந்து வருகிறது. பிறகு அந்தப் பருப்போ, தோலோ காணுவதில்லை. இப்படியேதான் வித்தில் அடங்கியிருக்கின்ற பருப்பு ஜீவனும், பருப்பிலிருந்து உண்டான மரம் மனமும், பருப்பு அடங்கியிருக்கின்ற தோல் அகங்காரமும் ஆகின்றன. ஜீவனாயிருக் கின்ற பருப்பிலிருந்து மனமாகின்ற மரம் முளைத்து அகங்காரமாய் இருக்கின்ற தோலின் வழியாய் வெளியே வியாபிக்கிறது. அந்த அகங்காரமாய் இருக்கின்ற தோலில் ஜீவனாயிருக்கின்ற பருப்பு அடங்கியிருக்கும் பொழுது மட்டுமே வித்து என்கிற பெயருண்டு. அவ்விதமாயுள்ள வித்து ஜடமாய் இருக்கின்ற காயின் உள்ளிலாகுமிருக்கிறது.

அது எவ்விதமென்றால்: ஆலமரத்தினுடைய வித்து காயின் உள்ளிலாய் இருந்தது. எனில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மேற்படியுள்ள வித்திலிருந்து மனமாகின்ற மரம் முளைத்து வெளியே வியாபிப்பதால் வித்தைக் காண்பதில்லை; காணுகின்றது ஜடத்தையாகும். ஜடமாய் இருக்கின்ற காயிலிருந்து ஜீவனாயிருக்கின்ற வித்து போனதன் பிறகு இந்த ஜடத்தில் மனமாகின்ற மரம் முளைப்பதில்லை. அது ஏனென்றால் ஜீவனாகிய வித்து இல்லாததால். அதெப்படியென்றால்: ஆலமரத்தினுடைய காயின் உள்ளில் இருக்கின்ற விதையை நீக்கினால் அந்த விதை அடங்கியிருந்த தோல் முளைப்பதில்லை. இந்த ஆலமரத்திற்கு எவ்விதம் காய் உண்டாகிறதோ, அவ்விதமே மனமாகின்ற மரத்திற்கும் காய் உண்டாகிறது. அதாவது ஆலமரத்தினுடைய இரண்டு இலைகளினுடைய மத்தியிலாகும் பூத்துக் காய் உண்டாகிறது. இந்தக் காய் முதிர்ந்து பழுத்து பூமியில் விழுந்து, மீண்டும் முளைத்து மரமாகி, பூத்துக் காயுண்டாகி, மேற்படி பழுத்து விழுந்து அனேக மரங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. எனில் எல்லாப் பூக்களுக்கும் காய் உண்டாவதில்லை. அந்தப் பூக்களில் எட்டில் ஏழுபாகம் பல விதங்களிலும் நசித்துப் போகின்றன. பாக்கி உள்ளவற்றிற்கே காய் உண்டாகிறது. அந்தக் காய்களும் முழுமையும் முதிர்ந்து பழுப்பதும் இல்லை. அவையும் பலவிதத்தில் அழிந்துபோகின்றன. இப்படித்தான் கர்ப்பம் உண்டாகின்றதும்.

அது எப்படியென்றால்: ஆலமரத்திலுள்ள கொம்புகளின் மேலும் குச்சிகளின் மேலும் மற்றிடங்களிலும் இலை உண்டாவது ஈரண்டு எண்ணமாகும். அந்த இலைகளுடைய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மத்தியிலாகும் மொட்டு உண்டாகிறது. அதெப்படியென்றால்: இலைகளுக்குச் சிவப்பான கறையும் மரத்திற்குத் தானாகவே வெள்ளை நிறமான பாலும் உண்டு. இலைகள் விரியும்பொழுது சிவப்பாயிருக்கின்ற கறையில் வாயுவின் வழியாய் இலைகள் உண்டாகின்றதான தண்டிலிருந்து பால் விழுந்து, அந்தக் கறையுடன் சேர்ந்து மொக்குகள் உண்டாகின்றன. அவையாகும் பூவாகிக் காயாகித் தீருகின்றவை. **இப்படியே மனமாகின்ற மரம் புணருவதும் இரண்டு இலைகளுடைய மத்தியிலாகும். அந்த இலைகளிலிருந்து இரத்த வர்ணமாகிய கறை உண்டாகும்பொழுது வாயுமார்க்கமாய் மனமாகிய மரத்திலிருந்து சுக்கிலமாகிய பால் முட்டை வடிவமாகி வீழவும் அது இரத்த வர்ணமாகிய கறையில் பிடித்து கர்ப்பமாய்த் தீரவும் செய்கிறது.** இவ்விதமாய் கர்ப்பம் உண்டான காயானது நாளடைவில் வளர்ந்து முத்திப் பழுத்து, ஒன்பதோ, பத்தோ மாதங்கள் சென்று பூமியில் விழுகின்றது. அந்தக் காயாகிய குழந்தையில் ஜீவனாயிருக்கின்ற வித்து இல்லையானால் அதைக் குழியில் போட்டு புதைத்து விடுகின்றோம். ஜீவனாயிருக்கின்ற வித்து உண்டென்றால் அதை வெகு ஜாக்கிரதையாகப் பத்திரப்படுத்தவும், நாளடைவில் மனமாகின்ற மரம் முளைத்து நாளுக்குநாள் வளர்ந்து பெரியதாகி, புணர்ச்சியாகின்ற புஷ்பிக்கின்றதைக் கொண்டு மறுபடியும் நாளடைவில் காய் அதிகம் உண்டாகிக் கொண்டிருக்கவும் செய்கிறது. எனில் எல்லாப் புணர்ச்சியிலும் கர்ப்பம் உண்டாவதோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எல்லாக் கர்ப்பமும் முத்திப் பழுத்து குழந்தைகளாக உண்டாவதோ செய்வதில்லை.

தவிர, ஆலமரத்திலிருந்து உண்டாகின்ற பூக்களை நாம் பார்க்கின்றோம். அந்தப் பூவிற்கு ஏதேனுமோர் அடையாளம் வைத்துப் பார்த்தால் காயுண்டாவது இன்ன பூவிலிருந்து என்று நாம் தெரிந்து கொள்ளலாம். மனமாகின்ற மரத்தினுடைய பூக்களைக் காணவோ, இன்ன பூவிலிருந்து உண்டான காயாகும் இந்தக் குழந்தை என்று சொல்லவோ முடிவதில்லை. மனமாகின்ற மரத்தினுடைய பூவைக் காணாமல் காயுண்டாகின்றது போன்றே பூவைக் காணாமல் காயுண்டாகிற ஒரு மரம் உண்டு. அது அத்திமரமாகும். அத்திமரத்தினுடைய பூவைக் காண்பதற்கு முடிவதில்லை. அது இருட்டில் பூத்து கொஞ்ச நேரத்திற்குள்ளாக அதற்குக் காய் உண்டாகிறது. அதைப் பகலில் பார்க்கும்பொழுது காய் உண்டானதாகக் காண்கின்றது. இன்ன சமயத்தில்தான் பூத்ததென்று சொல்ல முடிவதில்லை. எனில் இந்த மரம் இருள் இல்லையானால் பூப்பதில்லை. அவ்வாறே மனமாகிய மரம் அந்தகாரமாகிய அதாவது இருட்டாகிய அகங்காரத்தின் வழியாய்க் கொஞ்ச நேரத்தில் பூத்து, கர்ப்பமாகிய காய் அதற்கு உண்டாகிறது. அகங்காரமாகிய அந்தகாரம் இல்லையென்றால் புணர்ச்சி உண்டாவதில்லை. அதனால் அகங்காரமாகிய அந்தகாரத்தில் பூப்பதனால் இன்ன பூவினுடைய காய் என்று சொல்லுவதற்கு முடியாமலாய் வந்தது. எனில் ஓர் ஆலமரத்தை நாசம் செய்தால்

https://lankathamilnews.blogspot.com




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதன் நிமித்தம் எத்தனை மரங்களாகும் இல்லாமல் போகின்றனவென்று கணக்கெடுப்பதற்கும் அவ்விதம் மனமாகின்ற மரத்தை நசிப்பித்தாலும் அதன் நிமித்தம் எத்தனை மனமாகின்ற மரங்களாகும் இல்லாமல் போகின்றன என்று கணக்கெடுப்பதற்கும் முடிவதில்லை. இப்படியாயுள்ள மனமாகின்ற மரத்திற்காகும் சம்சாரவிருட்சம் என்று பெயர். இந்த சம்சார விருட்சம் பூத்து காய் உண்டாகி, முத்தி பழுத்து, பூமியில் விழுந்து முளைக்கவும், மேற்படியாக உண்டாகவும் நசிக்கவும் செய்கிறது. எனில் எவ்வளவோ பெரியதாய் இருக்கின்ற ஆல மரத்தினுடைய வித்து மிகவும் சிறியது. எனில் மிகப் பெரியதாகிப் படர்ந்து கிடக்கிற வடவிருட்சம் அதாவது ஆலமரம் எப்படி உண்டாகிறதோ, அப்படி நம்முள்ளிலிருந்து மனமாகிய சம்சாரவிருட்சம் முளைத்து வெளியே சக்தியாக வியாபிக்கவும் செய்துகிடக்கின்ற வடவிருட்சமாகும் இக்காணுகின்ற உலகம். இப்படியுள்ள வடவிருட்சத்தினுடைய மூலத்தில் அதாவது உற்பத்தி ஸ்தானத்திலாகும் தக்ஷிணா மூர்த்தியாகிய குரு இருப்பது.

சி : குருவே! இவ்விதமே எனினும் முன்சொன்ன மரம் பூமியில் நிற்கின்றதாய்க் காணப்படுகிறது. நாமும் அவ்வாறுதானே இருக்கிறோம். என்னவெனில் என்னையே நான் உலகத்தில் காணுகின்றேன். அப்படியிருக்கின்ற உலகம் என்னிலாகும் என்று சொல்லுகிறது எவ்விதம் என்று வெளிப்படுத்தித் தரவேண்டுகிறேன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : உலகம் உம்மிலாகுமென்றும் உம்மிலிருந்தாகும் உலகம் உண்டானதென்றும் சொல்லுவது எவ்விதத்திலாகுமென்றால்: பெரியதான ஒரு பாத்திரத்தில் நெருப்புக் கனலிட்டு, அதிலிருந்து புகையுண்டாகத்தக்க பல பொருள்களையும் போட்டு, அந்தப் பாத்திரத்தில் புகை நிறையும் பொழுது, பாத்திரத்தினுடைய வாயை மூடிக்கட்டி மேல்மாடியுள்ளதான வீட்டினுடைய விசாலமான ஓர் அறையில் வைத்தால், அப்பாத்திரத்திலுள்ள புகை வெளியில் போகுமா?

சி : போவதில்லை.

கு : அதென்ன காரணம்?

சி : அந்தப் புகையைப் பாத்திரத்தில் அடக்கி, பாத்திரத்தினுடைய வாயை மூடிக்கட்டியதால்.

கு : அந்த அறையினுடைய ஜன்னல்களையும் கதவு களையும் மூடி மேல்சொன்ன பாத்திரத்தினுடைய வாயைக் கட்டியிருந்ததை அவிழ்த்து மூடியைத் திறந்தாலோ?

சி : புகை பாத்திரத்திலிருந்து வெளியில் வந்து அந்த அறையில் பரவி நிறைந்திருக்கும்.

கு : அப்பொழுது புகை இருந்த பாத்திரம் எங்கே இருப்பதாகத் தோன்றுகிறது?

சி : புகையில் இருப்பதாகத் தோன்றுகிறது.

கு : உண்மையில் புகையில் பாத்திரம் இருந்ததோ அல்லது பாத்திரத்தில் புகை இருந்ததோ?

சி : புகை பாத்திரத்திலாகும் இருந்தது.

கு : எனில் பாத்திரத்திலிருந்த புகையை வெளியில் விடாமல் அதனுடைய வாயை மூடிக்கட்டிய பொழுது அதில்தானே அடங்கவும், எப்பொழுது அப்பாத்திரத்தினுடைய வாய் மூடிக்கட்டியதை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவிழ்த்து புகை வெளியில் பரவியதோ, அப்பொழுது அந்த அறை முழுவதும் நிறைந்து, பாத்திரத்தின் நாலு பக்கமும் அடியிலும் மேலேயும் புகை பரவி, புகையில் பாத்திரம் இருப்பதாகத் தோன்றவும் செய்ததாகும். உண்மையில் புகை உண்டாயிருந்தது பாத்திரத்திலாகும். பாத்திரத்தில் புகையில்லாமல் இருந்ததானால் வெளியே பரவுவதில்லை. இப்படியேதான் நம்மில் இருக்கின்ற மனம் புகையாகி வெளியே பரவிற்று. அந்த மனமாகின்ற புகையிலாகும் நாம் இப்பொழுதிருக்கின்றோம். அது எவ்விதமென்றால்: பாத்திரத்தில் இருந்த புகை வெளியே பரவி, புகையில் பாத்திரமிருப்பதாகத் தோன்றியதுபோல், நம்மிலிருந்து வெளியே பரவிய மனமாகிய புகையில் நாம் இருக்கின்றதனால்தான் உலகில் நாம் இருக்கின்றதாகத் தோன்றுகிறதாகும். எனில் முன் சொன்ன புகை உற்பத்தியானது அக்கினியிலிருந்தாகும். அந்த அக்கினி இல்லையானால் புகை உண்டாகிறதில்லை. அதைப் போலவேதான் மனமாகின்ற புகையும் ஜீவனாயிருக்கின்ற அக்கினியிலிருந்தாகும் உண்டானது. ஜீவனாகிய அக்கினி இல்லையானால் மனமாகின்ற புகையுமில்லை. தவிர, நாம் இல்லையானால் நமக்கு உலகமில்லை.

அதுவுமல்லாமல், தூங்குகிறோம் என்று சொல்லும் சமயம் நாம் உலகத்தைக் காண்பதில்லை. காரணம், புகையாகி பரவியிருக்கின்ற மனம் நமது உள்ளில் அடங்கியது கொண்டாகும். தூக்கம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



விழித்த சமயத்தில், பாத்திரத்திலிருந்து புகை வெளியே வந்தது போல், நம் உள்ளிலிருந்து மனசக்தி வெளியினுள்ளில் பரவுகின்றதாகும். தவிர, தூக்கம் விழித்த உடனே உலகத்தில் எல்லா நிலைமைகளும் ஒரே சமயத்தில் பார்க்க முடியாமல் முறையாய் ஒவ்வொன்றாய்க் காணப்படுகின்றன. வெளியே இறங்கி சஞ்சரிக்குந் தோறும் அதிகமாய் நாம் ஒவ்வொன்றும் கண்டு கொண்டிருக்கிறோம். அவ்விதம் சஞ்சரிப்பதன் இடையில் தன்னிலிருந்து தானாயிருக்கின்ற ஜீவன் மனமாகிய புகையாகி வெளியினுள்ளில் போய்த் தீர்ந்தபோது பாத்திரமாயிருக்கின்ற ஜடம் விழுந்து போகிறது. பின்பு உலகமில்லை. எப்படி யென்றால்: முன்சொன்ன புகை நிறைந்து பாத்திரத்தினுடைய வாயை மூடிக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துத் திறந்து, அப்பாத்திரத்திரத்தைக் கையில் வைத்து வெளியில் சஞ்சரிக்கும்பொழுது, புகை வெளியில் பரவி பாத்திரத்தில் இல்லாமலாகி பாத்திரம் மட்டும் மீதியாகிறது. புகையைக் காண்பதில்லை. இதற்குக் காரணம் பாத்திரத்திலுள்ள அக்கினியில் புகை உண்டாவதற்கு உண்டாயிருந்த சாமான்கள் எரியாமல் புகையாகி, அக்கினி அணைந்து போவதாலாகும். அவ்விதம் அந்த அக்கினி அணைந்துபோன பிறகு அதிலிருந்து புகை உண்டாவதில்லை. **இப்படியேதான் தன்னிலிருக்கின்ற ஜீவன் மனமாகிய புகையாகி வெளியினுள்ளில் போய்த்தீரும்பொழுது தீர்ந்து போயிற்று. அதற்காகும் செத்துப்போயிற்று' என்று சொல்லுகிறது. அதாவது 'சத்து'**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



போயிற்று. இவ்வாறு ஜடமாகிய பாத்திரத்திலுள்ள சத்தாகிய ஜீவன் மனமாகின்ற புகையாகி வெளியினுள்ளில் போய்த் தீர்ந்து போயிற்று. அப்பொழுதாகும் சத்துப்போயிற்று என்று சொல்லுவது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் பதினான்கு

சிஷ்யன் : குருவே! மனமே குரு என்றும், அந்த மனமே வடவிருட்சம் என்றும் அந்த மனமாகிய வடவிருட்சத்தின் மூலத்தில் தக்ஷிணாமூர்த்தி யாகிய குரு இருக்கிறது என்றும் சொன்னீர்கள் அல்லவா? இது எவ்விதம் என்பதை விவரித்து அருளிச் செய்து கேட்க விரும்புகிறேன்.

குரு: மனமே குரு என்றும், அம்மனமேதான் வடவிருட்சம் என்றும் உள்ளதற்கு முன் அத்தியாயத்தில் சொன்ன புகைதானே உதாரணம் ஆகிறது. அதெப்படியென்றால்: பாத்திரத்திலுள்ள அக்கினியிலிருந்து புகை உற்பத்தியாகி வரும்பொழுது பாத்திரத்தினுடைய வாயை அடைத்துக் கட்டவே பாத்திரத்தில் புகையுண்டாயிருந்தது. அப்பொழுது புகை வெளியில் வராததால் அதைப் பார்க்க முடிவதில்லை. எனில் அந்தப் புகை பாத்திரத்தில் அடங்கியிருக்கும் பொழுதும் புகையாகத்தான் இருந்தது. அந்தப் புகையேயாகும் வெளியே பரவியது. அப்படி வெளியே பரவியபொழுது மட்டுமே புகையைக் காணமுடிகின்றது. பாத்திரத்திலடங்கியிருந்ததும் வெளியே பரவியதும் ஒரே புகையாகத்தான் இருந்தது. இவ்வாறு நம்முடைய மனம் உள்ளில் அடங்கி இருக்கும் பொழுதும் புகையைப்போல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியினுள்ளில் பரவியபொழுதும் ஒரே மனமாகத்தான் இருந்தது; இரண்டன்று. அவ்வாறு அடங்கியிருக்கின்ற மனத்திற்காகும் குரு என்று சொல்லுவது. வடவிருட்சம் என்று சொல்லுவதானது இக்காணுகின்ற உலகமாகிய சம்சார விருட்சமாகும். இதற்குக் காரண பூதமாய் இருப்பது மனமாகும். அந்த மனம் மேற்சொன்ன சம்சார விருட்சத்தினுடைய மூலத்தில் தெற்குமுகமாக இருக்கின்றது. அதனால்தான் தக்ஷிணாமூர்த்தியாகிய குரு என்று சொல்லக்காரணம்.

சி : குரு புருவமத்தியமாகிய இருதயத்திலாகும் இருக்கிறது என்று முன்பு கற்பித்தீர்களல்லவா? இப்பொழுது சம்சார விருட்சத்தினுடைய மூலத்தில் தெற்கு முகமாக இருக்கிறதென்றும் சொல்லுகிறீர்கள். அது எவ்விதமென்பதை மேலும் தெளிவாக அருளிச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

கு : தெற்கு என்பது எது என்றாகும் நீர் கருதியிருக்கிறீர்?

சி : கிழக்கு பார்த்து நின்றால் வலது பக்கம் தெற்காகும்.

கு : கிழக்கு எது?

சி : சூரியன் உதிக்கும் பக்கம்.

கு : இப்படி நினைப்பது மிகவும் தப்பிதம். நீர் பிறக்கவில்லையானால் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பது உமக்கு இருக்குமா?

சி : எனக்கு இல்லை.

கு : எப்பொழுதாகும் உமக்கு முன்சொன்ன பக்கங்கள் அதாவது திசைகள் உண்டாயின?

சி : நான் பிறந்து எனக்கு அறிவு உண்டானதற்குப்பின்.

கு : நீர் பிறக்கவில்லையானால் உமக்கு உருவம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டோ?

சி : இல்லை.

கு : உருவம் இல்லையானால் ஆதி, அந்தம் என்றோ, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்றோ யாதொரு நிலைமையும் உண்டோ?

சி : யாதொரு நிலைமையுமில்லை.

கு : எப்பொழுதாகும் முன்சொன்ன நிலைமைகள் உண்டாயின?

சி : நான் என்கிற நிலைமை உண்டானபோது.

கு : அதல்லாமல், நீர் தூங்குகிற சமயம் முன் சொன்ன யாதேனும் நிலைமைகள் உண்டா?

சி : இல்லை.

கு : காரணம் என்ன?

சி : நான் என்கிற நிலைமை இல்லாததால்.

கு : நான் என்னும் நிலைமை எப்பொழுது உண்டாயிற்று?

சி : தூக்கம் விழித்தபொழுது உண்டாயிற்று.

கு : அப்பொழுது முன்சொன்ன நிலைமைகள் எல்லாம் யாருக்கு உள்ளதாகும்?

சி : எனக்கு உள்ளதாகும்.

கு : அப்பொழுது உமக்காகும் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு இவை இருக்கின்றன. அதனால் உம்முடைய வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு இவற்றைச் சொல்ல முடியுமா?

சி : முடியாது.

கு : நீர் பாடசாலையில் படித்திருக்கிறீரா?

சி : படித்திருக்கிறேன்.

கு : பாடசாலையில் பூகோளப் படம் பார்த்தி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ருக்கிறீரா?

சி : பார்த்திருக்கிறேன்.

கு : அந்தப் பூகோளப் படத்தினுடைய வடக்கு, தெற்குப் பக்கங்கள் எங்கேயாகும்?

சி : படத்தில் மேல்பக்கம் வடக்கும், அடிப்பக்கம் தெற்கும் ஆகும்.

கு : உம்முடைய மேல்பக்கம் எதுவாகும்?

சி : சிரசு அதாவது தலையாகும்.

கு : **அதற்காகும் உயர்ந்த பக்கம் வடக்கு என்று சொல்லுவது. அது நம்முடைய சிரசாகும். அந்த சிரசில் புருவமத்தியத்திலாகும் மனமாகிய குரு அடிப்பக்கமாகிய தெற்கே கீழ்முகமாய் இருக்கின்றது. இதனால்தான் குருவிற்குத் தக்ஷிணாமூர்த்தி என்று சொல்லக் காரணம்.**

சி : வடக்கு, தெற்குப் பக்கங்கள் இன்னதென்று தெரிகின்றன. கிழக்கு, மேற்குப் பக்கங்கள் எவை என்பதையும் தெரிவிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு : கிழக்கு என்பது பூர்வ பாகம்; பூர்வம் என்றால் முன்பு என்று பொருள்.

சி : முன்பு என்று சொல்லவேண்டுமானால் ஒரு பொருள் வேண்டியதல்லவா? ஒரு பொருள் இல்லாவிட்டால் எப்படி முன்பு என்று சொல்ல வேண்டியது?

கு : ஒரு பொருள் இல்லாவிட்டால் முன்பு என்றோ, பின்பு என்றோ சொல்ல முடிவதில்லை. அப்படியாயிருப்பினும், நாம் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கின்றது எதையாகும்?

சி : நாம் இதோ பார்க்கிற உலகத்தையாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது உலகு இல்லாவிட்டால் யாதேனும் உண்டா?

சி : இல்லை.

கு : அதனால் உலகத்தினுடைய முன்பிற்கேயாகும் பூர்வம் என்று சொல்லுகிறது. அதாவது உற்பத்தி ஸ்தானம். எனில் இந்த உலகம் எங்கிருந்து உண்டானது?

சி : நம்மிலிருந்தே உண்டானது.

கு : அப்பொழுது நம்மில் எந்தப் பாகத்திலிருந்தாகும் உலகம் உண்டானது?

சி : நம்முடைய சிரசிலிருந்து.

கு : எனில் சிரசிலிருந்து உண்டானதென்றால் நமக்கு எப்பொழுதும் உலகத்தைப் பார்க்க முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : என்ன காரணம்? எந்தச் சமயத்தில்?

சி : அது நாம் தூங்கும்பொழுது.

கு : அப்பொழுது உலகம் இருக்கிறதா?

சி : இல்லை.

கு : அப்பொழுது என்னவாயிற்று?

சி : அப்பொழுது உலகம் தன்னில் அடங்கியிருக்கிறது.

கு : தன்னில் உலகம் அடங்கக் காரணமென்ன?

சி : அப்பொழுது நமது ஜீவன் நம்மில் அடங்கியதால்.

கு : எப்பொழுது உலகம் உண்டானது?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : தூக்கம் விழித்தபொழுது எங்கிருந்து உண்டாயிற்று?

சி : ஜீவனிலிருந்து உண்டாயிற்று.

கு : அந்த ஜீவனிலிருந்து எப்படி உண்டாயிற்று?

சி : தூக்கம் விழித்து நமது ஜீவன் உள்ளிலும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


வெளியிலும் கதாகதம் அதாவது நடனம் செய்யும்பொழுது.

கு : அப்பொழுது ஜீவன் எந்த மார்க்கமாய் கதாகதம் அதாவது நடனம் செய்கிறது?

சி : மூக்குத் துவாரத்தின் வழியாய் உள்ளிலும் வெளியிலும் கதாகதம் செய்கிறது?

கு : எனில் நாம் தூங்கும்பொழுது எந்த மார்க்கமாய் கதாகதம் செய்கிறது?

சி : நமது உண்ணாக்கிலிருந்து மேலே போவதற்குள்ள இரண்டு துவாரங்கள் வழியாகும்.

கு : எனில் தூக்கம் விழித்தபொழுது எந்த இடத்திலிருந்து ஜீவன் வெளியினுள்ளே வருகிறது?

சி : மூக்கினுடைய உற்பத்திஸ்தானமாகிய சுழிமுனையிலிருந்து.

கு : அப்படி கதாகதம் செய்துகொண்டிருக்கின்ற ஜீவன் வெளியினுள் போய்த் தீர்ந்தால் என்னவாகிறது?

சி : பிணமாகிறது.

கு : அந்தப் பிணத்திற்கு உலகம் இருக்குமா?

சி : இருக்காது.

கு : காரணம் என்ன?

சி : அதில் ஜீவன் கதாகதம் செய்யாததால்.

கு : அப்பொழுது அந்த ஜீவன் வெளியினுள்ளுக்கு எவ்வளவு நீளத்தில் கதாகதம் செய்கிறது?

சி : மூக்கினுடைய உற்பத்தி ஸ்தானம் முதல் அதன் நுனி வரையில்.

கு : அப்பொழுது ஜீவன் விட்டுப் போவது எங்கிருந்தாகும்?

சி : மூக்கின் நுனியிலிருந்தாகும்.

கு : மூக்கின் நுனியில் ஜீவன் இல்லாவிட்டால் உலகம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டோ?

சி : மூக்கினி நுனியில் ஜீவன் இல்லாவிட்டால் உலகம் இல்லை.

கு : அப்பொழுது என்னவாகும்?

சி : பிணமாகும்.

கு : அதென்ன காரணம்?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : ஜீவன் இருக்கும் எல்லா சமயத்திலும் உலகு உண்டோ?

சி : இல்லை.

கு : அதென்ன காரணம்?

சி : ஜீவன் உற்பத்தி ஸ்தானமாகிய சுழிமுனையில் அடங்கியதால்.

கு : அப்பொழுது உலகம் உண்டோ?

சி : இல்லை.

கு : எனில் இக்காணுகின்ற உலகத்தினுடைய அளவை எந்த அரசர்களாலும் கூட அளவிட்டுச் சொல்ல முடிவதில்லை. அதை நாம் இப்பொழுது அளந்து காண்பிக்கிறோம். இந்த உலகம் ஓர் அங்குஷ்டம் (அதாவது கையினுடைய பெருவிரல் நீளம்) மட்டும் நீளமுள்ளது. இதோ பாருங்கள் நாம் இப்பொழுது என்ன செய்கிறோம்?

சி : கையின் பெருவிரலை அதாவது கட்டைவிரலை மூக்கின் உற்பத்தி ஸ்தானம் முதல் அதன் நுனிவரை வைத்திருக்கிறீர்கள்.

கு : அப்பொழுது மூக்கின் அளவு எவ்வளவு?

சி : கட்டைவிரல் நீளம் மட்டும் இருக்கிறது.

கு : எனில் மூக்கினுடைய உற்பத்தி ஸ்தானத்திலிருந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜீவன் மேலே போனால் உலகம் உண்டோ?

சி : இல்லை.

கு : எனில் மூக்கினுடைய நுனியிலிருந்து ஜீவன் விட்டுப் போனால் உலகுண்டோ?

சி : உலகு இல்லை.

கு : எனில் இந்த உலகம் அங்குஷ்டம் அதாவது கட்டைவிரல் நீளத்தில் மட்டும் இருக்கிறது. அவ்விதமுள்ள மூக்கிற்கு மேலும் கீழும் உலகமில்லை. ஆனால் இக்காணுகின்ற உலகு பிரகிருதியிலிருந்து அதாவது இயற்கையிலிருந்து உண்டானது. அந்தப் பிரகிருதியான சிவசக்தி கட்டைவிரல் நீளமுள்ள மூக்குதுவாரத்தின் வழி மேலும் கீழும் கதாகதம் செய்யும்பொழுது மட்டுமே உலகு இருக்கிறது. அதாகும் உலகம். அந்த உலகினுடைய உற்பத்தி ஸ்தானமாகும் கிழக்கு. அந்த உற்பத்தி ஸ்தானத்தில் பிராணனாகிய சூரியன் அடங்கியிருக்கும் பொழுதாகும் ''சூரிய உதயம்''. அதனால்தான் சூரியன் கிழக்கிலிருந்து உதிக்கிறது என்று சொல்லக் காரணம். சூரியன் அஸ்தமிக்கிறது மேற்கு என்று சொல்லக் காரணம் : சூரியன் அஸ்தமித்தபோது இருட்டாயிருக்கும். இருட்டாகக் காரணம் வெளிச்சமில்லாததால். எந்த இடத்திலிருந்து வெளிச்சம் உண்டாகிறதோ, அந்த இடத்திலிருந்து வெளிச்சம் இல்லாமல் வருகின்ற சமயத்திற்காகும் அஸ்தமயம் என்று சொல்லுவது.

சி : அது எப்படி? நாங்கள் சூரியன் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிக்கிறதைக் கண்டுவருகிறோ

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மல்லவா?

கு : எனில் சூரியன் உதிப்பதை நீர் காணுவதுண்டோ? அது எங்கிருந்து?

சி : காணுவதுண்டு. ஆகாசத்திலிருந்து.

கு : ஆகாசத்திலிருந்து சூரியன் உதித்ததை நீர் பார்த்திருக்கிறீரா?

சி : ஆகாசத்திலிருந்து சூரியன் உதிப்பதைக் கண்டதில்லை. உதித்து உயர்ந்துவந்தபொழுது ஆகாசத்தில் பார்த்திருக்கிறேன்.

கு : அப்பொழுது சூரியன் உதிப்பதை நீர் பார்க்கவில்லை. உதிப்பதென்று கேள்வி மட்டும் உண்டு. சூரியன் உதித்தால் நமக்கு என்னவாயிருக்கும்?

சி : பகலாயிருக்கும்.

கு : பகல் என்பதற்குத் தெளிவு என்ன?

சி : பிரகாசம் உண்டானதால்.

கு : இப்பொழுது என்ன சமயம்?

சி : பகல் சமயமாகும்.

கு : இப்பொழுது உமக்குப் பிரகாசம் உண்டோ?

சி : உண்டு.

கு : இந்த வீட்டினுள்ளே யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றும், சாமான்கள் என்னென்னவாகும் இருக்கின்றன என்றும் இங்கிருந்தே உமக்குச் சொல்ல முடியுமா?

சி : உள்ளே போய்ப் பார்க்காமல் சொல்ல முடிவதில்லை.

கு : உமக்குப் பிரகாசம் உண்டல்லவா? எந்தக் காரணத்தால் சொல்ல முடிவதில்லை.

சி : சுவரினுடைய தடை உள்ளதால்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


கு : பிரகாசத்திற்கு மற்றொன்றினால் தடையுண்டாவதில்லை. அதனால் நமக்குப் பிரகாசிப்பதில்லை. எவ்விதத்திலாகும் நமக்குப் பிரகாசிப்பதென்று தோன்றுவதென்றால்: நீர் இரவு என்று கருதுகிற இருட்டான சமயம் பிரகாசம் உண்டாவதில்லை. அந்தச் சமயத்தில் விளக்கில் திரியைக் கொளுத்தி வைத்தால் அத்திரியினுடைய பருமனுக்கு அனுசரித்துப் பிரகாசம் உண்டாகும். பத்து மைல் சமசதுரத்தில் பரப்பு உள்ளதாகிய ஒரு கண்ணாடிக் குழாய் வைக்கத்தகுந்ததான விளக்காக இருந்ததென்றால் அதனுடைய சக்திக்கனுசரித்து வெளிச்சம் உண்டாயிருக்கும். அந்தச் சமயம் விளக்கின் நான்கு பக்கங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களும் வெளிச்சமுள்ள தூரம் வரை நமக்குக் காணப்படுவதாய் இருந்தது. எனில் அந்த விளக்கின் அருகில் விளக்கைத் தொடாமல் யாதேனும் ஒரு பொருளைக் கொண்டு விளக்கை மறைத்து வைத்தால் மறைத்த பொருளினுடைய பின்பாகம் இருட்டாகக் காண்கிறது. அதன் காரணம் சுயமாகிய நிலைமை இருட்டாயிருந்தது. அந்த இருட்டில் வெளிச்சம் வைத்ததாய் இருந்தது. அந்த வெளிச்சத்திற்குத் தடைநேரிட்டபோது சுயநிலையான இருள் தானே ஏற்பட்டதாகும். இவ்விதம்தான் இப்பொழுது நமக்குப் பிரகாசிப்பதில்லை, இருட்டாகும். இருட்டில் விளக்கு ஏற்றி வைத்ததற்குச் சமமாக இந்த இருட்டில் ஒரு பிரகாசவஸ்து உண்டாயிருந்தது. அப்பிரகாசத்திற்குத் தடை நேரிட்டபொழுது பிரகாசம் காணுவதில்லை, இருட்டாகும். காரணம் முன்சொன்ன விளக்கினுடைய

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


பிரகாசத்திற்குத் தடை நேரிட்டபொழுது உண்டானது போலாகும் எனில் சூரியன் உதிக்கிறது ஆகாசத்திலாகும். அந்த ஆகாசம் இன்னதென்று ஐந்தாம்அத்தியாயத்தில் விவரித்துச் சொல்லியிருக்கின்றது. சூரியன் என்றால் பிராணனாகும். அந்தப் பிராணனை முன்சொன்ன சிரசாகிற ஆகாசத்தில் அசையாமல் நிறுத்தினால் பகலாகும். பகல் என்று சொல்லுவது பரமாத்மாவாகின்ற மனம் சிரசில் பிரகாசிக்கும் பொழுதாகும். அந்த சந்தர்ப்பத்தில் சூரியன் உதித்து, பிரகாசித்து பகலாகும். பின்பு இருட்டில்லை. அவ்வாறு சூரியன் உதித்தால் யாதொரு தடையும் இல்லாமலே எல்லா நிலைமைகளும் காணப்படுவதும் அறியப்படுவதும் ஆகும். அதற்கு யாதொரு காலமுமில்லை. இப்பொழுது நமக்கு இருட்டாகும். அந்த இருட்டிலாகும் இப்பொழுது பிரகாசம் உண்டென்று தோன்றுகிறது. இதை இரவு அதாவது ராத்திரி என்று சொல்லக்காரணம், தானாயிருக்கின்ற ஜோதிசிவசக்தியாய் இருக்கின்ற திரிகுணங்களாகி அதாவது மூன்று குணங்களாகி வெளியினுள்ளில் வந்து பரவியிருக்கிறது. அதாவது சாத்வீகம், இராஜஸம், தாமஸம் இவையாகும். அந்த சக்தியிலிருந்து உற்பவித்துள்ள மூன்று குணங்களையும் ஒன்றாகச் சேர்த்து அவற்றினுடைய உற்பத்தியாய் இருக்கிற சக்தியோடு சேர்த்து புருவமத்தியத்தில் நிறுத்தி அங்கேயே மனத்தையும் கண்களையும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அசையாமல் நிறுத்த வேண்டும். அப்பொழுது பிரகாசிக்கும். அச்சமயத்திலாகும் ஆகாசத்தில் சூரியன் உதித்துப் பகலாகின்றது. இப்பொழுது சூரியன் உதிக்கவில்லை. சூரியன் உதித்தால் பின் இருட்டாவதில்லை.

சி : சுவாமி! இப்பொழுது இதோ பாருங்கள்! சூரியனைக் காணுகின்றோம். இது என்னவென்றாகும் சொல்ல வேண்டியது?

கு : இக்காணப்படுவது நம்மிலிருக்கின்ற சக்தி பிரதிபிம்பித்துக் காண்பதாகும். காரணம் நீர் கண்களை மூடிப்பாரும். பிரகாசமுண்டோ? யாதேனும் காணுவதுண்டோ?

சி : பிரகாசமில்லை; காணுவதுமில்லை.

கு : கண்களை மூடியபோது என்ன காரணத்தால் காணாமல் இருந்ததும் பிரகாசிக்காமல் இருந்ததும்?

சி : கண்களை மூடியதால்.

கு : நமக்கு எப்பொழுது காணவும் பிரகாசிக்கவும் செய்கிறது?

சி : கண்களைத் திறந்தபொழுது.

கு : அப்பொழுது எங்கிருந்தாகும் பிரகாசிப்பதும் காணுவதும்?

சி : அவனவனிலிருந்தாகும்.

கு : எனில் மத்தியானம் சமயத்தில் ஆயிரம் கோடிசூரியர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து உதித்தாலுள்ள பிரகாசம் எப்படியிருக்குமோ, அப்படியுள்ள பிரகாசத்தோடு கூடியதாகும் நம்மிலுள்ள சைதன்யம். அந்தச் சைதன்யத்தி லிருந்துண்டான ஜீவசக்தியிலிருந்து விகாராதிகள் உண்டாகின்றன. அப்பொழுது பின்ன அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


வேறுபட்ட பிரகாசமாகிறது. அந்த பின்னப் பிரகாசத்தின் வழியாய் நம்மிலிருக்கின்ற சைதன்யத்தை நம்மிலிருந்து பிரதிபிம்பித்துக் காணுகிறோம். இப்படி பிரதிபிம்பித்துப் பிரகாசிக்கப்படுகின்ற மேல்சொன்ன சூரியனை, இப்பொழுது நம்மால் பார்க்க முடியாது. பார்த்தால் அதி கொடூரமாகிய கிரணங்களால் அதாவது கதிர்களால் கண்கள் மூடிப்போகின்றன. அது எவ்விதமென்றால் : நாம் ஒரு கண்ணாடியை எடுத்துப் பார்த்தால் அதில் நம்முடைய என்னவெல்லாம் பாகங்கள் பிரதிபிம்பித்துக் காணுகிறோமோ, அந்தப் பாகத்திலுள்ள எல்லா நிலைமைகளும், நமக்கு யாதொரு கஷ்டமுமில்லாமல் சுகமாய்ப் பார்க்கலாம். அவ்விதம் நீர் இப்பொழுது சூரியன் என்று சொல்லிவருவதான கிரணத்திற்கு நேரே முன்சொன்ன கண்ணாடியைப் பிடித்தால், அந்தக் கிரணத்தோடு கூடி பிரதிபிம்பிக்கின்ற பிரகாசத்தில் நமக்குப் பார்ப்பதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : காரணம், அதி ஜொலிப்புள்ள பிரகாசத்தினால் பார்ப்பதற்கு முடியாமல், கண்கள் கூசி மூடிப் போகின்றன. இவ்வாறே பத்தாம் அத்தியாயத்தில் சொல்லியபடி ஜீவசக்தியாகிய வாயுவிலிருந்து மனம் உற்பத்தியாகி பளிங்குவர்ணமாய் முட்டை வடிவமாய் இருக்கின்ற வெளியினுள்ளில் நம்மிலிருந்து முன்சொல்லிய பிராணன் பிரகாசமாகிப் பிரதிபிம்பித்ததாகும் இக்காணுகின்ற சூரியன். அதை நாம் அகங்காரத்தினால் பார்ப்பதாலாகும் சூரியன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மிகவும் ஜொலிக்கின்றதாய், பார்க்க முடியாமலிருக்கின்றது. எப்பொழுது அப்படி பிரதிபிம்பிக்கவிடாமல் தன்னில் அடக்குகின்றோமோ, அப்பொழுது நமக்குப் பகலாகும்.

சி : இவ்விதமானால் இரவென்றும் பகலென்றும் இரண்டு நிலைமைகள் உண்டாகக் காரணமென்ன?

கு : நமக்கு இப்பொழுது இரவு ஆகுமென்றும், இருட்டு ஆகுமென்றும் சொல்லியிருக்கிறதல்லவா? அந்த இருட்டில் நம்மிலிருக்கின்ற பிராணன் வெளியினுள்ளில் பிரகாசிக்கின்ற சமயத்தில் பகல் என்றும், வெளியினுள்ளில் பிரகாசிக்கின்ற பிராணன் எப்பொழுது நம் உள்ளில்தானே அடங்குகிறதோ அப்பொழுது இரவு என்றும் சொல்லுகின்றோம். அது எவ்விதமென்றால்: நாம் இரவு என்று சொல்லுகிற சமயத்தில் இக்காணுகிற வீட்டிற்குள் வாசலுக்கு நேரே ஒரு விளக்கு கொளுத்தி வைத்தால் வெளியே அந்த வாசலுக்கு நேரே அப்பிரகாசத்தினுடைய சக்தி எவ்வளவு தூரம் செல்லுகின்றதோ, அவ்வளவு தூரம்வரை வெளிச்சமிருக்கும். அந்த வாசலை அடைத்தால் வெளியில் இருட்டாகவும் காணுகிறது. அதைப் போலவே நம்முடைய புருவ மத்தியத்தில் பிராணனாய் சூரியனாய் இருக்கின்ற பிரகாசம் அகங்காரமாயிருக்கிற வாசலின் வழியாய், வெளியினுள்ளில் பரவிப் பிரகாசிக்கின்றது. அப்பொழுது நமக்குப் பகல் என்றும், அந்த அகங்காரமாய் இருக்கின்ற கதவடைத்து வெளியினுள்ளில் பிரகாசிக்காமல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வரும்பொழுது நமக்கு இரவென்றும் சொல்லுவதாகும். இதுவாகும் நாம்சொல்லிவருகிற இரவினுடையவும் பகலினுடையவும் நிலைமை. இது நமக்கு இரவும் பகலும் அல்ல. இந்த நிலைமை தூக்கமாகும். அதனால் இரவும் பகலும் என்றுள்ளது இந்தத் தூக்கத்தில் தோன்றுகிற சொப்பனமாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் பதினைந்து

சிஷ்யன் : குருவே! முன் அத்தியாயத்தில் பிராணனாய் இருக்கின்ற சூரியன் எப்பொழுது புருவ மத்தியத்தில் பிரகாசிக்கின்றதோ, அப்பொழுது யாதொரு காலமும் இல்லையென்று கற்பித்தீர்கள் அல்லவா? எனில் பூதம் அதாவது இறந்தகாலம், வர்த்தமானம் அதாவது நிகழ்காலம், பாவி அதாவது எதிர்காலம் என மூன்று காலங்கள் உண்டென்றும் அவற்றை அனுசரித்தாகும் உலகத்தினுடைய நிலைமைகளென்றும் உலகத்தில் சொல்லிவருகிறார்கள். இப்படி மூன்று காலங்கள் இல்லையானால் உலகத்தில் நடந்ததும் நடக்கின்றதும், நடப்பதும் இல்லையென்றா கிறதல்லவா? அப்படியாவதற்கு இடமுண்டோ?

குரு : இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சொல்லுவது எந்தெந்தக் காலங்களைக் குறித்தாகும்?

சி : இறந்தகாலம் என்பது நடந்ததும் அதாவது முடிந்ததும், நிகழ்காலம் என்பது நடக்கின்றதும், எதிர்காலம் என்பது இனிமேல் நடப்பதும் அதாவது வருவதும் ஆகும்.

கு : அது எவ்விதமாகும் அப்படி வருகின்றது? இதோ பாருங்கள்! இக்காணுகின்றது என்னவாகும்?

சி : இது ஒரு புத்தகமாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : இதை நாம் இப்பொழுது என்ன செய்யப் போகிறோம்?

சி : அதை நீங்கள் கையினால் தொடுவதற்குப் போகிறீர்கள் அதாவது பாவிக்கிறீர்கள்.

கு : அது என்ன காலமாகும்?

சி : எதிர் காலமாகும்.

கு : இப்பொழுது என்ன செய்கிறோம்?

சி : அந்தப் புத்தகத்தைப் பிடித்து எடுக்கிறீர்கள்.

கு : இதென்ன காலமாகும்.

சி : நிகழ் காலமாகும்.

கு : இந்தப் புத்தகத்தை இப்பொழுது என்ன செய்தோம்?

சி : எடுத்தீர்கள்.

கு : அதென்ன காலமாகும்?

சி : இறந்த காலமாகும்.

கு : அப்பொழுது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமோ? அல்லது எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலமோ? எப்படிச் சொல்ல வேண்டும்?

சி : எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலம் என்றாகும்.

கு : எனில் நீர் ஏதாவது செய்ய வேண்டுமானால் பாவிக்காமல் அதாவது நினைக்காமல் செய்வதற்கு முடியுமா?

சி : முடியாது.

கு : அதெப்படி என்றால்: நீர் இங்கே வருவதற்காக உம்முடைய வீட்டிலிருந்து புறப்பட நினைக்கிறது எதிர்காலமும் இங்கு வந்து சேருவதற்காக

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நடக்கின்றது நிகழ்காலமும் இங்கு வந்து சேர்ந்தது இறந்த காலமும் ஆகிறது. எதிர்காலம் என்று சொல்லுவது பாவியாகும். பாவி என்றால் சலனம் அதாவது அசைவு. ஒன்றுமில்லாத நிலைமையிலிருந்தாகும் எதிர்காலமாகிய சலனம் அதாவது அசைவு உற்பத்தியாகின்றது. அதெப்படியென்றால்: ஜடத்திற்கு அதாவது உடம்பிற்கு அசைவாகிய எதிர் அதாவது பாவிகாலம் இல்லையென்றால் யாதொரு தொழிலும் செய்வதற்கு முடிவதில்லை. அதெப்படியென்றால் உமக்கு இந்த இருக்குமிடத்திலிருந்தே எழுந்திருக்க வேண்டும். எனில் உம்முடைய காலும் கையும் வைத்திருந்த இடத்திலிருந்து அசைக்காமல் இருந்தால் எழுந்திருக்க முடியுமா?

சி : முடியாது.

கு : அதென்ன காரணமென்றால் சலனம் அதாவது அசைவு இல்லாமல் இருந்ததாலாகும். சலிக்கின்றது ஜீவசக்தியான வாயுவாகும். அது பாவியாகின்றது. அதாகும் எதிர்காலம். அந்த வாயுவிலிருந்து உற்பவித்த மனமாகும் வர்த்தமானமான நடக்கின்ற நிகழ்காலம். அந்த மனத்தால் உண்டாக்கப்பட்ட இந்த ஜடமாகும் பூதமாயிருக்கின்ற முடிந்த காலம் அதாவது இறந்த காலம். அது எப்படியென்றால் ஜீவசக்தியாய் எதிர்காலமாய் இருக்கின்ற வாயுவும், நிகழ்காலமாயிருக்கின்ற மனமும் இல்லையானால் சம்யோகம் உண்டாவதில்லை. அதனால் நிகழ்காலமாய் இருக்கின்ற மனம், பூதமாய், இறந்ததாய், முடிந்ததாய் இருக்கின்ற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


ஜடத்தைப் புணர்ச்சியினால் உண்டாக்குகிறது. அது எவ்விதமென்றால்: மனம் இரஜோகுண மாகும். இரஜோகுணமாயிருக்கின்ற மனம் பூதமாய், இறந்ததாய், முடிந்த காலமாகிய ஜடத்தை சிருஷ்டித்தது. அந்த சிருஷ்டியை சாத் வீகமாய், ஜீவசக்தியாய், பாவியாய் அதாவது எதிர்காலமாயிருக்கின்ற வாயு இரக்ஷிக்கிறது. சாத்வீகமாய் இருக்கின்ற அந்த வாயுவும் இரஜோகுணமாயிருக்கின்ற மனமும் உள்ளபோது, நான் என்கிற தேகாபிமானமாகிய அகங்காரம் உண்டாகிறது. அச்சமயத்தில் மூன்று காலமாகிய நிலைமைகள் ஒன்று சேர்ந்தாகும் இக்காணப்படுகிற பூதங்களை அதாவது இறந்தவற்றை உண்டாக்குகின்றன. அதனால் நாம் யாதொன்றைக் கேட்கவும் காணவும் அறியவும் செய்கிறோமோ, அதெல்லாம் முடிந்த காலமான இறந்த காலமாகும். அப்படி உண்டாவதற்கு நடக்கின்ற அதாவது உதவுகின்ற பொருள் மனமாகும். அந்த மனமாகும் தொழில். தொழில் மனம் ஆவதால் அது நடந்துகொண்டிருக்கிற வர்த்த மானம் ஆகிய நிகழ்காலம் ஆகும். அந்தத் தொழிலாயிருக்கின்ற மனம் உண்டாவதற்குக் காரணம், ஜீவ சக்தியாகிய வாயுவாகும். அது பவிஷ்யத் காலமாயிருக்கின்ற அதாவது முதலில் உண்டாவதான பாவிகாலமும் அதாவது எதிர்காலமும் ஆகின்றது. பாவியாகிற அதாவது எதிர்காலமாயிருக்கின்ற அந்த வாயு இல்லை யானால் வர்த்தமானமாய் நிகழ்காலமாயிருக் கின்ற நடக்கின்ற காலமான தொழிலாகிய மனமோ, பூதமாய் இறந்ததாய் முடிந்த

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



காலமாயிருக்கின்ற அகங்காரமோ உண்டாவதில்லை. இவையெல்லாம் உண்டாவது பாவி ஆகிய எதிரான பவிஷ்யத்காலமான ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவிலிருந்தாகும். காரணம், நாம் தூங்கும் சமயம் முன்சொன்ன மூன்று காலமும் இல்லை. அப்பொழுது யாதொன்றையும் அறிவதும் இல்லை. அப்பொழுது தன்னுடைய சக்தி உற்பத்தியாகி வெளியினுள்ளில் வாயுவாய் சலிப்பதில்லை. எப்பொழுது தன்னுடைய சக்தி வெளியினுள்ளில் பரவி சலிக்கின்றதோ, அப்பொழுது வாயு என்று பெயர். அதனால் எதிர்காலமான வாயுவிலிருந்தாகும் எல்லாவற்றினுடையவும் உற்பத்தி. ஆனதால் வெளியினுள்ளில் எப்பொழுது மனம் இருக்கின்றதோ, அப்பொழுது பாவி என்கிற எதிர் அல்லது பவிஷ்யத் காலமல்லாமல் வேறு தனித்தனியாக யாதொரு காலமும் இல்லை. அவ்விதம் பாவியாய் அதாவது எதிராய் இருக்கின்ற பவிஷ்யத்காலம் என்று சொல்லுகிற ஜீவசக்தியான வாயுவாயிருக்கின்ற பொருள் எப்பொழுது வெளியினுள்ளில் சலிக்காமல் தன்னுடைய உற்பத்தி ஸ்தானமான புருவமத்தியத்தில் லயிக்கின்றதோ, அப்பொழுது காலம் நசிக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் தானாய் தன்மயமாய்த் தீருகிறது. அதனால் தானாய் பிரம்ம ஜோதியாய் இருக்கின்ற ''தான் தானே" எப்பொழுது ஆகாசமாய்த் தீருகிறதோ, அப்பொழுது அதற்குள்ளில் சலிக்கிறது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அந்த வாயுவிற்குத்தான்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பாவியாய் அதாவது எதிராயிருக்கின்ற பவிஷ்யத்காலம் என்றும் மாயை என்றும் சக்தி என்றும் சொல்லுவது. அது தன்னுடைய சலனமானதால் அதற்குப் பிரம்மம் மாயை என்றும் புருஷப்பிரகிருதி என்றும் சிவசக்தி என்றும் மற்றும் சொல்லிவருவது. எனில் தானாய், பிரம்மஜோதியாய், தன்னுடைய சக்தியாய், எதிராய் அதாவது பவிஷ்யத் காலமாயுள்ள வாயு எப்பொழுது தானாகிய பிரம்மத்தில் தானே ஐக்கியப்படுகிறதோ, அப்பொழுது சர்வமும் தன்னில் தானேலயித்து, தானாகி, தன்மயமாய்த் தீருகிறது. இதற்காகும் கைவல்யம் என்று சொல்லுவது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# பதினாறு

சிஷ்யன் : சுவாமி! குருவே! உலகில் பழைய காலம் முதல் பரம்பரையாக விரதம் முதலியவை அனுஷ்டித்து க்ஷேத்திரோபவாசம் முதலியவை செய்தால் மட்டுமே முத்தி சித்திக்கும் என்று சொல்லி வருகிறார்கள். தவிர, சாஸ்திரங்களிலும் அவ்விதமே இருப்பதாகச் சொல்லி அனுஷ்டித்தும் வருகிறார்கள். இதன் உண்மை என்ன என்பதைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

குரு : என்னென்னவாகும் விரதாதிகளும் உபவாசாதிகளும்?

சி : ஏகாதசி, பிரதோஷம், சிவராத்திரி முதலிய அநேக விரதங்களும் க்ஷேத்திரோபவாசாதிகளும் ஆகும்.

கு : நீர் ஏகாதசி முதலிய அநேக விரதங்களென்று சொல்லுகிறீர் அல்லவா? இவை முத்திக்கு வேண்டியதாயிருந்தால் ஒன்றே போதுமானதாக இருந்ததல்லவா? அநேகம் தேவையில்லை. ஆகட்டும், இவ்வித விரதங்களை எந்த விதத்தில் அனுஷ்டித்து வருகிறார்கள்?

சி : சொல்லுகிறேன். ஏகாதசி விரதம் அனுஷ்டித்து வருவது எவ்விதமென்றால்: அன்று காலையில் சூரிய உதயத்திற்கெல்லாம் எழுந்திருந்து குளித்து, சந்தனம் பூசி, விஷ்ணு நாமங்களை ஜெபித்து, விஷ்ணுக்ஷேத்திர தரிசனம் செய்து, அரிசி உளுந்து முதலியவை நீக்கி, இளநீர், பழம் முதலியவை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


புசித்துத் திருப்தியடைந்து, ஏகாதசி மகாத்மியம் முதலிய கிரந்தங்களைப் பாராயணம் செய்து, பகல் பொழுதைப் போக்கி, இரவில் தூங்குகிறார்கள். சிலர் தூங்காமலும் இருக்கிறார்கள். பிரதோஷவிரதம் அனுஷ்டித்து வருவதாவது: அன்றைய தினம் காலையில் எழுந்திருந்து குளித்து, விபூதி, உருத்திராட்சங்கள் தரித்து, சிவநாம சங்கீர்த்தனம் பாடி, சிவக்ஷேத்திரங்களில் தரிசனம் செய்து, பகல் சமயம் யாதொரு ஆகாரமும் சாப்பிடாமல், திரிஸந்தியா சமயமாகிய பிரதோஷ சமயம் அதாவது சூரியன் அஸ்தமித்துப் பகலும் இரவுமாய்ச் சந்திக்கின்ற சமயம், அதாவது மாலை நேரம் குளித்து, சிவக்ஷேத்திர தரிசனம், பூஜை, நைவேத்தியம் முதலியவை செய்தும் செய்வித்தும், நைவேத்தியத்தின் உச்சிஷ்டம் அதாவது நைவேத்தியம் செய்ததன் மீதி அல்லது எச்சில் சாப்பிட்டும் தூங்குகிறார்கள். சிவராத்திரி விரதம் என்பது வருஷத்தில் ஒன்றே இருக்கிறது. அன்றைய தினம் காலையில் எழுந்து குளித்து, விபூதி, உத்திராட்சம் முதலியவை தரித்து, சிவநாம சங்கீர்த்தனம் செய்து, சிவக்ஷேத்திரத்திற்குச் சென்று, தரிசனம், பிரதக்ஷணம் முதலியவை செய்து, பகலில் பூராவும் நிராகாரனாய் அதாவது ஆகாரமின்றி, சயனப் பிரதக்ஷணம் அதாவது கண்கட்டி படுத்து உருண்டு க்ஷேத்திரத்தை வலஞ்சுற்றி வருகிறது முதலியவை செய்து, இரவு சிவபூஜைக்குப் பிறகு அபிஷேகத்தின் உச்சிஷ்டம் மட்டும் புசித்தும், சிலர் பலவிதமான பலகாரங்கள் புசித்தும் ஒவ்வொரு புராணங்கள் வாசித்தும் பலவிதமான ஆட்டங்கள் ஆடியும் மற்றும் அன்றிரவு முழுவதும் தூங்காமல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சூரிய உதயம் வரை தூக்கம் வராத விதத்தில் என்னென்னவோ செய்து வருகிறார்கள்.

கு : இவ்வித விரத தினங்களில் இப்படிச் சொல்லிய விதமுள்ள தொழில்களல்லாமல் வேறு ஏதேனும் தொழில்களும் செய்வதுண்டோ?

சி : அவரவர் பிரதிதினம் செய்கிற எல்லாத் தொழில்களும் செய்வதுண்டு.

கு : எனில் மேல்சொல்லிய தினங்களில் அரிசி முதலிய சில தானியங்களை நீக்கி, மற்றுள்ள பொருள்களைக் கொண்டு உண்டாக்கிய உணவைத் திருப்தியாகப் புசித்து, பிரதிதினமும் நடத்தி வருகிற தொழில்களும் செய்தால் மோக்ஷம் கிடைக்குமானால் சில நாடுகளில் பிரதிதினம் கோதுமை, சோளம், கம்பு, சாமை, கேழ்வரகு, தினை முதலியவற்றால் செய்த உணவுகளைப் புசித்துத் தினம் செய்யும் தொழில்களைச் செய்து வருகிறவர்கள் எல்லாருக்கும் மோக்ஷம் கிடைக்க வேண்டியதல்லவா? எனில் இவ்வித விரதங்களை அந்தவிஸ்வாசத்துடன் அதாவது குருட்டு நம்பிக்கையுடன் அனுஷ்டித்து, யாதொரு ஆலோசனையுமில்லாமல் ஜனங்கள் அவனவனி லிருக்கின்ற பிராணனை அதோகதியாக்கி நாசம் செய்வதல்லாமல் உண்மைத் தத்துவத்தைத் தெரிந்து அவர்கட்கு மோக்ஷம் கிடைப்பதற்குள்ள மார்க்கத்தைப் பார்க்காமல் நசித்துப் போகின்றார்கள். **எனில் ஏகாதசிவிரதம் என்பது என்னவென்றால் தன்னிலிருந்து தசேந்திரியங்களின் வழியாய் வெளியினுள்ளில் பரவுகின்ற சக்தியைத் தன்னிலேயே ஒன்றாக்கி நிறுத்துவதாகும். அதென்னவென்றால்:**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கண்களால் பார்த்து அறிவதும், செவிகளால் கேட்டு அறிவதும், மூக்கினால் முகர்ந்து அறிவதும், நாவினால் ருசித்து அறிவதும், தொக்கு அதாவது தோலினால் தொட்டு அறிவதும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவற்றினுடைய தொழில்களை அறிவதுமாகிய மனோசக்தியைத் தன்னிலேயே ஒன்றாக்கி நிறுத்துகின்றதாகும் ஏகாதசி விரதம். எனில் இவ்வகைத் தொழில்களை அறிகின்ற அறிவு எதுவென்றால், தன்னிலிருக்கின்ற ஜீவசக்தி முன் சொன்ன வாக்கு முதலான ஐந்து இந்திரியங்களின் மூலம், மேல் சொன்ன கண் முதல் ஐந்து துவாரங்களின் வழியாய் வெளியினுள்ளில் வந்து அறிகின்ற அறிவு எதுவோ அதுவேயாகும். எப்படியென்றால் நாம் கண் முதலியவற்றைக் கொண்டு அறிகின்ற அறிவும், கை, கால் முதலியவற்றைக் கொண்டு செய்கின்ற தொழில் களும் உண்டாவதற்குள்ள காரணம் இப்பொழுது நாம் தூக்கமென்று சொல்லுகிற நிலைமையில் இராமல் தொழில் ஆகிய சொப்பனத்தில் இருக்கின்றதாலாகும். எப்பொழுது தொழில் என்கிற சொப்பனத்தைவிட்டு தூக்கம் என்கிற நிலைமையில் இருக்கின்றோமோ அச்சமயத்தில் மேற்சொன்ன தசேந்திரியங்களினால் யாதொரு அறிவோ, தொழிலோ உண்டாவதில்லை. அறிவிற்குத் தசேந்திரியங்கள் உத்திரவாதிகளல்ல. மனமாகும் உத்தரவாதி. அந்த மனம் உண்டாவதற்குக் காரணம் மேல்சொன்ன செவி, கண் முதலிய ஐந்துவித துவாரங்களின் வழியாக ஜீவசக்தியாய்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கர்மமாயிருக்கின்ற வாயு வெளியினுள்ளில் பிரவேசிப்பதாலாகும். அது நிமித்தமாகும் மேற்சொன்ன ஐந்திற்கும் கர்மேந்திரியங்கள் என்று பெயர். அதாவது கர்மமாய் இருக்கின்ற வாயுவிற்கு வெளியினுள்ளில் போகவும் வரவும் உள்ள வழியானதால் அதற்குக் கர்மேந்திரியம் என்று பெயர். அவ்வாறு வெளியினுள்ளில் கர்மமாய் இருக்கின்ற வாயுவோடு கூடி சலித்துக் கொண்டிருக்கும் மனத்தினுடைய உற்பத்தி ஸ்தானமாகிய பிரம்மரந்திரத்தில் ஜீவசக்தியாய் சலித்துக் கொண்டிருக்கின்ற வாயுவை அசைய விடாமல் நிறுத்துகின்றதாகும் ஏகாதசி விரதம்.

சி : சுவாமி ! இந்த ஐந்து துவாரங்களுக்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவற்றிற்குக் கர்மேந்திரியங்கள் என்றும் உலகத்தார் சொல்லி வருகிறார்களே! இப்பொழுது சுவாமி சொல்லுவது விபரீதமாயிருக்கிறதல்லவா ?

கு : மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றிற்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவற்றிற்குக் கர்மேந்திரியங்கள் என்றும் சொல்லக் காரணம் என்ன?

சி : மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றினால் தொட்டறிவதும், சுவைத்தறிவதும், பார்த்தறிவதும், முகர்ந்தறிவதும், கேட்டறிவதும் என்றிவ்வண்ணம் அறிவதால் இவற்றிற்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவற்றால் கர்மங்களைச் செய்வதால் கர்மேந்திரியங்களென்றும் சொல்லு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கின்றனர்.

கு : எனில் கர்மம் என்பது என்னவென்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள்?

சி : கர்மம் என்பது உலகத்தில் தொழில் என்று கருதி வந்தது தவறென்றும், கர்மம் என்பது ஒரு பொருள் என்றும், அது வாயுவாகும் என்றும் இப்பொழுது தெரிந்து கொண்டேன்.

கு : எனில் மெய், வாய், கண். மூக்கு, செவிகள் முதலானவற்றால் ஞானம் உண்டாவதில்லை. அவை ஞானத்திற்கு அதிகாரமுடையனவல்ல. அவை புரமாகிய அதாவது வீடாகிற இந்த ஜடத்தின் கதவுகளும் ஜன்னல்களுமாகும். அதாவது கர்மமாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு வெளியினுள்ளில் கதாகதம் செய்வதற்குள்ள அதாவது போக்குவரவிற்குள்ள மூக்கு, வாய் முதலானவை பரமாத்மாவாய், மனமாகின்ற விஷ்ணுவிற்குக் கதவுகளும், கண், செவி முதலானவை சன்னல்களும் ஆகும். அதன்னால் அவற்றிற்கு யாதொரு பொறுப்பும் அறிவும் இல்லை. தவிர, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவை என்னவென்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள் ?

சி : அவை நாக்கு, கைகள், கால்கள், குதம் (அதாவது மலதுவாரத்துடன் சேர்ந்தது), உபஸ்தம் (பெண்குறி அல்லது பெண்கள் மூத்திர துவாரம்) இவை என்றாகும் உலகத்தார் சொல்லி வருகிறார்கள்.

கு : எனில் இவையெல்லாம் தவறு. இவையெல்லாம் தொழில் செய்வதற்குள்ள ஆயுதங்களும் இடங்களும் ஆகும். என்னவென்றால் :

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நவத்துவாரங்களும் ஐந்து இந்திரியங்களும் சகல ஜீவ ஜாலங்களுக்கும் இருக்கின்றன. நீர் சொன்னபடி இருக்குமானால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவை காணுவதில்லை. எனில் நவதுவாரத்தைப் பற்றி இதில் பின்னர் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் லிங்கம் என்பது மூத்திரதுவாரம் அன்று என்றும் அது ஈஸ்வரலிங்கம் என்றும் அது நவதுவாரத்தில் உட்பட்டதன்று என்றும் நவதுவாரம் இன்னின்னவை ஆகுமென்றும் சொல்லியிருக்கிறோம். அந்த லிங்கம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கிற தென்றும் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது நீர் சொன்ன வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்பவற்றுள் பாயு என்பது குதம் என்றும் உபஸ்தம் என்பது பெண்குறி அதாவது பெண்களுடைய மூத்திரதுவாரம் என்றும் ஆகும். அப்படிப் பார்க்கும்போது நவதுவாரத்தில் உட்பட்ட குதத்திற்குத்தான் கர்மேந்திரியத்தில் உட்பட்ட பாயு என்று சொல்லுவது. அப்படி ஒருபோதும் வருவதற்கிடமில்லை. என்னவென்றால்: இரண்டு பெயர்கள் உண்டாகும்பொழுது இரண்டு பொருள்களும் உண்டாக வேண்டும். ஏனென்றால் குதத்திற்குள்ள தொழில் வேறும், பாயுவிற்குள்ள தொழில் வேறுமாகும். அப்பொழுது இரண்டிற்கும் வேறுவேறு தொழில் ஆனதால் இரண்டிற்கும் இரண்டு பொருள்கள் உண்டாயிருக்க வேண்டும். எனில் பாயுவை நாம் பார்ப்பதும் இல்லை. உபஸ்தம் பெண்களின் மூத்திர துவாரமாகையால் அது நமக்கில்லை. அப்பொழுது பஞ்சேந்திரியங்களில் பாயுவை நாம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பார்ப்பதற்கு முடியாது. உபஸ்தம் நமக்கில்லை. அப்படி வருவதற்கு வழி உண்டா? எனில் பஞ்சேந்திரியங்கள் இன்னின்னவை என்று உலகோருக்குத் தெரிவதில்லை. அவை நீங்கள் கூறியவையல்ல.

அவை என்னவென்றால்: குதம், உபஸ்தம், லிங்கம் இவை கோப்பியம் அதாவது இரகசியமாயிருக்கின்றனவென்று உலகத்தில் சொல்லுகின்றனர். அது இப்பொழுது உலகத்தில் சொல்லி வருவதான ஆண்குறியான ஆடவர்கட்குள்ள மூத்திர துவாரம் லிங்கம் என்றும், பெண்குறியான பெண்டிர்கட்குள்ள மூத்திரதுவாரம் உபஸ்தம் என்றும் உலகத்தில் சர்வஜீவிகளுக்கும் மலவிசர்ஜனம் செய்வதற்குள்ள அதாவது மலங்கழிப்பதற்குரிய மலத்துவாரத்திற்குக் குதம் என்றும் சொல்லி வருகின்றனர். அது மிகவும் தப்பிதம். ஏனென்றால் இவை இரகசியமாய் இருப்பவையல்ல; பரசியம் அதாவது வெளிப்படையாய்ப் பார்த்துக் கொண்டிருப்பதாகும். இவற்றை இப்பொழுது இரகசியம் என்று சொல்லி வரக்காரணம், வஸ்திரம் அதாவது துணி கட்டி மறைத்திருப்பதால். மறைத்து வைத்திருப்பதால் இரகசியமல்ல. ஏனென்றால் நாம் பிறக்கும்பொழுது இவை மறைவாகவல்ல. அப்பொழுது பரசியமாய் அதாவது யாவருமறிவதாய் வெளியேதானிருந்தது. அவற்றை நாலைந்து வயதிற்குப்பிறகுதான் வஸ்திரம் அதாவது துணி முதலானவற்றால் மறைத்து வைத்தது. அதனால் இப்பொழுது சொல்லிவருபவையல்ல மேற்சொன்னவை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஆகவே மேற்சொன்னவை பிறந்தபோதே இரகசியமாயுள்ளனவாகும். அவை என்னவென்றால் விவரித்துச் சொல்லலாம்: **வாக்கு என்று சொல்வது சப்தமும் பாணி என்று சொல்வது பரமாத்மாவாயிருக்கின்ற மனமாகிற விஷ்ணுவிற்குள்ள நான்கு கைகளும் ஆகும்.** இக்கைகளில் நான்கு ஆயுதங்கள் தாங்கியிருக்கிறார். அவை சங்கு, சக்கரம், கதா, பத்மம் இவையாகும். அவற்றுள் சங்கினால் ஆன உபயோகம் என்ன?

சி : சப்தம்.

கு : சக்கரத்தினால் உள்ள உபயோகம் என்ன?

சி : சத்துருக்களை ஒழிக்க.

கு : கதையினாலோ ?

சி : அதுவும் சத்துருக்களை அழிக்க.

கு : பத்மத்தினாலோ?

சி : அது அலங்காரத்திற்காகப் பிடித்திருக்கிறார்.

கு : எனில் நீர் சொன்னபடியல்ல அவற்றின் நிலைமைகள். சப்தத்தைக் கேட்பதற்கும் உண்டாக்குவதற்கும் உள்ளது காது. அந்தக் காதாகும் பரமாத்மாவாயிருக்கின்ற மனமாகின்ற விஷ்ணுவிற்கு ஒரு கை. சக்கரம் என்பது சுற்றிக் கொண்டிருப்பது. அது நம்முடைய கண் ஆகும். அது மனமாகும். அந்த மனம் சுற்றிக்கொண்டிருப்பதால் பலவிதமாகப் பார்க்க வழி உண்டானது. கதை என்று சொன்னால் கதித்துக் கொண்டிருப்பது. அதாவது நடனம் செய்துகொண்டிருப்பது. அது என்னவென்றால் நமது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும். அதற்கு போக்குவரத்துக்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உபயோகமாயிருக்கின்றது மூக்கு. அந்த மூக்காகும் பரமாத்மாவாயிருக்கின்ற விஷ்ணுவிற்கு மற்றொரு கை. பத்மம் என்றால் தாமரை. அதாவது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு வெளியில் வந்தபோது நான் என்றுள்ள அகங்காரமாகிய தாமரை உண்டானது. அதாவது அக்ஷரமா யிருக்கின்ற தானே ஆகாசமானபோது, அது தாமரையாயிருக்கின்ற இருதயகமலம் ஆகும். அது வாயின் வழியாகவே ஆகும். அதாகும் பரமாத்மாவான விஷ்ணுவிற்கு வேறொரு கை. பாணி என்று சொன்னால் பரமாத்மா மனசக்தியாய்த் தீர்ந்தது. அப்போது மேற்சொன்ன நான்கு கைகளாய் பரமாத்மாவாய் இருக்கின்ற மனம் வெளியினுள்ளில் பரவியிருக்கிறது. பாதம் என்பது சொஸ்தானம் அதாவது சொந்த இடம். பாயு என்றால் ஊற்று உண்டாகிற இடம். அதாவது ஊறுகிற இடம். உபஸ்தம் என்றால் உபஸ்திதி செய்கிறது. அதாவது உப + ஸ்திதி. உப = சேர்ந்தது; ஸ்திதி = ஸ்திரமாய் இருக்கிறது. அது எதனோடென்றால் லிங்கத்துடன் ஸ்திரமாய்ச் சேர்ந்திருக்கின்றது. அந்த லிங்கத்திற்கே ஈஸ்வரலிங்கம் என்று பெயர். அது நம்முடைய புருவமத்தியில் இருக்கின்றதாகும். அந்த லிங்கம் இருப்பது உபஸ்தத்தில் ஆகும். அதனால்தான் உபஸ்தம் என்று சொல்லக் காரணம். உபஸ்தம் என்பது யோனி. அந்த யோனி என்பது உற்பத்தி ஸ்தானம்.

அந்த உற்பத்தி எங்கேயிருந்து உண்டாகிறது என்றால் பெண்களுடைய மூத்திர துவாரத்தில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இருந்தன்று. அந்த மூத்திர துவாரம் வெளியில் வருவதற்குள்ள ஒரு வழியாகும். யார் வருவதற்கென்றால் குழந்தை வருவதற்கு. அக்குழந்தை எங்கே இருந்தது என்றால் பெண்டிரின் வயிற்றில். பெண்டிரின் வயிற்றில் குழந்தை இல்லையென்றால் வெளியில் வருவ தற்கு முடியாது. ஆகையால் அது உற்பத்தி ஸ்தானம் அன்று. அந்தக் குழந்தை வயிற்றில் உண்டாக வேண்டுமானால் என்ன வேண்டு மென்றால் சுக்கில சுரோணிதம் உண்டாயிருக்க வேண்டும். அந்த சுக்கில சுரோணிதம் எங்கிருந்து உண்டாகின்ற தென்றால் ஆண் பெண் சேர்க்கையிலிருந்து உண்டாகிறது. அந்தச் சேர்க்கையின் நிமித்தம் உண்டாகிற சுக்கிலம் பிரம்மமாகும். அந்த பிரம்மமாய் இருக்கின்ற சுக்கிலம் சம்யோகம் நிமித்தம் நரகத்துவாரம் வழியாய் கும்பிபாக நரகத்தில் சென்று விழுவதற்கும், அந்தக் கும்பிபாக நரகத்திலிருந்து வெளியே வருவதற்குமுள்ள நரகக் கதவாகும் பெண்களுடைய சம்யோகஸ்தலம் அதாவது பெண்குறி என்று சொல்லுவது. அது எப்படி யென்றால் லிங்கமூலத்திலிருக்கின்ற பிரம்மசொரூபமாயிருக்கின்ற சுக்கிலம் சம்யோகம் நிமித்தம் மேல் சொன்னபடி உண்டாகின்றது. அதற்கோர் உதாரணம்: நீர் சிவன் கோயிலில் போயிருக்கிறீர் அல்லவா?

சி : ஆம். போயிருக்கிறேன்.

கு : அந்த சிவன் கோவிலில் என்ன இருக்கிறது?

சி : சிவலிங்கம் இருக்கிறது.

கு : அது எதிலிருக்கிறது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil




சி : அது கோவிலுக்குள்ளில் கல்லினால் ஒரு பீடம் செய்து, அந்தப் பீடத்தில் யோனி வடிவில் ஒரு குழி உண்டாக்கி, அந்தக் குழியில் லிங்கத்தை ஸ்தாபித்திருக்கிறது.

கு : அப்பொழுது லிங்கம் எங்கேயாகும் இருக்கிறது?

சி : யோனியில் இருக்கிறது.

கு : அப்பொழுது லிங்கம் யோனியில் இருப்பதனால்தான் யோனிக்கு உபஸ்தம் என்று சொல்லக்காரணம். அப்படி இருக்கின்ற லிங்கத்தின் மேல் என்னென்ன அபிஷேகம் செய்வதானாலும் அதில் திராவகரூபமான பொருள் எவையானாலும் இந்தப் படத்தில் காண்பித்திருக்கிறது போல அது ஊறிவருகிற இடம் பாயு என்றும், அது கீழே குதிக்கிற இடம் குதம் என்றும் பெயர். அது எங்கிருந்தென்றால் ஸ்தானத்திலிருந்தாகும். அதாவது பாதத்திலிருந்து.




ஆகையினால் வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்பவை இவையாகும். இவை ஞானேந்திரியங்களாகும். அதாவது பாதம் என்ற சொஸ்தானத்திலிருந்து பரமாத்மாவான விஷ்ணு, மனசக்தியாய் நான்கு கைகளாய் வெளியினுள்ளில் பாயு என்ற இடத்திலிருந்து ஊறி குதத்தின் வழியாக வெளியே வருவதால் அந்த நான்கு கைகளையும் அடக்கி ஜீவசக்தியை அந்தக் குதத்தின் வழியாய் மேலே உற்பத்தி ஸ்தானத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொழுதாகும் ஞானம் உண்டாகின்றது. அது எப்படியென்றால்: காதுகளால் கேட்டறிவதற்கும், கண்களால் பார்த்தறிவதற்கும்,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மூக்கினால் முகர்ந்தறிவதற்கும் மற்றும் வழி உண்டாக்குவதுமானதும், வாயினால் ஆகாரமான ஆகாசம் உண்டாக்கிப்பல பொருள்களும் உண்டாக்கித் தீர்க்கின்றதுமாகிய நான்கு வழிகளின் வாயிலாக வெளியினுள்ளில் விடாமல் தன்னுள்ளில் அந்தரங்கமாய்க் கிடக்கின்ற குதம் மார்க்கமாய் அதாவது தன் உள்வழியாய் தன்னுடைய உற்பத்தி ஸ்தானத்தில் சென்று சேர்ந்த பொழுது நமக்கு ஞானம் உண்டாகின்றது. அதாவது முன்சொன்ன நான்கு கைகளும் வெளியினுள்ளில் போக இடமில்லாமல் தனக்குள்ளே அடங்கும் போதுதான் ஞானமுண்டாகிறது. அதற்குத்தான் ஞானேந்திரியம் என்று பெயர். இதல்லாமல் நீர் சொன்னதான நாவு, கை, கால், குதம், மூத்திர துவாரம் இவை ஒன்றும் கர்மேந்திரியமோ, ஞானேந்திரியமோ அல்ல. அவையெல்லாம் தொழில் செய்வதற்குறிய ஆயுதங்களும் இடங்களுமாகும்.

அப்படி இருக்கின்ற மனம் அதனுடைய சொஸ்தானத்தில் ஸ்திதி செய்கின்றதாகும் அதாவது நிலைநிற்கின்றதாகும். அவ்விதம் ஸ்திதிசெய்கின்ற அதாவது நிலைநிற்கின்ற மனத்திற்காகும் விஷ்ணு என்று சொல்லுவது. அந்த விஷ்ணு அனந்த சயனனாயிருக்கின்றான். அனந்தசயனன் என்றால் ஆதி, அந்தம் அதாவது அடி, முடி, அகம், புறம் அதாவது உள், வெளி இந்த நிலைமைகள் இல்லாமலிருக்கின்ற பதவியாகும். அதாவது தன்னிலிருந்து சலித்துக் கொண்டிருக்கின்ற மனம் சலனமில்லாமல்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சொஸ்தானத்தில் லயிக்கின்ற நிலை மையாகும். இதற்காகும் ஏகாதசிவிரதம் அனுஷ்டித்தால் விஷ்ணு பதம் பிராபிக்கும் அதாவது அடையலாம் என்று சொல்லக்காரணம்.

பிரதோஷம் என்பது திரயோதசி கூடிய தினமாகும் என்று சொல்லுகின்றனர். எனில் அதனுடைய உண்மை: தசேந்திரியங்களுடன் தன்னுடைய சக்தி, சத்துவ இரஜோ தமோ குணங்களாகி வெளியினுள்ளில் பரவுவதை, முன் சொன்ன மூன்று குணங்களோடு கூடி, அந்தரங்கத்தில் அதாவது உள்ளில் ஜீவனாகிய சிவனோடு ஐக்கியப்படுவதாகும். சிவராத்திரியும் அவ்வாறே. பாஹ்யத்தில் அதாவது வெளியினுள்ளில் மூன்று விதமாய் மாயையில் பிரகாசித்த பிரகாசம், அந்தரங்கத்தில் அதாவது உள்ளில் ஜீவனாகிய சிவனோடு ஐக்கியப்படு வதாகும். இப்படியாகும் விரதங்களினுடைய நிலைமை.

இதல்லாமல் சிவராத்திரி வருஷத்தில் ஒன்றே யாகும், அது சிவனுடைய ராத்திரியாகுமென்றும் சொல்லுகின்றனர். எனில் வருஷத்தில் இரவும் பகலுமாக 365 நாட்களுண்டு. அதில் ஒரு நாள் ராத்திரி மட்டுமே சிவனுக்கு ராத்திரியென்றும், பாக்கியெல்லாம் பகலாகுமென்றும் ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றால் பகல் எத்தனை சமயமோ அதாவது நேரமோ அத்தனை நேரம் ராத்திரியும் உண்டாகும். இதில் 364 இரவும் பகலும் கூடிய நாட்கள் முழுவதும் சிவனுக்குப் பகலாகவும், 365ம் நாளாகிய ஒரு நாள் ராத்திரி மட்டும் சிவனுக்கு ராத்திரியாகவும் வருவதற்குக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



காரணமில்லை. இவ்வகை யாதொன்றும் ஆலோசிக்காமல் ஏகாதசி என்றும் பிரதோஷம் என்றும் சிவராத்திரி என்றும் கேள்விப்படவும், சாஸ்திராதிகளை வாசித்துப் படிக்கவும் செய்து ஜனங்கள் அதனுடைய யாதொரு தத்துவமும் அறியாமல் அர்த்தம் தவறாகக் கருதி ஏதேனும் சில கோஷ்டிகள் அதாவது ஆட்டங்களைக் காண்பிக்கிறார்கள் என்று மட்டுமே சொல்வதற்கு இடமிருக்கிறது.

ஏனில் விரதங்கள் மட்டுமல்ல, உலகமும் அதில் நடக்கிற நிலைமைகளும் தன்னுடைய சக்தி வெளியினுள்ளில் பரவி, அந்த சக்தியிலிருந்து உண்டானவையாகும். அதனால் தன்னுடைய சக்தியை வெளியினுள்ளில் விடாமல் தன்னிலேயே லயிக்கச் செய்து, தானாய் தன்மயமாய் ஆவதற்குள்ள மார்க்கத்தை அதாவது வழியைக் கண்டறிந்து, அந்த மார்க்கத்தில்கூடி தன்னுடைய சக்தியை முன்சொன்னவிதம் லயிக்கச் செய்து, தானாய் தன்மயமாயிருக்க வேண்டியதாகும். இதற்காகும் மோக்ஷம் என்று சொல்லுவது. இதல்லாமல் நீர் சொன்னபடி ஏகாதசி முதலிய பல விரதங்களையும் அனுஷ்டித்து தன்னுடைய நித்திய ஆகாரங்களை விலக்கியும் வழக்கமாய்ச் சாப்பிடும் நேரம் தவறியும் சமயம் மாறி ஏதோ சில பலகாரங்களைத் தின்று வயிறு நிறைத்தும் விரதமாகுமென்றும் சொல்லி இருப்பதால் யாதொரு பலனும் அடையாமலும் யாதொரு தத்துவமும் அறியாமலும் தன்னுடைய சக்தி அதோகதியாய் நசித்துப் போவதற்கு இடமாகிறது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : விரதங்களைப் பற்றி இவ்விதமென்றால் க்ஷேத்திரங்களில் உபவசிப்பதைப் பற்றி என்ன வாகும் சுவாமி கற்பிப்பது ?

கு : க்ஷேத்திரங்களில் உபவசிப்பதென்று நீர் சொன்னீரல்லவா? எனில் க்ஷேத்திரம் எத்தனை உண்டு? உபவாசம் என்னவாகும்?

சி : அநேக க்ஷேத்திரங்கள் உண்டு. அவற்றில் ஆகாரமில்லாமல் இருக்கின்றது உபவாசம் என்று சொல்லுகின்றனர்.

கு : அந்த க்ஷேத்திரங்கள் எவை எவை சொல்லுவீர்!

சி : சிவக்ஷேத்திரம், விஷ்ணு க்ஷேத்திரம், கணபதி க்ஷேத்திரம், சுப்பிரமண்ய க்ஷேத்திரம், ஐயப்ப க்ஷேத்திரம், பகவதி க்ஷேத்திரம் முதலான அநேக க்ஷேத்திரங்கள் உண்டு.

கு : நீர் அநேக க்ஷேத்திரங்கள் சொன்னீரல்லவா? அவ்வகை க்ஷேத்திரங்களில் என்னவாகும் உள்ளது?

சி : அங்கே சங்கற்பித்துப் பிரதிஷ்டை செய்துள்ள ஈஸ்வரர்கள் இருக்கின்றனர்.

கு : அங்கு எதனையாகும் பிரதிஷ்டிக்கின்றது ?

சி : பிம்பங்கள் அதாவது விக்ரஹங்கள் உண்டாக்கி அதை ஈஸ்வரர் ஆகுமென்று சங்கற்பித்து பிரதிஷ்டிக்கின்றனர்.

கு : பிம்பங்கள் எவற்றைக் கொண்டாகும் உண்டாக்கி யுள்ளது ?

சி : உலோகங்கள், சிலைகள் (கற்கள்) முதலிய வற்றைக் கொண்டாகும்.

கு : எந்தெந்த உலோகங்களைக் கொண்டும் கற்களைக் கொண்டும் பிம்பங்கள் உண்டாக்குவது?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவற்றைக் கொண்டும், பாதாள அஞ்சனம், கிருஷ்ணசிலை அதாவது கருங்கல் இவற்றைக் கொண்டும், சில பலா, தேக்கு முதலிய மரங்களைக் கொண்டுமாகும்.

கு : உலோகங்களைக் கொண்டும் சிலை அதாவது கற்களைக் கொண்டும் மரங்களைக் கொண்டும் ஈஸ்வரர்களை உண்டாக்குவது யாராகும்?

சி : உலோகங்களைக் கொண்டு உண்டாக்குவதில் சிலவற்றைத் தட்டானும் சிலவற்றைக் கன்னானும் கற்களைக்கொண்டுள்ளதைக் கற்கொத்தனும் மரங்களைக் கொண்டுள்ளதைத் தச்சனுமாகும்.

கு : அப்பொழுது ஈஸ்வரனோ முதலில் உண்டானார் அல்லது ஈஸ்வரனை மேற்சொல்லிய விதம் உண்டாக்கியவரோ முதலில் உண்டாயினர்?

சி : ஈஸ்வரனாகும் முதலில் உண்டானார்.

கு : ஈஸ்வரனாகும் முதலில் உண்டானார் என்றால் மேற்சொன்னவர்கள் எப்படி, எவ்விதத்தில் ஈஸ்வரனை உண்டாக்கினர்? தவிர, மேற் சொன்னகூட்டத்தார் இல்லையானால் நமக்கு ஈஸ்வரனைப் பூஜிப்பதற்கு முடியாதல்லவா?

சி : இதைப்பற்றி ஆலோசிக்கும்பொழுது தட்டான், கன்னான் முதலியவர்களாகும் முதலில் உண்டானவர்கள் என்று வருகிறது.

கு : இது நமக்கு ஈஸ்வரசேவை செய்வதற்காக அவர்களே உண்டாக்கி ஏற்படுத்திக் கொடுத்ததாகுமா?

சி : அப்படியன்று. பக்தர்களான ஜனங்கள்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவ்விதத்தில் செய்வித்து, பிராமணரைக் கொண்டு பிரதிஷ்டிப்பிக்கின்றதாகும்.

கு : அப்பொழுது ஈஸ்வரன் உண்டாவதற்கு முன்பே மேற்சொன்ன தட்டான் முதலிய வேலைக்காரர்களும் பக்தர்களும் பிராமணர்களும் உண்டாயிருந்தார்கள் என்று வருகிறது. அதல்லாமல் பிராமணராகும் பிரதிஷ்டிக்கிறதென்று சொன்னீரல்லவா? அவர் ஈஸ்வரனைப் பிரதிஷ்டிப்பது எவ்விதமாகும்?

சி : க்ஷேத்திரங்களில் ஸ்ரீகோவிலினுள்ளில் அதாவது மூலஸ்தானத்தில் அஷ்டகந்தம் இடித்தரைத்துச் சேர்த்த கூட்டு அதாவது கலவையில் முன் சொன்ன விக்கிரகங்களை வைத்து கெட்டிப்படுத்தி அதில் பிராணப் பிரதிஷ்டை செய்து, பூஜை, நைவேத்தியம் முதலியன செய்து வருகின்றனர். இவ்விதமாகும் பிரதிஷ்டிப்பது.

கு : இவ்விதம் பூஜை, நைவேத்தியம் முதலியன செய்வதை அந்த பிம்பம் அறிவதோ, புசிப்பதோ செய்வதுண்டோ?

சி : உண்டென்றுதான் நம்பிக்கை.

கு : இதுவரை மேற்சொன்னபடி நிவேதித்த ஆகாரப் பொருள்களை ஒரு பிம்பம் புசித்ததாய் நீர் கேட்டதோ, கண்டதோ, அறிந்ததோ உண்டா?

சி : நான் கேட்டதும் கண்டதும் அறிந்ததும் இல்லை.

கு : அந்த பிம்பம் ஏதேனும் சப்திக்குமோ (பேசுமோ)?

சி : யாதொன்றும் சப்திப்பதில்லை (பேசுவதில்லை).

கு : அதல்லாமல் மரத்தின் துண்டாயிருந்தது ஈஸ்வரனென்றால் இக்காணுகின்ற தூணும், குத்துகிற உரலும், உலக்கையும் ஈஸ்வரன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


அல்லவா? நீர் அவற்றையும் பஜனை செய்ய வேண்டியதல்லவா? அதாவது ஒரே மரத்தினுடைய ஒரு துண்டு கொண்டு ஈஸ்வரனையும் மற்றொரு துண்டு கொண்டு உரலினையும் வேறொரு துண்டு கொண்டு உலக்கையையும் உண்டாக்கியதாகும். அவற்றைப் பஜனை செய்யவும் பூஜிக்கவும் தொழவும் அதாவது கும்பிடவும் வேண்டியதல்லவா? அந்த மூன்று பொருள்களையும் மரத்துண்டுகொண்டு உண்டாக்கியது ஒருவன் தானேயல்லவா? நீர் என்ன காரணத்தால் உரலையும் உலக்கையையும் மேல் சொன்னது போல செய்வதில்லை?

சி : அது ஓர் உருவமாய் உண்டாக்கப்படவில்லை.

கு : அப்பொழுது ஈஸ்வர உருவத்தை உண்டாக்கியது ஆசாரியாகுமென்று வருகிறது. எனில் ஈஸ்வர உருவத்தை உண்டாக்கிய ஆசாரியையல்லவா பூஜிக்க வேண்டியது?

சி : ஆசாரி மேல்சொன்ன ஈஸ்வர உருவத்தை உண்டாக்கினான் என்று மட்டுமே உள்ளது. அதற்கு வேண்டியதான பிராணப்பிரதிஷ்டை, பூஜை, நைவேத்தியம் முதலியவற்றைச் செய்து நிலை நிறுத்தியபொழுது மட்டுமே அதற்கு சக்தி உண்டாயிற்று.

கு : அவ்விதம் செய்தது யாராகும்?

சி : பிராமணராகும்.

கு : எனில் அந்த பிராமணரை பூஜித்தால் போதாதா? மரம், கல், உலோகம் முதலியவற்றைக் கொண்டு உண்டாக்கிய பாவைகளை அதாவது பொம்மைகளைப் பூஜிக்க வேண்டுமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சி : சுவாமி! அந்தப் பிரதிஷ்டைக்கு யாதொரு சக்தியுமில்லையென்றோ சொல்லுகிறீர்கள்?

கு : ஆம்! ஏனென்றால் பிராணப்பிரதிஷ்டை என்று சொன்னால் பிராணனை உறைப்பிப்பது அல்லது நிலைநிறுத்துவது என்று அர்த்தமாகும். பிராணன் என்பது தன்னில்தானே இருக்கிற பொருளாகும். அப்படி தன் உள்ளில் இருக்கின்ற பிராணனை உலோகங்களைக் கொண்டோ, மற்றோ உண்டாக்கியதான பொம்மைகளில் பிரதிஷ்டித்தார் என்றானால் அது பிரதிஷ்டித்தவனுடைய பிராணன் அச்சமயம் அவரிலிருந்து நசித்துப் பிணமாயிருக்க வேண்டும். அப்படி பிராணப்பிரதிஷ்டை செய்த யாராகிலும் தற்சமயம் அதாவது அச்சமயத்திலேயே பிணமாய்ப் போய்விட்டார் என்று கேட்டதோ, கண்டதோ, அறிந்ததோ உண்டாயிருந்ததா?

சி : கேட்டதும் கண்டதும் அறிந்ததும் இல்லை.

கு : எனில் தன் உள்ளிலிருக்கின்ற பிராணனை முன் சொன்ன பொம்மைகளில் பிரதிஷ்டித்து அவற்றிற்கு சக்தி கொடுக்கத்தக்க திறமையுள்ளவர் உண்டாயிருந்தாரேயானால் அதிலும் எவ்வளவோ பெரியதான குணம் உலகத்தில் உண்டாவதற்கு இடமிருக்கிறது. அது என்னவென்றால்: உலகத்தில் அநேக ஜனங்கள் செத்துப்போகிறார்கள். செத்துப் போகிறது என்பது பிராணன் நசிப்பதல்லவா? அப்படிப் பிராணன் நசித்த பொழுது முன்சொன்ன பொம்மையில் பிராணனை பிரதிஷ்டிப்பதற்கு சக்தி உள்ளவருக்கு, செத்துப்போன ஜடத்தில் பிராணனைப் பிரதிஷ்டித்து அதற்கு சக்தியைக்கொடுத்தால் எவ்வளவோ பெரிய உபகாரமாயிருக்குமல்லவா? அதுவுமல்லாது,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இப்படிப் பிரதிஷ்டித்துள்ள இடத்திற்குப்போகும் பொழுது உமது எண்ணம் அங்கு யார் இருக்கிறார் என்றாகும்?

சி : ஈஸ்வரன் இருக்கிறார் என்றாகும்.

கு : எனில் நீர் அங்கு சென்ற பிறகு எவ்விதம் கும்பிடுகிறீர்? என்னவாகும் கும்பிடும் சமயத்தில் உம்முடைய எண்ணம்?

சி : என்னுடைய கைகளிரண்டும் கூப்பிச் சேர்த்து எனது நெஞ்சில் வைத்துக் கும்பிட்டு ''என்னுடைய ஈஸ்வரா! என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்றாகும்.

கு : அது நீர் செய்வது தவறாகும். அது ஏனென்றால் கோயிலில் பிரதிஷ்டித்துள்ள அந்தப் பொம்மையாகும் ஈஸ்வரன் என்பதாயிருந்தது, நீர் அங்கே போகும்பொழுதுள்ள சங்கற்பம். அப்படி சங்கற்பித்தது கொண்டாகும் நீர் அங்கே போவதற்கிடமாயிற்று. அப்படி சங்கல்பித்த நிலைமைக்கு ''என்னுடைய ஈஸ்வரா'' என்று சொல்லி அவனவனுடைய நெஞ்சில் கைகள் வைத்துக் கும்பிடுவது கூடாது. அங்கே பிரதிஷ்டித்துள்ள பொம்மையுடைய நெஞ்சில் கைகளிரண்டும் கூப்பிவைத்து, கோயிலிலுள்ள பொம்மையில் பிரதிஷ்டித்துள்ள ஈஸ்வரா என்றாகும் சொல்ல வேண்டியிருந்தது. அப்படிச் சொல்லுவதில்லை. காரணம் என்னவென்றால்: **உம்மில் ஈஸ்வரன் இல்லாவிட்டால் மற்றொரிடத்தில் ஈஸ்வரன் இல்லை. உம்முடைய சக்தி வெளியினுள்ளில் பரவி உம்மால் சங்கற்பிக்கப்பட்டதாகும். அதல்லாமல் அப்பிரதிஷ்டையில் யாதொரு**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சக்தியும் இல்லை. ஏனென்றால் நீர் முன் சொன்ன பிராணப் பிரதிஷ்டை செய்தனர் என்று சொல்ல வேண்டுமானால், முன்சொன்ன பிம்பங்களை எடுத்து மற்றொரு சகாயமும் இல்லாமல், தன்னுடைய பிராணனைக் கொண்டு மட்டும் பலப்படுத்தி நிறுத்தவும், யாதொரு அசைவுமில்லாமல் நிற்கவும் வேண்டியதாயிருந்தது. அவ்விதமல்லாமல் சீமைச் சுண்ணாம்பு கொண்டோ, சிமெண்டு கொண்டோ, அஷ்டகந்தம் கொண்டோ கட்டி பலப்படுத்தி நிறுத்துவதற்குப் பிராணப் பிரதிஷ்டை என்று சொல்லக்கூடாது. அதெவ்விதமென்றால்: இதோ பாருங்கள்! இங்கு நிற்கிற கதவுநிலை யாரால் உண்டாக்கப்பட்டதாகும்?

சி : ஆசாரி உண்டாக்கியதாகும்.

கு : அதை அங்கு கட்டி நிறுத்தியது யார்?

சி : அது கட்டடவேலை செய்யும் கொத்தனார் கட்டி நிறுத்தியதாகும்.

கு : அதை எப்படியாகும் கட்டி நிறுத்தியது?

சி : அந்தக் கதவுநிலையை வைத்து, கல் வைத்து, சுண்ணாம்பு போட்டு, அதிலாகும் கட்டி நிறுத்தியது.

கு : எனில் இக்காணுகின்ற கதவுநிலை ஆசாரி உண்டாக்கவும், கொத்தன் அங்கே கட்டி நிறுத்தவும் செய்தது போன்றே பொம்மைகளை உண்டாக்குவதற்குத் தெரிந்தவர் அவற்றை உண்டாக்கவும் கட்டி நிறுத்துவதற்குத் தெரிந்தவர் அஷ்டகந்தத்திலோ, சீமைச் சுண்ணாம்பிலோ, சிமெண்டிலோ வைத்துக் கட்டிநிறுத்தவும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செய்கிறார்கள். இவ்விதம் நிறுத்திய பொம்மைகளாகும் ஈஸ்வரன் என்று வைத்து நாம் பூஜிக்கின்றோம். அது எவ்விதமென்றால்: நம்முடைய கைவிரல்களைச் சேர்த்துக் குழியாகப் பிடித்து நிறைய பாயசம் விட்டுப்பிடித்தால், அந்தப் பாயசத்திலிருந்து நீர் கை விரல்களினுடைய ஐந்து சந்துகளின் வழியாய்ப் புறங்கைத் தண்டின் மேலாக முழங்கைவரை ஒழுகிக்கொண்டிருக்கிறது. அந்த நீரை நக்கவேண்டுமென நினைத்துக் கையைக் கவிழ்த்துப் பிடித்துப் புறங்கைத் தண்டின் மேலே ஒழுகுகிற நீரினை நக்கும்போது கையிலிருந்த பாயசம் போய்விடுகிறது. மறுபடியும் நக்குவதற்கு நினைத்தால் நீரில்லை. காரணம், பாயசத்திலிருந்தாகும் அந்த நீர் ஒழுகியிருந்தது. அந்த நீரை மோகித்து, பாயசத்தைப் பாராமல் புறங்கையில் ஒழுகிய நீரை நக்கியபொழுது அந்த நீர் ஒழுகிக்கொண்டிருந்த பாயசம் போய் விட்டதன் நிமித்தம் பாயசத்தினுடைய ருசி அறியவில்லை. நீரொழுகிக் கொண்டிருந்த பாயசத்தையே முதலில் புசித்ததாயிருந்தால் நீர் ஒழுகவோ, பாயசம் போய்விடவோ இடமிருந்திருக்காது. இதேவிதம் தான் அவனவனில் இருக்கின்ற ஈஸ்வரனை உபேக்ஷித்து அதாவது விட்டுவிட்டு, பிரதிஷ்டையாகிய பொம்மையை ஈஸ்வரனென்று சங்கற்பித்து, நம் உள்ளில் இருக்கின்ற ஈஸ்வர சக்தியை ஐந்து துவாரங்களான பஞ்சேந்திரியங்களின் வழியாக வெளியினுள்ளில் ஒழுகவிட்டு நசித்துப் போகின்றோம். அது மிகவும் தப்பிதமாகும். எவ்விதமென்றால்: நம்முடைய இருதய ஸ்தானமாகிய புருவமத்தியத்தில்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


இருக்கிற ஈஸ்வரனிலிருந்தேயாகும் சக்தி ஒழுகிக்கொண்டிருக்கிறது. அவ்விதமாய் ஒழுகிக்கொண்டிருக்கின்ற சக்தியினுடைய உற்பத்தி ஸ்தானம் அறியாமல் அந்த சக்தியை மோகித்து அதில் பிரமித்து மேல்சொன்ன ஈஸ்வரனை விட்டு விடுகிறோம். ஈஸ்வரனிலிருந்து ஒழுகிக்கொண்டிருக்கின்ற சக்தியை மோகித்ததால் ஈஸ்வரனுடைய நிலைமையை அறிவதற்கு முடியாமல் போயிற்று. சக்தி உற்பத்தியான ஈஸ்வரனை சேவிப்பதானால் தன்னிலிருந்து சக்தி ஒழுகுவதற்கோ, ஈஸ்வரன் இல்லாமற் போவதற்கோ காரணமில்லை. ஆகவே பிராணப்பிரதிஷ்டை என்பது மேற்சொன்ன விதத்தில் ஈஸ்வரசக்தியை ஒழுகுவதற்கு விடாமல் உற்பத்தி ஸ்தானமான புருவ மத்தியத்தில் சலிக்காமல் நிறுத்துவதாகும். அதற்காகும் ''பஞ்ச பிராணப் பிரதிஷ்டை" என்று சொல்லுவது. அவ்விதத்தில் பிரதிஷ்டித்துள்ளதுவே க்ஷேத்திரம் என்று சொல்லுவது. அது காத்திரக்ஷேத்திரம் அதாவது உடம்பு ஆகும். அந்த க்ஷேத்திரத்திற்கு ஒன்பது வாசல்கள் உண்டு. இவ்விதமாகும் பிராணப் பிரதிஷ்டை. இதல்லாமல் உலோகங்களைக் கொண்டோ, மரங்களைக் கொண்டோ, பொம்மைகளை உண்டாக்கி, சீமைச் சுண்ணாம்பினாலோ, அஷ்டகந்தத்தினாலோ, சிமெண்டினாலோ கட்டிநிறுத்துவதற்குப் பிராணப் பிரதிஷ்டை என்று பெயரும் சொல்லி யாதொரு விவரமுமில்லாமலும் தன்னைத் தான் அறியாமலும்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தன்னுடைய சக்தியைக் கொண்டு அங்கேயாகும் இங்கேயாகும் என்றும் மற்றும் பல சங்கற்பங்களும் செய்து மேல்சொன்ன சக்தியை அறியாமல் அதோகதியாகி நசித்துப்போவ தல்லாமல் உலகினர் க்ஷேத்திரோபவாசம் செய்வதில்லை. க்ஷேத்திரோபவாசம் என்பது க்ஷேத்திரத்தில் உபவசித்தல் என்றாகும். க்ஷேத்திரம் ' காத்திரக்ஷேத்திரமாகும். உபவசித்தல் என்பது கூடியிருப்பது அல்லது சேர்ந்திருப்பது என்பதாகும். அதாவது ஜீவேஸ்வர ஐக்கியம். இவ்விதமாய் முன்சொன்ன காத்திர க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை ஸ்தலமாகிய புருவமத்தியத்தில் ஜீவன் ஈஸ்வரனிடத்தில் ஐக்கியமாய் இருக்கிற நிலைமைக்காகும் க்ஷேத்திரோபவாசம் என்று சொல்லுவது.

சி : சுவாமி! காத்திரக்ஷேத்திரமாகும் க்ஷேத்திரம் என்றும் அதற்கு ஒன்பது வாசல்களுண்டென்றும் சொன்னீர்கள் அல்லவா? அந்தவாசல்கள் எவையாகும்?

கு : அந்த வாசல்களே நவதுவாரங்கள்.

சி : அப்பொழுது இந்த ஜடம் முழுவதும் க்ஷேத்திரம் தானா? ஜடத்திற்கல்லவா நவதுவாரங்கள் இருக்கின்றன?

கு : ஜடம் முழுவதும் க்ஷேத்திரமல்ல. ஜடத்தில் ஒரு பாகத்தில் மட்டுமே க்ஷேத்திரம் இருக்கிறது. ஜடத்திலுள்ள எல்லா துவாரங்களும் நவதுவாரங்களில் உட்பட்டவையல்ல. க்ஷேத்திரத்தினுடைய துவாரங்கள் மட்டுமே நவதுவாரங்களாக உள்ளன.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சுவாமி! ஜடத்தில் எந்தப் பாகமாகும் க்ஷேத்திரம்?

கு : சிரசிற்கு மட்டுமே க்ஷேத்திரம் என்று சொல்ல முடியும். அதெப்படியென்றால்: இதோ பாருங்கள்! ஒரு தோட்டம். அந்தத் தோட்டத்தில் வடகிழக்குப் பாகத்தில் அதாவது ஈசான கோணத்தில் மட்டுமே க்ஷேத்திரம் இருக்கிறது. மற்ற பாகங்கள் அதைச் சுற்றியுள்ள இடமாகும். இதைப் போலவேதான் ஜடத்தை உலகமாகவும், ஜடத்தினுடைய மேல்பாகம் வடக்காகவும் இருக்கிறது. அந்த மேல்பாகமான வடக்கு பாகம் காணப்படுவது க்ஷேத்திரமாகும். அந்த க்ஷேத்திரம் சிரசாகும். அந்த சிரசில்தான் நவதுவாரங்கள் இருக்கின்றன.

சி : சுவாமி! எப்படியாகும் சிரசில் மட்டும் நவதுவாரங்கள் உண்டாகி இருக்கின்றன?

கு : நவதுவாரங்களென்று சொல்வது எவையெவை என்றாகும் நீர் கருதியிருக்கின்றீர்?

சி : நவதுவாரங்கள் என்பன இரண்டு செவிகள், இரண்டு கண்கள், மூக்கின் இரண்டு துவாரங்கள், ஒரு வாய், மூத்திர துவாரமான ஒரு லிங்கம், மலதுவாரமான ஒரு குதம், இப்படி ஒன்பதாகு மென்று நான் கருதியிருக்கிறேன்.

கு : நீர் நவதுவாரங்களில் லிங்கம் என்பது மூத்திர துவாரமாகும் என்றும், குதம் என்பது மல துவாரமாகுமென்றும் சொன்னீரல்லவா? இந்த இரண்டு துவாரங்களும் சிரசிலிருந்து வேறாகி ஜடத்தினுடைய மிகவும் கீழ்ப்பாகத்திலாகும் இருக்கின்றன. பாக்கி ஏழு துவாரங்களும் சிரசில் தானாகும். நவதுவாரங்களில் இரண்டு துவாரங்கள் மட்டும் சிரசிலிருந்து வேறாகி ஜடத்தி

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



னுடைய கீழ்ப்பாகத்திலும் மற்று ஏழு துவாரங்கள் சிரசில்தானேயும் வருவதற்கிடமில்லை. ஏனென்றால் லிங்கம் என்பது மிகவும் சிரேஷ்டமாய் உள்ளதாகும். அது நீர் மூத்திரதுவாரமாகக் கருதியிருக்கின்றது மிகவும் தப்பிதமாகும். லிங்கம் என்பது சிவலிங்கமாகும். அது மூத்திரதுவாரமன்று. அது ஸ்திரிபுருஷர்கள் என்று சொல்லிவருகிற எல்லா சிருஷ்டிகட்கும் உள்ளதாகும். அந்த லிங்கம் க்ஷேத்திரத்திலாகும் பிரதிஷ்டித்துள்ளது. அந்த க்ஷேத்திரம் நம்முடைய சிரசாகும். அதுவாகும் ஒன்பது வாசல்கள் உள்ள க்ஷேத்திரம் எனப்படுவது. முன்சொன்னபடி மண் சுவர்களால் சூழப் பட்டுள்ள ஒரு தோட்டத்தினுடைய ஈசான மூலை என்று சொல்லுகிற இடத்திலாயிருக்கும் க்ஷேத்திரம். அந்த க்ஷேத்திரத்தினுடைய உள்ளில் போவதற்கு நான்கு பாகங்களிலும் கோபுரங்கள் உண்டு. அந்த கோபுர வாயில் வழியாய்க் கடந்து நாலம்பலத்தில் அதாவது சுற்றம்பலத்தில் போகலாம். அந்த நாலம் பலமாயிருக்கின்ற சுற்றம்பலத்திற்கு மூன்று வாசல் களுண்டு. அந்த நாலம்பலத்தினுடைய வாசல் கடந்து ஸ்ரீகோவில் அதாவது மூலஸ்தானத்தின் வெளியே முன்னிலுள்ள நமஸ்கார மண்டபத்திற்குச் செல்லலாம். அவ்விடமிருந்து மூலஸ்தானத்திற் குள்ளில் செல்வதற்கு நேராக இரண்டு வாசல்கள் உண்டு. நமஸ்காரமண்டபத்திலிருந்து அந்த வாசல்களும் கடந்து சென்றால் பிரதிஷ்டை ஸ்தலம் காணலாம்.

இதேவிதம் நம்முடைய காதுகள், கண்கள் கோபுர வாயில்களாகின்றன. இவற்றைக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கடந்து சென்றால் சுற்றம்பலமாகிய அதாவது நாலம்பலமாகிய மேல் வாய்க்குப்போகலாம். சுற்றம்பலமென்று சொல்லக்காரணம் வாயை "கம்" என்று மூடிக்கொண்டிருக்கும் சமயம், மேற்சொன்ன இடத்தில் வாயு நிறைந்து சுழன்று கொண்டிருப்பதாலாகும். அச்சுற்றம்பலத்திற்கு மூன்று வாயில்களுண்டு. அவை மூக்கினுடைய இரண்டு துவாரங்கள், வாய் இவையாகும். அச்சுற்றம்பலத்தைக் கடந்து சென்றால் அவ்விடம் மூலஸ்தானத்தின் முன்பிலுள்ள நமஸ்கார மண்டபமாகிய வாயினுடைய மேல்பாகமான அண்ணாக்கு என்று சொல்லுகிற ஓர் இடம் உண்டு. அந்த அண்ணாக்கிலிருந்து நேரே மேல்பாகத்தில் மூலஸ்தானத்திற்குச் செல்வதற்கு வாயில்களாகிய இரண்டு துவாரங்கள் உண்டு. அந்தத் துவாரங்கள் வழியாக ஜீவன் கடந்துபோனால் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டித்திருக்கின்ற சிவலிங்கம் காணலாம். அந்தத் துவாரங்களுக்காகும் குதம் என்று சொல்லுவது. அந்த குதத்திலிருந்துதான் சப்தம் உண்டாகிறது.

அது எவ்விதமென்றால்: முன்சொன்ன நமஸ்காரமண்டபத்தில் தூக்கியிருக்கிற மணி அடித்தாகும் மூலஸ்தானத்திற்குள்ளில் போவதும் வெளியில் வருவதும். இப்படியே நமஸ்கார மண்டபமாகிய அண்ணாக்கிலிருந்து, மூலஸ்தானத்திற்குள்ளில் ஜீவசக்தியாகிய வாயு கடக்கும் பொழுது உள்ளில் அடங்கிய சப்தமும், வெளியே ஜீவசக்தியாகிய வாயு வரும்பொழுது பேச்சாகிய சப்தமும் உண்டாகின்றன. அதனாலாகும் "குதம்"

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


என்பது ''கோ" அதாவது சப்தத்தினைத் தானம் செய்வது என்று சொல்லுவது. ''கோ" என்றால் சப்தம். அந்த சப்தம் உண்டாவதற்கு முன்சொன்ன அண்ணாக்கின் வழியாய் இரண்டு துவாரங்கள் மேல்பாகத்தில் இருப்பதுண்டு. அந்த துவாரங்களும் மூக்கினுடைய துவாரங்களும் தம்மில் சேருவது புருவமத்தியத்திற்குக் கீழேயுள்ள இடத்திலாகும். அங்கிருந்தாகும் ஆகாச அம்சமாகிய சப்தம் உண்டாவது. அதற்கு உதாரணம்: மூக்கில்லாதவர்க்குத் தெளிவாகப் பேசுவதற்கு முடிவதில்லை. காரணம், முன் சொன்ன துவாரங்களிலிருந்து சப்தமுண்டாகும் பொழுது வாயு தடையில்லாமல் ஒன்றாய் வெளியினுள்ளில் போகின்றது. அந்த மூக்கு இருக்கும்பொழுது சப்தமாகிய வாயுவிற்குத் தடை உண்டாகி அடங்கி தெளிவாய்ப் பேசுகின்றனர். அதெப்படியென்றால்: கிராமபோன் என்கிற பெட்டிப்பாட்டுகளை நீர் கேட்டிருக்கிறீரல்லவா? அந்த கிராமபோனினுடைய சப்தம் உண்டாகிறது பெட்டியினுடைய மேலே பாட்டுகளடங்கிய ஒரு பிளேட் அதாவது தட்டுவைத்து அதில் சப்தம் உண்டாகிற ஸவுண்டு பாக்ஸ் அதாவது ஒலிக் கருவியில் ஊசி பிடிப்பித்து, அப்பெட்டிக்குச் சாவி கொடுத்து, பிளேட் அதாவது தட்டு சுற்றும் பொழுது முன்சொன்ன ஊசியைப் பிளேட்டின்மேல் தொட்டு வைத்தபொழுது பிளேட் சுற்றுவதால் சப்தம் உண்டாகின்றது. ஆனால் அதிலிருந்து உண்டாகிற பாட்டு தெளிவாய்க் கேட்பதில்லை. காரணம், அந்த சப்தம் உண்டாவதான இடத்தில் ஒரு குழல் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஹாரன் வைக்க வேண்டியது, வைக்காததாலாகும். அந்தக் குழல் வைக்காததால் சப்தம் உற்பத்தியாகும் இடத்தில் அடக்கமில்லாமல் அதிலிருந்து உண்டாகிற வாயு வெளியில் பரவிப் போகிறது. எப்பொழுது அக்குழல் வைக்கிறோமோ, அப்பொழுது மேற்சொல்லிய வாயு அக்குழலின் வழியாய் வெளியினுள் வருகின்றது. அச்சமயத்தில் அதிலிருந்துண்டாகின்ற பாட்டுகள் சிறு குழந்தைகளுக்கும் தெரிந்துகொள்ளத் தக்க விதத்தில் தெளிவாய்க் கேட்கின்றன. இப்படி முன்சொன்ன புருவமத்தியின் கீழே சப்தம் உண்டாகின்ற இடத்திலிருந்து குழலாய் இருக்கின்ற மூக்கினுடைய உதவியால் தெளிவாய் சப்தம் உண்டாகின்றது. அதனால் அண்ணாக்கின் வழியாக மேல்பாகமாய் இருக்கிற இரண்டு துவாரங்களுக்காகும் குதம் என்று சொல்லுவது. உள்ளிலுள்ள இந்த இரண்டு துவாரங்களும் வெளியினுள்ளில் உள்ள கண்கள் இரண்டு, மூக்கினுடைய துவாரங்கள் இரண்டு, காதுகள் இரண்டு, வாய் ஒன்றும்கூடி ஏழு துவாரங்களும் சேர்ந்து ஒன்பது துவாரங்கள் ஆகின்றன. இவ்விதம் ஒன்பது வாயில்கள் உள்ள க்ஷேத்திரமாகும் சிரசு. அந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டித்துள்ளதாகும் லிங்கம். அதற்காகும் சிவலிங்கம் என்று சொல்லுவது. இந்த சிவலிங்கத்தினுடைய முரட்டில் அதாவது மூலத்தில் ஆகும் சுக்கிலம் இருக்கிறது. அதாவது புருவமத்தியிலாகும். அதல்லாமல் லிங்கம் மூத்திரதுவாரம் அன்று. லிங்கம் என்பது மூத்திரதுவாரமாயிருந்தால் மூத்திர

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



துவாரத்தினுடைய மூலத்திலாகும் சுக்கிலம் இருக்க வேண்டியது. எவ்விதத்தில் யோசித்தாலும் மூத்திர துவாரத்தினுடைய மூலத்தில் அல்ல சுக்கிலம் இருப்பது. முன்சொன்ன லிங்கமூலத்திலாகும் சுக்கிலம் இருப்பது. அதற்கு அநேக உதாரணங்கள் இருப்பதுவும் அல்லாமல் புணர்ச்சி சமயத்தில் சுக்கிலம் இளகுவதைக் கொண்டும் தெரியலாம். அந்த விவரத்தைப் பற்றி முன்பு நான்காமத்தியாயத்தில் விவரிக்கப் பட்டுள்ளது. இதுவும் அல்லாமல், இராமேசுவரப் பிரதிஷ்டை என்று சொல்லுகிற ஒரு சித்திரம் அதாவது படம் காணுவதுண்டு. அந்தப் படத்தில் ஒரு சிவலிங்கமும், அச் சிவலிங்கம் பாதாளத்திற்குத் தாழ்ந்து போவதனால், அப்படிப் போகாதிருப்பதற்கு வேண்டி பார்வதி அதைக்கட்டிப் பிடித்திருப்பதாகவும் காணப்படுகிறது. அது உண்மையேயாகும். நம்முடைய புருவ மத்தியத்தில் பிரதிஷ்டித்த சிவலிங்கம், அதற்குக் கீழாக உள்ளதான பாதாளத்தில் சப்தரூபமாய்த் தகித்து அதாவது எரிந்து நசித்துப்போகாமல் பிடித்து நிறுத்துவது குண்டலினி சக்தியாகும். அந்தக் குண்டலினி சக்தியாகும் முன் சொன்ன பார்வதி. தவிர, மேல்சொன்ன படத்திலுள்ள சிவலிங்கத்தினுடைய மூலத்தில் வெளுத்த வர்ணத்தில் அதாவது வெண்ணிறத்தில் நாகர லிபியில் ''ஓம்'' என்ற ஓரெழுத்து எழுதியதாய்க் காணுகிறது. அதுவும் உண்மையேயாகும். ''ஓம்'' என்பது பிரம்மமாகும். அது சுக்கிலமாகும். அந்தப் பிரம்ம சொரூப

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மாயிருக்கின்ற சுக்கிலம் முன்சொன்ன குண்டலினி சக்தியால் கட்டப்பட்ட சிவலிங்கத்தினுடைய மூலத்திலாகும் இருக்கின்றது. அது புருவமத்தியம் ஆகும். இவ்விதத்திலாகும் க்ஷேத்திரம் அதாவது கோயில், பிரதிஷ்டை முதலியவற்றின் நிலைமைகள். இவ்விதத்திலுள்ள காத்திர க்ஷேத்திரத்தினுடைய அதாவது கோயிலின் யாதொரு நிலைமையும் அறியாமல் க்ஷேத்திரங்கள் என்றும் அதாவது கோயில் களென்றும் சொல்லி பல இடங்களிலும், பல கட்டடங்கள் உண்டாக்கி, அவற்றில் உலோகங்களைக் கொண்டும் கற்களைக் கொண்டும் மரங்களைக் கொண்டும் பொம்மைகளை உருவாக்கி, குழிதோண்டி ஸ்தாபித்து அதாவது நிலைநிறுத்தி இதாகும் ஈஸ்வரன் என்றும் சொல்லி பஜித்து, தானாய், காத்திரக்ஷேத்திரத்தில் உள்ள ஜீவசக்தியை வெளியினுள்ளில் விட்டு, மற்றொன்றில் சங்கல்பித்து, அதோகதியாகி அதாவது கீழ் கதியாகி, ஜனங்கள் நசித்துப் போவதல்லாமல் க்ஷேத்திரோபவாசம் ஒரு காலமும் அவர்கட்குச் சித்திப்பதில்லை அதாவது கிடைப்பதில்லை. க்ஷேத்திரோபவாசம் கிடைக்க வேண்டுமென்றால், முன்சொன்ன காத்திரக்ஷேத்திரத்தில் ஜீவன் உபவசிக்க வேண்டும். அப்பொழுது க்ஷேத்திரோபவாசம் சித்திக்கும் அதாவது கிடைக்கும். அவ்விதம் யாரொருவர் செய்கிறாரோ, அவருக்கு ஜீவன் ஊர்த்துவகதியாகி அதாவது மேல்கதியாகி, மேல்சொன்ன சிவலிங்கத்தில் போய்ச்சேர்ந்து,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எல்லா அறிவும் சித்தித்து, தன்னில் லயித்து, தானாய், தன்மயமாய், கைவல்லியத்தை அடைகிறது. அதுவுமல்லாமல் தாங்கள் ஈஸ்வர சேவை செய்வது ஈஸ்வரனோடு சேர வேண்டிய தற்கோ அல்லது வேறுபட்டுப் போக வேண்டியதற்கோ?

சி : ஈஸ்வரனோடு சேருவதற்கு வேண்டி.

கு : ஈஸ்வரனிடத்தில் சேரவேண்டியதான தாங்கள் க்ஷேத்திரத்தில் அதாவது கோயிலில் போய் எங்கே நின்று ஈஸ்வரனைக் கும்பிடுகிறீர்கள்?

சி : க்ஷேத்திரத்தில் அதாவது கோயிலில் சென்று மூலஸ்தானத்திற்கும் கர்ப்பக் கிரகத்திற்கும் வெளியில் நின்றுகொண்டாகும்.

கு : அப்பொழுது மூலஸ்தானத்தின் உள்ளிலோ, கர்ப்பக்கிரகத்தின் உள்ளிலோ தாங்கள் கடந்துபோக முடியுமா?

சி : முடிவதில்லை.

கு : அதனுள்ளில் குழிதோண்டி ஸ்தாபித்துள்ள பொம்மைகள் எது எதனால் உண்டாக்கப் பட்டவையாகும்?

சி : கல், மரம் முதலியவற்றைக் கொண்டாகும்.

கு : எனில் எவ்வளவோ ஜனங்கள் மிதித்து நடந்து தேய்ந்திருக்கின்றதும் எவ்வளவோ ஜனங்கள் அதன் மேலிருந்து மலம் கழித்ததுமான கல்லிலிருந்து ஒரு துண்டை வெட்டியெடுத்து, கற்கொத்தன் அதை இப்புறம் அப்புறம் திருப்பிமிதித்து உட்கார்ந்து பொம்மையை உண்டாக்கி, அதைக் கோயிலில் மூலஸ்தானம் என்ற இடத்தில் குழிதோண்டி ஸ்தாபித்ததனை அதாவது நிலைநிறுத்தியதனை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நாம் தொடக்கூடாதென்றும், அதை ஸ்தாபித்துள்ள ஸ்தலத்தினுள் நாம் போகக் கூடாதென்றும் இருக்கிறபொழுது நாமெல்லாம் எப்பொழுது, எந்தக் காலத்தில் ஈஸ்வரனோடு சேருவது? இது என்ன ஒரு அந்தவிசுவாசம் அதாவது குருட்டு நம்பிக்கை! தவிர, இதென்ன ஓர் ஏமாற்றுதல்!! அதுவுமல்லாமல் அந்தப் பொம்மையின்மேல் கரப்பான் பூச்சி அதாவது பாச்சை, பல்லி, எலி, அரணை, ஓணான், மூஞ்சூரு அதாவது சுண்டெலி முதலிய ஜீவிகள் ஏறி நடக்கவும், வௌவால்கள் அதன்மேல் ஒட்டியிருந்து மலமூத்திரம் கழிக்கவும் செய்கின்றன. அதையெல்லாம் காலையில் எழுந்திருந்து பெருக்கி வாரி வெளியில் போடுவதை நாம் காணுகிறோம் அல்லவா! அப்பொழுது இது என்ன ஓர் அநியாயம்! இந்த மேற்சொன்ன ஜீவிகளைக் காட்டிலும் மிகவும் நிகிர்ஷ்ட அதாவது கீழான ஜீவிகளாகுமோ நாம்? அதுவுமல்லாமல், பிராமணன் முதல் சண்டாளர் அதாவது சக்கிலியர், பறையர் வரை அபிமானித்து ஸ்தாபித்தவருடைய எச்சிலும், அவர்கள் மென்று துப்பியதான மீன், இறைச்சி முதலியவற்றினுடைய எலும்பு, முள்ளு முதலியனவும் தின்று நடக்கிற பூனை மேற்சொல்லிய கோயிலுக்குள்ளில் சென்று அதிலுள்ள விக்கிரகம் என்றபிமானித்திருக்கின்ற பொம்மைகளை நக்குகின்றது. ஆனால் நமக்கு அதனுள்ளில் போகக்கூடாது. இதென்ன ஓர் அநியாயம்! அதுவுமல்லாமல் உலகத் திலுள்ள சர்வ ஜீவிகளும் மலம் கழிப்பதுண்டு. நாமும் அதே போன்று செய்வதுண்டு. அந்தப் "பீ" அதாவது மலத்தின் மேல் ஈக்கள் வந்திருக்கிறதுண்டு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அப்பொழுது அந்த ஈக்களுடைய காலில் ''பீ'' ஒட்டியிருக்கும். அப்படி நாமும் வெளியில் ஆக்கிய அதாவது கழித்த மலத்தில் அதாவது ''பீ'' மேல் ஈக்கள் இருக்கின்றன. அந்த ஈக்கள் தம் காலில் ஒட்டிய மலத்தோடு பறந்துசென்று மேற்சொன்ன பொம்மைகளில் இருக்கின்றன. அப்பொழுது நாம் வெளியில் ஆக்கிய அதாவது கழித்த மலத்தை அதாவது ''பீ''யை அந்தப் பொம்மைகளில் ஈக்கள் கொண்டுபோய் வைக்கின்றன. எனில் நமக்கோ அதற்குள்ளில் போகக்கூடாது. இவையெல்லாம் ஆலோசிப்பதானால் நமக்கென்ன புத்தியிருக்கிறது? மேல் சொன்ன காரியங்களை ஆலோசித்தறியாமல் நாம் ஏமாற்றப்பட்டு குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கிறோம். இதுவாயிருக்குமோ ஈஸ்வரசேவை!

சி : சுவாமி! இவையெல்லாம் யோசனை செய்யும்போது நமக்கு யாதொரு ஆலோசனையுமில்லாமல் ஏமாற்றத்தில்பட்டு புத்தியில்லாமல் இருப்பதல்லாமல் வேறு என்னவாகும் சொல்ல வேண்டியது! சுவாமி! அதல்லாமல் ஸ்திரீபுருஷர் முதலிய சிருஷ்டிகளுக்கெல்லாம் லிங்கம் உண்டென்பதாகச் சொன்னீர்களல்லவா! ஸ்திரீகளுக்குள்ளதை லிங்கம் என்று சொல்லுவதில்லையே! உபஸ்தம் என்றுதானே சொல்லுவது. இதன் நிலைமை என்னவாகும்?

கு : **ஓஹோ! எல்லா சிருஷ்டிகளுக்கும் உபஸ்தமும் லிங்கமும் உண்டு.** ஸ்திரீயென்று சொல்லி வருகிறவர்களுக்கு மட்டுமே உபஸ்தமும், புருஷரென்று சொல்லிவருகிறவர்களுக்கு மட்டுமே

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


லிங்கமும் இருக்கிறதென்று கருத வேண்டாம். ஏனென்றால் நவதுவாரங்களில் ஒரு துவாரம் லிங்கம் ஆகும் என்றும் நீர்தானே முன்பு சொன்னீரல்லவா? அந்த நிலைமைக்கு ஸ்திரீகளென்று சொல்லி வருபவர்களுக்கும் லிங்கம் இருக்கிறதென்று வருகிறது. தவிர வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்கிற ஐந்து இந்திரியங்களில் ஓர் இந்திரியம் உபஸ்தம் என்று நீர் சொன்னீரல்லவா? அந்த நிலைமைக்கும் புருஷரென்று சொல்லி வருகிறவர்களுக்கும் உபஸ்தம் உண்டென்று வருகிறது. அதனால் **லிங்கம், உபஸ்தம் என்கிற இரண்டும் எல்லா சிருஷ்டிகளுக்கும் உண்டாயிருக்கிறதாகும். லிங்கம் என்பது முன் சொன்ன விதமாகும். உபஸ்தம் என்பது உப + ஸ்திதம். உப =சேர்ந்தது. ஸ்திதம் = இருக்கின்றது. அப்பொழுது உபஸ்தம் என்பது சேர்ந்திருக்கின்றது. அதாவது சிவலிங்கத்துடன் சேர்ந்திருக்கின்றது. அதாகும் ''யோனி". அந்த யோனியாகும் உற்பத்தி ஸ்தானம். இதற்காகும் சக்தியோனி என்று சொல்லுவது.** இவ்விதமல்லாமல் இப்பொழுது ஸ்திரீகளென்று சொல்லி வருகிறவர்கள் குழந்தைகளைப் பிரசவிக்கிற இடம் யோனியல்ல. அப்படி பிரசவிக்க வேண்டுமானால் முன்பு என்ன உண்டாயிருக்கவேண்டும்?

சி : கர்ப்பம் உண்டாயிருக்க வேண்டும்.

கு : கர்ப்பம் உண்டாவதற்கு என்ன வேண்டும்?

சி : சம்யோகம் அதாவது புணர்ச்சி வேண்டும்.

கு : சம்யோகம் செய்தால் மட்டும் கர்ப்பம் உண்டாகுமா?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : சம்யோகம் மட்டும் போதாது. சுக்கிலமும் உண்டாயிருக்க வேண்டும்.

கு : அவ்விதம் சுக்கிலம் உற்பத்தியாகின்ற இடத்திற்கே ''யோனி" என்று பெயர். அதுவே சக்தியோனி. அந்த சக்தியோனியாய் இருக்கின்ற பிரம்மரந்திரத்தில் இருந்தாகும் உலகத்தினுடைய உற்பத்தி. சக்தி என்பது ஸ்திரீயாகும். இதற்காகும் ஸ்திரீ யோனி என்று சொல்லுவதற்குக் காரணம். ஜீவன் புருஷனாகும். அதாவது ஜீவன் எப்பொழுது புரமாயிருக்கிற ஜடத்தின் உள்ளில் அதாவது தன்னில்தானே அடங்குகின்றதோ, அப்பொழுது புருஷனாகின்றது. அப்பொழுது முன்சொன்ன சிவலிங்கத்தை அறியப்படும். அது எப்பொழுது புருஷனாகிறதோ, அப்பொழுது மட்டுமே தன்னுடைய லிங்கத்தை அறிந்து கொள்ளுவதாகும். அதனால்தான் அதற்குப் புருஷலிங்கம் என்ற பெயராயிற்று. இவ்விதமாகும் யோனியுடையவும் லிங்கத்தினுடையவும் முன்விவரித்த குதத்தினுடையவும் நிலைமை. இதனாலாகும் இம்மூன்றும் இரகசியம் என்று சொல்லக் காரணம். இவ்விதம் யாதொன்றும் அறியாமல் மூத்திரதுவாரமாய் நீரொழுகிப்போகிற ஜலதாரைக்கு யோனியாகுமென்றும் லிங்கமாகுமென்றும் மலதுவாரமாயிருக்கின்ற கக்கூசை குதம் ஆகுமென்றும் உலகத்தில் கருதி ஜனங்கள் மூடர்களாய் இருக்கிறார்கள். இவ்விதம் குருட்டு நம்பிக்கை உண்டாகக் காரணம் அனுபவஸ்தர்கள் தங்களுடைய அனுபவங்களை எழுதி வைத்திருக்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கின்றதை வாசித்துப் படித்து, நான் அனுபவஸ்தனாகும், எனக்கு எல்லாம் தெரியும் என்று நடித்து, அனுபவம் இன்னதென்று அறியாமல் உலகத்தில் சாஸ்திராதிகளுடைய பொருளைத் தெரிந்துகொள்ளாமல் அதற்கு எதிராய்க் கிரகித்து அதாவது கருதி, உலகவாசிகட்குச் சொல்லிப் புரிய வைப்பதனாலாகும். அப்பொழுது உலகவாசிகள் ''இவர் அநேக சாஸ்திரங்களைப் படித்தவராகும், அதனால் இவர் சொல்லுவது சரியாகத்தானிருக்கும்" என்று கருதி யாதொரு விவரமும் இல்லாமலாய்ப் போனார்கள். இவ்விதத்திலுள்ள தப்பிதமான எண்ணம் நிமித்தமாகும் உண்மை வெளிப்படாமல் ஜனங்கள் புத்திமுட்டி அதாவது அறிவுகெட்டு, மூடநம்பிக்கையில் ஆழ்ந்து அதோகதியாய் நசித்துப் போவதற்கு இடமாயிற்று.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# பதினேழு

சிஷ்யன் : சுவாமி! இதுவரைச் சொல்லி வந்ததில் யோகங்களைப் பற்றி யாதொன்றும் கற்பிக்கவில்லை யல்லவா? எனில் பலவித யோகங்கள் உண்டென்று சாஸ்திரங்களில் காணவும், ஜனங்கள் கருதவும் செய்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி சொல்லிக் கேட்க விரும்புகிறேன்.

குரு : பல யோகங்கள் என்பது என்னவெல்லாமாகும்?

சி : கர்மயோகம், ஹடயோகம், ராஜயோகம் அஷ்டாங்க யோகம் முதலியன உண்டென்றாகும் அறிகிறது.

கு : எனில் யோகம் என்கிற சொல்லுக்குப் பொருள் என்னவென்றாகும் நீர் கருதியிருக்கிறீர்?

சி : யோகம் என்பது சேர்க்கையாகும்.

கு : என்னென்னவாகும் சேரவேண்டியது?

சி : ஜீவனும் ஈஸ்வரனும்.

கு : எத்தனை ஜீவனும் எத்தனை ஈஸ்வரனும் உண்டு?

சி : ஒரே ஜீவனும், ஒரே ஈஸ்வரனும்.

கு : எனில் ஒரு ஜீவனும் ஒரு ஈஸ்வரனும் சேருவதற்கு இத்தனை யோகங்கள் உண்டாவதற்கு இடமில்லை. என்னவென்றால்: **யோகம் என்பது ஒன்றேயாகின்றது. அது ஜீவேஸ்வரர் ஐக்கியமாகும். அதற்குப் பல ஆசாரியர்கள்**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



காரணநிமித்தம் பல பெயர்களும் கொடுத்திருப்பதல்லாமல் அனேக யோகங்களில்லை, எல்லாம் ஒன்றுதானாகும். எப்படியென்றால்: கர்மம் என்பது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகுமென்று முன் எட்டாமத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள தல்லவா? அந்த வாயுவினுடைய உற்பத்தி ஸ்தானமாகிய ஆகாசமான பிரம்மரந்திரத்தில் ஜீவசக்தியாகிய வாயுசேருகின்றதற்காகும் கர்மயோகம் என்று பெயர். ஹடயோகம் என்பது பலாத்காரமான யோகம் என்று உலகோர் கருதியிருக்கிறார்கள். அந்தக் கருத்து சரியன்று. என்னவென்றால்: ''ஹ" என்பது பிரகிருதி அதாவது மாயையாகும். ''ட" என்பது அடக்குகிறது அதாவது மூடுகிறதாகும். எதையென்றால் தன்னிலிருந்து பிரகிருதியாகி வெளியினுள்ளில் பரவியிருக்கிற பிரகாசத்தையாகும். அந்தப் பிரகிருதியிலிருந்தாகும் நமக்குப் பிரகாசிக்கின்றது. அந்தப் பிரகிருதியான சூரியனாயிருக்கின்ற பிராணனுடைய கிரணம் வெளியினுள்ளில் பரவியிருக்கிறது. அவ்விதம் பரவியிருக்கிற சூரியனுடைய சக்தியாகும் சந்திரன். அதன் நிமித்தமாகும் பிராணாபானன் என்று சொல்லக் காரணம். எனில் பிராணன் என்பது சூரியனும், அபானன் என்பது சந்திரனும் ஆகும். அவ்விதம் அபானனாயிருக்கின்ற சந்திரனாகும் மனம். அதனால் பிராணனாயிருக்கின்ற சூரியனும், மனமாகின்ற சந்திரனும் ஐக்கியமாகின்றதாகும் ''ஹடயோகம்". இதனாலாகும் ஹடயோகம் என்பது சூரிய சந்திரர்களை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஐக்கியப்படுத்துகிறதாகும் என்று உலகில் சொல்லிவருவது. இராஜயோகம் என்பது இராஜ + யோகம். இதில் இராஜ என்பது இரஜோகுணமாய் விஷ்ணுவாயிருக்கின்ற மனமாகும். யோகம் என்பது சேர்க்கையாகும். அந்த மனத்தைப் பற்றி முன்பு ஒன்பதாம் அத்தியாயத்தில் விவரமாகச் சொல்லப் பட்டுள்ளது. அப்படியுள்ள மனம் தன்னுடைய உற்பத்திஸ்தானமாகிய புருவமத்தியத்தில் சலனமில்லாமல் அதாவது அசையாமல் நிற்கிற நிலைமைக்காகும் இராஜயோகம் என்று பெயர். இவ்விதத்திலாகும் யோகங்களுடைய நிலைமை. எனில் எட்டு நிலைமைகள் எப்பொழுது ஒன்றாகச் சேருகிறதோ அப்பொழுது யோகமாகின்றது. அதென்ன வென்றால் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் அதாவது விரோதம், டம்பம், அசூயை அதாவது பொறாமை ஆகிய இவையாகும் எட்டு நிலைமைகள். இவை உண்டாகிறது முன் சொல்லப்பட்ட பிரகிருதியாயிருக்கின்ற சலனத்திலிருந்தாகும் அதாவது அசைவிலிருந் தாகும். அந்தச் சலனம் வெளியினுள்ளில் சலிக்கா மல் எப்பொழுது தன்னில்தானே லயிக்கின்றதோ, அந்த சந்தர்ப்பத்தில் மேற்சொன்ன எட்டு விருத்திகளும் அதாவது நிலைமைகளும் அவற்றின் உற்பத்தி ஸ்தானமாகிய பிரகிருதியிலேயே லயித்து, அந்நியத்துவம் இல்லாமல் அதாவது வேறிட்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



டில்லாமல் தானாய்த் தீருகிறது. அதற்காகும் அஷ்டாங்கயோகம் என்று பெயர்.

அதல்லாமல் ஜீவனும் ஈஸ்வரனும் என்பது இரண்டல்ல, ஒன்றேயாகும். அதெப்படியென்றால்: ஈஸ்வரன் என்பது தன்னுடைய மேற்பாகத்தில் ஆகாசமாகிய பிரம்மரந்திரத்தில் இருக்கின்றது. அந்த ஈஸ்வரன்தானேயாகும் கீழாகி விட்டுப்போகாமல் தன்னுள்ளில்கூடி கதாகதம் அதாவது நடனம் செய்து கொண்டிருக்கின்ற ஜீவனாகிறது. அந்த ஜீவன் தன்னிலிருந்து வெளியினுள்ளில் வாயுரூபமாகச் சலித்துக்கொண்டிருப்பதற்குப் பரமாத்மா என்று பெயர். அந்தப் பரமாத்மாவேயாகும் மனம். அந்த மனமாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவாகும் விஸ்வம்பரனாய் இருக்கின்றது. அதனாலாகும் பரமாத்மாவாயிருக்கின்ற வாயுவிலிருந்து உலகம் உண்டானதென்று சொல்லக் காரணம். அப்படியாயுள்ள மனமாகிய பிம்பத்தில் பிரதிபிம்பித்துக் காணப்படுவன எல்லாம் நம்முடைய ஜீவனேயாகும். அதெவ்விதமென்றால்: ஒரு கண்ணாடியில் நாம் பார்க்கும்பொழுது, நம்மையே அந்தக் கண்ணாடியில் பிரதிபிம்பித்துக் காண்கிறோம். இவ்விதத்திலேதான் மனமாகின்ற கண்ணாடியில் பார்க்கும்பொழுது நமக்கு என்னென்ன விசாரங்கள் அதாவது தோற்றங்கள் உண்டாகின்றனவோ அந்த விசாரங்களேயாகும் நமக்கு வெளியினுள்ளில் நம்முடைய ஜீவனே விசார ரூபமாக பின்னமாய் அதாவது வேறாகப் பிரதிபிம்பித்துக் காணுகின்றது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இவ்விதம் பிரதிபிம்பித்துக் காணுகிறது "நான்" என்கிற அகங்காரத்தினாலாகும். எப்பொழுது நான் என்றுள்ள அகங்காரம் நசிக்கின்றதோ, அப்பொழுது யாதொன்றும் காணப்படுவதில்லை. அந்த அகங்காரத்தின் நிமித்தமாகும் ஈஸ்வரனும் ஜீவனும் என்றுள்ள வித்தியாசம் உண்டானது. அதெப்படியென்றால்: ஓர் ஆற்றில்கூடி ஓடுகிற நீரில் ஒரு கோலினுடைய ஒரு பாகத்தைத் தாழ்த்திப்பிடித்தால் தண்ணீர் அக்கோலினுடைய இரண்டு பாகங்களிலும் ஓடுகிறது. எனில் தண்ணீர் இரண்டாகவில்லை. தண்ணீரினுடைய ஓட்டத்திற்கு பின்னமேற்பட்டு இரண்டாய் ஓடுவதாய் நமக்குத் தோன்றுகிறது. அக்கோலை எடுத்தால் ஓட்டத்தினுடைய பின்னத்துவம் அதாவது வேறுபாடு தீர்ந்து தண்ணீர் ஒன்றாய் ஓடுகிறது. இவ்வாறுதான் ஜீவனுடைய வெளியினுள்ளுக்குள்ள ஓட்டத்தில் மனம் நான் என்கிற அகங்காரமாய் இருக்கின்ற கோலைப் பிடித்தபோது ஜீவன் என்றும் ஈஸ்வரன் என்றும் இரண்டு நிலைமைகளாய்த் தோன்றுகிறது. எப்பொழுது அகங்காரமாயிருக்கின்ற கோலை எடுக்கிறதோ, அப்பொழுது இரண்டில்லாமல் ஜீவேஸ்வர ஐக்கியம் என்றாகித் தீருகிறது.

எனில் உலகம் முழுவதும் நிற்கிறது நான் என்றுள்ள ஒரே முடிப்பின் மேலிலாகும். அதானது ஒரு கயிறுகொண்டு சங்கிலி கோர்ப்பதுபோல அதனுடைய ஒரு தலைப்பிலிருந்து முடிந்து முடிந்து கடைசியில் மறுதலைப்பில் ஒரு கட்டுக் கட்டி இழுத்தால் அந்தக் கோர்த்த முடிச்சுகள் அவிழ்ந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



போவதில்லை. எனில் கடைசியாகக் கட்டியுள்ள அந்த ஒரே கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து முன்போலவே ஒரே கயிறாகித் தீருகிறது. இவ்விதத்தில்தான் கர்மமாய் வாயுவான நூலினால் விசாராதிகளாய் முடிச்சுக் கட்டி இழுத்துக் கொண்டிருக்கின்றது. அப்படி இழுத்துக் கொண்டிருக்கின்றபோது நன்றாய் முறுக்கேறுவதல்லாமல் அவிழ்ந்து போவதில்லை. அவிழ்க்க வேண்டுமானால் மேற்சொன்ன கயிற்றினுடைய கடைசியிலுள்ள ஒரு கட்டை அவிழ்த்து இழுத்தது போன்று நான் என்றுள்ள அகங்காரமா யிருக்கின்ற ஒற்றைக் கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து ஒரே பொருளாகத் தீருகின்றது. அந்தப் பொருள் சலனமில்லாமல் தன்னில் லயிக்கும்பொழுது தானாய் தன்மயமாய்த் தீருகிறது. அப்பொழுது எல்லா யோகங்களும் அதில் அடங்குகின்றன. இதல்லாமல் யோகங்கள் அனேகம் உண்டென்று கருதி நானா பிரகாரத்தில் ஒவ்வொரு தொழில் செய்வதால் யோகமாகிற தில்லை. ஆசாரியர்கள் பல பெயர்களைச் சொன்னது ஒரே யோகத்திற்குத்தானாகும். அதெவ்விதமென்றால்: ஒரே பொருளிற்குத்தான் பல பெயர்கள் சொல்லுவது. ஆனால் அது மொழி வேறுபாடாகும். இப்படியேதான் யோகத்திற்கு ஒவ்வொரு காரணங்களால் ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் யுக்திக்கனுசரித்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஒவ்வொரு பெயர் சொல்லியதாகும். இதல்லாமல் யோகம் அனேகமில்லை. அதனால் வெளியினுள்ளில் பரவி சலித்து பிரமித்துக்கொண்டிருக்கிற தன்னுடைய சக்தி எப்பொழுது வெளியினுள்ளில் சலிக்காமல் தன்னில் தானே லயிக்கின்றதோ, அப்பொழுது யோகமாயிற்று. இவ்விதமாகும் யோகத்தினுடைய நிலைமை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம் பதினெட்டு

சிஷ்யன் : சுவாமி! பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்றிப்படி நான்கு வருணங்கள் இருக்கின்றன என்றும் அவற்றில் சூத்திரர்களில் அநேக ஜாதிகள் இருக்கின்றதாகவும் சொல்லி வருகின்றார்களே! அவற்றின் நிலைமைகள் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

குரு: இவற்றில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்படுபவர்கள் யார்யார்?

சி : பிராமணர் என்று சொல்லி வருவது நம்பூதிரிகள், எம்பிராந்திரிகள் அதாவது போற்றிகள், பட்டர்கள் இவர்களாகும். நம்பூதிரிமார்கள் மலையாள பிராமணர்கள் என்றும், எம்பிரான்மார்கள் துளு பிராமணர்கள் என்றும், பட்டர்கள் கர்ணாடக பிராமணர்கள் என்றும், பட்டன்மார்கள் என்று சொல்லிவருகிற பார்ப்பான்மார்கள் பரதேசப் பிராமணர்கள் அதாவது தமிழ் பிராமணர்கள் என்றுமாகும் சொல்லிவருகிறார்கள். க்ஷத்திரியர் என்பவர் முற்காலத்தில் ராஜ்யபரிபாலனம் செய்து வந்த சூரிய சந்திர வம்சத்தில் உண்டானவராகிய இராஜாக்களாகும். வைசியர் என்பவர் வடதேசத்தாரர்களான சில ஷேட்டுமார்களும் கன்னட ராஜ்யத்தில் ஷேட்டுமார்கள் என்று சொல்லி வருபவர்களும் தமிழ்தேசத்திலிருக்கிற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செட்டிமார்கள் என்று சொல்லி வருகிற வியாபாரிகளும் ஆகும். சூத்திரர் என்பவர் மேற்சொல்லியவர்கள் போக பாக்கி எல்லாருமாகும்.

கு : பிராமணரை நீர் தொட்டுக் காண்பிக்கமுடியுமா?

சி : முடியும்.

கு : யாரையாகும்?

சி : முன்சொன்ன நம்பூதிரி முதலியவர்களையாகும்.

கு : அவர்களைப் பிராமணர்கள் என்று எவ்விதம் தீர்மானித்தீர்?

சி : அவர்களுக்குப் பூணூல் உள்ளதால்.

கு : பூணூல் உள்ளவர்களெல்லாம் பிராமணர்களாகும் என்று தீர்மானித்தது மிகவும் தப்பிதமாகும். ஏனென்றால்: பாண்டித் தட்டான்மார் அதாவது பாண்டி ஆசாரிமார் என்று சொல்லி வருகிறவர்கட்கும் கோமுட்டி என்று சொல்லி வருகிறவர்கட்கும் பரதேசத்தில் அதாவது தமிழ்நாட்டில் நெசவுக்காரர்களான சாலியர் அதாவது சேணியர் என்று சொல்லி வருகிறவர்கட்கும் கொங்கிணி என்று சொல்லி வருகிறவர்கட்கும் மற்றும் இம்மாதிரியுள்ள பல கூட்டத்தினருக்கும் பூணூல் உண்டு. இவர்கள் எல்லாரும் பிராமணர்கள்தானோ?

சி : இல்லை.

கு : என்ன காரணம்? பூணூலுள்ளவர்கள் எல்லாம் பிராமணர்களாகும் என்றல்லவா நீர் சொன்னது?

சி : பூணூல் உள்ளது கொண்டு மட்டுமல்ல பிராமணர்கள் என்று சொல்லுவது. இவர் களுடைய தொழிலுக்கும் அனுசரித்தாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : என்னென்னவாகும் பிராமணர்களின் தொழில்?

சி : வேதபாராயணம், க்ஷேத்திராதிகளில் பூஜை முதலியவை செய்தலாகும்.

கு : க்ஷத்திரியர்களின் தொழில் என்ன?

சி : துஷ்டநிக்கிரஹம்செய்து அதாவது துஷ்டர்களை நிக்கிரஹித்து அதாவது தீயோர்களைத் தண்டித்து சிஷ்டர்களை இரட்சிப்பது அதாவது நல்லோர்களைக் காப்பாற்றுவது ஆகும்.

கு : வைசியர்களுடைய தொழிலோ?

சி : கோரக்ஷை அதாவது பசுவைக் காப்பாற்றுதல், கிருஷி அதாவது வேளாண்மை, வாணிபம் அதாவது வியாபாரம் இவையாகும்.

கு : சூத்திரர்களுக்கோ?

சி : பிராமண பாதசேவை ஆகும்.

கு : ஓஹோ! அவ்விதமாகுமென்றால் ஒரு பறையன் என்று அபிமானித்து ஸ்தாபித்துச் சொல்லி வருகிறவனை அழைத்து வந்து, தேய்த்து, குளிப்பித்து சுத்தமாக்கி நடத்தி, வேதாப்பியாசம் செய்வித்து பூஜாக்கிரமங்களும் படிப்பித்து, ஒரு பூணூலும் தரிக்கவைத்து, பிராமணர்கள் என்று சொல்லி வருபவர்களுடைய கூட்டத்தில் நிறுத்தினால் அவன் பிராமணனாகுமென்று நீர் சம்மதிப்பீரா?

சி : சம்மதிக்க மாட்டேன்.

கு : என்ன காரணம்?

சி : அவன் பறையன் ஆனதால்.

கு : நீர் முன்பு அறியாத ஒரு பறையன் என்று அபிமானித்து வருபவனை மேற்சொன்ன விதமாக்கி பிராமணர்கள் என்றபிமானித்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வருபவர்களுடைய கூட்டத்தில் நிறுத்தினால் நீர் அவனை இன்னவனென்று அறிவீரா?

சி : அறிவதில்லை.

கு : என்ன காரணம்? பிராமணர் என்கிற ஒரு ஜாதி உண்டென்றால் நீர் அவரைத் தனியே தெரிந்து அறியவேண்டியதல்லவா? தவிர, நீர் பிறக்கவில்லையானால் பிராமணர், க்ஷத்திரியர் முதலான யாராவது உமக்குண்டோ?

சி : இல்லை.

கு : எனில் இவர்களெல்லாரும் எப்பொழுது உண்டாயினர்?

சி : நான் பிறந்ததற்குப் பிறகு.

கு : அதிருக்கட்டும்! நீர் படுத்துத் தூங்குகிறேன் என்று சொல்லிவருகிற சமயத்தில் மேற்சொன்ன நான்கு வருணங்கள் உமக்குண்டோ?

சி : இல்லை.

கு : அதென்ன காரணம்?

சி : அப்பொழுது என்னுடைய மனம் எனதுள்ளில் அடங்கி யாதொன்றும் இல்லாதிருக்கின்ற நிலைமையில் இருக்கின்றதாலாகும்.

கு : இவையெல்லாம் எப்பொழுதாகும் உண்டாயின?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : அப்பொழுது எங்கிருந்தாகும் உண்டாயின?

சி : என்னுடைய மனத்திலிருந்தாகும்.

கு : எனில் மேற்சொன்ன நான்கு வருணங்களுள்ளது உண்மையாகும். அவற்றை விவரிக்கலாம். பிராமணர் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி : அவர் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டாம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : க்ஷத்திரியரும் அவரும் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி : குளிக்க வேண்டியதில்லை.

கு : வைசியரும் அவரும் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி : குளிக்க வேண்டியதில்லை.

கு : சூத்திரரும் அவரும் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி : தொட்டால் குளிக்க வேண்டும் என்று மட்டுமல்லாமல், அருகே வந்தால் குளிக்க வேண்டிய ஜாதிக்காரர்களும் உண்டு. அவரில் சிலரை நாற்பதும் எழுபத்திரண்டும் அடியிலதிகம் தூரத்தில் நிறுத்த வேண்டியதாகவும் உண்டு. தொட்டால் குளி இல்லாதவரும் உண்டு.

கு : நீர் இப்பொழுது சொன்னதெல்லாம் சரியாகும்.எனில் நீர் கருதியது போலல்ல. முன்சொன்ன நான்கு வருணங்களும் உம்மிலிருந்தே உண்டாகின்றனவாகும். அவையாவன மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவையாகும். அதாவது மனம் பிராமணனும், சித்தம் என்பது பிரகாசம் ஆகையால் அது க்ஷத்திரியனும், புத்தி என்பது வைசியனும், அகங்காரம் என்பது சூத்திரனும் ஆகும். எவ்விதமென்றால்: பிராமணன் என்பவன் நித்தியாநித்திய வஸ்துவிவேகம் செய்கின்றவனாகும். நித்தியாநித்திய வஸ்துவிவேகத்தைப் பற்றி ஆறும் பன்னிரண்டும் அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் நித்தியா நித்திய வஸ்து தெரிந்து

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கொள்ளும்பொழுது அவர் பிராமணன் ஆகிறார். அவராகும் வைதீகன். அதனால் வேதத்தினுடைய அதிகாரஸ்தன் பிராமணனாகும். பிராமணன் தவிர மற்றொருவரும் வேதத்திற்கு அதிகாரஸ்தரல்லர். வேதம் என்பது அறிவாகும். அறிவினுடைய அதிகாரி மனமாகும். மனமில்லையானால் யாதொரு அறிவுமில்லை. இதனால்தான் வேதத்தினுடைய அதிகாரஸ்தன் பிராமணன் என்று சொல்லக் காரணம். அந்த பிராமணன் மனமாகும்.

உலகத்தில் பிராமணனைக் காட்டிலும் கீர்த்தி க்ஷத்திரியனுக்காகும். அந்த க்ஷத்திரியன் சித்தாயி ருக்கின்ற பிரகாசம் ஆகும். க்ஷத்திரியனுடைய தொழில் துஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்கிறதாகும் என்று சொன்னீ ரல்லவா? துஷ்டன் என்று சொல்லுவது நம்மிலிருந்துண்டாகிற ராகதுவேஷாதி முதலான துர்விசாரங்களாகும். சிஷ்டன் என்பது மனமாகும். அந்த மனத்திற்கு மற்று துர்விசாரங்களினால் வேதமாயிருக்கின்ற அறிவிற்குத் தடைகள் வருகின்றன. அந்தத் தடைகளை க்ஷத்திரியனாயிருக் கின்ற பிரகாசத்தால் வெட்டி நசிப்பித்து மனத்திற்கு அறிவை நிறுத்துவதாகும் சிஷ்டபரிபாலனம்.

வைசியனுக்கு கோரக்ஷை, கிருஷி, வாணிபம் முதலாகவுள்ள தொழில்களாகும். அது புத்திக் காகும். ஏனென்றால் கோ என்பது சப்தமாகும். சப்தத்தை ரக்ஷிக்கவேண்டியது புத்தியாகும். கிருஷி, வாணிபம் முதலானவையும் புத்தியுள்ளவனே செய்வதற்கு முடிவதாகும்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதல்லாமல் உலகத்தில் அவன் புத்தியில்லாதவன், ஒரு பேச்சுப் பேசுவதற்குக்கூட புத்தியில்லை என்று சொல்லி வருகின்றனர். ஆகையால் புத்தியாயிருக்கிற வைசியன் கோவினை ரக்ஷிக்க வேண்டும். எப்படியென்றால்: தன்னிலிருந்துண்டாகின்ற சப்தத்தைத் தன்னில்தானே நிறுத்த வேண்டும். எப்பொழுது தன்னுடைய சப்தத்தை நசிக்காமல் தன்னில்தானே நிறுத்துகின்றோமோ, அப்பொழுது கிருஷியாகின்றது. கிருஷி என்பது சிரசில் சுழி முனையில் தன்னுடைய சக்தியை அடக்குவதாகும். அப்பொழுது சப்தம் தன்னில்தானே லயிக்கிறது. இதாகும் கிருஷி. அவ்விதம் கிருஷிசெய்திருக்கிற சக்தியைக் கொண்டு தன்னில்தானே வியாபிக்கச் செய்வதாகும் வியாபாரம். அவ்விதம் செய்து பக்ஷண சாதனங்கள் அதாவது உணவுப் பொருள்கள் பிராமணனுக்குக் கொடுக்க வேண்டியது வைசியனுடைய தொழிலாகும். பக்ஷண பதார்த்தங்கள் அதாவது உணவுப்பொருள்கள் கிடைக்காவிட்டால் பிராமணன் நசித்துப் போகின்றான். அதனால் மேற்சொல்லிய விதத்தில் சக்தியைத் தன்னிலேயே அடக்கி வியாபிக்கச் செய்தால் மனம் விசாரங்களாகி வெளியினுள்ளில் நசித்துப் போவதில்லை. அப்பொழுது பிராமணனாயிருக்கின்ற மனத்துக்கு நாசமில்லாமல் தன்னில்தானே லயிக்கிறது. இதாகும் வைசியனாயிருக்கின்ற புத்தியுடைய தொழில்.

**சூத்திரன் என்று சொல்லுவது 'நான்' என்கிற**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அகங்காரமாகும். நான் என்கிற அகங்காரத்திற்காகும் அநேக ஜாதிகளுள்ளது. ஜாதிகளென்று சொல்லுவது பல விசாரங்களாகும். அதாவது நான் ஸ்தானி, மானி, பண்டிதன், மற்றவன் சண்டாளன், மூடன், பறையன் என்றிப்படிப் பலவகைப்பட்ட விசாரம் முதலியனவாகும். சண்டாளன் என்று சொல்லுவது திருடுவது, பொய்சொல்லுவது, சதி செய்வது, கொலை செய்வது, விபசரிப்பது முதலான துர்விர்த்திகள் அதாவது கெட்ட தொழில்கள் செய்கின்றவரும், செய்யவேண்டும் என்கிற விசாரத்தோடுள்ளவரும் ஆகும். இந்த ஜாதிகளையாகும் மிகவும் தூரே நிறுத்துவதற்குச் சொல்லியிருக்கிறது. இதற்காகும் சூத்திரரைத் தீண்டக்கூடாது என்றும் சூத்திரரில் அநேக ஜாதிகளுண்டென்றும் சொல்லுவது. எனில் சூத்திரனாயிருக்கின்ற அகங்காரத்தினால் உண்டாக்கப்பட்ட மேற்சொன்ன எல்லா விசாரங்களையும் தொழில்களையும் விட்டு, பிராமணனாயிருக்கின்ற மனத்தினுடைய பாதசேவையாகும் செய்ய வேண்டியது. பாதம் என்பது ஸ்தானம் ஆகும். அதனால் மனத்தினுடைய ஸ்தானமாகிய புருவமத்தியத்தைச் சேவிக்கிறது. இதாகும் அகங்காரமாயிருக்கின்ற சூத்திரனுடைய தொழில்.

இதல்லாமல் ''நான் பிராமணனாகும், வேத சாஸ்திர புராணாதிகளெல்லாம் எனக்கு மட்டுமே படிக்கக்கூடும், மற்றவர்கள் யாரும் படிக்கக்கூடாது, மற்றவன் சூத்திரனாகும், சண்டாளனாகும், அசுத்தனாகும், அவனைத் தூரே

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நிறுத்த வேண்டும்" என்று இப்படி அபிமானித்துக்கொண்டு மேற்சொன்ன அகங்காரத்தினுடைய சேஷ்டைகளான களவு, கொலை, விபசாரம் முதலிய சண்டாளத் தொழில்களைச் செய்கிறவர் யாரோ அவர் சண்டாளராவர், பிராமணரல்லர். **பிராமணர் என்பவர், தன்னிலிருந்து சலித்து வெளியினுள்ளில் வியாபித்திருக்கிற மனத்தைத், தானாய் நித்தியமாயிருக்கின்ற தன்னில்தானே லயிக்கச் செய்து தன்மயமாகின்றவராகும்.**

க்ஷத்திரியர் என்பவர் ''நான் க்ஷத்திரியனாகும், துஷ்டர்களை நிக்ரஹிக்க வேண்டும்" என்று கருதி, துப்பாக்கியினாலும் வாளினாலும் மற்று பலவிதங்களினாலும் ஒவ்வொருவரையும் கொலை செய்பவர் க்ஷத்திரியரல்லர். அப்படிச் செய்கின்றவர் நான் என்றுள்ள அகங்காரத்தால் துர்விர்த்தி அதாவது கெட்ட தொழில் செய்கின்றவராகும். அதனால் அவரும் சண்டாளராகும். எனில் **க்ஷத்திரியன் என்பது தன்னுடைய ஜீவனைத் தன்னில் பிரகாசிப்பித்து, ராகதுவேஷாதிகளாய் இருக்கின்ற சத்துருக்களை நசிப்பித்து, தன்னுடைய மனத்திற்கு யாதொரு அசைவும் இல்லாமல் அதாவது சலனமில்லாமல் ஸ்திரப்படுத்துகின்றவர் அதாவது நிலைக்கச் செய்கின்றவர் ஆகும்.**

வைசியர் என்பவர் கோரக்ஷை, கிருஷி, வாணிபம் என்று நினைத்து, பசு, எருமை இவற்றினுடைய கழுத்தில் கயிற்றினால் முடிச்சிட்டுக் கட்டிக் கஷ்டப்படுத்தவும், அவை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பிரசவித்து உண்டாகின்ற கன்றுகளை வேறுபடுத்திக் கட்டி, அந்தக் கன்றுகள் குடிக்க வேண்டிய பாலைக் கறந்தெடுக்கவும் விற்கவும், பசுவிலிருந்துண்டான ஆண்குட்டிகள் என்று கருதி வருகிற காளைகளையும், எருமையிலிருந்து உண்டான போத்து அதாவது கிடாக்களையும் எருமைகளையும் மற்றும் பிடித்துக் கழுத்தில் நுகம் வைத்து, பாரமாயுள்ள கலப்பையைக் கட்டி இழுக்கச் செய்யவும், வியாபாரமென்று கருதி பல சரக்குகளைச் சேகரித்து, எடையிலும் அளவிலும் விலையிலும் மோசம் செய்து, அதிக லாபமெடுத்து வியாபாரம் செய்யவும் செய்கின்றவர் வைசியரல்லர். இவ்விதம் செய்கின்றவர் நான் என்ற அகங்காரத்தால் துர்விர்த்தி செய்கின்றவராகும். அவரும் சண்டாளரேயாவர். **எனில் வைசியர் என்பது பேச்சாயிருக்கின்ற சப்தத்தைத் தன்னிலடக்கி, கிருஷிசெய்து, முற்சொன்ன விதத்தில் செய்பவராகும்.**

சூத்திரர் என்பவர் பிராமணர் என்றும் மற்றும் அபிமானித்துவருபவருக்கு அடிமைத் தொழில்களைச் செய்தும் பாதசேவை செய்தும் பல ஜீவஹிம்சைகளும் மதுபானம் முதலான கெட்ட தொழில்களும் செய்தும் நடக்கின்றவர் அல்லர். அவரும் அகங்கார விர்த்திகளால் செய்கின்றவர் ஆவார். அதனால் அவ்விதம் நடக்கின்றவரும் சண்டாளராவார். எனில் **சூத்திரர் என்பது தனது மனத்தினுடைய உற்பத்தி ஸ்தானமாகிய புருவமத்தியத்தை ஆஸ்ரயித்து அதாவது அடிபணிந்து (சேவை செய்து)**

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அவ்விடத்திற்குத் தன்னுடைய ஜீவனைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வேண்டி யத்தனம் செய்கின்றவராவார். இதாகும் பிராமணர் பாதசேவை.

ஆனால் மேற்சொன்ன நான்குவருணங்களும் ஒன்றிலேயே உற்பத்தியாகி ஒன்றிலேயே அடங்குவதானதால் ஜாதி என்பது இல்லவே இல்லையென்று நன்கு புலப்படுகின்றது. அதனால் நான்கு ஜாதிகள் கிடையாது. இவ்வித ஜாதிகளெல்லாம் அவனவன் உண்டாகி, அவனவனில் உள்ளதான குணமாயிருக்கின்ற ஜீவன் கர்மமாகி, வாயுவாகி, வெளியினுள்ளில் பரவியபொழுது, அதிலிருந்து நான்கு வருணங்களாகி உற்பத்தியாகவும் அவை தன்னால்தானே சிருஷ்டிக்கவும் செய்ததாகும். அவை மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவை யாகும். இவற்றிலிருந்தாகும் எல்லா நிலைமை களும் உண்டாயின. இதல்லாமல் பிராமணன் என்றோ, க்ஷத்திரியன் என்றோ, வைசியன் என்றோ, சூத்திரன் என்றோ ஒரு சிருஷ்டியும் உண்டாயிருக்கவில்லை. இவ்விதம் எல்லா சிருஷ்டிகளும் தன்னுடைய சக்தி வெளியினுள்ளில் பரவியபொழுது, அதிலிருந்து உண்டாகி தன்னைத்தான் அறியாமல் அந்தகாரத்தில் அகப்பட்டுப் போனதாகும். எப்பொழுது தன்னைத்தான் அறிகிறோமோ அப்பொழுது மற்றொன்றில்லை. தன்னைத்தான் அறிய வேண்டுமென்றால் மற்றுள்ள தன்னுடைய பிராந்தவிர்த்திகள் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பைத்தியச் செயல்களை விட்டு, தன்னுடைய சக்தி தன்னில்தானே லயிக்கவேண்டும். அப்பொழுது தன்னைத் தான் அறியலாம். அச்சந்தர்ப்பத்தில் தானாய், தன்மயமாய்த் தீருகிறோம். அதற்கே கைவல்யம் என்று பெயர்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# பத்தொன்பது

சிஷ்யன்: சுவாமி! முன் அத்தியாயத்தில் மதுபானத்தைப் பற்றி குற்றம் சொன்னீர்கள் அல்லவா? எனில் மதுபானம் நிமித்தம் ஞானம் உண்டானதாகச் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தவிர, சக்திபூஜையில் மதுபானம் செய்யாதிருக்க முடிவதில்லை என்று சொல்லிவரவும், அப்படியே நடந்துவரவும் செய்கிறது. அப்படியிருக்க அதைப்பற்றி விரோதம் சொல்லுவதன் காரணம் என்ன?

குரு: மதுபானத்தினால் யாருக்காகும் ஞானம் உண்டானதாகக் கேட்டிருக்கிறீர்?

சி: மலையாளத்தில் எல்லா ஜாதிகளுக்கும் வித்தியாப்பியாசம் கிடைப்பதற்கு வழி ஏற்படுத்திய கேரள குருவாகிய துஞ்சத்து ராமானுஜ எழுத்தச்சன் என்கிற மஹானுக்காகும்.

கு: இது நீர் ஏதேனும் சாஸ்திரங்களைப் படித்தறிந்ததோ அல்லது வேறு யாரேனும் சொல்லிக் கேள்விப்பட்டதோ?

சி: உலகவாசிகள் சொல்லக் கேட்டறிந்ததேயாகும்.

கு: அந்த மஹான் சாப்பிட்ட மது எப்படியுள்ளதாகுமென்று நீர் கேள்விப்பட்டிருக்கிறீர்?

சி: சாதாரணமாக உலகில் நடப்பிலுள்ள மதுபானங்கள்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அவை என்னவெல்லாம் ஆகும்?

சி : கள், சாராயம் முதலியனவாகும்.

கு : இவை எப்படி உண்டாகின்றன?

சி : கள் என்பது தென்னை, பனை, ஈந்து முதலிய மரங்களினுடைய பாளைகளைச் சீவி எடுக்கின்றதும், அக்கள்ளைக் காய்ச்சி உண்டாக்குகின்றது சாராயமும் ஆகும்.

கு : எனில் நீர் சொன்ன விதத்திலுள்ள மதுவகைகளைத் துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற மஹான் சாப்பிட்டதில்லை. அந்த மஹான் சாப்பிட்டிருந்த மது "எண் சாண் பனையின் தலையில் ஊறிய" மதுவாகும். அந்தப் பனையின் தலை என்பது ஜடத்தினுடைய ஏழு சாணுக்கு மேல்பாகமாகிய எட்டாவது சாணாகிய சிரசாகும். அந்த சிரசிலிருக்கின்றதாகும் மது. அம்மதுவை லம்பிகா முத்திரையினால் பானம் செய்வதாகும். அதாவது லம்பிகா என்றால் லம் + அம்பிகா, லம் = பிரகாசம்; அம்பிகா= லோகமாதாவாகிய சக்தி. அந்த சக்தி தன்னுடைய சிரசினுள்ளில் அடங்கும்போது அமிர்தம் இறங்கும். அதாவது தன்னிலிருந்து வெளியினுள்ளில் பரவியிருக்கின்ற சக்தி தன்னில் தானே வயித்து, நிறைந்து மிகுந்து வரும்பொழுது சிரசிலிருக்கிற அமிர்தம் இளகுகின்றதாகும். அந்த அமிர்தத்தைப் பானம் செய்து சதா ஆனந்த மத்தனாகலாம். இவ்விதமுள்ள மதுவையாகும் அந்த மஹான் சாப்பிட்டிருந்தார். இதை ஆலோசிக்காமலும் அறியாமலும் உலகவாசிகள் தப்பிதமாகக் கருதி, கேரள குருவாகவும் மகா

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஞானியாகவும் இருந்த துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற ஜகத்குருவாகிய மஹானை நீர் சொன்னதான கள்ளும் சாராயமும் குடித்தார் என்று ஓர் அபவாதம் சொல்லி, அந்த மஹானைக் குற்றப்படுத்தியும், 'அந்த மஹான் செய்ததை நாங்களும் செய்யக்கூடாதோ' என்று அகம்பாவம் நடித்தும் அந்த மஹான் சாப்பிட்ட கள்ளைத் தெரியாமல், புத்தியில்லாமல், நீர் சொன்னதான கள்ளும் சாராயமும் குடித்து, முன்னோர்கள் தேடி வைத்துள்ள செல்வங்களை நாசப்படுத்தி, மிகவும் அயோக்கியர்களாகி, தம்மில் கலகம் செய்து, அடிதடியும் குத்தும் வெட்டும் காயமும் பட்டு, சண்டையும் வழக்கும் ஆகி, அபராதம், சிறைவாசம் முதலிய தண்டனைகள் அனுபவித்து வருகிறார்கள்.

தவிர, நீர் சக்தி பூஜை செய்கிறீர் என்றும் அப்பொழுது மதுபானம் செய்யாதிருக்க முடியாது என்றும் சொன்னது உண்மையாகும். அதென்ன வென்றால்; சக்தி என்பது தன்னிலிருந்துண்டான தாகும். அந்த சக்தி வெளியினுள்ளில் வியாபித்த தால் நானாவிதத்திலாய் ஜனங்கள் மோகாந்த காரர்களாகி இருக்கிறார்கள். அவ்விதமுள்ள அந்தகாரத்தை நீக்குவதற்கு அந்த சக்தியைத் தன்னில் தானே சேர்ப்பதாகும் வேண்டியது. அதைச் சேர்க்க வேண்டியது ஜீவனாகும். அந்த ஜீவன் சக்தியைப் பூஜிக்கின்றது. இதற்காகும் சிவன் சக்தியை பூஜிப்பதென்று சொல்லுவது. அது எவ்விதமென்றால்: தன்னிலிருந்து வெளியினுள்ளில் பரவி பின்னமாய் அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெவ்வேறாய் பந்திக்கப் பட்டிருக்கின்ற தன்னுடைய சக்தியை அந்தப் பந்தத்திலிருந்து ஜீவனாகிய சிவன் வேறுபடுத்தி பிரம்மரந்திரத்தில் சேர்க்கின்றதாகும் ''சக்தி பூஜை". அப்படி பூஜிக்கும் பொழுது மத்தகத்தில் உள்ளதாகிய மது இறங்கி, அந்த மதுவையாகும் மஹான்கள் பானம் செய்தது. இதனால்தான் சக்தி பூஜையில் மதுபானம் செய்யாதிருக்க முடியாது என்று சொல்லக் காரணம். இவ்விதமாகும் சக்தி பூஜை. இதனை அறியாமல் சக்திபூஜை என்று சொல்லி, ஆடு, கோழி, முதலியவற்றைக் கொன்று, அவற்றின் ஜீவனை நசிப்பித்து, அந்தப் பிணங்களைச் சமையல் செய்து, அப்பம், வடை, கூட்டு முதலியவை உண்டாக்கி, மது என்று சொல்லி, கள், சாராயம் முதலியவற்றைக் கொண்டுவந்து, ஓர் அறைக்குள் பீடம், விளக்கு முதலானவற்றை வைத்து, மேற் சொன்ன பிணம் முதலியவற்றைக் கொண்டும் மற்றும் செய்தவற்றையும் மேற்சொன்ன பீடத்தின் சமீபம் வைத்து, பூஜை செய்கிறது என்று சங்கல்பித்து, சில புஷ்பங்களை பீடத்தின் மேலும் முற்சொன்ன சாமான்களின் மேலும் வாரி இறைத்து, பூஜை செய்து முடித்து, மேற்சொன்ன பிணத்தையும் கூட்டு முதலிய பலகாரங்களையும் வயிறு நிறையத் தின்றும் கள், சாராயம் முதலியவற்றைக் குடித்தும் உணர்வில்லாமல் விழுந்து, கை, கால், ஒடிந்தும் பல், உதடு காயப்பட்டும் யாதொரு விவரமும் இல்லாமலாகிப் போகின்றார்கள். அப்படிச் செய்வதற்கு சக்தி பூஜை என்று சொல்ல முடியாது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



எனில் உண்மையான சக்திபூஜை மேற்சொல்லப் பட்ட விதத்திலாகும். அவ்விதமுள்ள பூஜையாகும் செய்யவேண்டியது. அப்படி தன்னுடைய சக்தியை யாரொருவர் தன்னில் லயிப்பதற்காகப் பூஜிக்கின்றாரோ, அவருக்குத் தன்னிலிருந்து உண்டாகின்ற மதுவைப் பானம் செய்து ஆனந்த மத்தனாய் சர்வக்ஞனாக இருக்கலாம். அந்த மதுவுக்குத்தான் அமிர்தம் என்று சொல்லுவது. இப்படிச் சொல்லிய மதுவைத்தான் முன் சொல்லிய மஹான் சாப்பிட்டிருந்தது. நீர் சொன்ன கள்ளும், சாராயமும் அல்ல.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# இருபது

சிஷ்யன் : சத்குருவே! உலகில் நான்கு மதங்கள் உண்டு என்று சொல்லவும் அதற்கனுசரித்து ஜனங்கள் நடந்துவரவும் செய்கிறார்கள். அவை எந்தெந்தவிதத்தில் உண்டானதாகும்?

குரு : எவையெல்லாமாகும் நான்கு மதங்கள்?

சி : இந்துமதம், புத்தமதம், கிறிஸ்துமதம், முஹம்மதிய மதம் இவையாகும்.

கு : அதில் நாம் எம்மதஸ்தர்களாகும்?

சி : இந்து மதஸ்தர்களாகும்.

கு : நாம் இந்துமதக்காரர்கள் என்பதற்கு ஆதாரம் என்னவாகும்?

சி : ஈஸ்வரசேவை முதலியன சரிவர நாமே செய்துவருகிறோம். அதனாலாகும் நமக்கு இந்து மதஸ்தர் என்று பெயர்.

கு : இதுவரையிலும் நாம் ஈஸ்வரசேவை செய்திருக்கிறோம் என்று இப்பொழுது உமக்குத் தோன்றுகிறது உண்டா?

சி : இதுவரையில் செய்தது பற்றி ஆலோசிக்கும் பொழுது நாம் ஈஸ்வரசேவை செய்யவே இல்லை.

கு : ஈஸ்வரசேவை செய்யாதவர்களை இந்துக்கள் என்று சொல்ல இடமுண்டோ?

சி : சொல்ல இடமில்லை.

கு : எனில் உலகத்தில் நானா மதங்கள் உண்டென்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil


சொல்லுவது பைத்தியக்காரத்தனமாகும். ஏனென்றால்: மதங்கள் முதலியன யாதொன்றும் இல்லை. அப்படி உண்டென்று சொன்னால்கூட ஒரு மதம் அல்லாமல் வேறுமதமில்லை. அந்த ஒரே மதத்திற்காகும் ஈஸ்வரமதம் என்று பெயர். அதனால் உலகத்தில் ஈஸ்வரமதமான ஏகமதமல்லாமல் வேறு மதமில்லை. ஹிந்து மதம் என்பது இந்து மதமாகும். இந்து என்பது சந்திரனாகும். மதம் என்பது ஸ்தாபனமாகும். எதையாகும் ஸ்தாபிக்க வேண்டியதென்றால் சந்திரனையாகும். சந்திரன் என்பது மனமாகும். அந்த மனமாகின்ற சந்திரனை ஈஸ்வரனாய் இருக்கின்ற ஜீவனில் ஸ்தாபிப்பது அதாவது நிறுத்துவது இந்துமதம். இவ்விதம் யாரொருவர் செய்கிறாரோ, அவர் இந்துமதஸ்தராகும். இவ்விதமல்லாதவர் இந்துமதக்காரராகும், புத்தமதக்காரராகும், கிறிஸ்துமதக்காரராகும், முகம்மதிய மதக்காரராகும் என்று அபிமானிப்பதல்லாமல் மதத்தைப்பற்றிய யாதொரு அறிவும் உள்ளவரல்லர்; யாதொரு மதஸ்தருமல்லர். அது எவ்விதமென்றால்: இந்து மதக்காரர் என்று அபிமானித்துவருகின்றவரில் உட்பட்டவரும் எழுபத்திரண்டு அடி விலகி நிற்க வேண்டியருமான நாயாடி என்கிற ஒரு ஜாதிக்காரருமுண்டு, அவருக்குப் பொது ரஸ்தாவிலும், மற்றும் நடக்கவிடாமல் மேற்பிரகாரம் தூரே நிறுத்தி கஷ்டப்படுத்தி, சர்க்கார் பாதையில்கூட நடக்க முடியாமல் வந்ததன் நிமித்தம் முகமதுமதஸ்தர்கள் என்று அபிமானித்து வருகிறவர்களுடன் சேர்ந்து, பல கைத்தொழில்கள்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



செய்து உபஜீவனம் செய்து வரவும் அவர்கள் முகமதியர்கள் என்றபிமானித்துவரவும் செய்கிறார்கள். எனில் அவர்களுக்கு முகம்மது மதத்தைப்பற்றி யாதொரு அறிவுமில்லை. அவர்களுக்கு முகம்மது மதத்தில் மிஞ்சிப் போனால் மூன்று வார்த்தைகள் தெரியும். அவையாவன "அல்லா", "அல்லாஹூ", "பிஸ்மில்லா" இவையாகும். இந்த வார்த்தைகளினுடைய பொருள்களாகட்டும், முகம்மது மதத்தைப் பற்றிய யாதொரு தத்துவத்தையாகட்டும், அறியாமல் மேற்சொன்ன வார்த்தைகளை மட்டும் உச்சரித்துக்கொண்டு, நான் முகம்மதியனாகும் என்று அபிமானித்து நடக்கிறார்கள். இவ்விதத்தில்தான் எல்லா மதஸ்தர்களும் மதத்தினுடைய யாதொரு பொருளும் அறியாமல், நான் இந்துமதமாகும், புத்தமதமாகும், கிறிஸ்துமதமாகும், முகம்மதிய மதமாகும் அனுசரித்திருக்கிறதென்று முன் சொன்ன நாயாடி அபிமானித்து நடக்கிறது போல் அபிமானித்து நடக்கின்றதல்லாமல் மதங்களைப் பற்றி யாதொரு தத்துவபோதமோ, அறிவோ, கிரஹிக்கும் தன்மையோ அவர்கட்கு இருப்பதில்லை. உண்மையில் ஆலோசித்தால் இவ்வகை யாதொரு மதமும் இல்லாததாகும். எல்லாம் மேற்சொன்ன ஈஸ்வரமதமாகும். அவ்விதமுள்ள ஈஸ்வரமதத்தை அறியாமலிருந்த ஒரு காலத்தில் புத்தன் என்கிற ஒரு மஹான் உற்பவிக்கவும் அவர் ஈஸ்வர மதத்தினுடைய தத்துவத்தைக் கிரஹித்து, ஈஸ்வரவிசாரணை செய்யவேண்டியதற்குள்ள உண்மை மார்க்கத்தை

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஸ்தாபிக்கவும் செய்தார். அதற்கு அந்த மஹான் ஒரு புரோஹிதராக இருந்தார். அப்புரோஹிதராகிய புத்தர் என்கிற மஹான் ஸ்தாபித்ததன் நிமித்தம் அதற்கு அவருடைய பெயரை அனுசரித்து புத்தமதம் என்று பெயருண்டாயிற்று. அம்மஹான் ஸ்தாபித்துள்ளது ஈஸ்வரமதமாகும்; புத்தமதம் அன்று. அம்மஹானுடைய பெயர் புத்தர் என்பதாயிருந்ததால் இப்பொழுதும் அதற்குப் புத்தமதம் என்று சொல்லி வருகின்றனர். எனில் அந்த மஹானுக்குப் புத்தர் என்றல்லாமல் சுக்கிரன் என்ற பெயராயிருந்தால் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்திற்கு என்ன மதம் என்றாகும் பெயர் சொல்லுவது?

சி : சுக்கிர மதம் என்றாகும்.


கு : அப்பொழுது புத்தமதம் என்கிற ஒரு மதம் உண்டாகுமோ?

சி : இல்லை.

கு : இதே விதத்தில்தான் ஒரு காலத்தில் கிறிஸ்து என்கிற ஒரு மஹான் தோன்றவும், இன்னொரு காலத்தில் முஹம்மது என்கிற ஒரு மஹான் தோன்றவும் செய்தனர். அவர்களும் ஈஸ்வர விசாரணை செய்யவேண்டியதற்குள்ள நியாயமான ஒரே மார்க்கத்தை ஸ்தாபித்தார்கள். அதுவும் மேற்சொன்ன ஈஸ்வரமதமாகவே இருந்தது. அவ்விதம் ஈஸ்வரமதத்தை ஸ்தாபிப்பதற்கு மேற்சொன்ன மஹான்கள் ஒவ்வொரு புரோஹிதராய் அமைந்தார்கள். அந்தப் புரோஹிதர்களாகிய கிறிஸ்து என்கிற மஹானும், முஹம்மது என்கிற மகானும், ஸ்தாபித்ததன் நிமித்தம் கிறிஸ்துமதம் என்றும் முஹம்மதுமதம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



NITYANANDA ON THE LAP OF

**HIS HOLINESS SWAMI SIVANANDA PARAMAHAMSA**

FOUNDER OF SIDHASAMAJ

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்றும் பெயர்கள் உண்டாயிருக்கின்றன. அம்மஹான்களுடைய பெயர்களுக்கு அனுசரித்தாகும் அம்மதங்களுக்குத் தனித்தனியாகப் பெயர்கள் வரக் காரணம். கிறிஸ்து என்ற மஹானுக்கு ஜியார்ஜூ என்றும், முஹம்மது என்ற மஹானுக்கு சேக்குட்டி என்றும்பெயர்கள் இருந்ததேயானால் அந்த மதங்களுக்கு இப்பொழுது என்னவாகும் பெயர்கள் சொல்லவேண்டும்?

சி : ஜியார்ஜ் மதம் என்றும் சேக்குட்டி மதம் என்றுமாகும்.

கு : அப்பொழுது மேற்சொன்னதான மதங்கள் உண்டோ?

சி : இல்லை.

கு : மதங்களுக்கு எதை அனுசரித்து வித்தியாசமான பெயர்கள் உண்டாயின?

சி : குருநாதன்மார்களுடைய பெயர்களை அனுசரித்தாகும்.

கு : எனில் குருநாதன்மார்களாகிய அந்த மஹான்கள் எந்த மதத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள்?

சி : ஈஸ்வர மதத்தையாகும்.

கு : அப்பொழுது எத்தனை மதங்கள் இருக்கும்?

சி : ஈஸ்வரமதம் என்கிற ஒன்று மட்டும்.

கு : எனில் ஈஸ்வரமதம் என்கிற ஒரே மதம் அல்லாமல் வேறு யாதொரு மதமும் இல்லை. அப்படியுள்ள ஈஸ்வரமதத்தை இன்னதென்று அறியாமல் அநேக கட்டடங்களைக் கட்டிவைத்து, அவற்றிற்கு தேவாலயம் என்றும், சர்ச்சு என்றும் அதாவது மாதாகோயில் என்றும், பள்ளி (மசூதி) என்றும் சொல்லிக்கொண்டு, அவற்றில் சிலதில் பொம்மைகளை ஸ்தாபித்து, அவற்றை ஈஸ்வரன்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று சங்கல்பித்து. அவ்விடங்களில் புத்தியில்லாதவர்களாகி, ஜீவகாருண்யம் இல்லாமல், கொடூர குணம் உடையவர்களாய், நரபலி என்றும் அஸ்வபலி என்றும் அஜபலி என்றும குக்குடபலி என்றும் மற்றும் சொல்லி மனிதர் என்றும் குதிரை என்றும் ஆடு என்றும் கோழி என்றும் அபிமானித்து வருபவற்றையும் மற்று பல ஜீவிகளையும் அறுத்து, அதிகடினமான கொடூரச் செயல்களைச்செய்து கொண்டிருக்கும் காலங்களில், மேல்சொன்ன மஹான்கள் தோன்றி, அவர்களுக்கு புத்திசக்தி உண்டாயிருந்ததால் இதனுடைய உண்மையை ஆலோசித்து அறிந்து, உலகத்தில் மிகவும் புத்திமுட்டி அதாவது பிரயாசைப்பட்டு, துன்புற்று, மேற்சொன்ன கொலைகள் தப்பிதம் என்றும் உண்மையான மார்க்கம் இன்னதாகும் என்றும் அதாவது உலகம் என்பது தன்னுடைய சக்தியிலிருந்து உண்டானது என்றும் அந்த சக்தியைத் தன்னில்தானே லயிக்கச் செய்ய வேண்டியது என்றும் அதாவது தானாயிருக்கின்ற தன்னுடைய சக்தியை தன்னிலேயே லயிக்கச் செய்ய வேண்டியதென்றும் அதாகும் உண்மையென்றும் மற்றவையெல்லாம் தவறுதல் ஆகுமென்றும் அவர்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். அதனால் உலகத்தில் எந்தெந்த மகான்கள் உற்பவித் திருந்தார்களோ அவர்கள் எல்லாம் சொன்னது முன்சொன்ன ஒரே மார்க்கந்தானாகும். அந்த மார்க்கத்தையாகும் இப்பொழுது நாம் உமக்குக் காண்பித்துக் கொடுத்திருப்பது. இதாகும் உண்மை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# இருபத்தொன்று

சிஷ்யன் : சுவாமி! பிரம்மோபதேசமாகும் மோக்ஷம் கிடைப்பதற்கு வேண்டியது என்றும், அதுமஹா வாக்கியங்களாகிய சதுர் வாக்கியங்கள் அதாவது நான்கு சொற்கள் என்றும் உலகத்தில்சொல்லி வருகிறார்கள். நான்காம் அத்தியாயத்தில் இதைக் கண்டிக்கவும் அதாவது மறுக்கவும் செய்திருக்கிறீர் களல்லவா? எனில் சதுர்வாக்கியங்களினுடைய உண்மை என்னவென்று அருளிச்செய்து கேட்க விரும்புகின்றேன்.

குரு : சதுர்வாக்கியங்கள் என்பது என்னென்னவாகும்?

சி : ''பிரக்ஞானம் பிரம்மம்'', ''அஹம் பிரம்மாஸ்மி'', ''தத்துவமஸி'', ''அயம் ஆத்மா பிரம்மம்'' என்பவையாகும்.

கு : இந்தச் சதுர் வாக்கியங்கள் என்ன செய்ய வேண்டும் என்றாகும் உபதேசிக்கின்றன?

சி : அவற்றின் பொருள்களை அறிந்து மனனம்செய்து கொண்டிருக்க வேண்டும் என்றாகும் உபதேசிக்கின்றன.

கு : எனில் இந்த நான்கு வாக்கியங்களின் பொருள் என்னவாகுமென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி : ''பிரக்ஞானம் பிரம்மம்'' என்றால் பிரகர்ஷிக்கப்பட்ட அறிவுகள் அதாவது வேறிட்டு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேறிட்டு அறியப்படுகிற அறிவுகள் எல்லாம் பிரம்மம் ஆகுமென்றும், "அஹம் பிரம்மாஸ்மி" என்றால் நான் பிரம்மமாய் பவிக்கின்றேன் என்றும், "தத்துவமஸி" என்றால், அது நீயாகி பவிக்கின்றது என்றும் "அயம் ஆத்மா பிரம்மம்" என்றால் இந்த ஆத்மா பிரம்மம் என்றுமாகும் நான் கருதியிருக்கின்றேன்.

கு : இவ்வாக்கியங்களினுடைய மேற்சொன்ன பொருள்களை மனனம் செய்வதால் மோக்ஷம் கிடைக்குமா? அப்படிச் செய்வதெப்படியென்றால் கற்கண்டு என்னும் ஒரு பொருளைப்பற்றிக் கீழே சொல்லும் விதம் தியானம்செய்கிறது போலாகும். அதாவது: கற்கண்டுஎன்னும் பொருளொன்று உண்டு; அது இனிப்புள்ளது; வெள்ளை நிறமானது; அது தின்பதற்குநல்லது என்கிற நான்கு வாக்கியங்களை தியானித்திருந்தால், கற்கண்டு இன்னதென்றுதெரியவோ, அதன் இனிப்பு அறியவோ, அதன் நிறத்தைப் பார்க்கவோ, அதன் ருசியை உணரவோ, அந்த எண்ணங்கள் கற்கண்டாக வருவதற்கோ முடியுமா?

சி : அது ஒருக்காலும் முடிவதில்லை. அதை அனுபவித்தால் மட்டுமே அதனுடைய நிலைமை அறிய முடியும்.

கு : எனில் மகா வாக்கியங்களை நீர் சொன்னபடி பொருள் ஆராய்ச்சி செய்வதனால் ஒருக்காலமும் பிரம்மத்தை அறிவதில்லை. தவிர, இந்தவாக்கியங் களுடைய பொருள் நீர் சொன்ன படியுமல்ல. "பிரக்ஞானம் பிரம்மம்" என்றால் பிரதி பலிக்கப்பட்டிருக்கின்ற அறிவு பிரம்மம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்றாகும். அதாவது தன்னிலிருந்து பிரதி பிம்பிக்கப் பட்டிருக்கின்ற பொருள்களை அறிகின்ற அறிவு ஏதோ அது பிரம்மம். அது எப்படியென்றால்: காதுகளினால் கேட்டறிவதும் கண்களினால் பார்த்தறிவதும் மூக்கினால் முகர்ந்தறிவதும் நாவினால் ருசித்தறிவதும், தொக்கினால் அதாவது தோலினால் தொட்டறிவதும் ஆகின்றன இந்த ஐந்து நிலைமைகளில் அறிவதற்குள்ள காரணமாகிய அறிவாகும் பிரம்மம். இந்த ஐந்துவித துவாரங்களல்ல அறிகின்றது என்று பதினாறாம் அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது அல்லவா? அந்த அறிவு எது என்றால் மனமாகும். அந்த மனம் தன்னிலிருந்து பின்னமாகி வெளியினுள் பலவிதத்திலும் பிரகாசிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பிரகாசம் தன்னுடைய மனம் பிரதிபலிக்கின்றது அதாவது பிரதிபிம்பிக் கின்றது ஆகும். அப்படி பிரகாசித்திருக்கின்ற மனசக்தி பின்னமின்றி தன்னில்தானே அடங்கி நிற்கின்றதற்காகும் ''பிரக்ஞானம் பிரம்மம்" என்று சொல்லுகிறது. ஆகையினால் தன்னிலிருந்து பிரதிபிம்பிக்கப் பட்டிருக்கின்ற பிரகாசம் தன்னில்தானே சலிக்காமல் அதாவது அசைவு படாமல் வரும்பொழுது ''பிரக்ஞானம் பிரம்மம்" என்பதான தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

''அஹம் பிரம்மாஸ்மி" என்றால் அகாரமா யிருக்கிற வெளியினுள்ளில் தானாயிருக்கின்ற பிரம்மம், ''ஹம்" என்ற பிரகிருதி அதாவது

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இயற்கை தன்னிலிருந்து மாயையாய்ச் சலித்துக் கொண்டிருக்கின்ற சலனம் இல்லாமல் உற்பத்தி ஸ்தானமாகிய தன்னில் தானே அடங்குவதற்கு ஆகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் ''அஹம் பிரம்மாஸ்மி" என்கிற தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

''தத்துவமஸி" என்றால், தத் + துவம் + அஸி. தத் என்றால் பிரம்மம்; துவம் என்பது நீ; அதாவது ''ந" என்பது சூன்யமும் ''ஈ" என்பது சக்தியும்; அதாவது தானாயிருக்கின்ற சக்தி தன்னிலிருந்து வெளியினுள் சலித்து பரவி நசித்துக்கொண்டிருக்கிற மனசக்தி; அஸி என்றால் பவிக்கின்றது அதாவது ஆகின்றது என்றும் பொருள்படுகிறது. ''தத்துவமஸி" என்பது தத் என்னும் பிரம்மத்திலிருந்து துவம் அதாவது நீ என்னும் மனசக்தி வெளியினுள்ளில் பரவி நானாவிதமாகச் சலித்துக் கொண்டிருப்பது சலிக்காமல் பிரம்மத்தில் லயித்திருக்கின்ற நிலைமையாகும். அந்தச் சமயத்தில் நானாவிதத்தில் சலித்து பிரமித்துக் கொண்டிருக்கிற மனசக்தி பிரம்மமாய்த் தீருகிறது. அப்பொழுது ''தத்துவமஸி" என்கிற தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

''அயம் ஆத்மா பிரம்மம்" என்றால் அயம் + ஆத்மா + பிரம்மம். அயம் = ஈ; ஆத்மா = ஆத்மா; பிரம்மம் = பிரம்மம் எனவும் பொருள்படுகிறது. அயம் என்பது ஈ என்கிற சக்தி. அந்த சக்தி வெளியினுள்ளில் நானாவிதத்தில் பிரவேசித்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறதாகும். அப்பிரகாரம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வெளியினுள்ளில் பிரகாசிக்காமல் தன்னுள்ளிலிருக்கின்ற ஆத்மாவில் பிரகாசித்துச் சலனமில்லாமலிருக்கின்ற நிலைமையாகிறது ''அயம் ஆத்மாபிரம்மம்'' என்று சொல்லுவது. அப்பொழுது ''அயம் ஆத்மா பிரம்மம்'' என்ற தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

எனில் இந்த நான்கு வாக்கியங்களை பிரம்மோபதேசமாக தியானிப்பதற்குச் சொல்லப்பட்டிருப்பதல்ல. இவ்விதமாகும் பிரம்மத்தினுடைய நிலைமை என்று அறியும் பொருட்டாகும் சொல்லப் பட்டிருக்கின்றது. இதல்லாமல் பிரம்மத்தினுடைய நிலைமை அறிவதற்கு இரண்டு வாக்கியங்கள் அதாவது இரண்டு சொற்களும் கூட உண்டு. அதில் ஒன்று ''பிரம்மஜோதிரஹம்'' என்றாகும். அதாவது பிரம்மம் + ஜோதிஸ் + அஹம்; அதாவது தான் தானே பிரம்மஜோதிஸ் என்று பொருளாகிறது. அந்த பிரம்மஜோதிஸ் அகாரமான வெளியினுள்ளில் ''ஹம்'' என்ற பிரகிருதியாகி பின்னமாய் அதாவது வேறாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பிரகாசம் பின்னப்படாமல் ஒரே பிரகாசமாகி ஆதியந்தவிஹீனமாய் அதாவது அடிமுடியற்றதாய் தன்னிலடங்குகிற நிலைமையாகும் ''பிரம்ம ஜோதிரஹம்''. அப்பொழுது ''பிரம்ம ஜோதிரஹம்'' என்கிற தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

ஆறாவது வாக்கியம் ''பிரம்மஸத் ஜகத் மித்யா'' என்றாகும். அதாவது பிரம்மம் + ஸத் +

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஜகத் + மித்யா. அதாவது தானாயிருக்கின்ற பிரம்மம், தன்னிலிருந்து உண்டாயிருக்கிற சலனம் இல்லாமல் தன்னில் லயித்து ஆதியந்தவிஹீனமாய் அதாவது அடிமுடி யற்றதாய், தானாய், தன்மயமாகி இருக்கின்ற நிலைமையாகும். அப்பொழுது பிரம்மம் மட்டும் ஆகிறது. அச்சமயத்தில் ''பிரம்மஸத் ஜகத் மித்யா" என்னும் தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

இதல்லாமல், நானாவிதத்திலுள்ள மந்திராதிகளைக் கொண்டும் மும்மூர்த்திகளென்று சங்கல்பித்து தியானிக்கிறது கொண்டும் பலவிதத்திலுள்ள விரதாதிகள் அனுஷ்டித்து பட்டினி இருந்து நோய்வாய்ப்படுவது கொண்டும் பல ஜீவவதைகள் செய்து, யாகம், ஓமங்கள் என்று சொல்லி ஒவ்வொன்று செய்வது கொண்டும் சக்திபூஜை என்று சொல்லி பூஜை செய்து, கள், சாராயம், பிணம் முதலியவற்றைத் தின்றும், தலை சுற்றி, நினைவு தடுமாறி விழுந்து, பல், உதடு முதலியவற்றைக் காயப்படுத்திக் கொள்ளுவதுகொண்டும் காசி, இராமேஸ்வரம் முதலிய இடங்களுக்குக்காகும் என்று நினைத்து ஒவ்வோர் இடங்களில் சுற்றித் திரிந்து, நடந்து, அலைந்து, நோயுற்று, அவதிப்பட்டு, புத்திமுட்டி அதாவ்து துன்புற்று, கங்காஸ்நானம் என்றும் சேதுஸ்நானம் என்றும் எண்ணி, ஒவ்வோர் ஆறுக ளிலும் உப்பு ஜலம் நிறைந்த சமுத்திரங்களிலும் மற்றும் குளித்து, சொறிசிரங்கு முதலியவை பிடிக்கச் செய்வது கொண்டும் கைவல்லியம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கிடைக்கிற தில்லை. இவ்விதம் செய்வதால் தன்னுடைய ஜீவசக்தி அதோகதியாய் நசித்துப் போவதல்லாமல் தன்மயமாய்த் தீருவதில்லை. தன்மயம் ஆக வேண்டுமானால் முற்சொல்லிய படி தன்னுடைய சக்தி தன்னில்தானே லயிக்க வேண்டும். இதல்லாமல் வேறு யாதொரு வழியும் இல்லை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

# அத்தியாயம்
# இருபத்திரண்டு

சிஷ்யன் : குருவே! இதுவரையிலும் ஷடாதாரங்களைப்பற்றி யாதொன்றும் கற்பிக்கவில்லை. ஷடாதாரங்களைக் கடந்து ஜீவன் பிரம்மரந்திரத்தில் ஐக்கியப்பட்டால் மட்டுமே மோக்ஷம் என்று சொல்லுகிறார்கள். இதனுடைய பொருள் என்னவென்று விவரமாகச் சொல்லித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

குரு : ஷடாதாரங்கள் என்பது எவையாகும்? அவற்றினுடைய பெயர்கள் என்னவெல்லாமாகும்?

சி : **மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞா** இவையென்று சொல்லுகிறார்கள்.

கு : இந்த ஆறு ஆதாரங்கள் எந்தெந்த நிலைமையிலாகும் இருக்கின்றன?

சி : மூலாதாரம் என்பது குதமாகும். அதாவது இதுவரையிலும் குதமென்று சொல்லி வந்திருக்கிற மலதுவாரத்தோடு தொட்டு மேலேயிருக்கிறது. சுவாதிஷ்டானம் என்பது இதுவரையில் லிங்கம் என்று சொல்லிவருகிற மூத்திர துவாரத்தினுடைய அடியிலிருக்கின்றது. மணிபூரகம் என்பது இதுவரையில் நாபி என்று சொல்லிவருகிற

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தொப்புளடியோடு சேர்ந்திருக்கிறதாகும். அனாஹதம் என்பது இதுவரையில் இருதயமென்று சொல்லிவந்துள்ள மார்பினுடைய மத்தியமான அதாவது நடுவிலான நெஞ்சுக் குழியாகின்றது. விசுத்தி என்பது இதுவரையில் கண்டம் என்று சொல்லி வந்துள்ள தொண்டைக் குழியிலாகும். ஆக்ஞா என்பது லலாடமாயிருக்கின்ற புருவமத்தியமாகும்.

கு : இவ்விதத்திலுள்ள ஆறு ஆதாரங்களும் மேலேசொல்லி வந்த இடங்களில் எவ்விதத்தி லாகும் இருக்கின்றன என்று உம்முடைய நம்பிக்கை?

சி : அவை ஒவ்வொன்றும் படிப்படியாய் மேலேமேலே இருக்கின்றனவென்றும், அவற்றில் ஒவ்வொரு படியாகிய ஆதாரம் கடந்து கடந்து பிராணன் பிரம்மரந்திரத்தில் சென்று சேருகிறதாகு மென்றும் என்னுடைய நம்பிக்கை.

கு : அப்படியானால் முதலாதாரம் எது?

சி : மூலாதாரம்.

கு : மூலாதாரம் எங்கே இருக்கிறது?

சி : மூலமாயிருக்கின்ற மலத்துவாரத்தோடு சேர்ந்திருக் கிறதனால் அதற்கு மூலாதாரமென்று சொல்கிறது.

கு : எனில் பிராணன் நமக்கு உள்ளிலோ, வெளியிலோ இருக்கிறது?

சி : பிராணன் உள்ளிலாகும் இருக்கிறது.

கு : உள்ளிலிருக்கின்ற பிராணனை மலதுவாரம் வழியாய் கடத்திக்கொண்டு போகின்றது எவ்விதத்திலாகும்? அதுவுமல்லாமல், தாங்கள் சொன்னபடி மலதுவாரம்தான் மூலாதாரம் என்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வைத்தால், அந்த வழியாக ஜீவனை பிரம்ம ரந்திரத்தில் கொண்டுபோக வேண்டுமானால், நமது உள்ளில் உள்ள ஜீவனை வெளியே விட்டு விட்டலல்லாமல் முன்சொன்ன மலதுவாரத்தின் வழியாக மேலே கொண்டுபோக முடியுமா?

சி : முடியாது.

கு : அவ்விதம் உள்ளிலுள்ள ஜீவனை வெளியில் விட்டால் என்னவாகும்?

சி : சவம் அதாவது பிணமாய்ப் போகும்.

கு : அப்பொழுது நீர் சொன்னதான மலதுவாரம் என்பதுதான் மூலாதாரம் என்றால் உள்ளில் இருக்கும் ஜீவனை வெளியில் விட்டால் சவமாய்ப் போகும் என்று நீரே சொன்னீர். அப்படியிருக்க மூலாதாரம் மலதுவாரமாய் இருப்பதற்கு வழியுண்டா?

சி : வழியில்லை.

கு : அதுவுமன்றி, ஆதாரங்கள் ஒவ்வொன்றும்மேலே மேலே அடுக்கடுக்காய் இருக்கின்றன என்றும் அவற்றில் பிராணன் ஒவ்வொன்றும் கிரமப்படி தாண்டித்தாண்டி பிரம்மரந்திரத்தில் சேரவேண்டு மென்றும் சொல்லுகிறீர் அல்லவா? அவை நம்முடைய மலதுவாரம் முதல் பிரம்மரந்திரம் வரை அடுக்கடுக்காய் இருப்பதில்லை என்பதைக் குறித்து ஓர் உதாரணம் சொல்லுகிறோம். அதாவது தனியாக யாதேனும் ஒருவழியாகப் போகும் போது திடீரென்று நமக்குத் தெரியாமல் ஒரு வெடி சப்தமோ, வேறோ கேட்டு நாம் திடீரென்று பயப்படும்போது நம் ஜீவன் என்னவாகிறது?

சி : அப்பொழுது நமது ஜீவன் திடீரென்று மேலே

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஏறிப் போகிறது.

கு : அது எங்கிருந்து ஏறிப்போகிறது? நமது உள்ளிலிருந்தோ, வெளியிலிருந்தோ?

சி : நமது உள்ளிலிருந்தேதான்.

கு : அப்படி உள்ளிலிருக்கின்ற ஜீவன் திடீரென்று மேலே ஏறிப்போனால் அவர் எந்த நிலையில் இருப்பார்?

சி : அவருக்கு யாதொன்றும் தெரியாமலும் யாதொரு உணர்வும் தெளிவும் இல்லாமலும் விழுந்து கிடப்பார்.

கு : அதற்குக் காரணம் என்ன?

சி : ஜீவன் மேலே போனதால்.

கு : அப்பொழுது நமக்கு மலதுவாரம் முதல் ஆறு ஆதாரங்கள் அடுக்கடுக்காய் மேலே போவதற்கு இருந்ததானால் நாம் பயப்பட்டு ஜீவன் மேலே ஓடிப்போகும்போது நீர் மேற்சொல்லிய ஆதாரங்கள் ஒன்றுமே காணுவதில்லையல்லவா? அப்படியிருந்திருக்கு மானால் ஜீவன் அவற்றைத் தட்டித் திறந்திருக்க வேண்டுமல்லவா? அதுவும் உண்டாகவில்லை யல்லவா? அதுவுமன்றி, நாம் தூங்கும்போது நம்முடைய ஜீவன் நமது உள்ளிலேயே கதாகதம் அதாவது நடனம் செய்து கொண்டிருக்கிறது. அதற்குத்தான் ''சமீரணன்'' என்று பெயர். சமீரணனைப் பற்றி முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சமீரணன் உள்ளிலேயே மேலும் கீழும் கதாகதம் அதாவது நடனம் செய்து பிரம்மரந்திரத்தோடு தாக்கிக் கொண்டிருக்கின்ற கதியாகும். அப்பொழுதும் ஆறு ஆதாரங்கள் அடுக்கடுக்காய்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உள்ளதாகக் காணுவதோ, அறிவதோ இல்லை. தவிர, மூலம் என்றால் என்ன?

சி : மூலம் என்பது தூர் அதாவது அடி; அதாவது உற்பத்தி ஸ்தானம்.

கு : அப்படியானால் நம்முடைய தூர் எது?

சி : மேற்சொல்லிய மூலமாயிருக்கின்ற மலதுவாரம் ஆகும்.

கு : இது மிகவும் தப்பிதமாகும். மூலம் என்பது தூர் ஆகின்றது. அது முதலில் உண்டாகின்ற இடமாகும். அதை மலதுவாரம் என்று சொல்லு வதற்கு ஒரு போதும் முடியாது. மலதுவாரம் முதற்கு ஒரு சிருஷ்டி உண்டாவதில்லை. அதற்கு உதாரணம் என்னவென்றால் ஸ்திரீகள் பிரசவிக்கின்றதானால் குழந்தையினுடைய மலதுவாரம் முதலில் வெளியே வருவதுண்டோ?

சி : இல்லை.

கு : பின் எந்தப் பாகமாகும் முதலில் வெளியில் வருவது?

சி : சிரசு அதாவது தலை.

கு : எனில் மலதுவாரத்திலிருந்து தொடங்கி சிருஷ்டியானதென்றால் மலதுவாரம் அல்லவா முதலில் வெளிவரவேண்டியது? எனில் அது அன்று. மூலம் என்பது தூர். அது நம்முடைய சிரசாகின்றது. நம்முடைய சிருஷ்டி சிரசிலிருந்து ஆரம்பிக்கின்ற தாகும். சிரசு இல்லாமலிருந்தால் யாதொன்று மில்லை. அதுவுமல்லாமல், நாம் ஒரு ஜீவனுடைய உருவம் எழுதுவதானால் அதனுடைய எந்தப் பாகமாகும் முதலில் எழுதுகிறோம்?

சி : முகம்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கு : அப்பொழுது மூலம் ஏதாகும்?

சி : சிரசு.

கு : அதுமட்டுமன்றி, மரம் முதலியவை எங்கே நிற்கின்றன?.

சி : பூமியில்.

கு : அந்த மரம் முதலியவற்றினுடைய உற்பத்தி எதிலிருந்து?

சி : வித்திலிருந்து.

கு : வித்தின் எந்த பாகத்திலிருந்து முளைக்கிறது?

சி : வித்தினுடைய முகத்திலிருந்து.

கு : வித்தினுடைய முகம் மேல் பாகமோ, கீழ்ப்பாகமோ இருக்கிறது?

சி : மேல்பாகத்தில்.

கு : எனில் உலகத்திலிருக்கிற சர்வ சராசரங்களி னுடைய உற்பத்தி எந்தப் பக்கத்திலிருந்து?

சி : மேற் பக்கத்திலிருந்து.

கு:அப்படி உற்பத்தியாகி பூமியிலிருக்கின்றதாகிய தாவரங்கள் ஆகாரத்தையும் தண்ணீரையும் எந்த பாகத்தினால் எடுக்கின்றன?

சி : தூரினால் அதாவது உற்பத்திஸ்தானத்தால்.

கு : தாவரத்தினுடைய கிளைகளுக்கோ, அதன் குச்சிகளுக்கோ, அக்ரம் அதாவது முளைக்கோ, தண்ணீரோ, உரமோ அதாவது எருவோ இட்டால் பிரயோசனப்படுகின்றதா?

சி : இல்லை.

கு : என்ன காரணம்?

சி : அதனுடைய தூரில் போடாததால்.

கு : எனில் அவை ஆகாரம் முதலியவை எடுக்கிறது எதனால்?

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சி : அதனுடைய மூலமாயிருக்கின்ற தூர் மூலம்.

கு : நீர் சொல்லுவது போல நம்முடைய உற்பத்தி ஸ்தானம் மலதுவாரமாயிருந்ததானால் அதனால் ஆகாரம் எடுக்கவும் தண்ணீர் குடிக்கவும் நமக்கு முடியுமா?

சி : முடியாது.

கு : என்ன காரணம்? நம்முடைய மூலமாயிருக்கின்ற தூர் மலதுவாரமாய் இருந்ததானால் அதனால் அல்லவா நாமும் ஆகாராதிகள் எடுக்க வேண்டியது?

சி : ஆம்! அப்படிச் செய்வதற்கு நம்முடைய மூலமாகயிருக்கின்ற தூர் அதல்லாததால் முடிவதில்லை.

கு : எனில் நாம் ஆகாரம் எடுப்பதும் தண்ணீர் குடிக்கிறதும் எதனால்?

சி : மூலமாய் இருக்கின்ற சிரசினுடைய ஒருபாகமான முகத்திலுள்ள வாய் வழி.

கு : மூலம் என்பது கிழங்கு அதாவது உற்பத்தி ஸ்தானம். அது அவனவனுடைய சிரசாகும். அவனவனுடைய சிரசிலிருந்தாகும் எல்லா உற்பத்திகளும். ஆகவே சலித்துக்கொண்டிருக்கின்ற சகல ஜீவிகளுடைய தூரும் மேற்பக்கத்திலிருக்கின்றது. அது சிரசாகும். அதனால் மூலாதாரம் முதலான எல்லா ஆதாரங்களும் அடங்கியிருக்கிறது சிரசிலாகும்; நீங்கள் சொன்னவிதமல்ல. மூலாதாரம் என்பது மூலம் + ஆதாரம்; மூலம் = உற்பத்தி; ஆதாரம் = ஸ்தானம். அதனால் மூலாதாரம் என்பது உற்பத்திஸ்தானம். அந்த உற்பத்தி ஸ்தானம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நான் என்கிற அகங்காரமாயிருக்கின்ற நிலைமைக்காகும். அந்த நிலைமைக்கு ஆதாரம் மனமாகும். அந்த மனத்திற்கு ஆதாரம் ஜீவனாகும். அது எதனாலென்றால் ஜீவனில்லாவிட்டால் என்னவாகும்?

சி : பிணமாகிறது.

கு : ஒரு பிணத்திற்கு இப்படி ஏதாவது நிலைமை உண்டோ?

சி : இல்லை.

கு : காரணம் என்னவாகும்?

சி : ஜீவன் இல்லாததால்.

கு : ஜீவன் இல்லாவிட்டால் ஆதாரங்களோ, உலகமோ யாதேனும் உண்டோ?

சி : ஒன்றுமில்லை.

கு : எனில் ஜீவன் இருக்கிற எல்லாச் சமயங்களிலும் இக்காணப்படுகிற உலகுண்டோ?

சி : இல்லை. தூங்கும்பொழுது இவையொன்றும் அறிவதோ, காண்பதோ இல்லை.

கு : எனில் இவையெல்லாம் எந்தச் சமயத்திலாகும் உண்டாகின்றன?

சி : தூக்கம் விழித்தபொழுது.

கு : அப்பொழுது என்னவாகும் உண்டாகியது?

சி : நான் என்கிற அகங்காரம்.

கு : அந்த அகங்காரம் எங்கிருந்து உண்டாயிற்று?

சி : மனத்திலிருந்து.

கு : எனில் ஜீவன், மனம், அகங்காரம் என்கிறமூன்று நிலைமைகள் நமக்கு உண்டு. இவை ஒவ்வொன்றுக்கும் ஜாக்கிரதை, சுழுத்தி, சொப்பனம் என்கிற மூன்று நிலைமைகளுமுண்டு.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதில் நான் என்கிற அகங்காரத்திற்குள்ள மூன்று நிலைமைகள் ஜாக்கிரதை,சுழுத்தி, சொப்பனம் இவையாகும். இதைப்பற்றி ஏழாம் அத்தியாயத்தில் விவரித்திருக்கின்றது. எனில் அவை அகங்காரத்திற்குள்ள நிலைமைகளாகும். அவை இப்பொழுது நாம் அனுபவிக்கின்ற ஜாக்கிரதை, சுழுத்தி, சொப்பனமாகும். உண்மையில் சொப்பனம், சுபத்தி, ஜாக்கிரதை என்றாகிறது. அதாவது சொப்பனத்தினு டையவும் ஜாக்கிரதையினுடையவும் மத்தியில் சுழுத்தி. அப்பொழுது முதலாவது சொப்பனமும் அதன்பிறகு சுழுத்தியும், அதன் பிறகு ஜாக்கிரதையும் ஆகிறது. அதுபோல உலகத்தில் அனுபவம் காணுவதில்லை. முதலில் சுழுத்தியும் அதாவது தூக்கமும், அதற்குப்பிறகு அந்தத் தூக்கத்தில் சொப்பனமும், அந்த சொப்பனத்தினுடைய கடைசியில் திடீரென்று தூக்கம் விழித்து ஜாக்கிரதையும் ஆகவாகும் காணுகிறது. இதெல்லாம் அகங்காரத்திற் குள்ளதாகும். ஏனென்றால் இப்பொழுது நாம் அனுபவிப்பது நான் என்று சொல்லுகிற அகங்காரத்திற்குள்ள ஜாக்கிரதையாகும். அது மனத்தினுடைய தொழிலாகும். இப்பொழுது நாம் தூக்கம் என்று சொல்லுவது அகங்காரத்திற் குள்ளதாகும். அது மனத்தினுடைய தொழில் விட்ட அதாவது வேலைவிட்ட சமயம். அந்தத் தூக்கச் சமயத்தில் காணுகின்ற சொப்பனமும் அகங்காரத்திற் குள்ளதாகும். அது மனம் தன்னால் செய்யப்பட்ட தொழிலைக் குறித்து ஆலோசிக்கின்றதாகும். இந்த மூன்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



நிலைமைகளும் நாம் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இப்படி அகங்காரம் மூலமாக அனுபவித்துக்கொண்டிருக்கின்ற இந்த மூன்று நிலைமைகளையும் விட்டு நான் என்கிற அகங்காரம் தன்னுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மனத்தில் போய்ச் சேருகிறதாகும் முதல் ஸ்தானம். அதாகும் உற்பத்தி ஸ்தானம். அதற்காகும் மூலாதாரம் என்று சொல்லுவது. அப்பொழுது நான் என்கிற அகங்காரம் தன்னுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மனத்தில் போய்ச்சேருகிற சமயம். அது மனத்தினுடைய சொப்பன நிலைமை. அது எப்படியென்றால்: அகங்காரம் சொஸ்தானத்தில் பிரவேசித்தபொழுது பாஹியத்தில் அதாவது வெளியினுள்ளில் ஏதாவது சங்கற்பிக்கின்றதற்கோ, பிரத்யேகமாய் அதாவது தனியாய் அறிவதற்கோ, கிரஹிப்பதற்கோ அதாவது தெரிவதற்கோ மனத்திற்கு முடிவதில்லை. ஸ்தாபனை சக்தியெல்லாம் நான் என்கிற அகங்காரத்திற்கே இருக்கின்றதால் அந்த அகங்காரம் தன்னுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மனத்தில் அடங்கின சமயம் பாஹியத்தில் அதாவது வெளியினுள்ளில் யாதொன்றும் தெரிவதற்கு மனத்திற்கு முடிவதில்லை. இது மனத்தினுடைய சொப்பனமாகும். அதாவது நான் என்கிற அகங்காரம் உற்பத்தி ஸ்தானத்தில் சேருகின்றதனால் இந்த நிலைமைக்காகும் மூலாதாரம் என்று சொல்லுவது.

சுவாதிஷ்டானம் என்பது தன்னுடைய அடிஸ்தானம். அதாவது சுவஸ்தானம். அதாவது சுவ + ஸ்தானம்; சுவ = தான்; அதாவது தன்னுடைய;

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



ஸ்தானம் = இருப்பிடம். எப்பொழுது அகங்காரம் மனத்தில் அடங்குகின்றதோ, அப்பொழுது மனத்திற்குத் தொழில் இல்லாமல் தன்னுடைய சொஸ்தானத்தில் பிரவேசிக்கின்ற சமயம். அந்த நிலைமை மனத்தினுடைய சுழுத்தி ஆகிறது. அதெப்படியென்றால் அப்பொழுது மனத்திற்கு யாதொரு அறிவும் இல்லாமல் ஒன்றுமில்லாமலிருக்கின்ற நிலைமை. அது எவ்விதமெனில்: நாம் இப்பொழுது பகல் என்று சொல்லுகின்ற சமயத்தில் வெளியிலிருந்து ஒரு வீட்டினுடைய அறையினுள்ளில் சென்றால் அப்பொழுது அதனுள்ளில் மிகவும் இருட்டாய் யாதொன்றும் அறியாத விதத்தில் ஒரு பிரமதை அதாவது திகைப்பு உண்டாகின்ற நிலைமை யாகும். இது சர்வ ஜனங்களுக்கும் அனுபவ மல்லவா? அப்படி வெளியிலிருந்து அகங்காரமாய் இருக்கின்ற நான் என்கிற நிலைமை மனத்தில் சேருகிற சமயம் மனம் தன்னுடைய பாகிய விருத்திகள் அதாவது வெளிச்செயல்கள் எல்லாம் விட்டுத் தன்னுடைய சொஸ்தானத்தில் பிரவேசிக்கிறது. அச்சமயம் மனத்திற்கு யாதொரு பிரகாசமோ, அறிவோ இல்லாமல் சுத்த இருட்டாய் ஒன்றும் அறியாமல் இருக்கின்ற நிலைமையாகின்றது. அது மனதினுடைய சுழுத்தி ஆகின்றது. இதாகும் சுவா திஷ்டானம் என்கிற நிலைமை.

மணிபூரகம் என்பது மனத்தினுடைய ஜாக்கிரதை நிலைமையாகின்றது. அதாவது மணி என்பது மனம்; பூரகம் என்பது நிறைப்பது.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அப்பொழுது மணியாய் இருக்கின்ற மனம் வேறொன்றும் இல்லாமல் ஜீவனோடு சேர்ந்து தானாகி நிற்கின்றது. அப்பொழுது அவ்விடம் மிகவும் பிரகாசமாய் ஜொலிக்கின்றது. அது எப்படியென்றால் : மேல் சொன்ன வீட்டினுடைய சிறிய ஓர் அறையின் உள்ளில் சென்றபொழுது முதலில் இருட்டாகவும் அங்கே கொஞ்ச நேரம் இருக்கும் பொழுது நல்ல பிரகாசமாகி அங்கிருக்கின்ற எல்லா நிலைமைகளும் சுகமாய்க் காணவும் அறியவும் செய்கிறோம். இது உலகத்தில் ஜனங்களுக்கு அனுபவமாக உள்ளதாகும். அதுபோல மனம் சொஸ்தானத்தில் பிரவேசிக்கும்பொழுது முதலில் இருட்டாய்த் தோன்றுவதும் அந்த மனம் வெளியினுள்ளில் செல்லாமல் தன்னுடைய சொஸ்தானத்தில் அடங்கி நிறைந்தபொழுது அவ்விடம் நல்ல சுகத்துடன் வெளிப்பட்டுக் காணவும் அறியவும் செய்யும். இது மனத்தினுடைய ஜாக்கிரதை ஆகிறது. இதுவாகும் மணிபூரகம் என்கிற நிலைமை.

அநாஹதம் என்பது அந + ஹதம்; அந = அக்கினி; ஹதம் = நாசம். அதாவது அக்கினி சொரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற மனம் தன்னுடைய உற்பத்தி ஸ்தானமாகிற ஜீவனில்லயிக்கின்றது. அப்பொழுது அது ஜீவனுக்கு சொப் பனமாகிறது. எப்படியென்றால் பிரகாசமாயிருக்கின்ற மனம், ஜீவனில் லயித்த சமயம், அதுவரையில் உண்டாயிருந்த சோபை அதாவது பிரகாசம் இன்னதென்று அறிவதற்கு

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



முடியாமல் சொப்பன துல்லியமாய் இருக்கும். இது ஜீவனுடைய சொப்பன நிலைமை. இதற்கு அனாஹதம் என்று பெயர்.

விசுத்தி என்று சொல்லுவது வி + சுத்தி. வி = விசேஷம் அதாவது அறிவு; சுத்தி = நிர்மலம். அதாவது அறிவு நிர்மலமாகிறது. அப்பொழுது ஒன்றும் தெரியாத விதத்தில் யாதொரு அறிவும் இல்லாமல் நிச்சலமாய் அதாவது சலனமில்லாமல் ஜீவன் மட்டுமாய் இருக்கின்ற நிலைமை. அந்த நிலைமை ஜீவனுடைய சுழுத்தி. அந்த ஜீவனிலிருந்து உற்பத்தியாகிய மனத்திலிருந்து உண்டான எல்லா களங்கங்களும் நாசமாகி ஜீவனில் மனம் லயித்து, அந்த ஜீவன் மட்டுமாய் ஒன்றும் அறியாம லிருக்கின்ற நிலைமையாகும் சுழுத்தி. இதாகும் விசுத்தி என்ற நிலைமை.

ஆக்ஞை என்பது ஜீவன் சிவனாகி உற்பத்தி ஸ்தானமாய் இருக்கின்ற ஆனந்தத்தில் லயித்து, மற்றொன்றும் இல்லாமல் ஆனந்தித்துக் கொண்டிருக்கின்ற நிலைமை. அது ஜீவனுடைய ஜாக்கிரதை. அதற்காகும் ஆக்ஞை என்று பெயர். இப்படியாகும் ஷடாதாரங்களுடைய நிலைமை. இதுவேயாகும் பிரம்மானந்தம்.

எனில் பிரம்மானந்தம் இன்னதென்று சொல்லித் தெரிவிக்க யாருக்கும் முடிவதில்லை என்றும் அதாவது பால் பாயாசம் சாப்பிட்டவருக்கு அதனுடைய ருசி தெரிவதல்லாமல் அதைச் சாப்பிடாதவருக்கு அதனுடைய ருசியைத் தெரியவோ,

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



தெரியப்படுத்தவோ முடிவதில்லை என்றும் வேதாந்திகள் சொல்லி வருகிறார்கள். எனில் பிரம்மானந்தத்தைச் சொல்லித் தெரிவிக்க முடியும். அது எப்படியென்றால் சர்வ ஜீவிகளும் பிரம்மானந்தம் என்பதை அனுபவித்து வருகின்றன. அதாவது தான் சதா உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான தன்னுடைய சொந்த சொத்தைத் தான்தானே திருடி நசிப்பிக்கிறது. அதெப்படியென்றால்: அந்த சொந்த சொத்தைத் திருடுவதற்குப் போய் அதைத் தொடும் சமயத்தில் உண்டாகின்ற நிலைமையாகும் பிரம்மானந்தம்.

சி : சுவாமி! அவனவன் உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான அவனவனுடைய சொந்தச் சொத்தை அவனவன்தானே திருடி நாசம் செய்வானா?

கு : ஆம்! நாசம் செய்கிறான். உலகத்திலிருக்கிற சர்வஜீவிகளும் அவரவர் என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான சொத்தை அவரவர் திருடி நாசம் செய்துகொண்டிருப்பதாலாகும் செத்துப் போகின்றதற்குக் காரணமாகின்றது. அது எப்படியென்றால்: இப்பொழுது உலகத்திலிருக்கின்ற சர்வஜீவிகளும் நிரம்பவும் ஆக்ரஹம் அதாவது ஆசைப்படுகின்றதும், ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றதும் மைதுனத்திலாகும் அதாவது ஸ்திரீபுருஷ சேர்க்கைக்காகும். எனில் உலகத்தில் எவ்வித தொழில் செய்யும்பொழுதும் மனம் அதில் நில்லாமல் பின்னம் பின்னமாய்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



அதாவது விட்டுவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஸ்திரீபுருஷ சேர்க்கை சமயத்தில் மனம் யாதொன்றிலும் செல்லாமல் அதாவது காதுகளால் கேட்டறிவதற்கோ, கண்களால் பார்த்தறிவதற்கோ, மூக்கினால் முகர்ந்தறிவதற்கோ, நாவினால் சுவைத்தறிவதற்கோ, தொக்கினால் அதாவது தோலினால் தொட்டறிவதற்கோ ஐந்துவிதமாய் வெளியினுள்ளில் செல்லாமல் ஜீவனோடு சேர்ந்து, தன்னுள்ளில் அடங்கி, தன்னுள்ளில் கூடி மேலும் கீழுமாய் நடனம் அதாவது கதாகதம் செய்து அதாவது கீழ்மேலாக சலித்து, தன்னுடைய ஜீவசக்தி மேலே போய் பிரம்மரந்திரத்தில் இருக்கின்ற சுக்கிலத்தைத் தொடுகின்ற சமயம் உண்டாகிற நிலைமை இன்னதென்று விவரித்துச் சொல்ல யாருக்காகிலும் முடிவதுண்டா?

சி : முடிவதில்லை.

கு : அதாகும் பிரம்மானந்தம். எப்படியென்றால்: பிரம்மம் என்பது சுக்கிலம். அந்த சுக்கிலமாயிருக்கின்ற பிரம்மத்தை ஜீவன் சென்றுதொடுகின்ற சமயத்தில் மிகவும் சிறிய ஒரு நொடிப்பொழுது அதாவது இமைப்பொழுதிலுள்ள நிலைமை அதாவது கண் இமைகள் மூடித்திறக்கிற சமயம் உள்ள நிலைமை இன்னவிதத்திலென்று யாதொருவருக்கும் சொல்ல முடிவதில்லை. அதாகும் ஆனந்தம். இதற்காகும் ஆனந்தத்திலிருந்து உற்பத்தியாகிறதென்றும் ஆனந்தத்திலிருக்க வேண்டியது என்றும் ஆனந்தத்தில் லயிக்க

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேண்டியது என்றும் சொல்லக் காரணம்.

எனில் இப்பொழுது உலகத்தில் ஆனந்தத்திலிருந்து உற்பத்தியாகின்றதல்லாமல் ஆனந்தத்தில் இருக்கவோ, ஆனந்தத்தில் லயிக்கவோ செய்கிறதில்லை. காரணம், மேற்சொன்னதுபோல பிரம்ம சொரூபமாய் இருக்கின்ற சுக்கிலத்தைத் திருடி நசிப்பிப்பதால் ஒன்றும் அறியாமல் அதோகதியாய் நசித்துப்போவதால் ஆகும்.

அதனால் மேற்சொன்னபடி உண்டாகிற ஆனந்தத்தில் ஜீவன் சென்று லயிக்கின்றதாகும் பிரம்மானந்தம். அப்படி பிரம்மசொரூபமாயிருக்கின்ற சுக்கிலத்தைப் பானம் செய்து, லயித்து, என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருக்க வேண்டிய சொத்து சுக்கிலம் ஆகின்றது. அதை நாம் நினைக்காமல் நிமிஷ நேரத்திலுள்ள சுகத்தை விரும்பி, தான் என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருக்க வேண்டிய தன்னுடைய சொந்த சொத்தைத் தானே திருடி நாசம் செய்கிறோம். அதனால் மேற்சொன்ன சம்யோக சமயத்தில் எப்படி ஜீவன் நம் உள்ளில்தானே அடங்கி உள்ளிலேயே கீழும்மேலுமாய் நடந்து ஜீவன் சுக்கிலத்தைத் திருடப்போகின்றதோ, அப்படியே ஜீவன் உள்ளில் தானே கீழும்மேலுமாய் நடந்து மேலேயுள்ள பிரம்மமாய் இருக்கின்ற சுக்கிலத்தில் லயித்தால் என்றென்றைக்கும் ஆனந்தமத்தனாய் இருக்கலாம். இதற்காகும் ''பிரம்மானந்தம்"

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



என்று சொல்லுகிறது.

உலகவாசிகள் இதைத் தெரியாமலும் ஆலோசிக்காமலும் அவனவனுடைய சக்தியை வெளியினுள்ளில் விட்டு, பலவற்றிலும் பலவிதத்திலும் பந்தப் படுத்தி, அவற்றில் பிரமித்து நசித்துப் போகின்றார்கள். எனில் தன்னைத்தான் அறியவேண்டுமென்றாகும் உலகத்தில் சொல்லிவருவது. அவ்விதம் சொல்லுவதல்லாமல் தன்னைத்தான் யாரும் பார்ப்பதில்லை. தன்னைத்தான் அறியவேண்டுமானால் தன்னைத் தானே பார்க்க வேண்டும். தன்னைத்தான் பார்க்காமல் மற்று ஒவ்வொன்றினைப் பார்த்துக் கொண்டிருந்தால், தான் இன்னதென்று அறியாமல் நசித்துப் போகிறார்கள். அதனால் உலகவாசிகளாகிய சர்வ ஜீவிகளும் அவனவனிலிருந்து உண்டாகின்ற சக்தியை அவனவனில்கூடி நடத்தி மேற்சொன்னபடி பிரம்மமாயிருக்கின்ற சுக்கிலத்தில் லயித்து, தானாகி, தன்மயமாகி கைவல்யத்தைப் பிராபித்து அதாவது அடைந்து சதா ஆனந்தமத்தன்மார்களாய் இருப்பதற்காக வேண்டி பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

சுபம்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



"சிதம்பராவாச மகண்டமீஸம்
சதாசிவாம்ஸம் மனுஜாவதாரம்
சதாசிவானந்த மஸேஷகாம
சதாபிரதாதார மகம்பஜாமி"

**பொருள் :** சிதாகாச வாசனும் பரிபூரணனும் சர்வேசனும் சதாசிவாம்சனும் மனிதாவதாரம் கொண்டோனும் காமமற்றோனும் சதா தானசீலனுமாக விளங்கும் சிவானந்த வடிவோனை யான் நாளும் வணங்குகின்றேன்.

"தோன்னீலகோ குருகடாக்ஷ மதின்னுமேலா—
யொன்னும் மஹாதுரிதவன் கடலேகடப்பான்
வந்திச்சிடட்டே குருவின் கழலேவனும்கை
வந்நெத்திடட்டே புருஷார்த்த சதுஷ்கமெல்லாம்"

**பொருள் :** குரு கிருபையைவிட உயர்வானதாக பெருந்துன்மாகின்ற வன்கடலைக் கடக்க வேறொன்றும் இதுவரைத் தோன்றவில்லை. ஆகவே அந்தப் பரமகுருவின் பாதத்தை (ஸ்தானம்) யாவரும் வணங்குவதாகுக! அப்படிப் புருஷார்த்தங்கள் நான்கும் கைவரப் பெறுவதாகுக!!

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## அருஞ்சொல் (பொருள்) விளக்கம்

| | |
|---|---|
| அசு | (தன்னிலிருந்து) அசைந்து அதாவது சலித்து க்ஷீணித்து அதாவது மெலிந்து கொண்டிருப்பது. |
| அந்நியோந்நியம் | ஒருவருக்கொருவர், தம்மில் தம்மில். |
| இரக்ஷா கர்த்தா | இரட்சிப்பவர் |
| உற்பவம் | உற்பத்தி |
| எரிசேரி | காரக் குழம்பு |
| கதாகதம் | போக்குவரவு, நடமாட்டம். |
| கத்துதல் | சத்தம்போடுதல், அழுதல், (மலையாளத்தில்) எரிதல். |
| கர்த்தா | உண்டுபண்ணுபவர், செய்பவர், (இலக்கணம்) எழுவாய். |
| கர்மம் | (இலக்கணம்) செயப்படு பொருள் (இதனின்றும் கர்மம் ஒரு பொருள் என புலப்படும்.) |
| கல்பிதம், கற்பிதம் | (மனச்) சங்கற்பம், (மன) நிச்சயம், |
| கழஞ்சு | ஒரு எடை அளவு. |
| காமக்கலை | வீரியஸ்தானம், விந்துவின் இருப்பிடம் |
| காளுதல் | (மலையாளத்தில்) கூவி அழுதல், ஓங்கி எரிதல் |
| கிருமி கீடாதிகள் | புழுப்பூச்சி முதலியன |
| கும்பி பாகம் | கருப்பை |
| கோஷ்டி | சேட்டை, ஆட்டம், |
| சங்கற்பம் | கற்பனை, மனோநிச்சயம், பாவனை, எண்ணம், |
| சம்யோகம் | உடற்சேர்க்கை, |
| சம்ரட்சனை | பேணுதல், பாதுகாத்தல், |
| சராசரங்கள் | அசையும்பொருட்களும், அசையாப்பொருட்களும் |
| சர்வக்ஞன் | முற்றும் உணர்ந்தோன். |
| சர்வ பூதம் | அனைத்துப் பொருட்கள். |

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



| | | |
|---|---|---|
| சஸ்யம் | — | தாவரம் |
| சஸ்யாதி | — | தாவரம் முதலியன |
| சாத்வீகம் | — | சத்துவ குணம், முக்குணங்களில் ஒன்று |
| சுயரக்ஷை | — | தற்பாதுகாப்பு |
| சுருதி | — | கேள்வி, நூலறிவு, வேதம், அநுபவசாலிகள் எழுதிய நூல், |
| சுவாதீனம் | — | சொந்தம், தற்கட்டுப்பாடு, தன்வசமாதல். |
| சுவேதஜம் | — | வியர்வையினின்று உண்டாவது |
| சுழுத்தி | — | உறக்கம், |
| சைதன்யம் | — | சக்தி, ஆற்றல். |
| சொஸ்தம் | — | சுகம், நலம், |
| சொஸ்தானம் | — | சொந்த இடம். |
| தனிகர் | — | செல்வந்தர். |
| தாமஸம் | — | தமோ குணம் - முக்குணங்களில் ஒன்று |
| திரிகுணம் | — | முக்குணம்; சாத்பீக, ராஜஸ, தாமசகுணங்கள். |
| திரிகுண ரகிதம் | — | முக்குணமற்றது |
| திரிகுணாதீதம் | — | முக்குணம் கடந்தது. |
| திருஷ்டாந்தம் | — | மேற்கோள், எடுத்துக்காட்டு, உதாரணம், |
| துரபிமானம் | — | வீண்பெருமை. |
| நசித்தல் | — | நாசமாதல், அழிதல், |
| நாபி | — | உற்பத்திஸ்தானம், பிறப்பிடம் (தொப்புள் அல்ல). |
| நிக்கிரஹித்தல் | — | அழித்தல். |
| நிரீஸ்வரமதஸ்தர் | — | நாத்திகர். |
| நிர்மோகி | — | மோகமற்றவர். |
| நிர்விகாரி | — | விகாரமற்றவர், மாறுபாடற்றவர். |
| பர்ணசாலை | — | இலைகளால் வேயப்பட்ட குடில். |
| பவிஸ்யத் காலம் | — | எதிர்காலம், ஆரம்பகாலம். |
| பஜித்தல் | — | அர்ச்சித்தல், பூஜை செய்தல், |

https://lankathamilnews.blogspot.com


www.facebook.com/ebooksintamil



| | | |
|---|---|---|
| | | சேவித்தல். |
| பாவம் | _ | (வடமொழி) துவக்கம், சலனம், உற்பவம். |
| பாவி | _ | (வடமொழி) சலிக்கின்ற, ஆரம்பிக்கின்ற |
| பிரதிபிம்பம் | _ | பிரதிபலனம், எதிர்த்தோன்றல். |
| பிரதிஷ்டை | _ | கோவில்களில் அமைக்கப்படும் உருவம், சிலை, |
| பிரம்மரந்திரம் | _ | பிரம்மஸ்தானம். சிரசு என்னும் ஆகாசமத்தியம், சுழிமுனை, |
| பின்ன கதி | _ | வேறுபட்ட (சுவாச) கதி. |
| புரம் | _ | வீடு. |
| மதமாச்சர்யாதிகள் | _ | அகந்தை (செருக்கு), பொறாமை முதலானவை |
| மரித்தல் | _ | ம றத்தல் |
| விகாரம் | _ | மனமாறுபாடு. |
| விகாராதி | _ | வேற்றுமைத்தன்மை முதலானவை. |
| விகாரி | _ | மாறுபாடு உடையவன். |
| விசாராதிகள் | _ | ஆராய்ச்சி, சிந்தனை, முதலியன. |
| வியாபித்தல் | _ | பரவுதல். |
| வெளியினுள்ளில் | _ | புறத்தினுள்ளில் [இதில் வெளி என்பதுவெட்ட வெளி (ஆகாயம்) அன்று, புறம் என்பதாம். இச்சொற்றொடர் இந்நூலில் பல இடங்களில் தோன்றக் காணலாம்.] |
| இராஜஸம் | _ | இரஜோ குணம் _ முக்குணங்களில் ஒன்று |
| லலாடம் | _ | புருவமத்தியம். |
| ஜலபானம் | _ | நீருணவு |
| ஜீவ சக்தி | _ | உயிராற்றல். |
| ஜீவ சிவோஹம் | _ | ஜீவனே சிவன். |
| ஜீவ ஹிம்சாதிகள் | _ | உயிர்வதை முதலியன |
| ஜீவிகள் | _ | உயிரினங்கள். |
| ஸ்தாபன சக்தி | _ | நிறுவும் ஆற்றல், சங்கல்ப சக்தி. |
| ஸ்தாபனம் | _ | நாட்டப்படுவது, சங்கல்பம். |

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil




https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil

**ஈஸ்வரன் (இறைவன்)** ஜீவன் (உயிர்) ; **குரு** மனம்.
**உபதேசம்** (இறைவனின்) சமீப ஸ்தானம் அதாவது அண்மையிடம். (அவ்விடம் தொட்டுக்காட்டி வித்தை கொடுத்தல்).
**புண்ணியம் (சுகிர்தம்)** அறிவாம் ஜீவசக்தியாகிய வாயுவினால் செய்வது; அதாவது தன் உயிரை நேசித்து மேல் கெதியாக்கி தன்னில் நிலைநாட்டல் - ஜீவகாருண்யம் அதாவது அஹிம்சை (கொல்லாமை)
**பாவம் (துஷ்கிருதம்)** ஜீவநேசமின்றி தன்னுயிரைக் கீழ் கெதியாக்கி அழிப்பது - தன் உயிர் வதை அதாவது ஹிம்சை (கொல்லுதல்)
**பஞ்சபூதங்கள் (ஐம்பூதங்கள்)** : இக்காணப்படுகின்ற விண் (வெளி), வளி(காற்று), தீ, நீர், நிலம் அல்ல. அவை தன்னிலேயே உள்ளவை. **விண் (ஆகாயம்)** சதாசிவனாம் ஜோதி; **வளி (வாயு)** சிவனாம் ஜீவன் (உயிர்); **தீ (அக்கினி)** ருத்திரனாம் தேயு; **நீர் (அப்பு)** விஷ்ணுவாம் மனம்; **நிலம் (பிருதிவி)** பிரம்மாவாம் அகங்காரம். இவ்வைந்தும் ஒன்றுசேரும்பொழுது சிருஷ்டி (படைப்பு) உண்டாகிறது.
**கர்மம்** செயல் அல்ல, ஒரு பொருள் - ஜீவசக்தியாம் வாயு.
**உபவாசம்** உண்ணா நோன்பன்று, இறைவனோடு சேர்ந்திருக்கும் நிலைமை. அப்பொழுது யாதொரு உணவும் வேண்டாம்.
**க்ஷேத்திரோபவாசம் (சேத்திரோபவாசம்)** : காத்திர க்ஷேத்திரமாம் சிரசில் (தலையில்) பிரதிஷ்டை ஸ்தானமாகிய புருவமையத்தில் உபவசித்தல்.
**சிவன்** சத்துவகுணம் - ஜீவன் - ஸ்தூல சரீரம் - புருஷன்(தந்தை); **விஷ்ணு** இரஜோகுணம் - மனம் - சூக்ஷ்ம சரீரம் - ஸ்திரீ(தாய்); **பிரம்மா** தமோகுணம் - அகங்காரம் - காரண சரீரம் - அலி.
**லிங்கம், உபஸ்தம், குதம்** அனைத்து உயிரினங்களிலும் இரகசியமாய் (மறைவாய்) இருப்பவை. லிங்கம் ஆணடையாளமோ, உபஸ்தம் பெண்ணடையாளமோ, குதம் மலதுவாரமோ அன்று.
**ஆறாதாரங்கள்** : மலதுவாரம் முதல் புருவமையம் வரை ஆறு சக்கரங்கள் இல. மனமும் ஜீவனும் ஐக்கியமடையும்பொழுது அனுபவப்படுகின்ற ஆறு நிலைமைகளே அவை. அவ்வாறு ஐக்கியமடையும் பொழுது பிரம்மானந்தம் (பேரின்பம்)அனுபவப்படும். அப்பொழுது தன்னைத்தானே அறிந்து ஆனந்தமத்தனாக இருக்கலாம்.

**இவ்வாறான ஆன்மாவாம் ஜீவனின் பற்பல வேத தத்துவங்களை (மறை பொருள்களை) விளக்கமாகப் புரிந்து கொள்ள**

**கற்க கசடற**

# சித்தவேதம்

(தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம், இந்தி மொழிகளில் கிடைக்கும்).

பொதுப்பொருளாளர்
**சித்தசமாஜம் தலைமையகம்,**
**சித்த சமாஜம் அஞ்சல், வடகரை**
**கோழிக்கோடு மாவட்டம், கேரளம் - 673104, (0496 2528551)**

https://lankathamilnews.blogspot.com